சேகர் வெளியீடு

கல்விச் சிந்தனைகள்

தெ. பொ. மீ.

கல்விச் சிந்தனைகள்

பேராசிரியர்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்



சேகர் பதிப்பகம்

30, போஸ்ட் ஆபீஸ் தெரு, சென்னை-1.

சேகர் வெளியீடு: 30
முதற் பதிப்பு: ஆகஸ்டு, 1965.

உரிமை
திரு. தெ. மீ. அங்கயற்கண்ணி
அம்மையாருடையது.

T
N65

விலை ரூ. 3—50

TAMIL NADU ARCHIVES
No. 109181

அச்சிட்டோர்:
மாருதி பிரஸ்,
சென்னை-14.

முன்னுரை

இந்த நூல் என் கட்டுரைகள் சிலவற்றின் தொகுப்பு. கல்வி நிலையங்களின் பத்திரிகைகளிலும், பிற பத்திரிகைகளிலும், நான் அப்பொழுது அப்பொழுது எழுதிய கட்டுரைகளை எனது நண்பர் திரு இ. அண்ணுமலை அவர்கள் தொகுத்ததன் பயனே இந்த நூல். அவருக்கு என் நன்றி. இப்படி என் கருத்துக்களை எழுதித்தரும்படி வற்புறுத்திய பெருமக்களுக்கும் நிலையங்களுக்கும் என் நன்றி.

மாணவனுக இருந்த நாளில் இருந்தே கல்வி கற்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்து வந்திருக்கிறது. கல்வியைப் பற்றி எண்ணி ஆராய்ந்து திட்டமிடும் இடங்களிலும் நான் இருக்க நேர்ந்தது. சென்னை மாவட்டத் தொடக்கநிலைக் கல்விக் குழு (Madras District Educational Council), சென்னை மாநில உயர்நிலைக் கல்விக் குழு (Madras Secondary Education Council), கீழ்க்கலைப் பள்ளிக் குழு (Committee on Oriental Schools), சென்னை நகராண்மைக் கழகம், அண்ணுமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம், கல்லூரித் தமிழ்க் குழு (Callege Tamil Committee) முதலியவற்றில் தொண்டு செய்யும்போது எழுந்த அனுபவம் எனக்குச் சிறிது உண்டு. சென்னைச் சிந்தாதிரிப்பேட்டைப் பள்ளிகளை நடத்தும் பொறுப்பும் நான் பெற்ற பேறு. தமிழ்த்துறையைப்பற்றி இந்தியாவிலும், இலங்கையிலும், மலேயாவிலும், அமெரிக்காவிலும், பிறரோடு கலந்து எண்ணும் வாய்ப்புக்களும் எனக்குக் கிடைத்தன. எழுத்துச் சீர்திருத்தம், பாடத்திட்டம், கல்விமொழி, மாணவர் கட்டுத்திட்டம் முதலிய சிக்கல்களைப்பற்றியும் அப்போதப்போது முடிவு செய்யும் தொண்டிலும் நான் ஈடுபடவேண்டி

இருந்தது. இந்தப் பலவகை அனுபவங்களின் பயனாகவே இந்தக் கட்டுரைகளை எழுத முடிந்தது. எல்லாம் மாறிவரும் இந்தக் காலத்தில் நான் எழுதியுள்ள கருத்துக்களை எல்லோரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். எல்லோரும் ஒப்புக் கொண்டதை எழுதவேண்டிய கட்டாயம் ஒன்றும் இல்லையே! எனவே இங்கே பிறருக்கு நான் எண்ணியதைத் தெரிவிக்கவே முயன்றிருக்கிறேன். பிறரை எண்ணத் தூண்டுவது மட்டுமே குடியரசில் வாழ்கின்றவன் கடமை. எல்லோரும் நான் சொல்வதையே திருப்பிச் சொல்லவேண்டும் என்று எதிர் பார்க்க நான் என்ன சர்வாதிகாரியா?

நான் பிறரோடு கலந்து எண்ணிக் கண்ட கனவுகளை இக்கட்டுரைகளில் விளக்கியுள்ளேன். முதல் கட்டுரையைப் படிக்கின்றவர்கள் அவற்றில் பல இன்று நனவாகி நடைமுறையில் வந்திருப்பதை எண்ணுவார்கள். தோன்றிய காலத்தில் கொண்ட வடிவோடேயே கட்டுரைகள் வெளி வருகின்றன. அதனால் பழம்பசலிக்கதை என இவற்றை ஒதுக்கித் தள்ளவேண்டாம் என வேண்டிக் கொள்கிறேன். புள்ளி விவரங்களும் அக்காலத்தவையே.

சிலபோது இக்கட்டுரைகளைத் திருப்பிப் படிக்கும்போது எனக்கு வருத்தம் பொங்குகிறது. "தலைவர் நேரு கூறுகின்றார்" என்று எழுதியுள்ளேன். இன்று நிகழ்காலத்தால் கூறுவதற்கில்லையே! என்ன செய்வது? இதுதானே உலகின் பெருமை என்கிறார் வள்ளுவர்.

என்னுடைய முடிவுக்கே விட்டிருந்தால் இவற்றை வெளியிடாமலே இருப்பேன். கருத்தை வெளியிடுமுன் நம் தனியுடைமையாக அது நிற்கும்; வெளியிட்டதும் பொதுவுடைமையாகிறது. பொதுவுடமையானதை நான் எப்படித் தடுப்பது? சேகர் பதிப்பகத்தார் இதை வெளியிட விரும்பினால் நான் யார் தடுப்பதற்கு? வாழ்க அவர்கள் அன்புள்ளம்.

9-8-65
அண்ணாமலைப்
பல்கலைக்கழகம்

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்

பதிப்புரை

அறிஞர் பேராசிரியர் திரு. தெ.பொ.மீ. அவர்களை நாடும் உலகமும் நன்கறியும். பாதி உலகம் அவரைப் பார்த்திருக்கிறது; மீதி உலகம் பெரிதும் அறிந்து வைத்திருக்கிறது.

பேராசிரியர் அவர்கள் பலமொழிப் புலமையாளர்; பல துறைகளிலும் பணியாற்றிப் பண்பட்டுப் பழுத்த பேராளர்; மக்களிடம் நெருங்கிப் பழகும் எளிய இனிய பண்பாளர். எனவேதான் அவர்தம் சிந்தனைகள் உயிர்த் துடிப்போடு ஒளி வீசுகின்றன.

உலகநிலை, நாட்டுநிலை, காலப்போக்கு, மக்கள் நலம், மாணவர் உள்ளம், சமுதாய முன்னேற்றம் என்பனபோன்ற பல துறைகளிலும் அவர்தம் சிந்தனை ஊடாடிச் சென்று நுணுகி ஆராய்கின்றது. அதன் பயனாக மலர்ந்தது இந்நூல்.

கல்வித்துறையினர் முகம் பார்த்துக் கொள்ள உதவும் கண்ணாடியாக அமைந்துள்ளது இந்நூல். ஆசிரியர்கள் அனைவரும் படித்துணரவேண்டிய அரிய நூல் இது. மாண

வர்கள் மதித்துப் போற்றிப் படிக்கத் தகுந்தது; இனியது, எளிமையும் நயமுங்கொண்டது; புதுவழி காட்டிப் புத்தார்வம் தருகின்ற சிறந்த அறிவுநூல். இதனைப் பெருமையோடு வெளி யிடுகின்றோம்.

நூல் வெளியிடுவதற்கு உரிமை வழங்கிய திருவாட்டி தெ. மீ. அங்கயற்கண்ணி அம்மையார்க்கும், பேராசிரியப் பெருந்தகை தெ.பொ.மீ. அவர்கட்கும் எங்கள் மனமார்ந்த நன்றியுரியது.

இந்நூல் நன்கு அமைய பலவகையிலும் உதவிய இனிய நண்பர் திரு. இ. அண்ணாமலை எம்.ஏ., அவர்கட்கும் நன்றி.

தமிழகம் இந்நூற் பயனைப் பெற்று மகிழுமாக.

சேகர் பதிப்பகத்தார்.

பொருளடக்கம்

1.	எல்லோரும் கற்க	...	9
2.	கற்றபின் நிற்க அதற்குத் தக	...	25
3.	தமிழகத்தின் பயிற்று மொழி	...	34
4.	தாய்மொழியே கல்லூரி மொழி	...	44
5.	கல்வியின் நோக்கம் தாய்மொழிப் பிணையலே	...	49
6.	தமிழ்க் குழவி தமிழ் கற்கவேண்டாமா?	...	54
7.	முயன்று பார்க்கட்டுமே!	...	57
8.	ஆங்கிலமே இருக்கட்டுமே!	...	64
9.	இணைமொழிக் கல்வி	...	69
10.	விடுதலைக் கல்வி	...	78
11.	கல்வியில் தெளிவு	...	83
12.	ஏன்? எது? எப்படி?	...	90
13.	தனி ஆளா? சமுதாயமா?	...	97
14.	திருவள்ளுவரும் இந்நாளைய கல்விக் கொள்கையும்	...	102
15.	எதிர்கால ஞானப் பழங்கள்	...	119
16.	குழந்தைகளே குழந்தைகளுக்கு எழுதவேண்டும்	...	123
17.	வெள்ளித் திரையில் கற்கப் போ	...	127
18.	நமக்கா கணக்கு வராது?	...	132

19. தமிழ்க் கண்டத்தைக் கண்டுபிடித்தல் ... 136
20. தமிழ் மரபுகள் ... 141
21. இந்நாளைய இலக்கியங்களைக் கற்கவேண்டும் ... 147
22. இலக்கணம் ஏன் கற்கவேண்டும்? ... 158
23. பஞ்சாயத்தும் பல்கலைக்கழகமும் ... 166
24. பிரெஞ்சு இந்திய நிலையம் ... 174
25. எழுத்துச் சீர்திருத்தம் ... 182
26. அச்சடிக்கும் தொல்லை ... 189
27. தொல்லை என்று முணுமுணுப்பான் ஏன்? ... 196

எல்லோரும் கற்க

கல்வியே கண். கண் தெரிந்தால் அன்றோ வழி தெரியும். வாழ்க்கையின் வழி தெரிவது கல்விக்கண் திறந்தால்தான். வழி அறிவதே கல்வி. உருப்போட்டு ஒப்புவிப்பது மட்டும் கல்வி அன்று; அது பழங் கூத்து. பழைய வழியைக் காட்டப் பழம் பாடம் துணை செய்யும். சில பழைய வழிகள் புதிய வழிகளாகவே இருக்கும்; சில பழைய வழிகள் முள்மூடிப்போய் இருக்கும். காலம் புதிது புதிதாகக் காட்சி அளிக்கும்போது புதுவழியும் கண்டு பிடிக்கவேண்டும். நாட்டுப்புறத்தில் வயலின் நடுவே ஒய்யாரமாக நடக்கிறவன் வண்டிகள் விரைந்தோடும் நகரத் தெருவின் நடுவே ஒய்யாரமாக நடக்க முடியுமா? ஓரத்தில் ஒதுங்கியே நடக்கவேண்டும். வழி என்றால் அதன் இயல்பு என்னவோ ஒன்றுதான்; ஆனால் சுற்றுப் புறச் சூழலுக்கு ஏற்றவாறு வேறு வேறு காட்சி அளிக்கும். பொன் ஒன்றுதான்; ஆனால் அதில் கெம்புக் கல்லைப் பதித்தால் ஓரழகு; பச்சைக் கல்லைப் பதித்தால் வேறு அழகு; நீலக் கல்லைப் பதித்தால் மற்றோர் அழகு. அதுபோல வழி என்பதும் சூழலுக்கு ஏற்ப மாறும்.

வழி அறிவது எந்த ஊருக்குப் போக? வாழ—வெற்றியுடன் வாழ—இன்பமாய் வாழ. நம் முழு ஆளுமையும் (ஆளாய் நிற்கும் தனி முழு நிலைத் தன்மை-

Personality) திறமையும் முற்றிப் பழுத்து நமக்கும் உலகிற்கும் இனிக்குமாறு வாழவே அனைவரும் விரும்பு கிறோம். அதற்கு வழி எது? அவ்வாறு வாழ முற்படுவதே யாம். வாழ்வே வாழ்விற்கு முதலும் முடிவும். ஆண்ட வனை அடைய ஆண்டவனே வழி; இருட்டில் ஒளியைக் காண ஒளியே வழி; அதேபோல வாழ்வுக்கு வாழ்வே வழி. தட்டித்தடுமாறித் தளர்நடையிட்டே நடையினைக் கற்கிறது குழவி; தத்திப் பேசிக் குளறி வழிந்து பேசியே பேசக் கற்கிறது.

நீரில் விழாது நீந்தக் கற்க முடியுமா? ஒவ்வொரு நிலையிலும் இவ்வாறு வாழ்ந்தே வாழக் கற்றுக்கொள் கிறோம். அருகே இருப்பார் ''கையை இப்படி வை; காலை இப்படி அசை'' எனலாம்; ஆனால் அதன்படி செய்ய வேண்டியவர் நீந்தக் கற்பவரே.

அருகே இருந்து சொல்வதற்குப் பதிலாக எழுத்தில் எழுதித் தரலாம்; அந்த எழுத்தினைப் படிப்பது கல்வி ஆகாது. நீந்தக் கற்பவன் அதனைப் படித்த பின்னும் தானே நீந்திக் கற்க வேண்டும். நம் சுமையை எழுதி வைத்தவன் சுமக்க முடியாது; நம் விருந்தினை எந்த நளனும் உண்டு களிக்க முடியாது. அவரவர் சுமையை அவரவரே சுமக்கவேண்டும்; அவரவர் விருந்தினை அவரவரே உண்டு களிக்கவேண்டும். பக்கத்துச் சொல் பதினாயிரம்; பதினாயிரம் பெற்றாலும் வெறுஞ்சொல் மட்டும் கல்வியாகாது; வாழக் கற்பதே கல்வியாம்; வாழ்வே கல்வி.

வாழ்வே கல்வி என்பதில் முற்காலத்தில் ஐயம் ஏற்பட்டதில்லை. மக்கள் தம் தாய் தந்தையரோடு கூடி வாழ்ந்து வாழக் கற்றனர். பிறரோடு பழகுவது, தத்தம் தொழிலைச் செய்வது, தங்கள் குடும்ப வர

லாற்றை அறிவது, பருவ நிலைகளை அறிவது—இவற்றை எல்லாம் பள்ளிக்கூடத்திற்குப் போகாமல் வீட்டிலேயே கற்றுக்கொண்டனர். வாழ்க்கைக்கு வேறாகத் தனியே பள்ளிக்கூடம் என ஒன்று இல்லை. பின் ஒரு சிலர் ஆளத் தொடங்கினர். மந்திரம், தந்திரம், சடங்கு, வழக்கு என்பன புறப்பட்டன; மறைபொருள்கள், மாய வித்தைகள் என்பன எல்லாம் திரைக்குள்ளே வளர்ந்தன. ஒவ்வொரு தொழிலையும் எப்படிச் செய்வது எனப் பாட்டாகப் பாடிக்கொண்டே செய்வது வழக்கமாகி விட்டது. இந்தப் பாட்டெல்லாம் மந்திரமாயிற்று. எழுத்துக்கள் எழுதவும் ஒரு சிலர் கற்றுக்கொண்டனர்; இந்தக் கூட்டமே பிறருக்குக் கற்பிக்கத் தொடங்கியது; பள்ளிக்கூடமும் பிறந்தது. மெல்ல மெல்ல எல்லாத் துறைகளையும் கற்பிப்பவர்கள் ஆசிரியர்களே என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. வேலைகளைச் சிற்றாளாக இருந்து கற்றுக்கொள்ளும் வழக்கம் மறைந்தபோது வேலையைப் பள்ளிக்கூடத்தில்தானே கற்கவேண்டும். வெட்ட வெளியில் ஆடலும் பாடலும் நடைபெறுவது வழக்கம். வெட்டவெளி மறைந்தபோது பள்ளிக்கூடந்தான் இவற்றிற்கு ஏற்பாடு செய்யவேண்டும்; விஞ்ஞான உலகமாக நம் உலகம் மாறியபோது விஞ்ஞானக் கலையினையும் பள்ளிக்கூடமன்றோ கற்பிக்க வேண்டும்; குடியரசு வாழ்வு வாழ முற்படுகின்ற இந்தக் காலத்தில் குடியரசு வாழக் கற்பிப்பதோடு அரசியற் கல்வியும் பள்ளிக்கூடமன்றோ கற்பிக்கவேண்டும்; கோயிலுக்குப் போவார் குறைந்தபோது பள்ளியன்றோ கோயிலாக வேண்டும். வயிற்றின் கொடுமையால் தாயும் தந்தையும் பிழைக்க வழிதேடி வேலை செய்யப் போகின்றனர்; குழந்தை வளருவது எப்படி? கைக்குழந்தையாக இருக்கும்போதே பள்ளிக்கூடம் குழந்தையை ஏற்றுக்கொள்ள

வேண்டும்; உணவு தரவேண்டும்; உடை உடுத்த வேண்டும்; தாயும் தந்தையும் அண்ணனும் உற்ருேருமாய்ப் பள்ளியே உதவவேண்டும். இவ்வாறு எல்லாத் துறையுமாகப் பள்ளி வளர்ந்துவிட்டது. இதற்கேற்ப இதன் பொறுப்பும் உலக முழுவதுமாய் வளர்ந்துள்ளது. போரும், போட்டியும், கொடுங்கோலும், பசியும், நோயும், கொள்ளேயும் பிடுங்கித் தின்னும் பேயாட்டமும் எங்கும் நிறைந்திருக்கக் காண்கிருேம். மக்கள் மக்களாக வாழ இடமில்லே. இவை எல்லாம் தீரப் பள்ளியே வழிகாட்டவேண்டும். வருங்கால உலகம் அங்கன்ருே வளர்கின்றது.

வேதம் ஓதி மந்திரம் பாடிச் சடங்குகள் செய்ய ஒரு சிலர் படித்தால் போதும். ''யான் ஆர்?'' என்ற கேள்வியில் ஈடுபட ஒரு சிலரே படித்தால் போதும். அரசியலில் ஏடும் எழுத்தாணியும் எடுத்து வேலே செய்ய வேண்டுமாளுல் ஒரு சிலர் படித்தால் போதும். இன்று எல்லாத் துறைக்கும் வழிகாட்டுவது பள்ளிக்கூடமாளுல் ஒரு சிலர் அங்குப் புகுந்தால் போதுமா? எல்லோருமே கற்க வேண்டும். அடிமைகள், கூலியாட்கள் என ஒரு சிலரை ஒதுக்கி வையாமல் ''எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓரினம், எல்லாரும் இந்நாட்டு மன்னர்'' என்ற குடியரசுக் கொள்கை பரவி உள்ளது; எல்லோரும் ஒரே தன்மையர் என்பதற்கில்லே; உலகம்பலவிதம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று எளிது. எறும்பும் தன் கையால் எண் சாண். ஆதலின் எல்லோரையும் ஒரே முறையில் பழக்கிப் பயன் இல்லே; அவரவர்கள் உயர்வு சிறந்து விளங்குமாறு கல்வித்திட்டம் அமையவேண்டும். எல்லோருக்கும் ஒரே தன்மையான வாய்ப்புத் தர வேண்டும். அனேவரும் ஆளவரும் இந்த நாளில் அனேவரும் அடிப்படைக் கல்வியறிவு பெறவேண்டாமா?

கல்வி ஒளி இல்லாமல் இருட்டிலா நாட்டை ஆள முடியும்?

எல்லோரும் படிக்க வரும்போது பழைய முறைகள் செல்லாத காசாகும். வெறும் சொல்லாரவாரமும் உருப்போடுதலும் மட்டும் பயன் தாராமற் போகும். எண்ணுவது என்றால் சொற்களைக் கொண்டுதான் எண்ணவேண்டும் என்பதில்லை; பசு என்ற சொல் பசுவினை நினைப்பூட்டும். அந்தச் சொல்லை அறியக்கூடியவர் சிலரே. பசுவின் படம் அதனைவிடப் பெரிய விளக்கம் தரும்; பசுவைப்போல் பொம்மை செய்து கற்றால் பசு என்ற எண்ணம் மறக்கவே மறக்காது. பசுவை நேரே கண்டாலும் அதனை வளர்த்துப் பழகிப் பால் குடித்தாலும் பசுவின் அனுபவம் மேலும் சிறந்து விளங்கும். முன் எல்லாம் புழு முதல் கடவுள் வரையில் அனைத்தினையும் இரண்டொரு எழுத்துக்களில் எழுதிக் காட்டி வந்தனர். இப்போது கூட்டம் கூட்டமாகப் பள்ளிக் கூடத்தில் புகுகின்ற குழவிகள் அத்தகைய சொற் பழக்கம் பழுத்த குடும்பத்திலிருந்து வருகின்றவை அல்ல; வற்றுந்தரையைப் பச்சைப் பயிராக்கிப் பொன்னாக நெல்கொழிக்கவைக்கும் குடும்பம், வானுக்குப் படிகட்டுவது போல கோபுரங்களைக் கட்டும் குடும்பம், கைக்கும் உளிக்கும் அசையாத இரும்பையும் உருக்கி விரும்பியபடி வேலை வாங்கும் குடும்பம்—இப்படிப் பல குடும்பங்களிலிருந்து குழந்தைகள் வருகின்றன. இவர்கள் சொல்கொண்டு வெறுங் கையை முழம் போடுவதில்லை. படமெழுதிப் பார்ப்பர்; கையாலே செய்தே பார்த்து விடுவர். வாய்ப்பந்தல் போடுவது இவர்களால் முடியாது; கை வரிசை காட்டவே முடியும். தங்கள் கையையே மூளையாகக்கொண்டு எல்லாவகைச் சிறபத் தொழிலும் செய்து வருகிறார்கள்.

கைக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பினை நாம் அறிய வேண்டும். மனிதனுக்கும் விலங்குக்கும் என்ன வேற்றுமை? முன்னங்கால்களை நடக்கும் கால்களாகப் பயன்படுத்தாமல் கருவிகளைப் பயன்படுத்தும் கையாக மனிதன் மட்டுமே நீட்டிக் காட்டுகிறான். கருவிகள் எல்லாம் நம் கையோடு கையாகிவிடுகின்றன. உலகம் முழுவதும் நம் கைக்குள் சிக்கி நம் விரல் அசைவதுபோல அசைகின்றது. கைகொண்டே உலகத்தினை அறிகிறோம்; அறிவும் வளர்கிறது. நமது வலக்கையே நம் தொழிலில் பெரும் பங்கு எடுத்துக் கொள்கிறது. இந்த வலக்கையை வேலை வாங்குவது தலையில் இடது பக்கமுள்ள மூளையே ஆம்; அந்த இடப்பக்கமுள்ள மூளையே அறிவாராய்ச்சியிலும் ஈடுபடுகிறது. கைக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பு இதனால் விளங்கவில்லையா? கற்பது என்றால் செய்து பார்ப்பதே ஆம். ஆகவே கல்விமுறை இப்போது புதிதாக வருவோரை நோக்கினாலும் சரி, கல்விமுறையின் அடிப்படையை நோக்கினாலும் சரி, சொல்முறைக் கல்வியாகாமல் செயல்முறைக் கல்வியாகவே அமைய வேண்டும். குழந்தையைப் பார்த்தாலும் இந்த உண்மை விளங்கும்; விடாது பேசவும் குழந்தை விரும்புகிறது; எதையேனும் செய்து கொண்டே இருக்கின்றது. செய்து பார்த்துக் கற்பது என்பதே இந்நாளையக் கல்வி முறை.

கல்வியே வாழ்வு. பள்ளியானது வாழ்வு முழுவதினையும் ஒன்றாக்கிக்கொண்டு விளங்குகிறது. கல்வி எழுதப் படிக்கக் கற்பது மட்டுமன்று; வாழ்வதெல்லாம் கல்வியே என்ற கொள்கையும் விளங்கிக்கொண்டே வருகிறது. பிறந்தது முதல் இறக்கும் வரை கற்று வருகிறோம். வாழ்ந்து வரும்போது மக்களைப் பற்றியும் பொருள்களைப் பற்றியும் முன் தெரியாதவனவற்றை இமைப்போதும் தெரிந்துகொண்டே வரவில்லையா? ''என் ஒருவன் சாந்

துணையும் கல்லாதவாறு'' என்று திருவள்ளுவர் கூறுவதன் பொருள் இப்போது விளங்குகிறது. சாகும்வரையும் கல்வி என்றால் இளமையிற் கற்பதோடு கல்வி முடியாது என்பதாயிற்று. முதியோர் கல்வி இயக்கம் தோன்றியுள்ளது. காட்சி நிலையம், நூல் நிலையம், வாசகசாலை முதலியன சாகும் வரையிற் கற்க உதவலாம். இவை இருந்தால்தான் கற்றது மறந்து போகாது நிலைக்கும். இவை அனைத்தும் சேர்ந்த அறிவு நிலையமே இந்நாளையப் பள்ளியாம்.

நம்முடைய உலகம் அணுவினை எல்லாம் ஆராய்கின்றது; செல்வம் கொழித்து நிற்கின்றது. ஆனால் ஒரு சிலரே இன்பமாக வாழ்கின்றனர்; பலரோ வெயிலில் புழுப்போலத் துன்பத்தில் துடிதுடித்துச் சாகின்றனர். இந்த நிலை மாறவேண்டுமானால் கல்வி பரவவேண்டும்; எல்லோரும் உண்மையை அறிந்து ஆள வருதல் வேண்டும். வாழ்வே கல்வியானால் பள்ளி ஏன்? உலகின் பல மூலைகளில் சென்று அனைத்தினையும் கற்க நமக்கு நாளேது? உலகத்திலுள்ள சூழலைக் கெடுதலுக்கு இடம் இல்லாமல் பள்ளிக்கூடம் தன்னிடத்தே அமைத்துக்காட்டுகின்றது. இதுவரையிலும் உலகம் பெற்ற அனுபவம் நமக்கும் பயன்படும்வகையில் பள்ளிக்கூடம் அமைந்துள்ளது. ஆதலின் பள்ளிக்கூடம் இன்றியமையாது வேண்டும். சாகும்வரை இங்கிருந்தே கற்க முடியாது. இளமைப் பொழுதிலேனும் அனைவருக்கும் பள்ளி வாழ்வு வேண்டும். எதிர்காலத்து மக்களை வளர்க்கின்ற பாத்திகளே பள்ளிகள். அங்கே நல்ல வழியில் வளர்ந்து ஓங்கி விட்டால் பின் எந்தப் பெருங்காற்றுக்கும் பெரு மழைக்கும் ஈடு கொடுக்கலாம். எதிர்கால உலகம் இன்பமாய் இனிக்கும்.

நம் இந்தியாவின் நிலை என்ன? பள்ளிக்கூடத்தில் புகுந்து வந்தவரிடம் படிப்பு வாசனை வீசும்; பெயர் மட்டும் எழுதத் தெரிந்தவரிடம் எழுத்து வாசனை வீசும். நம் நாட்டில் நூற்றுக்கு 15 பெயர் மீதே இந்த வாசனை வீசுகிறதாம். இந்த இருட்டில் இன்பம் கொழிப்பது எங்கே? 150 ஆண்டுகளுக்கு மேல் நம்மை ஆண்ட ஆங் கிலேயர் நம்மை வளர்த்த முறை இதுதான். ஆங்கிலேயர் பழைய பள்ளிக்கூடங்களைச் செத்து மடியவிட்டனர்; ஆங்கில உடையிலும் நடையிலும் பழக்கி ஆங்கிலம்பேசக் கற்றுக்கொடுத்தனர். அவர்களுக்கு நிறைய ஆண்கள் வேலை செய்யக் கிடைத்தனர். ஆனால் இத்தகைய புறஞ் சுவர்க்கோலம் செய்யும் கல்வி காற்றில் பறக்குமே அன்றி வேரூன்றாது. இது பரவுதற்கு இடம் இல்லாது போயிற்று. ஒரு சிலர் கற்றால் அவர் வழியே பிறரும் கற்பர் என்ற எண்ணம் கனவாகியது. ஊர் எல்லாம் பள்ளிக்கூடம் திறக்க வேண்டுமென்ற அறிவு பிறந்தது. ஆனால் பணம் ஏது? தாங்களும் தங்கள் படையும் வயிற்றின்மேல் ஈரத் துணியைப் போட்டுக்கொண்டு பணத்தினை மிகுத்துப் படிப்பிக்க முடியுமா? படிப்படியாய்ப் போக வேண்டுமென்ற பாட்டே பாடினர். இவ்வாறு பாட்டுப் பாடி உலகினை ஏமாற்ற முடியாதபோது நல்ல பிள்ளைகளைப்போல வெள்ளையர் வெளியேறினர். அவர் கள் நாட்டில் கல்விக்காகத் தலைக்கு 33 ரூபாய் ஒவ்வோர் ஆண்டுக்கும் செலவாகிறது. நம்முடைய நாட்டில் தலைக்கு அரை ரூபாய் தான் செலவு. என்ன செய்வது? மனமுடைந்து போவதா? ருஷ்யாவில் இதனைவிடச் சீர் கேடான நிலைமை இருந்தது. இருபது ஆண்டிற்குள் அந்நாட்டில் பலரும் கற்றவராக மாறியுள்ளனர். அவர்கள் செய்ததுபோல நாமும் செய்ய முடியுமன்றோ.

எல்லோரும் கற்றவர்களாக வேண்டும். கல்வி கரை யில; கற்பவர் நாள் சில. அடிப்படைக்கல்வி எவ்வளவாக அமைய வேண்டும்? 12 வயது வரை கற்கவேண்டு மென்பர் நம் நாட்டினர்- பேராசையற்ற பெருந்தவத் தினர். அப்போது காளைப் பருவம் கால் எடுத்துவைக் கிறது. பின் 15—16ல் ஒருபடி. 18 வயதில் மற்றொருபடி. அப்போது இளைஞன் முற்றிய மனிதனாகிறான். இந்த இளமை முழுதும் கற்பதே சிறப்பு. முடியாது போனால் 15-16 வயது வரையேனும் கற்கவேண்டும். இதுவே இங்கிலாந்து காணும் கனவு. அவர்களே அவ்வாறு கனவு காணும்போது நாமும் அதனை மேல்வரிச் சட்டமாக அமைத்துக்கொண்டு, முதற்படியாக 11-12 வரை எல் லோரையும் உடனடியாகக் கற்பிக்கத் திட்டம் வகுக்க வேண்டும். பின்னர் படிப்படியாக 18 வரை உயர்த்திப் போகலாம்.

கற்பது என்றால் கரும்பு தின்பதா? எல்லோரும் கற்க ஓடோடியும் வருவாரா? அப்படி இருந்தால் உலகம் இப்படி இருக்குமா? ஆதலின் கட்டாயப்படுத்தித்தான் கற்பிக்க வேண்டும். உரிமை வாழ்வு எனப் பேசும்போது கட்டாயத்திற்கு இடம் உண்டா? தன் நன்மையை அறியாதவருக்குக் கட்டாயந்தான் பயன் தரும். வெறி யனுக்கு உரிமை கொடுத்து என்ன பயன்? வறுமையின் கொடுமையால் பலர் வெறியராகின்றனர். தம் குழ வியை விற்றும் பிழைக்க வருவர். வறுமை வெறியர் மிக்க இந்த நாட்டில் கட்டாயக் கல்வி வந்தால் மட்டுமே அந்த வெறி நீங்கும். கட்டாயக் கல்வி புதிதன்று. ஆனால் கட்டாயக் கல்வி எனச் சில இடங்களில் நடப்பது பெயரளவில்தான். கட்டாயக் கல்வி நல்ல வழியில் கட்டாய முறையைக் கையாள வேண்டும்.

5 முதல் 15 வயது வரை உள்ளவர்கள் 6 கோடி ஆம்; அதில் 1½ கோடி (1,19,85,486) கூடப் பள்ளியில் இல்லை. இதில் இன்னுமொரு கேடு. இதில் முதல் வகுப்பில் உள்ளவர் 52 லட்சம்; 2-ஆம் வகுப்பில் 24 லட்சம்; அதாவது பாதிகூட இல்லை. 3-ஆவது வகுப்பில் 17 லட்சம்; 4-ஆம் வகுப்பில் 12 லட்சம்; 5-ம் வகுப்பில் 7 லட்சம்தான். முதல் வகுப்பில் சேர்ந்தவர் அத்தனைபேரும் 5-ஆம் வகுப்பு முடியக் கூடக் கற்கக் காணோம். பள்ளியின் வாயிலில் புகுந்தவர்களில் அரைக்காற் பங்கினரே முற்ற முடிந்து செல்கின்றார்கள். முக்காலே அரைக்காற் பங்கினர் அரை குறையாகப் பள்ளியை விட்டு வெளியேறுகின்றனர். முதல் வகுப்பிலேயே பாதிப்பேர் விட்டுச் செல்கின்றனர். இவர்கள் என்ன கற்றிருக்க முடியும்? அரை குறையாகக் கற்பதற்குச் செலவிட்ட பணம் எல்லாம் விழலுக்கு இறைத்த நீர்தானே? வானம் பார்த்து வாழ்கின்ற உழவன்—அரைவயிறும் நிறையாது அல்லும் பகலும் உழைக்கின்ற உழவன்-தரும் வரிப்பணம் இவ்வாறு பாழாக லாமா? வருகின்றவரேனும் நாள்தோறும் தவறாமல் வருகின்றனரா? ஆடிக்கு ஒருநாள் அம்மாவாசைக்கு ஒருநாள் வந்தால் மேல் வகுப்புப் போவது எங்கே? அதே வகுப்பில் தேங்கித் தயங்கி வெறுப்பெடுத்து வெளியேற வேண்டுவதுதான். தேக்கமும் கூடாது; பாழ்போதலும் கூடாது. இவற்றினைத் தடுக்க வேண்டுமானால் கட்டாயப் படுத்தவேண்டும்.

இப்போது சில இடங்களில் வழங்கும் கட்டாயத் திட்டம் வெறும் பேச்சே. நகராண்மைக் கழகம் முதலியவை கட்டாயத்தினைக் கையாளுவது அருமை. வாக்காளர் என்ன செய்வார்களோ என அஞ்சுவர். கட்டாயத்தினை வற்புறுத்துவது எங்கே? இதற்கு வழி செய்ய வேண்டும். ஊரைப் பெருக்கி வாரவும் பணம் போதாது

அலையும் நகராண்மைக் கழகங்கள் இதற்குப் போதிய பணம் செலவு செய்ய முடியுமா? மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படையாக உள்ளது கல்வியே என்றால் அடிப்படைக் கல்வியின் முழுப் பொறுப்பினையேனும் துரைத்தனம் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். பெற்றோரைக் கட்டாயப் படுத்தவேண்டும். சிறுவரை வேலைக்கு வைத்துக்கொள்வோரையும் தண்டிக்க வேண்டும்.

கட்டத் துணியில்லை; கஞ்சிக்கு வழி இல்லை. எலும்பும் தோலுமான உடம்பு; புறாக் கூண்டுபோல குவிந்த மார்பு; கொக்கிப் புழுப்போல் வீங்கிய வயிறு; வெளுத்த கண்ணும் முகமும். இந்த வறுமைத் திருமேனி சிலபோது தீண்டாத் திருமேனியாகவும் இருக்கும். பள்ளிக்குப் போகவும் முடியாது. இங்கே கல்வி பூப்பது எப்படி? ஊருக்கு ஒரு பள்ளி இருத்தல்வேண்டும். பெற்றோரது சமயக் கொள்கைக்கு மாறுபடாத பள்ளிகள் வேண்டும். நடுவேளைச் சோறு துரைத்தனமே போடுதல் வேண்டும். நடுவேளைச் சோறு இல்லையானால் சென்னையில் கட்டாயக் கல்வி பரவி இருக்க முடியாது. செல்வம் கொழிக்கும் தலைநகரின் தலை எழுத்தே இவ்வாறானால் வறுமை பிடுங்கித் தின்னும் நாட்டுப் புறங்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? காசில்லாமலே கல்வி கற்கவேண்டும். கட்டத் துணியும் கொடுக்க வேண்டும். கற்கும் சுவடிகளும் எழுதும் பலகைகளும் இலவசமாகவே தருதல் வேண்டும். இல்லை என்றால் இவைகள் எல்லாம் எங்கிருந்து ஏழைக் குழவிகளுக்குக் கிடைக்கும்?

தீண்டாமை ஒழிந்தது எனச் சட்டசபையில் பேசிக் கொள்ளலாம். சாதிச் செருக்கினால் மந்திரி சபையும் கவிழ நிற்கும் இந்தக் காலத்தில் சாதிக் கொடுமையைக் கண்ணும் கருத்துமாய் இருந்து தடுக்கவேண்டும். குழந்

தையும் கடவுளும் கொண்டாடும் இடத்திலேதான் ஓங்கும். பிற்பட்டோருக்கு என்றே அவர்கள் பள்ளிகளை ஏற்படுத்திப் பிறரையும் அங்குச் சேர்ப்பது நல்ல முறை யாகும். மேல் வகுப்பில் படிப்பவருக்கு வீட்டருகேயே பள்ளிகள் இல்லாமற் போகலாம். துரைத்தனம் அப்போது போக்குவரத்திற்கு வேண்டிய வண்டிகளை இலவசமாகத் தந்துதவ வேண்டும்.

கல்வி என்பது எழுதக் கற்பது மட்டுமன்று; முழு ஆளுமையும் வளர்வதே கல்வி. உடலும் வளரவேண்டும்; நோயில்லாதபடி தடுக்கவேண்டும். மருத்துவர் கல்வித் திட்டத்தின் நடுவிடமாக அமைந்தாலன்றிக் கல்வி பரவ இந்நாட்டில் வழி இல்லை. நோய் நீங்கியதும் உடல் இனிதே வளர வேண்டுமானால் போதிய உணவு வேண்டும்; ஆடலும் பாடலும் ஓய்வு நேரத்தினை இன்பமாக்கும்; உடலோடு மனமும் வளரும். நாட்டுப் புறத்தில் விளையாட நிறைய இடமுண்டு; நகரங்களிலோ நடு வாசல் அன்றி விளையாட இடமே இருப்பது இல்லை. இப்படிப்பட்ட இடத்தில் கற்பதனைவிடக் கல்லாமல் இருப்பதே மேல்; உடற் கல்வி இல்லாதபோது கல்வியால் பயனே இல்லை. ''உடலை வளர்த்தேன்; உயிரை வளர்த் தேன்'' என்று திருமூலரும் வற்புறுத்தவில்லையா? கல்வி எல்லாம் செயல் முறைக் கல்வியாக இருக்க வேண்டும் என முன்னரே கண்டோம். இதுதான் வார்தாத் திட்டத்தின் அடிப்படை; ஆனால் எல்லாம் நூல் நூற்ற லாகவே முடிதல் கூடாது. பலபல தொழில்களின் வழியே அந்தந்த இடத்திற்குத் தக்கபடி கற்பிக்க வேண்டும். தொழில் வழியே கற்பிக்க முடியாதனவற்றை வேறு வழி யாகவும் கற்பிக்கலாம். இந்தத் தொழில் வழியே பணம் சேர்த்துக் கல்விக்காகும் செலவுக்குக் கொடுத்துவிடலாம் என்று இப்போது எண்ணுவார் ஒருவருமில்லை.

தங்கள் தங்கள் வேலைக்குக் குழந்தைகள் உதவ வேண்டும் எனத் தாய் தந்தையர் விரும்பினால் கல்வி கற்க வழி ஏது? ''மயிலே மயிலே இறகு கொடு'' என்றால் கொடுக்குமா? கட்டாயப்படுத்தித்தான் கற்பிக்க வேண்டும். ஆனால் ஒன்று செய்யலாம். பள்ளிக் கூடத்திற்கு நிறையக் கட்டடங்கள் இல்லாதபோது இது நல்ல வழியே ஆம். மாற்றுக் கட்டுப் பள்ளிகள் நடத்துவதே இந்த வழியாம். காலையில் ஒரு கூட்டம், மாலையில் ஒரு கூட்டம், நடுப்பகலில் ஒரு கூட்டம் என மூன்று பள்ளிகள் ஒரே கட்டடத்தில் நடத்தலாம். காலையில் பெற்றோர்க்கு உதவும் குழந்தைகள் மாலையில் படிக்க வரலாம். மாலையில் உதவும் குழந்தைகள் காலையில் படிக்க வரலாம். தங்கள் பெற்றோர்க்கு உதவிய பின்னர் ஓய்ந்த நேரத்தில் தங்களுக்கு ஏற்றவாறு படித்துப் போகலாம். பெற்றோர்க்கு உதவுவதும் ஒரு வகைக் கல்வியே ஆம். உழவினையே நம்பியிருக்கும் நாட்டுப் புறங்களில் இத்தகைய ஏற்பாடு இன்றியமையாததே ஆம்.

பெண்களே இத்தகைய அடிப்படைக் கல்வியினை நடத்தித் தரவேண்டும்; இதுவே கல்வி முறையில் சிறந்த அறிஞர்களது கனவு. பெண்களே ஆசிரியர்களாக வரவேண்டும். இந்த எண்ணம் நிறைவேற வேண்டுமானால் மணமான பெண்களும் வீட்டு வேலையை முடித்த பின்னர் பள்ளியில் வந்து கற்பிக்கவேண்டும்; மாற்றுக் கட்டுப் பள்ளி இருக்குமானால் அவர்கள் ஒரு சில நேரமாவது ஆசிரியர்களாகத் தொண்டு செய்ய வாய்ப்பு உண்டாகும். மணமான ஆசிரியர் தங்கள் குழவிகளை எங்கே விடுவர்? ஒவ்வொரு பள்ளியிலும் கைக் குழந்தைப் பள்ளிகளும் உடன் இருக்கவேண்டும். ஆசிரியர்களின் குழவிகள் அங்கு வளரலாம்; கைக் குழந்தைகளைப்

பாராட்ட முடியாமல் வயிற்றுப் பிழைப்புக்காகத் தொழில் செய்யப் போகும் தாய்மாரின் குழவிகளும் அங்கு வளரலாம்; பிற குழவிகளும் அங்குக் கற்கலாம். என்ன கற்பது? ஓடி ஆடிப் பாடிக் கண்டு கேட்டுத் தொட்டு முகர்ந்து சுவைத்து அனுபவத்தினைப் பெற்று உலகினை அறிந்து விளையாடுவதே அக்குழவிகள் கற்கும் கல்வி. ஒழுங்காக உடுக்க, உண்மை பேச, நடக்கக் கற்றால் போதாதா?

இப்போது அடிப்படைப் பள்ளிகள் இரண்டு வகைகளாக அமைந்துள்ளன. தொடக்க நிலைப் பள்ளிகள் ஒரு வகை. இவற்றில் படிப்பார் உயர்நிலைப் பள்ளிக்குப் போகாமலே நின்றுவிடுவர் என்று எதிர்பார்க்கின்றனர். எதிர்பார்த்தது போல நடக்கவில்லை. மற்றொரு வகையான பள்ளி உயர்நிலைப் பள்ளியோடு சேர்ந்தது. ஐந்து வகுப்பு வரையிலும் முதல்நிலைப் பள்ளிகளாம்; இவை கீழ்நிலைத் தொடக்க நிலைப்பள்ளிகள் போன்றவை. மேலும் மூன்று வகுப்புகள் கீழ்நிலை இரண்டாம் பள்ளிகளாம். இவற்றை நடுப்பள்ளிகள் என்றும் வழங்குவர்; இவை மேல்நிலைத் தொடக்கநிலைப் பள்ளிகள் போன்றவை எனலாம். இவற்றிற்கு மேலாக மேல்நிலை இரண்டாம் பள்ளிகள் உள்ளன. இவையே உயர்நிலைப் பள்ளிகளாம்; உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வில் தேர்ந்தவர் கல்லூரியில் படிக்கப் பல்கலைக்கழகத்திற் புகுகின்றனர்.

இப்போது தொடக்கநிலைப் பள்ளிக்கும் பிறவற்றிற்கும் உள்ள வேற்றுமை என்ன? தொடக்கநிலைப் பள்ளியில் ஆங்கிலம் கற்பியாமையே வேற்றுமை. இனி அந்த வேற்றுமைக்கு இடம் இல்லை. எல்லாப் பள்ளிகளிலும் தமிழ் நாட்டுக் குழவிகள் தமிழிலேயே அனைத்தினையும் கற்று வருவர்; மேல் வகுப்பில் ஆங்கிலம் கற்பர். ஆதலின் மொழியைப் பற்றி வேற்றுமை வேண்டுவ

தில்லை. முதல் வகுப்பில் சேரும்போதே ஒரு குழவி உயர்நிலைப் பள்ளிக்குப் போகுமா போகாதா என்று எவ்வாறு கூற முடியும்? ஆகவே இந்த வேற்றுமையை அறவே ஒழிக்க வேண்டும். அடிப்படைப் பள்ளிகள் (Basic School)என்ற பெயரில் ஒரே வகையான பள்ளிகள் நடைபெற வேண்டும்; அடிப்படைக் கல்வி ஒருவகையில் நோக்கினுல், ஒருவகையான வாழ்விற்குக் கடைகாலாக முற்றுப் பெறவும் வேண்டும்; மற்ருெருவகையில் நோக்கினுல், உயர்நிலைப் பள்ளிக்குக் கடை காலாகவும் அமைய வேண்டும். உயர்நிலைப் பள்ளி முடிவுவரை மாணவன் விருப்பப்படியோ பெற்ருேர் விருப்பப்படியோ கற்க வாய்ப்புகள் இருத்தல் வேண்டும். இடையே புகுந்து ஒரு சிலர்தான் உயர்நிலைப் பள்ளிக்குத் தக்கவர் எனப் பொறுக்கி எடுத்துப் பிறரைத் தள்ளிவிடுவது கூடாது. கல்வி இங்கெல்லாம் இயற்கையாக மலர வேண்டுமே யன்றித் தேர்வுகளின் இறுக்கமும் நெருக்கமும் புகுந்து அலைக்கழிக்கக் கூடாது.

எல்லோரும் கற்பதற்குப் பணம் செலவாகும்; பண மிருந்தாலும் ஆசிரியர்கள் எங்கே? உயிருள்ள கல்வி வேண்டுமானுல் ஊக்கமுள்ள ஆசிரியர்கள் வேண்டும். கல்வி வெறி கொண்டவர்கள் வேண்டும். செயல் முறைக் கல்வி பரவ வேண்டுமானுல் கற்பனு சக்தி மிக்கவர்கள் வேண்டும். ஏழாம் வகுப்பு முடித்தவர்கள் ஆசிரியர்களாக வந்தால் குருடுக்குக் குருடு வழிகாட்டிக் குருட்டாட்டம் ஆடிய கதையாக முடியும். உயர்நிலைப் பள்ளிக் கல்வி முடித்தவர்கள் ஒருவகை ஆசிரியர்களாகக் கீழ் வகுப்பில் கற்பிக்க வரலாம்; பல்கலைக்கழகக் கல்வி முடித்தவர்கள் மேல் வகுப்பில் கல்வி கற்பிக்க வரலாம். ஆசிரியப் பயிற்சியோ கையாளும் முறைகளைக் கற்பிக்க வேண்டும்; அந்த முறையை ஆசிரியர்களும் கையாளவேண்டும்.

நாற்பது ஆண்டில் அனைவரையும் கற்றவராக்குவது என்று சார்ஜண்டு குழுவினர் முடிவு செய்தனர். நாம் அத்தனை ஆண்டுகள் காத்திருக்க முடியுமா? ஐந்து ஆண்டுத் திட்டம் ஒன்று வேண்டும்; பல்கலைக் கழகத்தில் கற்று முடிப்போர் கட்டாயமாக இந்தத் தொண்டில் ஓராண்டேனும் ஈடுபடவேண்டும் என்பது ஒரு வழி. இல்லையானால் கல்வியை விரைவில் பரப்புவதற்கு வழி இல்லை.

கற்றபின் நிற்க அதற்குத் தக

மனத்தை யார் பார்த்தார்கள்? ஆனால் மனம் என வாயாரப் பேசுகின்றோம். மனிதனுடைய மனம் இயங்குவது கொண்டே அதன் இருப்பினை அறிய முடிகிறது. மனிதன் அறிகின்றான்; இன்ப துன்ப உணர்ச்சிகளை உணர்கின்றான்; இந்த உணர்ச்சிக்கும் தான் அறிந்த அறிவுக்கும் ஏற்பச் செயற்பட முந்துகின்றான். அவன் செயலினைக் கொண்டு இந்த மூன்றுநிலையினையும் தெளிவாக அறிதல் கூடும். இந்த உணர்ச்சி, அறிவு, செயல் என்ற மூன்று முகங்களைக்கொண்ட கடவுளே மனிதனென்று கூறிவிடலாம். உலகச் சூழ்நிலையைப் பொதுநிலையிலும், வெவ்வேறு சிறப்பு நிலையிலும் அறிந்து மனிதன் இயங்க வேண்டியுள்ளது ஆதலின் மனித வாழ்வு இந்த மூன்று நிலையின் இயக்கமே எனலாம். இவை ஒன்றும் புதிய கருத்துக்கள் அல்ல. ஞானசக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி என்ற உருவத்திலேயே கடவுளின் இயக்கத்தையும் காண்பது இந்நாட்டு வழக்கம்.

கல்வியென்றும், பள்ளிக்கூடமென்றும், கல்லூரியென்றும் கூறுவன எல்லாம், சூழ்நிலைக்குத் தக்கவாறு மனிதனுடைய முழுத் திறமையும் முட்டின்றி இயங்கி வெற்றியும் ஆறுதலும் பெறுகின்ற வகையிலே குழந்தைப் பருவத்திலிருந்தே அவன் பழகுவதற்கு ஏற்பட்ட நிலையங்களாகும். முன்னைய காலங்களில்,

முதிய சமுதாயத்தின் போக்கிலே இளைய சமுதாயத்தை ஈடுபடுத்துவதிலேயே இந்த நிலையங்கள் கண்ணும் கருத்துமாக இருந்தன. அந்த நாளில் எதிர்பாராத சூழ் நிலை மாற்றங்கள் அடிக்கடி எழுவதற்கில்லை. சமுதாய மும் மிகச் சிறியது. ஊரிலுள்ளார் அனைவரும் ஒருவரை யொருவர் இளமையிலிருந்தே அறிந்து பழகி உறவாடி வாழ்ந்து வந்தனர். இந்த நிலையில் பழைய பழக்க வழக் கங்களே சூழ்நிலைக்கு ஏற்ப இயங்கும் நிலையில் இளைஞர் களைப் புகுத்திக் காத்து வந்தன. அரசியல் சூழ்ச்சிகள் இதற்கு அப்பாற்பட்டு இருக்கலாம்; முனிவர்களின் போக்கும் இதற்கு உட்படாமல் ஓங்கலாம். ஆனால் அங்கும் பழமையே அவர்களைக் காத்துவந்தது. அப் பழைய சமுதாயத்தில் மேலேகூறிய மூன்றுநிலை இயக்கம் ஒன்றுக்கொன்று முரணாது முழு நிலையில் விளங்கி யிருப்பது இயல்பேயாம். ஒருவேளை அரசியல் சூழ்ச்சித் துறையின் இயக்கத்திற்கும், பொது மக்கள் இயற்கைத் துறைக்கும் முரண்பாடு இருந்ததால் பொதுமகன் அரசியலிற் புகும்போது இம்முரண்பாட்டால் முதலில் கலங்கி இருக்கலாம்; ஆனால் நாளடைவில் அவனும் பழகி விடுவான். அப்படித்தான் முனிவர்களது வாழ்க்கைத் துறையிலும் புதியவன் ஒருவன் பழகிவிடுதல் கூடும். அறிவதொன்று, உள்ளூர விரும்புவதொன்று, ஆனால் வெளிப்படச் செய்வது ஒன்று என்ற மாருட்டம் அத் துறைகளிலன்றிப் பொதுமக்கள் துறையில் நீண்ட நாள் நிலைப்பதற்கில்லை. ஒரு சிலரன்றிப் பெரும்பாலோர் அந்தச் சிறிய சமுதாயத்தில் அவரவர் வாழ்ந்த சிறிய ஊரெல் லைக்குள் விரும்புவதுபோல எண்ணியும், எண்ணியது போலச் செய்தும் தம் சமுதாயத்தோடு ஒத்து இயங்கி ஏமாற்றத்திற்குப் பெரிதும் இடமின்றி வாழ்ந்து வந்தனர்.

ஆனல் இன்றோ சமுதாயம் அத்தகைய சிறிய நிலையில் இல்லை; அரசியல் வேறு, பொது இயல் வேறு, ஆன்ம இயல் வேறு என்ற பிரிவு களும் இன்று இல்லை. எல்லோரும் ஒற்றுமை பெற்ற இந்த நாளில், தேர்தல் காலத்திலாவது பொது மக்களின் வாழ்வெல்லாம் அரசியல் வாழ்வாகக் கலங்கு கிறது. காந்தி யுகத்தில் வாழ்வின் பல துறைகளும் ஆன்மீக வாழ்வாக விளங்குகின்றன. இந்த ஆன்மீக வாழ்வு அப்பாலைக்கப்பாலான ஒரு குறிக்கோளினை அல்லது ஒரு மக்கட்சுட்டை நம்பாததாகவும் அமைய லாம். இத்தகைய முரண்பட்ட நம்பிக்கைகள் இன்று நம் வாழ்வில் இடம் பெறுகின்றன என்பதனைக் குறிக்கவே ஆன்மீய வாழ்வெனப் பேசுகின்றோம்; கூறப் பார்க் கின்றோம் அல்லவா? இவ்வாறு எல்லாம் ஒன்றாகக் குழம்பியது ஒரு புறம் இருக்கச் சமுதாயப் பெருக் கத்தின் பயனாக ஒருவரையொருவர் அறிவது—ஒருவரோடொருவர் உறவாடுவது—என்பது ஒரு குடும் பத்திலோ, ஒரு குறிப்பிட்ட கூட்டத்திலோ அன்றி முடி யாமற் போகின்றது. விஞ்ஞானத்தின் போக்கால் சூழ் நிலையில் மாறுதல்கள் அடிக்கடி எழுகின்றன. அறிவும் அளவிடமுடியாத அளவு பெருகிவிட்டது. முன் காணாத சிக்கல்கள் பல எழுகின்றன. உலகத்தின் மேற்புறத்தி லிருந்து கீழ்ப்புறத்திற்கு மிக விரைவாகச் செல்வதும், அவ்வாறு சென்று அங்கேயே வாழ்ந்து விடுவதும் இயல் பாகி வருகின்றன. எனவே நிலத்தினோடோ, இயற்கையி னோடோ, தான் பிறந்த சிறு குழுவினோடோ ஒற்றித்து வாழ்ந்து வேரூன்றி நிற்கும் நிலை பலருக்கு இன்று எழுவ தில்லை. ஆனல் மனிதன் எப்படியானாலும் ஆன்மீய வாழ்வு உண்டு என்றாலும் இல்லை என்றாலும், உண்மை என்றாலும் ஏமாற்றம் என்றாலும் எல்லாம் ஆன்மீய வாழ்வைப்

பற்றிய கொள்கைகள் அல்லவா? மனிதன் உயிர் வாழ்ந்தே தீரவேண்டும். அதனுல் அவன் அறிவு ஒருபுறம் இயங்கும்; அவனுடைய விருப்பு வெறுப்புக்கள் வெளித்தோன்ருமலே வேருெருபுறம் இயங்கி உள்ளே அடங்கிக் கிடக்கும்; அவன் செயற்பாடோ இவற்றிற்கு ஒன்றும் இயல்பில்லாதது போலவே விளங்கிப் புதையுண்ட நிலையில் பிறர் செயல்போல ஒத்துப் போகின்ற கட்டாய நெருக்கடியில் அவனையும் உலகையும் ஏமாற்றி இயங்கிவரக் காண்போம். எனவே அவனுக்குள்ளும் போராட்டம், உலகிடையும் போராட்டம் என்ற நெருக்கடி நிலைமை எங்கும் விளங்குகிறது.

இந்த நிலையில் நம்முடைய கல்வி நிலையங்கள் பழமையைமட்டும் மனத்தில் வைத்துக்கொண்டு இளைஞர்களைப் பழக்குவதில் முற்பட்டுப் பயனில்லை. புதிய கருத்துக்களை விஞ்ஞான முன்னேற்றத்திற்கு இணங்க விளக்கினுலும் வெற்றறிவு நிலையில் விளக்கியும் பயனில்லை. இன்றைய சூழ்நிலையில் நம்முடைய புறநிலை அறிவு மிகுந்து கொண்டே வருகிறது. ஆனுல், நம்மையும் நம்முடைய உள்ளத்தைப்பற்றியுமுள்ள அகநிலை அறிவோ, பொதுவாக நோக்கும் போது, தேங்கியே கிடக்கின்றது. அகநிலை அறிவும் புறநிலை அறிவும் ஒன்ருய் இயைந்து நம் உள்ளத்தின் விருப்பு வெறுப்புக்களையும் நம் செயற்பாட்டினையும் யாதொரு போராட்டமும் மாருட்டமுமின்றி ஒருங்கியையும்படி இயக்கிவைக்கக் காணேம். சோகரதர் (Socrates) ''அறிவதென்ருல் செய்வதே'' என்று கூறிய உண்மை இந்த நிலையில் பொய்த்துப்போகின்றது. வள்ளுவர் கூறியபடி ஒவ்வொருவனும் விஞ்ஞான முன்னேற்றத்தினிடையே சாகும்வரை கற்றுக் கொண்டே வருகிருன். ''யாதானும் நாடாமால் ஊராமால் என்னெருவன் சாந்துணையும் கல்லாதவாறு'' என்று

இன்று கேட்கவேண்டுவதில்லே. உலகம் வாஞெலி வழியும், வானவெளிப் பயணத்தின் வழியும் ஒன்ருகி யுள்ளது என்பது இன்று யாவரும் கண்ட உண்மை. ஆனல் இதுவெறும் புறநிலேக் காட்சியேயாம். உலகம் முழுதும் ஒரு குடும்பம் என்ற அகநிலே உணர்ச்சி இன்னும் எழவில்லே. இதனுலேயே இன்று உலகம் வெளிநாட்டுக் கலகங்களிலும் உள்நாட்டுப் பூசல்களிலும் சிக்கிக் கொண்டு திக்குமுக்காடுகின்றது. எனவே ''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக'' என்பதனே இங்கே பலரும் மறந்தே விடுகின்ருர்கள்.

எனவே நம்முடைய கல்வி வெறுமையான அறிவு வளர்ச்சியாகமட்டும் இல்லாமல் செயற்பாடாகவும், உள்ளக்கிளர்ச்சியாகவும் படிப்படியாக மலர்ந்துவரும் அறிவு வளர்ச்சியாக அமைதல் வேண்டும். மனிதனு டைய சூழ்நிலே வாழ்வையும், வயிற்றுப் பிழைப் பினேயும் சமுதாயத்தினரின் உறவினேயும் நடுவிட மாகக் கொண்டு வளரும் வகையில்விஞ்ஞான உண்மை களெல்லாம் உள்ளத்திலும் உடம்பிலும் ஊறிப் படிய வகை செய்ய வேண்டும். இந்தக் கல்வியைத்தான் காந்தியடிகள் வற்புறுத்திஞர். இத்தகைய கல்வியில் சிறந்தவர்களே காந்தியடிகள், விஞேபா, நேரு, ஐன்ஸ் டைன், டூயிலுத்துவி போன்ற பெருமக்கள். இயல்பாக இவர்களுக்கு இத்தகைய கல்வியின் ஆழம் தோன்றி விட்டது; அதனேப்பற்றிய எண்ணமும் அவர்கள் வாழ்வில் நிலேயாக அமைந்துவிட்டது. மற்றவர்களுக்கும் இத் தகைய கல்வியின் ஆழமும் மனிதத் திறன்களின் ஒருமைப் பாடும் ஏற்பட்டாலன்றி உலகத்தின் பண்பாடு நிலேப் பதற்கில்லே. இத்தகைய கல்வி வளர்ந்தால்தான் அறிவு அறிவாக விளங்கக்கூடும். அறிவானது அணுக்குண்டினே எறிந்து சிறிதும் நெஞ்சீரமின்றி அழிவு வேலேயில் ஈடு

படும் அரக்கக் கொடுமை அப்போதுதான் மறைதல் கூடும். எனவே நாம் நம் இளைஞர்களுக்குக் கற்பிக்கும் கல்வியானது அவர்கள் நெஞ்சொடு நெஞ்சாய், அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்து, நாள்தோறும் அவர்கள் செயலாக மலர்தல் வேண்டும். அப்போதுதான் சோக்ரதரும் திருவள்ளுவரும் கூறிய உண்மை உண்மை என்று நம்பப்பெறும்.

இன்று நம் பள்ளிகளில் நடைபெறும் கல்விமுறை இதனை நோக்கமாகக் கொள்ளவில்லை. பழைய காலத்தில் தன் மகன் சரிவர உண்பதில்லை யென்றாலும் தாய் ஆசிரியரிடம் போய் முறையிடுவார். எனவே அக்காலத்தில் இளைஞனை எல்லா வகையிலும் உருப்படுத்துகின்ற பொறுப்பு ஆசிரியருடையதே என்று மக்கள் கருதி வந்தார்கள் இன்று அதனை ஆசிரியர்கள் ஒப்புவார்களா? அத்தகைய பொறுப்பை நம் கல்வி நிலையங்கள் ஏற்றிருந்தால்—அப்பொறுப்பை கல்வி நிலையங்கட்கு மக்கள் தந்திருந்தால் — இக்கல்வி நிலையங்களில் அரசியற் போராட்டமும், மாணவர் குழப்பமும் விளைந்திருக்குமா? மாணவன் நிறை நிலையை அடையவே அங்கு முயல்கின்றானென்று கூறுவதற்கில்லை. தன்னை உருவாக்குவதும் செயற்படுத்துவதும் உள்ளத்தைக் கவர்வதும் தானறியும் கல்வியே என்று அவன் இன்று நம்புகிறானா? நம்பாதது அவன் குற்றமா? அகநிலையும் புறநிலையும்ஒத்து இயங்காத போது ஏமாற்றுதல் என்று பேசுவதற்கன்றி ஒழுக்கம் என்று பேசுவதற்கு என்ன இடமிருக்கின்றது?

இத்தகைய கல்வி வெறும் சொல்லாரவாரத்தாலோ நூல்களை உருப்போடும் கிளிப்பிள்ளைக் கல்வியாலோ எழ முடியுமா? எழுந்தாலும் உள்ளத்தோடு ஒன்றி மனிதனை மனிதனாக்குமா? எனவே சொல்லையும் சொல்லார,

வாரத்தையும் வற்புறுத்தும் கல்வி எந்திரநிலைக் கல்வியாகி அவனை அரக்கனுக்கித் தொலைக்கும். இந்தப் பெருங்கேட்டை நாம் உணர்தல் வேண்டும். இத்தகைய கல்வி மனிதனை அவனாக எண்ணுதற்கும் விடுவதில்லை.

இந்தியாவில் மற்றொரு சிக்கலுமுண்டு. நம்முடைய கல்வி முற்ற முடியத் தாய்மொழியில் அமைவதற்கு இன்னும் இடம் ஏற்படவில்லை. தாய்மொழிபோல் நம் உள்ளத்தின் ஆழத்தை வேறொரு மொழியும் தொட முடியாது; நமது இயற்கையோடு இயற்கையாக இயைந்துவிட முடியாது. இதனை ஆங்கிலத்திலேயே எழுதி உலகு புகழ்பெற்ற காந்தியடிகளும் கவிஞர் தாகூரும் தெள்ளத் தெளிய விளக்கியுள்ளார்கள். இங்கே நாம் கூறுவது மொழி வெறியின் அடிப்படையில் அல்ல. மொழி பிறரைப் பகைப்பதற்கு இன்று இடமாவது உண்மைக் கல்வி பரவாததாலேயாம். ஐரோப்பாவின் இடைக்காலத்தில் லத்தீனிலேயே பேசி எழுதி வந்தவர்கள் மொழி வெறி கொள்ளவில்லை; தங்கள்மொழியை மறக்கவுமில்லை. ஆனால் குடியரசு வாழ்வு மலர்ந்தபோது ஒரு சிலருக்கு மட்டும் பயன்படும் அத்தகைய தாய் மொழி வழியல்லாத கல்வி நிலைக்க முடியாது.

மொழியின் உண்மையை நாம் இங்கே உணர்தல் வேண்டும். குழவி ஒருசில சொற்களைச் சொல்லுவதினாலேயே தன்னுடைய தேவையையெல்லாம் பிறர் வழியே நிறைவேற்றிக்கொள்கிறது. இவ்வாறு சொல்லே செயலாக்குவதோ வெடிக்கு வத்தி வைப்பதுபோல் இருக்கிறது. அதனால் சொல்லின் ஆற்றல் மிகப்பெரிதென இன்றும் அரசியல் மேடைகளிலும், வெறும் திட்டுதலின் பயனாக போரிடும் இடங்களிலும் காண்கிறோம். ஆனால்

மற்ருென்றும் உண்டு. மனிதன் கூடிவாழும் இயல்புடையவன் என்கிருேம். மனிதர்கள் ஒருவரையொருவர் தொட்டுக் கொண்டு வாழவேண்டுமென்பதில்லே. மனித ஒலியைக் கேட்டுக்கொண்டே வாழ்ந்துவிடுதல் கூடும். தொலேவிலிருந்து ஒருவன் ஏன் என்ருல் போதும். உலகத்தின் ஏதோ ஒரு மூலேயிலிருந்துவரும் வாஞெலியை முறுக்கிவிட்டுப் பொருளேக் கேளாமற் போற்றும் புலமை மட்டும் கேட்டுக்கொண்டே தனி நின்று வேலே செய்பவர்களேயும் பார்க்கிருேம். அந்த நிலேயில் தனிமை கடுங் காவலாகத் தோன்றுவதில்லே. இத்தகைய மொழி நிலேக் கூட்டுறவு எழாதபோது மனிதனுக்கு வெறி பிடித்துப் போகிறது என்று இந்நாளேய மருத்துவர்கள் கண்டு பிடித்திருக்கிருர்கள். பேசுவது வேருெரு நோக்கமுமின்றி, பேசுவதற்கென்றே எழுகிறது. தனி நிலேயைக் கடுங் காவல் தண்டனேயாக அரசியல் விதிக்கிறது. ஆஞல் வாஞெலி கேட்கும் பொதுவாக நேரடிச் சிறப்பு ஒவ்வொருவர் தாய்மொழிக்கும் உண்டு. இவ்வாறு நம் உள்ளத்தில் பதிந்து நாமாகவே ஆகிவிட்ட தாய்மொழிபோலப் பிறமொழி நம் உள்ளத்தைத் தொடும் என்பதற்கில்லே. இவ்வாறு இந்தத் தாய் மொழியில் பயின்று முற்றிக் கனிந்த மனிதன் பின்னர் பிற பாடங்களேப் போலப் பிறமொழிகளேயும் பயின்று அதில் ஆர்வம் கொண்டு முன்னேறுதல் கூடும். அந்த மொழிகளிலுள்ள நூல்களின் உண்மையையும் உணர்ந்து தனதாக்கிக்கொள்ளல் கூடும். தனதாக்குவது என்பது தன் தாய்மொழியில் தாஞகவே அனேத்தையும் தன்னுடைய எண்ணமாக எண்ணிவருதல் என்பது பொருளாம்.

மற்ருென்றும் உண்டு. கற்றவன் தனிநின்று வாழ வேண்டுமா? மனேவி மக்களோடும் உற்ருர் உறவினரோடும் தானறிந்ததை விளக்கி மகிழவேண்டாவா—

அவன் கற்ற கல்வி அவன் சமுதாயம் முழுவதும் பரவி, அவன் உள்ளத்தோடும் செயலோடும் ஒன்றுகி இயைய வேண்டாவா? பொது மக்களின் வேருக இவ்வறிஞன் மட்டும் ஒரு தனிக்குலமாக வாழ்வது நலமா? இவன் சமுதாயத்தோடு ஒன்ருக வேண்டுமானால், அவனைச் சூழ்ந்து வளர்ந்த சமுதாயத்தோடு தன் தாய்மொழியில் அன்றி வேறு எந்த மொழியில் பேசுதல்கூடும்? பிறமொழியில் கற்றதையெல்லாம் தனதாக்கி மேலும் பல புதிய உண்மைகளைத் தன் ஆராய்ச்சியால் கண்டு கூறி மேலோங்குவது எவ்வாறு கூடும்?

எனவே இந்நாளைய கல்வி சிறப்புற வேண்டுமானால் தாய்மொழி அடிப்படையிலேயே வளரவேண்டிய உரிமையுடன் தங்குதடையின்றி எல்லாவற்றையும் எண்ணி இனிதே ஆராய்ச்சி செய்யும் வளம் தாய்மொழியில் பெருகவேண்டும். வெறும் சொல்லாரவாரக் கல்வி நீங்கி உள்ளத்தையும் உணர்வையும் செயலையும் ஒருங்கியையவைக்கின்ற கல்வியாக அது மாறுதல் வேண்டும். அப்போதுதான் ஒழுக்கம் என்பது உலகில் வேர்கொள்ள முடியும் ஒழுக்கத்திற்காகக் கல்வியென்று நாம் கூற வரவில்லை. எல்லாவற்றிற்குமாகும் என்ற நிலையில் கல்வியெழும்போது, அஃது ஒழுக்கத்திற்குமாகிற கல்வியாகச் சிறந்து விளங்குகிறது. ஒழுக்கத்திற்கும் கல்விக்கும் உள்ள உயிர்த் தொடர்பு அப்பொழுதே விளங்கும்.

தமிழகத்தின் பயிற்று மொழி

கல்வி, மொழிவழியேதான் நிகழக்கூடும். இன்று எந்த மொழியில் கல்வியைக் கற்பிப்பது என்ற கேள்வி எழுகிறது. இது இக்காலத்தில் எழுகின்ற கேள்வி. அந்த அந்த நாட்டிலே அந்த அந்த நாட்டினர் பேசும் மொழியிலேதான் கல்வி கற்பித்து வந்தார்கள்; வருகின்றார்கள். தமிழ் நாட்டில் பழங்காலத்தில் தமிழில்தான் கற்று வந்தார்கள். வடமொழி முதலியவற்றைக் கற்றவர்களும் உண்டு; அப்போதும் அது துணை மொழியாகவே வளர்ந்தது. அந்தத் துணைமொழியில் பேசியும் எழுதியும் பிறநாட்டவரோடு தொடர்புகொண்டு வாழ்ந்து வந்தனர் தமிழர். எனவே, தம் நாட்டினரோடு எழுதிப் பேச ஒரு மொழியும், உலகத்தோடு எழுதிப் பேச வேறொரு மொழியும் பயன்படுகின்ற நிலை தோன்றியது. ஆனால், அடிப்படைக் கல்வி நாட்டுமொழியில்தான் அப்பொழுது நிகழ்ந்து வந்தது. உயர்நிலைக் கல்வியிலே புகுவோராய் ஒருசில அரிய கருத்துக்களைக் கூறும் நூல்களைக் கற்போர் உலக முழுவதிலும் சிறிய அளவிலேயே அத்தக் காலத்தில் இருந்தமையால், ஒவ்வொரு நாட்டு மொழியிலும் தனித்தனியே எழுதாமல் பல நாட்டிற்கும் பொதுவான மொழியில் அவற்றை எழுதுவதில் ஓர் எளிமை இருந்தது. மேனாட்டில் இலத்தீன் போலக் கீழ் நாட்டில் வடமொழி உலகப் பொதுமொழியாயிற்று.

அதனுல் அத்தகைய அறிவுத்துறைகள் பெரும்பான்மையும் அந்த அந்த நாட்டின் மொழிகளில் ஒரு சிறிதளவே யன்றி பெரிய அளவில் பரவவில்லை. இந்த நிலையில் கல்விமொழி இரண்டாக உயர்நிலையில் அமையக் காண்கிறேம். நாட்டு மொழிக் கல்வி, உலக மொழிக் கல்வி என்ற பாகுபாடு தோன்றுகிறது.

ஒவ்வொரு நாடும் உரிமை பெற்று அந்த் அந்த நாட்டின் பண்பாட்டில் ஊக்கம் காட்டித் தேசியத்தை வளர்த்து வந்த பொழுது எல்லாக் கருத்துக்களையும் நாட்டு மொழியிலேயே கற்றும் கற்பித்தும் வருகின்ற முயற்சி பெருகியது. இலத்தீன் மொழிக் கல்வி குறைய ஆங்கிலம் முதலிய மொழிகளில் கல்வி உயர்ந்ததை மேலை நாடுகளில் காண்கிறேம். ஆனல், ஆங்கிலேய போல ஒரு சில மொழி பேசுவோர் உலகத்தின் பெரும் பகுதியில் அரசியலாலும், வாணிகத்தாலும் உயர்ந்தோங்கினர். அதன் காரணமாக அவர்கள் மொழி உலகத்தின் பல பகுதிகளில் ஆட்சி மொழி ஆயிற்று. பலரும் அந்த ஆட்சி காரணமாக அவற்றை அறிய முயன்றனர்.

ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஆங்கிலம் போன்றவை ஆட்சி மொழியாக மட்டும் அல்லாமல் உலக மொழிகளாகவும் வளர்ந்துள்ளன. பெரும்பான்மையோர் ஒருவகையாக அறிந்த மொழியாக அவை விளங்குகின்றன. எனவே இவை இலத்தீனும் வடமொழியும் போல உலக மொழியாகவும் உயர்ந்து ஓங்கி உள்ளன. எனவே அவை பல நாட்டில் ஒரு துணை மொழியாகக் கற்கப் பெற்று வருகின்றன.

இங்கே மற்றெரு வளர்ச்சியும் காண்கிறேம். மேனட்டு மொழிகள் அங்கே எழுந்து வளர்ந்த காலத்தின் பயனுக எழுந்த வளர்ச்சி இது.

விஞ்ஞானத்தை விளக்குகிற மொழியாக அவை அமைந்துவிட்டன. முதலில் விஞ்ஞானத்தை வளர்த்த மேனாட்டவர்கள் இலத்தீனில் எழுதுவதை விட்டு தம் தாய்மொழியில் எழுதி வந்ததால் இந்த நிலை ஏற்பட்டது. அந்த மொழியில் எழுதிய நூல்களும் பல்லாயிரக் கணக்கில் செலவாகின்றன. அந்த நூல்களைப் போல ஒவ்வொரு நாட்டு மொழியில் எழுதப்படும் நூல்களும் பல்லாயிரக் கணக்கில் செலவாகும் என்பதற்கு இல்லை. அதனால் அந்த அளவில் அத்தகைய நூல்கள் பிறமொழியில் வருவது அருமை. அவ்வுலக மொழிகளில் பல கோடி மக்கள் படிக்க இருப்பதால் அந்தத் தேவைக்கேற்ப நூல்களும் எழுதப்பெற்றுக் கடைக்கு வந்து மலிகின்றன. அத்தகைய தேவை பிறமொழிகளில் எழுவதற்கில்லை; அதனால் கடைக்கு வர அந்தக் கணக்கில் எழுதுவாரும் இல்லை.

அன்றியும் நூல்களே அல்லாமல் நாள்தோறும் புத்தம் புதியனவாகத் தோன்றுகிற பல அறிவு வளர்ச்சிக் கருத்துக்களும் அவ்வப்போது கட்டுரைகளாக ஆராய்ச்சி இதழ்களில் உலக மொழிகளில் வெளிவருகின்றன. எந்த நாடும் முற்போக்கில் இருக்கவேண்டுமானால் இவற்றைக் கற்றுத்தான் தீரவேண்டும். உலகத்தில் முன்னேறியுள்ள ஆங்கிலமொழி பேசுகின்றவர்களுங்கூட பிரெஞ்சு, ருசியன், ஜெர்மன் என்ற மொழிகளில் வரும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அறிவதற்காக அம்மொழிகளில் சிலவற்றை அறிந்தே முன்னேறுகிறார்கள். இந்த மொழிகளில் வரும் கட்டுரைகளை உலகினர் வேண்டுவதால் அவற்றை மொழி பெயர்க்கும் நிலையங்களும் பெருவாரியாக எழுந்துள்ளன. ஆனால் இவை அந்த மூன்று நான்கு மொழிகளில்தான் மொழி பெயர்க்கக் கூடும்.

அன்றியும் இந்த மொழிகள் உலகத்தில் பல இடங்களில் ஆட்சி செலுத்தி வந்தமையால் பல நாட்டு மொழிகளில் உள்ள சிறந்த நூல்களின் மொழி பெயர்ப்புகள் அங்கே எளிதில் கிடைக்கின்றன. எனவே எந்த நூலையும் அந்த மொழிகளில் ஒருவன் படித்து முன் ஏறலாம்; இந்த வகையால் எல்லாம் பார்க்கும்பொழுது ஆங்கிலம் உலகமொழிகள் அனைத்திலும் சிறந்துள்ளது. பிரான்சு, ருசியா முதலிய நாடுகளில்கூட ஆங்கில மொழி துணை மொழியாகவே உள்ளது. ஹாலந்து, டென்மார்க்கு போன்ற சிறிய நாடுகள் கட்டாயமாக இத்துணைமொழியைக் கற்று வருகின்றன. தங்களுடைய மொழியிலேயே எல்லா நூல்களையும் எல்லாக் கருத்துக்களையும் கற்பதற்கு அம்மேல் நாடுகளுக்கும் வாய்ப்பு இல்லை.

இதே நிலையில்தான் கீழை நாட்டில் உள்ள நாடுகள் எல்லாம் உள்ளன. எனவே தம்முடைய நாட்டு மொழியில் கல்வி கற்பதோடு ஆராய்ச்சித் திறன் பெருக உயர்நிலைக் கல்வி கற்று வருவதற்கு ஆங்கிலத்தையே துணை மொழியாகக் கற்கவேண்டி இருக்கிறது. தமிழிலேயே இத்தகைய நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் வரும் என்றும் எதிர்பார்ப்பதற்கில்லை. தமிழனுடைய ஆராய்ச்சி உலகம் போற்றும் திறன் படைத்தவையாகப் பெருவாரியாக வரும்போது பிறர் இவ்வாராய்ச்சிக் கட்டுரைகளை நேர் முகமாகக் கற்கும் காலம் வரலாம். அப்பொழுதுங்கூட ஆங்கிலம் இந்தப் போக்கில் நாம் இந்த வழியில் முனைவதற்கு முன்னதாக முன்னேறி இருப்பதால் அதனையும் முன் தாண்டித் தமிழ் பெருவாரியான நூல்களையும் கட்டுரைகளையும் எழுதுவதில் முன்னேறுவது எளிது அன்று. முயன்றால் முடியாததில்லை என்பது உண்மையே. ஆனால் அதுவரை ஆங்கிலம் நமக்குத் துணைமொழியாக அமைதல் வேண்டும். அதுவரை

ஆராய்ச்சி உலகில் அது ஆராய்ச்சிக் கல்வி மொழியாகவே இருத்தல் வேண்டும்.

நாம் தமிழ் நாட்டில் கண்டு பிடிக்கின்ற உண்மைகள் குண்டு சட்டியில் குதிரை ஓட்டுவதாக இல்லாமல் உலக அரங்கில் இடம் பெற வேண்டுமானுல் அந்த மொழியில்தான் எழுதி நம் நாட்டின் புகழையும், பெருமையையும், நம்மவரின் ஆராய்ச்சித் திறனேயும் விளக்கி வருதல் வேண்டும். ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் அமைய வேண்டுவதன் இன்றியமையாமையைத் தமிழ்ப் பெருமையை நாடுவார் மறத்தலாகாது. பிரெஞ்சு, ஜெர்மன், ஜப்பான் முதலிய மொழிகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதுகின்றவர்கள், முடிவில் ஆங்கிலத்தில் தம் கட்டுரைகளேச் சுருக்கி விளக்கி வருதல் ஒரு மரபு ஆகிவிட்டது. எனவே ஆராய்ச்சி செய்வோர்க்கு ஆங்கிலம் எந்நாளும் பயன்படும் போலத் தோன்றுகிறது. எனவே ஆராய்ச்சி உலகில் தமிழில் முடிவுகளே ஆராய்ந்தாலும் நாமும் மற்றவர்களேப்போல அவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்தால் தான் நம்முடைய பெருமை உலகிற்கு விளங்கும். எனவே ஆராய்ச்சி மொழியாக ஆங்கிலம் அமையும். ஆனுல் அங்கும்கூட அது துணேமொழியாகவே விளங்கும். இந்த நிலே எந்த நாட்டிலும் உண்டு. எனவே இது ஒரு குறையன்று.

ஆனுல் இது காரணமாக நாட்டு மொழிக் கல்வி (முதன் மொழிக் கல்வியாக அமைய வேண்டிய தில்லே என்றும், ஆங்கில மொழிக் கல்வியே முதன் மொழிக் கல்வியாக) அமைய வேண்டும் என்றும் ஒரு சிலர் கருதுகின்றுர்கள். இதன் விளேவு என்ன என்பதை இவர்கள் நினேத்துப் பார்க்கவில்லே. மொழி என்பது ஒரு கருவி என்பதை ஒத்துக் கொள்

ளலாம். மொழியை மொழியாகக் கற்கின்ற நிலையை மறந்துவிட்டு அதனை ஒரு கருவியாகப் பயன் படுத்துகின்ற நிலையை ஆராயவேண்டும். ஒருவனுக்குக் குழந்தையிலிருந்தே விளங்குகிற முறையில் மொழிச் சிக்கல் இல்லாமல் கற்பிப்பது எளிது; அவனுக்கும் அவ் வாறு கற்பது எளிது. எனவே அவ்வாறு எளிதாகக் கற்கக் கூடியவற்றை வேற்றுமொழியில் கற்பிப்பதனால் மொழிச்சிக்கலில் சிக்கிக்கொண்டு பொருளை மறந்து விடுகிற நிலையே ஏற்படும்.

''மொழியா சிறப்பு? கருத்தே சிறப்பு'' என்கின் றனர். ஆம் கருத்தே சிறப்பானால் ஒருவனுக்கு எளிதில் வருவதில் ஏன் கற்பித்தல் கூடாது? அறியாத மொழியில் வெளியிடத் தட்டித்தடுமாறும்போது அந்த மொழியில் எழுதி உள்ளவற்றை உருப்போடத் தொடங்குவானே யன்றிக் கருத்துக்களைத் தானாக எண்ணி வளர்க்கின்ற நிலை ஒருவனுக்கு ஏற்படாது. குருட்டுப் பாடம் வேண்டுமா அல்லது அறிவு ஆராய்ச்சி வேண்டுமா? என்பது கேள்வி.

இங்கே கல்லூரியிலும் தமிழைக் கல்வி மொழியாக அமைத்துக் கோவை கல்லூரி முதலியவற்றில் சோதனை செய்து வருவதை எண்ணிப் பார்க்கவேண்டும். வர லாற்று நூலைத் தமிழிலேயே படித்தபோது அதைப் பற்றி ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லா மல் போய்விட்டது. ஆனால் அதற்கு முன்னால் ஆங்கிலத் தில் சொல்லிக் கொடுத்த பொழுது ஆசிரியர்கள் குறிப் புக்களே தரவேண்டி இருந்தது. அதனையே மாணவர்களும் உருப்போட்டு வந்தனர். முதல் நூலுக்கு அவர்கள் போனதே கிடையாது; உருப்போடும் நிலையிலேயே இருந்ததனால் கருத்துக்களை ஆராய்ந்து அறியும் வாய்ப்பே இல்லை. ஆனால் தமிழில் கற்கும்போது இந்தச்

சிக்கல் இல்லாததால் அவர்கள் முதல் நூல்களை ஆராய வும், பலவகைச் சான்றுகளை ஆராயவும், கருத்தரங்குகள் அமைக்கவும் பெரிதும் முயன்றனர். அப்போது ஆங்கி லத்தில் உள்ள ஆராய்ச்சி நூல்களையும், ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் தாமாகவே கற்க முந்துவதைக் காண லாம். எனவே துணைமொழியாக ஆங்கிலத்தைக் கற்ப தாலே இவ்வாறு செய்வது அவர்களுக்கு அருமையாக வில்லை. ஆங்கில அறிவும் இதன் பயனாக ஆழ்ந்து அகன்று ஓங்கத் தலைப்பட்டது. தாம் கண்ட கருத்துக்களை உலகம் அறிய எழுதவேண்டும் என்ற அவாவினாலேயே ஆங்கிலத் தில் எழுதவேண்டும்என்று துடிதுடித்தார்கள். இது எதிர் பாராதவகையில் துணைமொழிக் கல்வியைச் சீர்படுத்தி உயர்த்துகிறது. ஆராய்ச்சிக்குழுவினர் இதனைக் கண்டார் கள். ஆங்கிலத்தில் கற்றவர்களைவிடத் தமிழில் கற்ற வர்கள் ஆங்கில மொழித் தேர்வில் பெரு வெற்றியடைந் தார்கள். இதன்பயனாக நாட்டுமொழிக் கல்வியும், உலக மொழிக் கல்வியும், ஒன்றாகி இயைந்து விடுகின்றன. எனவே ஆராய்ச்சிக் கல்வி தொடங்குவதற்கு முன்பு எல்லாம் நாட்டு மொழிவழிக் கல்வியே உண்மைக் கல்வி வளர்ச்சியாம் என்பது தெரிகிறது.இந்த வகையால் தான் துணைமொழிக் கல்வியும் சீர்பெற்று நல்ல பயனை அளிக்கும் என்று விளங்குகிறது. இதுதான் இயல்பு.

ஆனால் நம் நாட்டைப் பொறுத்தவரையில் மற் றொரு சிக்கலும் உண்டு. அனைத்து இந்திய மொழி என ஒன்று வேண்டாமா? அப்படி இந்திய மொழிகளில் வளரத்தக்கது எது? பெரும்பான்மையோர் அறிந்து கொள்ளக்கூடிய மொழி இந்தி என்கின்றனர். அதனால் அதனையே அனைத்து இந்திய மொழியாகக் கொள்ள வேண்டும் என்பது ஒரு சாரார் கொள்கை. ஆனால் இந்தி மொழி தென்னாட்டில் திராவிட மொழி பேசுகின்

றவர்களுக்கு வேற்றுமொழியே ஆம். அந்த அளவுக்கு அது ஆங்கிலம் போன்றதே ஆம். வரலாற்றின் காரண மாக ஆங்கிலம் இந்தியா முழுவதும் பரவி உள்ளது. ஆனால் ஆங்கிலம் இந்தியநாட்டு மொழி அன்று என்று சிலர் அதனை எதிர்க்கின்றார்கள். நம் நாட்டில் தங்கி நம்மவரே ஆகிவிட்ட ஆங்கிலோஇந்தியரது தாய்மொழி யாக அது விளங்குவதனை மறந்துவிடக் கூடாது.

ஆங்கிலம் ஆங்கிலேயர்கள் மொழி என்று ஆங்கிலே யர்கள் நம்மை ஆண்டபோது எதிர்த்ததில் பொருள் உண்டு. இன்று அந்த நிலை ஆங்கிலத்திற்கு இல்லை; அது ஆட்சி மொழி அன்று. ஆஸ்திரேலியா, அமெரிக்கா முத லிய இடங்களிலும் பேச்சு மொழியாக இருக்கின்ற ஆங் கிலம் ஒரு உலக மொழியும் ஆகும். எனவே நாட்டு மொழிக்கு வேறொரு துணைமொழியைக் கற்கவேண்டுமே யானால் நாம் இதுவரையில் துணைமொழியாகக் கற்று வந்த ஆங்கிலமே அதற்குத் தகுதி உடையது ஆகலாம்.

எனவே இந்தியை அனைத்திந்திய மொழியாக ஆக்கு வதைவிட இந்திய ஒருமைப்பாட்டுக்காகத் தென்னிந்தி யர் ஒரு வட நாட்டு மொழியையும், வட நாட்டினர் ஒரு திராவிட மொழியையும் கற்பது அறிவுடையதாகலாம். ஆனால் அப்போதும் அப்படிக் கற்கும் மொழி போதனா மொழியாக ஆகமுடியாது. போதனாமொழியாகத் தாய் மொழியோ வட்டார மொழியோதான் அமையக்கூடும். மற்றொன்று துணை மொழியாகப் பின் வரும் தகுதி பெறலாம்.

ஆங்கிலத்தை அடியோடு என்றும் விட்டுவிட முடியாது என்பதை முன்னரே கண்டோம். அதனை விட்டால் உலகத்திலிருந்தே நம்மை வெட்டி எடுத்து இருள் உலகில் வீசி எறிவது போலாம். ஆங்கில மொழி

யின் நிலையை இந்தியோ வேறுமொழியோ அடைய முடியாது. எனவே இங்கு ஒன்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதுவரையில் நாம் பழகிவந்த கல்வித் துறையில் நம் நாட்டு மொழிகள் உதவலாம்.

அந்த வகையில் பார்க்கும் பொழுது மிகப் பழைய இலக்கியச் செல்வம் பெற்ற தமிழ்மொழி தனிப் பெருஞ் சிறப்பு உடையது. அது வழக்கு இழந்து ஒழியாமல் இன்றும் பேச்சு மொழியாக உயிர்த்துடிப்போடு விளங்குகிறது. எனவே பழமைக்குப் பழமையும் புதுமைக்குப் புதுமையும் பெற்றது. ஆனால் இன்று வளர்கின்ற அறிவுத் துறைகளிலும் ஆராய்ச்சித் துறைகளிலும் விஞ்ஞானத் துறைகளிலும் அத்தனிச் செம்மொழி இன்று சிறந்து விளங்குகிறது என்று கூறுவதற்கு இல்லை. அது அந்த மொழியின் குறையும் அன்று; அது காலப்போக்கின் கோளாறு. அடிமை வாழ்வில் சிக்கிக் கிடந்த போது முன்னேறாமல் தடைப்பட்டுக் கிடந்தது. பழந்துறையில் அல்லாமல் புதுத்துறையில் நமக்கு உதவக் கூடியது ஆங்கிலமே ஆம்.

துணைமொழியாக எந்த மொழியையும் கற்கலாம். ஆனால் வளர்ச்சியில் பிற்பட்டுவிட்ட குறையைத் தீர்த்து நிறைவாக்குவதற்கு ஆங்கில மொழியே கூட்டு மொழியாதல் வேண்டும். ஆகவே துணைமொழி வேறு; இவ்வாறு உதவக்கூடிய கூட்டுமொழி வேறு என்பதை நாம் உணர்தல் வேண்டும். இந்திய நாட்டில் இந்தி உட்பட வேறு எந்த மொழியும் இத்தகைய கூட்டுமொழியாதற்கு இடம் இல்லை.

எனவே கல்விமொழியாக, ஆராய்ச்சி எல்லைக்கு வருகின்ற வரையில், வட்டார மொழியோ தாய் மொழியோதான் இருத்தல் கூடும்; இருத்தல்

வேண்டும். உயர்நிலைப்பள்ளியில் புகுகின்ற அவாவுடைய மாணவர்கள் ஆங்கிலத்தைக் கூட்டுமொழியாகக் கற்க வேண்டும். எல்லோரும் அந்த நிலையை அடைய வேண்டும் என்று நாம் விரும்புவதால் அந்த மொழியை எல்லோரும் இரண்டாம் மொழியாகக் கற்கவேண்டும். மூன்றும் மொழியாக இந்திய ஒருமைப்பாட்டிற்காக வேறொரு இந்திய நாட்டு மொழியைக் கற்பது வேண்டத் தக்கது ஆகலாம். இங்கேதான் வடநாட்டார் தென்னாட்டார் மொழியையும், தென்னாட்டார் வடநாட்டார் மொழியையும் துணைமொழியாகக் கற்பது பயனுடையது ஆகலாம்.

இம் மொழிகளை இளமையிலேயே கற்பதால் கற்கும் சுமையும் இடர்ப்பாடும் குறையும் என்று மனநூல் அறிஞர்களும் பிறரும் கண்டறிந்து கூறுகின்றார்கள். மொழிகளைப் பழமைபோல் கற்பிக்காமல் இன்றைய மொழியியல் விஞ்ஞான முறைப்படி கற்பித்தால் கற்பது எளிமை ஆகலாம்.

எனவே அடிப்படைக் கல்விமொழி, துணைமொழி, கூட்டுமொழி என்ற பாகுபாட்டை மனத்தில் வைத்துக் கொண்டு ஆராய்ந்தால் தாய்மொழியே கல்விமொழியாதல் கூடும் என்பது விளங்கும். துணைமொழியும் கூட்டு மொழியும் இந்த அடிப்படையின் உதவியினாலேயே அறிந்து வழங்கும் நிலையை அடையக்கூடும். எனவே தமிழ் நாட்டில் தமிழே போதனமொழி ஆதற்கு ஏற்றது.

தாய்மொழியே கல்லூரி மொழி

எந்த மொழியில் கல்வி கற்பது என்ற கேள்வியே இப்பொழுது இந்தியாவில் எங்கும் எழக் காண்கிறோம். குழந்தை நிலையிலிருந்து உணர்ச்சி ததும்பப் பேசிப் பழகுகிற மொழியே இதற்கு ஏற்றது என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள். அத்தகைய மொழியில் எண்ணும் பொழுதுதான் தங்குதடையின்றி அறிவு வெள்ளம் புதுப்புது முறையில் பாய்ந்து புதுப்புது உண்மைகளைக் காண முடியும். தாய் மொழியிலும்கூடப் பழைய நூல்களை உருப்போட்டு ஒப்புவிக்கின்ற பழக்கம் மட்டுமே வளருமானால் அது வெறும் சுமையாகி அறிவின் இயக்கத்தை அடியோடு கெடுத்துவிடும். எந்த அறிவும் அறிவு வளர்ச்சிக்குக் கருவியாக அமைந்து மேலும் மேலும் புதிய புதிய அறிவுக் காட்சிகளைக் காண உதவ வேண்டுமே யன்றி அறிவுப் போக்கினைத் தடுத்து அடிமையாக்குதல் கூடாது.

உருப்போட்டுப் பழகிய உலகில் ஆங்கிலேயர்கள் தங்கள் கல்வி முறையைப் புகுத்தியபோது இந்தியர்களை ஆங்கிலத்திலேயே கற்கும்படி செய்தார்கள். ஆங்கிலமோ குழந்தை முதல் இந்தியர்கள் பேசிப் பழகிய பேச்சு அன்று. எவ்வளவுதான் ஆங்கிலம் அறிந்தாலும், அது ஆங்கிலேயன் மனத்தை உணர்ச்சிப் பிண்டமாக உருக்கு

வதுபோல இந்தியர்களின் மனத்தை உருக்க முடியாது. இந்தியர்கள் தம்முடைய இயல்பான கருத்துக்களை அதில் விளக்குவதும் அரிதேயாம். இதன் காரணமாக, ஆங்கிலத்தில் கற்க வந்த இந்தியர்கள் பெரும்பாலும் ஆங்கிலக் கருத்துக்களை அறிவதனை வற்புறுத்துவதைவிட அக் கருத்துக்களை விளக்கும் அழகிய சொற்றொடர்களை உருப் போடத் தொடங்கினார்கள். அவற்றைத் திருப்பித் திருப்பி எழுதுவதே அவர்கள் காணும் புதுமை ஆயிற்று.

இந்த நிலையில் அறிவு புதிய புதிய முடிவுகளைக் காண்பது எப்படி முடியும்? அறிவு இந்த நிலையில் புதிய புதிய அறிவுப் போக்குகளாம் அழகிய கன்றுகளை ஈன முடியாது மலட்டு வறட்டுப் பசுவாக நின்று ஒழிந்தது. இங்கே உணர்ச்சி என்கிற பால் சுரப்பதற்கும் வழி இல்லாமல் போயிற்று. எனவே, சொற்றொடர்களைப் பழமை போல் எழுதும் போதும் அவற்றில் தோன்றும் உயிர்த் துடிப்பு ஒன்றும் இல்லை; வெறும் புகைப் படங்களாகவே அந்தச் சொற்கள் இவர்கள் எழுத்தில் செத்துக்கிடந்தன. இத்தகையவர்கள் படித்ததை ஒன்றும் விடாமல் ஒப்புவிக்கக்கூடும்; பெரிய பெரிய கல்விப் பட்டங்கள் இவர்கள் பெறலாம்; தேர்வில் முதல்வராகத் தேறலாம்; பிற நாடுகளில் சென்று சிறந்த கல்விப் பட்டங்கள் பெற்று உயரலாம். இவர்களுடைய முயற்சி நம்மால் எண்ணிப் பார்க்கக்கூட முடியாத முயற்சி; இவர்களுடைய உளத்திட்பமும் பாராட்டுதற்கு உரியது; இவைகளில் எல்லாம் இவர்கள் காட்டும் ஊக்கமும் உழைப்பும் அளவிட முடியாதவை. அத்தனையும் இவர்கள் மேற்கொண்ட மிகமிகக் கடுமையான பயிற்சியைப் பொறுத்ததே ஆகும். ஆனால் இங்கே புதிய விளக்கம்

ஒன்றும் தோன்றுவதில்லை. அறிவுதான் வறட்டு மலட்டுப் பசுவாக ஆகிவிட்டதே!

இத்தகைய கல்வி கற்ற அறிஞர் ஒருவர் பேராசிரியர் கிரகாம் வாலசு (Graham walas) அவர்களை அடைந்தார். இவருடைய படிப்பினையும் முயற்சியினையும் பாராட்டிய அப்பேராசிரியர், இவர் தாமாக ஒன்றையும் எண்ண முடியாமல் பிறர் சொற்றொடர்களையே அழகாகக் கோத்து எழுதுவதனைக் கண்டு திகைத்துப் போயினார். இவரைப் புதிய வழிகளைக் கண்டு புது முறையை எண்ணச் செய்து ஆராய்ச்சி மாணவனாக உயர்த்தக் கூடும் என்று எவ்வளவோ முயன்று அவர் தோல்வியே கண்டார். பின்னர்ப் பொதுவாக நூல்களோ அறிக்கைகளோ விளக்காத பொருள்களைப் பற்றி உலகில் நேரே கண்டு தெளிவதற்காக வேண்டி மக்களோடு இவர் பழகி அறியும்படியும் செய்துபார்த்தார். அப்போதெல்லாம் என்ன என்ன உணர்ச்சிகள் உள்ளத்தே எழுகின்றன என்பதைக் கண்ணும் கருத்துமாக உன்னிப்பார்க்கவும் தூண்டினார். அப்பொழுதும் மாணவர் எடுத்துக் கொண்ட முயற்சியில் ஒரு குறையும் இல்லை. ஆனால் உணர்ச்சி இல்லாத இயந்திரம் போலவே தாம் இயங்கியதாக இம்மாணவர் கூறினாராம்.

முடிவாக, இம்மாணவரின் தாய் மொழியிலேயே இவருக்கு மிக நெருங்கிய தாய்க்கோ, தந்தைக்கோ, தம்பியர்க்கோ எழுதும்படி பேராசிரியர் பணித்தார். அன்பு கனியும் கடிதங்கள் அல்லவா? உணர்ச்சி சிறிது சிறிதாக அவருடைய அறிவினை விளங்கச் செய்தது. அப்போதும் படித்த சொற்றொடர்களை மொழி பெயர்க்கவே முதலில் எண்ணம் தோன்றியது. மாணவர் தாமாகவே தமக்குரிய முறையில் சொல்ல வேண்டும் என்று ஆசிரியர் கேட்டுக்

கொண்டார். மாணவர்க்கு முதலில் இது எளிதாகத் தோன்றவில்லை. படித்த சொற்றொடர்களின் சுமை இவரை அப்படியே அழித்து இறுக்கிவிட்டது. இவர் அன்பு கனியும் தாய்மொழியின் வழியேதான் மெல்ல மெல்ல விடுதலை பெற்றார். ஆழத்தே சென்று ஊடுருவிப் பாயும் கூரிய ஐயங்களை எப்போதும் எழுப்பிக்கொண்டே இருக்கவேண்டும் என ஆசிரியர் அறிவு புகட்டினார்.

தாய்மொழியில் தாமாக அன்பு கனிய எழுதி வந்த பொழுதுதான் இத்தகைய ஐயங்கள் தலைகாட்டத் தொடங்கினவாம். ஆங்கிலச்சொற்சுமையாம் கடற் கிழவன் கழுத்தைப் பிடித்து இறுக்கும்பொழுது உரிமை யான அறிவு எவ்வாறு விளங்குதல்கூடும்? பெரும் குழப் பமே விளைந்தது. முன்னே ஏதும் பழக்கம் இல்லாத இந்த நிலையில் மாணவர் பெரிய துயரத்திற்கு உள்ளாயினார். ஆனால் தாய் மொழி வழியே பழமையினின்றும் மெல்ல விடுபட்டார். உண்மை காணவேண்டும் என்று எழுந்த முயற்சியில் முனைந்து உணர்ந்ததைத் தாய்மொழிவழியே விளக்குகின்ற நிலையில் ஓர் உணர்ச்சி இவரை உண்மை காணும் போக்கில் தூண்டிவிட்டு முன்னுக்குத் தள்ளியது. 'கண்டறியாதன கண்டேன்' என்று பாடி மகிழ்ந்தார். பழஞ்சுமை நீங்கியது; இவருடைய அறிவு விடுதலை பெற்றது; இவரும் புதிய விளக்கம் பெற்று முன்னேறி னார். இத்தனையும் தந்தது தாய்மொழியின் விளக்கம்—தாய்மொழியின் கனிவு—தாய்மொழியின் விடுதலை—தாய்மொழியின் இன்பமே ஆம்.

இந்த உண்மையை அப்பேராசிரியர் 'எண்ணும் கலை' (The art of Thorght, P. 253-255) என்ற நூலில் விளக்குகிறார். நம்முடைய நாட்டில் பல்கலைக்கழகங்கள் பல்குகின்றன; பல்கலைக்கழக அறிஞர்கள் பல்குகின்றார்

கள். ஆனால் இவ்வாறு பல்கிப் பெருகுவதற்கு ஏற்ற அறிவு ஆராய்ச்சி மிகுந்துவரக் காணோம். ஏன்?இதற்குத் தான் நாம் மேலே எழுதியதுபோல் விடை கூறுகின்றார் கிரகாம் வாலஸ்.

தமிழ்மொழி வழியே கல்லூரிப் படிப்பும் நிகழ வேண்டும் என்பதற்கு வேறு என்ன கூறவேண்டும்?

கல்வியின் நோக்கம்
தாய்மொழிப் பிணையலே

கல்லூரியிலோ பிற இடத்திலோ கற்பது ஏன்? 'என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு' என்று கேட்கிறார் வள்ளுவர். சாந்துணையும் கல்வி என்றால் அது வாழ்வேயாம். உலகமும் நாமுமாகப் பிணைந்த பிணையலில் பலவகையில் ஊடாடி, ஒன்றாகி அழகிய நறுமணமுள்ள, இன்ப உயிருள்ள மாலையாய் நாமும் உலகமும் சிறந்து பயன்படுகிறோம். இந்த ஊடாட்டத்தைப் போராட்டம் என்பானேன்? உலகத்தோடு ஒட்ட ஒழுகல் எனலாகாதா? இதுவே வாழ்வாங்கு வாழ்தல்.

இந்த ஊடாட்டத்தில் திடீர் எனப் பல மோதல்கள் எழும்; இவற்றிற்கெல்லாம் ஈடு கொடுக்கவேண்டி அப்பொழுதைக்கு இப்பொழுதே சொல்லிவைத்தலே கல்வி; ஈடுகொடுக்கப் பழகுவதே கல்வி. கல்வி நிலையம் ஒரு பாத்தி; அதுவே மெல்ல மோதலிற் பழகும் சிறு சோதனைக் களம்.

'கண்ணுடையர் என்பர் கற்றோர்' என்பது குறள். கண்ணைத் திறப்பது கல்வி. நம்முள்ளே மூடிக்கிடக்கும் ஆற்றல் அத்தனையும் முழு வளர்ச்சி அடையப் பழகுதலே கல்வி. கண்மணை தற்கு? உலகினைப் பார்க்கவும் அறியவும்

அதனைப் பயன்படுத்திச் செயலாற்றவுமேயா உலம்க. மின்றிக் கண் இல்லை; கண் இன்றி உலகம் இல்லை. முழு நிறைவு உள்ளும் புறமும் வளர் நலே கல்வி. நாமோ அறிவும் உணர்வும் செயலுமாக அமைகின்றேம். இவை அடிமனமும் மேன்மனமுமாக இயைந்து போராட்ட மின்றி நிறைவு பெறுதல் வேண்டும். ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று எளிது. ஒவ்வொருவரின் சிறப்பும் ஒவ் வொரு படைப்பாற்றலாக நிறைவு பெறுதல் வேண்டும். அப்போதே கண் திறந்தது எனலாம். இங்கெல்லாம் உள்ளத்தைத் தொடும் உணர்வே நனவு நிலையிலும் நனவிலி நிலையிலும் நம்மை இயக்கி வெற்றி தருகிறது.

மக்கள்தாம் எண்ணும் இயல்புடையார். எண்ணம் என்றல் என்ன? உள்ளுக்குள்ளாகத் தொடங்கும் பேச்சு என்பர் ஓர் ஆசிரியர். இதனை ஒப்புக்கொள்ளாதவர் களும், பெரும்பான்மையும் நம் எண்ணங்கள் சொல் லாகவே விளங்கக் காண்கின்றார்கள். வெறுஞ் சொல்லாக இருந்தால் அது நெஞ்சைத் தொடுமா? எதுவும் பொருள் நிறைந்ததாகவும் வாழ்வோடு இயைந்ததாக வும் இருந்தாலல்லவா நெஞ்சம் ஈடுபடும்; அக்கறை கொள்ளும்; அயராது உழைத்து இன்பம் பெறும். சொல் என்றல் மொழிதானே. எந்த மொழி நமக்கு இயல்பானது? நனவிலி மனத்திலும் வேரூன்றி நிற்பது? உணர்வோடு ஒன்றுவது? நம் வாழ்வோடு ஒன்றுவது? ஒருவன் பிறந்த சூழலில் தாய்ப்பால் உண்டதிலிருந்து தாய்ப்பாலோடு இனித்து ஒன்றுய அவன் தாய்மொழியே அப்படிப்பட்டதாகும். ஆதலின் அந்த மொழியில் கற்பதே இயல்பு. பிற எல்லாம் செயற்கை; நெஞ்சைத் தொடுவதில்லை; வெறுஞ் சொல்லாரவாரமாகவே முடியும். இச்செயற்கை நிலையில்தான் நனவிலி நிலைக்கும்

நனவு நிலைக்கும் இடையே போராட்டம் எழும்; மனக் கோளாறுகளும் உலகக் கோளாறுகளும் வளரும். ஆனால், தாய்மொழியிற் பேசிவரும்போது பிறமொழிச் சொற்களும் வரும்! கார்ஓட்டியின் மகன் பிறந்தது முதல் 'கார்' என்ற சொல்லையே கேட்டு வருவதால் அவனுக்கு அது தாய்மொழிச் சொல்லேயாகி இனிக்கும். பிற மொழிக் கலைச்சொற்களும் இவ்வாறு பழகிவரும் நிலையில் தாய்மொழிச் சொற்களேயாம். எனவே, நம் கண் திறப்பது இவ்வாறுதான்.

கண் பார்ப்பது எதனை? நாம் நம் உடலோடும், உள்ளத்தோடும், குடும்பத்தோடும், உற்றார் உறவினரோடும், ஊராரோடும், நாட்டோடும், பொருளாதார நிலையோடும், அரசியலோடும், அன்பும் அழகும் உண்மையுமே வடிவமான கடவுளோடும் ஊடாடி வருகின்றோம். இதற்கேற்பப் பழகும் கல்வி எந்த் மொழியில் நடைபெறுவது? தமிழ் நாட்டில் தமிழில் தான். மனிதன் போக்கு ஐந்தாண்டிற்குள் நிலைபேறடைகிறது. அப்போது தமிழ்ச் சொற்கள் வழியாகத் தானே நிலைபேறடைகிறது. எனவே அந்தக் கடைகால் மேல்தானே அறிவுக் கட்டடம் கட்டவேண்டும். உலகத்தோடு தொடர்புகொள்ள உலகமொழியொன்றை அறிவதே அந்த அரங்கில் தொண்டு செய்ய வருவார்க்கு நல்லது. உலகமறிந்தவற்றில் பெரும்பகுதி எந்த மொழியில் கிடைப்பதாக இருக்குமோ அந்த மொழியே அங்கு நல்லது. அத்தகைய மொழி ஆங்கிலமாம்; நாம் ஒரு சிறிது பழகிய மொழியுமதுவே. ஆனால் தாய்மொழி போல அஃது உள்ளத்தைத் தொடுவதில்லை. உலகம் நீங்கிய பிற உலகச் சூழ்நிலையில் தாய்மொழியே தமிழ் நாட்டில் பயனுடையதாகும்,

கல்வி நமக்கு மட்டுமன்று; நாம் கற்ற கல்வியின் நிறைவு நம் சமுதாயம் முழுதும் பாயவேண்டும். பாலாற்றில் வெள்ளம் ஓடுகிறது; ஆனால் அந்த வெள்ள நீர் கீழேயும் பொசிந்து தேங்கி ஓடுகிறது; வெள்ளம் போனபின் தோண்டினால் கீழேயுள்ள ஊற்று உலகினை ஊட்டி வளர்க்கிறது. கற்றவன் இவ்வாறு சமுதாயத்தில் உயர்ந்தே வாழ்ந்தாலும் அவன் அறிவு அவன் தாய் மொழி வழியே புழங்குவதாலும், எழுதுவதாலும், பேசுவதாலும் சமுதாயம் முழுவதிலும் உள்ளூறப் பொசிகிறது. அவன் மறைந்தபின்னும் இன்ப ஊற்று கிறது. கம்பன் செய்த வியத்தகு செயல்—வள்ளுவர் செய்த வியத்தகு செயல்—இந்த வகையில் எழுந்தனவே யாம். ஆங்கிலேயர் கல்விமுறையின் அடிப்படையும் இதுதான். ஒருசிலர் கற்றால் பலரிடம் அந்த அறிவு பொசியுமென்றே அவர்கள் கூறினர். ஆனால் ஏன் பயன் படவில்லை? நீரானால் பொசியும்; இரும்பை உருக்கி ஓட விட்டால் பொசியுமா? தாய்மொழிவழிக் கல்வி இல்லாமையாலேயே வெளிஉலகத்தில் அன்றிச் சமுதா யத்தில் வேறு ஒரு துறையிலும் பொசிவதற்கு வழியில்லை.

பொசிவது ஒருபுறம் இருக்கட்டும். கூடிக் குலாவிப் பழகுவது எந்த மொழியில் முடியும்? தாய்மொழியில் தான். தாயோடு, கற்றவன் பழகுவது எதில்? தலைமை அலுவலாளன் கூலியாளோடு பழகுவது எதில்? ஆளுவோன் குடிமக்களோடு பழகுவது எதில்? தாய் மொழியில்தானே! குடியரசில் ‘எல்லாரும் ஓர்நிறை, எல்லாரும் ஓரினம், எல்லாரும் இந்நாட்டு மன்னர்’ என்ற எண்ணம் தாய்மொழிப் பழக்கத்திலேதான் எழுந்து நிலை பெறும். தமிழ்மொழிக்குப் பத்துக் கருத்துக்களைக் கூறும் ஆற்றலில்லை என்பது இல்லை. இதுவே மொழிநூல் கூறும்

உண்மை. பழக்கமில்லாமையே குறை. உலகமொழி கற்றவன் தன் தாய்மொழியிற் பழகினுல் தாய்மொழி உலகமொழிபோல் வளம்பெறும்.

எனவே, கல்வியின் நோக்கமே தாய்மொழி வழியே உலகத்தோடு பிணைந்து நிறைவுபெற்று முழுப்பயனையும் உலகமும் நாமும் பெறுவதேயாம்.

தமிழ்க் குழவி தமிழ் கற்க வேண்டாமா?

தமிழில் ஏன் கற்கவேண்டும்? இந்தக் கேள்வியே பலருக்கு வெறுப்பை யூட்டலாம். ஆனால் மிக விரைந்து ஓடுகிற இந்த உலகத்தில் எல்லோரும் ஒப்புக்கொண்ட உண்மைகளையும் ஆராய்ந்தால்தான், ஆராய்ந்து முடிவு கண்டால்தான், அம்முடிவை யொட்டி முழுமனத்தோடு உழைத்தல் கூடும். ஏன் உண்ணுதல் வேண்டும் என்றும் கேட்கின்றது இந்நாளைய உலகம். இந்த ஆராய்ச்சியின் பயனாக உணவு முறையைச் சீர்திருத்தி யமைக்க முடிகிறது. அந்தப் பயன் நாம் கேட்கும் கேள்வியாலும் விளையலாம்.

தமிழ் நாட்டில், தமிழ் பேசும் குடும்பத்தில் பிறக்கின்ற குழவி அக்குடும்பத்தில் வாழும்வரைத் தமிழை இயல்பாகவே கற்று வருகிறது. அது அவ்வாறு கற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது. ஆனால் தமிழ் அங்கே அதனோடேயே பிறந்தது என்று சொல்வதற்கில்லை. இரத்தத்தில் ஊறியது தமிழ் என்று எவரும் கூற முடியாது. அவ்வாறு ஊறியிருந்தால் கற்றுக் கொடுக்கும் தொல்லையே இருந்திராது. பறவைக்குப் பறக்கக் கற்றுக்கொடுப்பார் யார்? மனிதன் வளர்ந்து வரும்போது இரத்தத்திலேயே ஊறிக்கிடக்க வைக்கும்

முறையை விட்டு விட்டு இயற்கையன்னை புதியதொரு வழியைக் காட்டுகிருள். இங்கே பரிணுமம் அல்லது வளர்ச்சி என்பது சூழ்நிலையில் ஊறிக்கிடப்பதாக நின்று, பின் மனிதனது உள்ளத்தில் பாய்ந்து பதிந்து, விளக்க மாகித் தலைமுறை தலைமுறையாய், படிப்படியாய்ச் சிறந்தோங்கும் முறையைக் கையாளுகிறது. மொழி வளர்வதும் இந்த வகையில்தான். இந்தச் சூழ் நிலையில் தான் கற்றுக்கொடுப்பதும், கற்றுக்கொள்வதும் மனித னது கடமையும் உரிமையும் ஆகின்றன.

ஆனுல் இங்கும் இரண்டு வேறு வகைகளைக் காண லாம். நம் பள்ளிப் படிப்புப் போன்று செயற்கையில் திட்டமிட்டுக் கற்பிப்பது ஒன்று. இதனைப் பின் காண் போம். மற்ருென்று, சூழ் நிலையின் இயல்பாக அமைவது; இதன் பயனுகவே குழந்தை தன் சூழ்நிலை மொழியைப் பேசக் கற்றுக்கொள்கிறது. சூழ்நிலை மொழியைத் தாய் மொழியென்று இதனுலேயே வழங்கு கின்றனர். இந்த மொழியே அக்குழவியைச் சமுதாயத் தோடு செயலாலும், பேச்சாலும், எண்ணத்தாலும் ஒன்ருக்கிவிடுகின்றது.

இங்கே தமிழைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லை; கற்க வேண்டுமென் கின்ற முனைப்பும் அங்கு எழுவதில்லை. தமிழை ஏன் கற்க வேண்டுமென்ற கேள்வி அங்கே பயனற்ற கேள்வி. ஆதலின் தமிழ் கற்க வேண்டுமென்று அங்குக் கூறுவதும் பயனற்றதாகும். ஆனுல் ஊமைச் செவி டர்களாய்ப் பிறக்கும் குழவிகளுக்குத் தாய் மொழியிற் பேச வகை செய்தலென்பது ஒன்று உண்டு. இதனை இங்கே புகுத்திக் குழப்ப வேண்டுவதில்லை. பிற மொழிச் சூழலில் தமிழ் கற்ருேர்க்குப் பிறந்த குழந்தை வாழும்போது அது தன் தாய் மொழியைச் சூழ்நிலை

மொழியிலும் வேருகக் கற்றுக் கொள்வதனைப் பற்றியும் இங்குக் கூறவேண்டுவதில்லை.

குழந்தை ஏறக்குறைய ஐந்தாறு ஆண்டுக்குள் தன் சூழ்நிலை மொழியைப் பேசுவதில் முக்காற்பங்கு திறமையைப் பெற்றுவிடுகிறதெனலாம். பின்னெல்லாம் புதிய புதிய அனுபவங்களுக்கு ஏற்ற சொற்களை அறிந்து, சொற்கோவையைப் பெருக்கிக் கொள்வதே சிறப்பாக அமையக் காண்கிறோம். இவ்வாறு சூழ்நிலையின் இயல்பாகவே அமைகின்ற தமிழ்க் கல்வியின் திறத்தைக் கண்டு உணர்ந்து வியத்தல் வேண்டும். கல்வியின் பின்னைய வளர்ச்சி யெல்லாம் மிகுதிநிற்கும் காற்பங்கைப் பற்றியதேயாம். இதனை உணர்ந்தால்தான் முக்காற்பங்கையும் வளர்த்துவைத்த இயற்கை முறைமையின் இயல்பும், பெருமையும் விளங்கும்.

இந்தக் குழந்தை நிலையிலேயும் குழந்தைப் பள்ளிகளை அமைத்து வருகிறோம்; அனுபவங்களைத் திட்டமிட்டு வளர்க்கின்றோம்; ஐம்புல உணர்வை நுட்பமாக்குகின்றோம். குழவியின் இத்தகைய அறிவு வளர்ச்சியோடு மொழி வளர்ச்சியும் ஒருங்கு இயைந்து ஓங்கிவர வழிவகை செய்கின்றோம்! இங்கும் ஒரு சிக்கல் உண்டு. பழங்காலத்தின் கோளாற்றின் பயனால் சாதிக்குச் சாதி ஒரு தமிழ் நடை வளர்ந்துள்ளது. இதன் பயனாக பல குழந்தைகளும் ஒன்று சேரும்போது மொழிநடைப் போராட்டம் எழுகிறது. இதனைக் குழந்தைகளே தீர்த்துக் கொள்ள விடுவது நல்லது. ஆசிரியர் அங்கே தந்தைபோல் அமைகின்றார். அவர் பேச்சு நடையை எல்லாக் குழவிகளும் பின்பற்றும். பேச்சுமொழி நடைகளின் உயர்வுதாழ்வு எண்ணம் கனவிலும் தோன்றாதவாறு விழிப்புடன் பார்த்துக்கொள்வதே ஆசிரியனது தலையாய கடமை. இல்லையானால் மொழிக்கோளாறு மனக்கோளாறாய் முற்றி வளரும்.

முயன்று பார்க்கட்டுமே !

மனிதன் கூடிவாழும் இயல்புடையவன். சமூகப் பிராணி என்பர் சிலர். அவன் குழுநிலையுயிரினத்தைச் சேர்ந்தவன் எனலாம். குழு நிலையில் கூடியுழைப்பதன் கூறுகளைத் தத்தமக்கேற்றவாறு இயல்பூக்கமாக, பிறக்கும்பொழுதே முழுமையும் பெற்று வரும் உயிரினங்களும் உண்டு. அவை புற்றமைத்து வாழும் செல்லுகள், தேன்கூடு அமைத்து வாழும் தேனீக்கள் முதலியன. கூடி வாழும் இயல்பூக்கம் பிறக்கும்போதே பிறப்போடு வந்தாலும் அதன் மலர்ச்சி சூழ்நிலைக்கேற்பப் பலபல வகையில் பழக்கத்தின் பயனாக வடிவம் பெற்று வளரும் உயிரினங்களும் உண்டு. இவற்றில் தலை சிறந்தது மனித இனம். இயற்கை தன் கூர்தல்அறத்தை (Fuolution) உடல் வகையாக வளர்ப்பதனை விட்டுவிட்டது; சூழ் நிலையாய்அமையும் சமூகத்தினைப் பயன்படுத்த வருகிறது. சமுதாயம் பண்பாட்டு வளர்ச்சியின் நிலையம். இந்த வளர்ச்சியே பழக்கங்களாகப் படிந்து விடுகிறது; தலை முறை தலைமுறையாய் நிலைபெறுகிறது; மேன்மேலும் ஓங்கி வளர்கிறது. இவ்வாறு இயற்கையன்னை புதிய கூர்தல்அறத்தைக் காண்கிறாள். அதாவது கல்வியே கூர்தல்அறமாகிறது.

பழங்காலங்களில் எல்லாம் கல்வி என்பது சமுதாயப் பழக்கங்களில் குழவிகளைப் பழக்கிவிடுவது என்ற நிலையி

லேயே இருந்தது. இயல்பை எதிர்க்கப் பழகுவதும் உண்டு. வருத்தத்திற்கு அஞ்சுவது இயல்பு. கிரேக்க ஸ்பார்ட்டன் நாடு போரில் வெல்வதே சிறப்பென்று கருதியது; வருத்தத்திற்கு அஞ்சாதபடி குழந்தைகளை வாடவிட்டுப் பழக்கியது. போலீசார் என்ன அடித்தாலும் உளவினை வெளியிடாதபடி வளரவேண்டித் தம் குழந்தைகளைக் குறவர்கள் இன்று அடித்தே வளர்க்கவில்லையா ? ஆனால் குடும்பமாய், குடியினமாய், நாடாய் வாழ்ந்த சூழ்நிலை இன்று உலகமாக முற்றத் தொடங்குகிறது. உலகத்தோடு ஒட்டிப் பழகுவதே கல்வியாகிறது. இதனை அறிந்த வள்ளுவரும்,

> '' உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
> கல்லார் அறிவிலாதார் ''

என்று கூறியுள்ளார். உலகமாக முற்றியபோது பழைய பற்றுகள் அறவழியில் விளங்க இடமுண்டு. இந்தியாவை விழுங்க எண்ணும் சீனவுக்கு எதிரே மெய்வருத்தம் பாராது நம் நாட்டுப் பற்றுக் கொழுந்துவிட்டு எரிய வேண்டாவா ? ஏசு சிலுவை ஏறியபோதும் தம்மைத் துன்புறுத்தியவர்களைக் கடவுள் மன்னிக்க வேண்டும் எனக் கதறவில்லையா ?

இயல்புக்கு எதிரான பழக்கம் இவ்வாறு அறமுமாகலாம்; மறமுமாகலாம். பழக்கத்திற்கு இடம் உண்டு என்பதே இங்கு நாம் காண்கிறோம். தூண்டத் துலங்குவது (Stimulus and Response) உயிரின் இயல்பு. ஏதேனும் ஒரு நிலை உடலுள்ளோ வெளியோ எழுந்தால் அதற்கேற்ப மாறி நிற்கிறோம்; எதிருன்றி நிற்கிறோம். ஒருவன் நம்மை அடிக்கவந்தால் தள்ளி நிற்கிறோம். சிலபோது இயல்பான மறிவினை(Reflex Action) யாக இந்த எதிருன்றல் எழலாம். கண்ணெதிரே விளையாட்

டாகக் குத்துவதுபோல ஒருவன் வந்தால், 'கண்ணிமைக்க மாட்டோம்' என அவனோடு போட்டி இடும்போதும் நம் வசமின்றிக் கண் இமைத்து விடுகிறது. உணவைக் கண்டால் நாவில் நீரூறுகிறது. இந்த இயல்பு மறிவினையைச் செயற்கை மறிவினை (Conditioned Reflex) யாகப் பழக்கியும் விடலாம். மணி அடித்தபோதெல்லாம் உணவு வருவதைக் கண்ட நாய் மணி அடித்ததும் வாயில் நீரூறி நிற்கப் பழகிவிடுகிறது.

மனிதனிடம் பழக்கம் சிறப்புநிலை ஒன்றை அடைகிறது. உணவோ, உணவை அறிவிக்கும் மணியோ, விளக்கோ அண்மை நிலையில் அல்லாமல் சேய்மை நிலையில் இருக்கும்போதும் இத்தகைய செயற்கை மறிவினை எழுவதனை மனிதவிடத்தன்றி வேறு எங்கும் காண்பதில்லை. இயல்பூக்கத்தால் அன்றி அறிவாராய்ச்சியால், வருகிற ஆண்டிற்காக இன்றே உழுது பயிர் செய்யத் தொடங்குவது மனிதன் சிறப்பு. புகை, நெருப்பை விலங்கிற்கும் நினைப்பூட்டலாம்; மணம் தேனீக்கும் மலரை நினைப்பூட்டலாம். இங்கெல்லாம் குறிக்கும் (புகை) குறிக்கப்படுவதற்கும் (நெருப்பு) தொடர்புண்டு. கணக்கறிஞர் இயல் கணிதத்தில் (Algebra) இராமனது குடிகளின் எண்ணிக்கை X என்று வைத்துக் கொள்வோம் என்று பேசும்பொழுது இத்தகைய தொடர்பு உண்டா ? ஒன்றும் இல்லை. இதனை அடையாளம் எனலாம். அடையாளத்தை வைத்துக் கொண்டு பழகுதல் மனிதனின் சிறப்பு.

இங்கே மனிதனை எண்ணும் உயிரினம் என்கிறோம். எண்ணம் பெரும்பான்மையும் சொல்வடிவமாகவே எழுகிறது. 'வீடு' என்று எண்ணும்பொழுது பெரும்பான்மையும் 'வீடு' என்ற சொல்லே எண்ணமாக எழக் காண்

போம். எறும்பு மொய்க்க இனிக்கும் வெல்லத்திற்கும், வெல்லம் என்ற சொல்லிற்கும் இயற்கையான தொடர்பு ஒன்றும் இல்லை. ஆதலின் அது ஒரு வெற்றடையாளமாகும். வெறும் பதிலீடாக இந்த அடையாளம் அமைகின்றது. முக்காலத்தையும் முழு உலகினையும் நம்முன்னே ஒரே இடத்தில், ஒரே இமைப்பொழுதில் நம் மனத்தில் கொண்டு வர முடிவது எதனுல்? இந்த அடையாளங்களின்—சொற்களின்—பதிலீட்டு நிலையாலேயே ஆம்.

பண்பாட்டு நிலையின் வளர்ச்சி இவ்வாறு எழுவது மொழியினுல் அல்லவா? எனவே கல்விக்கு அடிப்படை மொழியாக அமைவதில் என்ன வியப்பு?

'' எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு''

என வள்ளுவர் கூறுவது இதனுலன்றோ. ஆனுல் மொழி ஒரு கருவி—ஓர் அடையாளம்—என்பதனை மறந்து விட்டு, அதனையே சிறப்பாகக் கொள்வது கல்வியாகாமல் சொல்லாரவாரமாகவே முடியும். வாயில் கவ்விய பொருளை மறந்து நிழலைக் கவ்வச் சென்ற நாயின் கதையே இங்கு நினைவிற்கு வருகிறது. உருப்போட்டு ஒப்புவிப்பதே கல்வி என்ற எண்ணம் இன்னமும் வாழவில்லையா? 'புரட்சி', 'தமிழ்', 'விடுதலை', 'இந்தியா' முதலிய சொற்களை மந்திரமாக முழக்கி உணர்ச்சி கொள்ளும் பொழுது பலமுறைகளிலும் அவற்றின் அடிப்படைப் பொருளை மறந்து விடுகிறேம்.

எனவே, உயரிய குறிக்கோள் வாழ்க்கையைச் சமுதாயப் பழக்கமாகப் பழக்கி விடுவதில் மொழியின் துணையை அடிப்படையாகக் கொள்வதே கல்வி என்பதாம். ஆனுல் மொழிகளோ எண்ணற்றன. எந்த

மொழி அடிப்படையாக வேண்டும் என்று கேட்கவும் வேண்டுமா? எந்தச் சமுதாயத்தில் ஒருவன் வாழ்கிருனே அந்தச் சமுதாய மொழியே அவனுடைய கல்விமொழி யாகும். இதனை மறுப்பது ஏன்? சமுதாய அடிப்படை யில் கல்வி எழுகிறது என்பதனை மறந்து வேறு எதனையோ நினைத்துக்கொள்வதாலேயே ஆம்.

'தாய்மொழி' என்றுகூடச் சொல்வதற்கில்லை. தமிழ்த்தாயும் தமிழ்த் தந்தையும் தமிழ் நாட்டில் ஒரு குழவியைப் பெற்றெடுக்கின்றனர்; உடனே ஆங்கில நாட்டில் வாழச் செல்லுகின்றனர்; அங்கேயே பலநாள் வாழ்ந்து மறைகின்றனர். தமிழ் மொழி அக் குழவியின் உடலில் ஊறிய மொழியா? பண்பாட்டு நிறுவனங்க ளான மொழி முதலியன உடல்வகையாக வரும் தாயங்கள் அல்ல; சமுதாயத்தின் பழக்க வழக்கங்களாகப் படிவனவே ஆம். ஆதலின் அத்தமிழ்க் குழவியின் இயல் பான சமுதாய மொழி அங்கே ஆங்கிலமே ஆம். தெலுங் கரும் கன்னடரும் மராத்தியரும் தமிழ்நாட்டில் வாழ் கின்றனர். ஒரு சிலரன்றி இவர்களில் பலர் வீட்டிலும் தமிழே பெரும்பான்மையும் பேசுகின்றனர். எனவே, இவர்களது சமுதாய மொழி தமிழன்றி வேறு என்ன?

ஒரு சிலரைக் கற்றவர்களாக்கிஞல் அவர்கள் கூட் டுறவால் எல்லோரும் கல்வியறிவின் பயனைப் பெறுவர் என்று கருதிய ஆங்கிலேயர்களது இந்தியக் கல்வித் திட்டமும் கல்விக்கும் சமுதாயத்திற்கும் உள்ள இந்தத் தொடர்பை மறக்கவில்லை. விடுதலைபெற்ற இன்றும் கற்றவர் வேருெரு சாதியாக வாழவேண்டுமா? சமுதா யத்தில் உறவு கொள்வது மொழியால் அன்றிப் பிறி தொன்ருல் ஆகுமா? அதனுலன்ருே சமுதாய மொழியே அரசியல் மொழியாகவும் அமைகிறது. தமிழ் நாட்டு

அரசியல் மொழி தமிழ் என்பதன் பொருள் வேறு என்ன ?

இதனால் பிறமொழிகளை கற்றலாகாது என்பதில்லை. பிறமொழிகளை எள்ளி நகையாடுவது பண்பாட்டின் அறிகுறியாகாது. பிறமொழிகளையும் கற்றல் வேண்டும். உலகம் ஒரு குடும்பமாகும்போது பிறமொழிக் கருத்துக்களை அறியவேண்டாவா ? கல்வியின் பயன் பிற மொழியை வெறுத்திடாத பண்புள்ளமே ஆம். மொழிகளுக்கு இடையில் மொழி என்ற வகையில் ஏற்றத் தாழ்வு இல்லை. இலக்கிய வளமன்று இங்கு நாம் கருதுவது. சூழ்நிலை வளர்ச்சிக்கு ஏற்பப் பல கருத்துக்களை விளக்கும் ஆற்றலை வளர்ப்பது எந்த மொழிக்கும் இயல்பாம். ஆங்கில மொழியின் நிலை சில நூற்றாண்டுகளுக்கு முன் எவ்வாறு இருந்தது? இன்று எவ்வாறு உள்ளது ? சூழ்நிலை வளர்ச்சி அம்மொழியிலும் புகுந்து அதனையும் வளர்த்தது; சமுதாயத்தையும் வளர்த்தது. அப்படியே தமிழும் வளர வேண்டுமானால் சூழ்நிலை வளர வேண்டும்; சூழ்நிலை மொழியாக வளர வேண்டும். அப்போதுதான் புதிய அறிவு உடலில் ஊறியதுபோலப் பழக்கமாகிவிடும். இவ்வாறு அமையாதவரையில் அறிவு வளர்ச்சி புறக்கோலமாகவே அமையும்; சமுதாயத்திற்கு பயன்படாது.

பலமொழியைக் கற்றாலும் சமுதாய மொழியே ஒருவனுக்கு இயல்பான மொழி. அதனைத் தாய்மொழி எனப் புகழ்வது அதனாலேயே ஆம். ஐந்தாண்டிற்குள் நம் செயலாற்றல், அறிவு நிலை முதலியவற்றின் போக்கு ஒருவகையாக நிலைபேறடைகிறது. ஆதலின் அதற்குள் பழகிய மொழியே நம்முடைய இயல்பின் விளக்கமாகிறது. இவ்வாறு அமையக்கூடிய மொழி தாய்

மொழியே ஆம். பிறமொழி பல அறிந்து பல நாள் பழகினாலும் திடீரென இடர் வந்தால் 'அம்மா' என்றே தமிழன் புலம்புகிறான். அந்த மொழியில் மேலும் பழகுவதும், எண்ணுவதும், எண்ணங்களைத் தெரிவிப்பதுமே இயல்பு. பிற எல்லாம் செயற்கையே ஆகும்.

மேற்படிப்பு நூல்கள் பிறமொழியில் நிறைய உள என்பது உண்மை. அதனால் அந்த மொழியைக் கற்க வேண்டும் என்று கூறுவதும் பொருத்தமே ஆம். ஆனால் அதற்காகத் தமிழ் மொழியில் அக்கருத்துக்களை ''எண்ணாதே; எழுதாதே'' என்று கூறமுடியுமா? கல்லூரி மொழியாகத் தமிழ் ஆதல் கூடாது என்பவர் கூற்றின் பொருள் இதுதானே?

கற்பவர் கற்றது எல்லாம் சமுதாயத்தில் பரவத் தமிழ் மொழி அன்றித் தமிழ் நாட்டில் வேறு மொழி உண்டா? கல்லூரி மொழி வேறு மொழியாக வேண்டும் என்பவர் ஒன்று செய்வது நல்லது. அவர்கள் விரும்பும் மொழியைத் தொட்டிலிலிருந்து எல்லோரும் பேசும் சமுதாய மொழி ஆக்குவதே அந்த வழியாம். முடியுமா? முயன்று பார்க்கட்டுமே!

ஆங்கிலமே இருக்கட்டுமே !

ஆங்கிலத்தில் கல்லூரிப் பாடங்களெல்லாம் இன்று நடைபெற்று வருகின்றன. இவற்றைத் தமிழில் நடத்தலாகாதா என்ற கேள்வி எழுகிறது. ஏன் மாற்ற வேண்டுமென்று எதிர்க்கேள்வி கேட்பதும் இயல்புதான். இன்றிருப்பதற்கு எப்போதும் ஓர் ஏற்றம் உண்டு. அதனை மாற்ற வேண்டுமென்று விரும்புகிறவர்களே காரணங் காட்டித் தம் கொள்கையை நிலைநிறுத்த வேண்டும். அத்தகைய பொறுப்பு, இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டுபவர்கள் தலையில் முதலில் விழுவதில்லை. ஆகவே மாற்றம் வேண்டாக் கட்சியின ரைக் குறை கூறிப் பயனில்லை. அவர்களும் அறிஞர்கள். அவர்களும் தமிழர்கள். அவர்களும் நாட்டின் நன்மை யையே நாடுகின்றார்கள். இவற்றையெல்லாம் மறந்து விடுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

மாற்றம் ஏன்? தமிழ் நாட்டில் தமிழுக்கு இடமில் லாமல் போகலாம் என்பது மட்டும் போதிய காரண மாகாது. தமிழ் வெறியும் இங்குத் தமிழ்நெறி ஆகாது. தமிழனுக்கு இந்த மாற்றம் நன்மை தருமா என்பதே கேள்வி. மாற்றாததால் தமிழன் படாத பாடெல்லாம் பட்டுப் புழுங்குகிறான் என்று காட்டுதல் வேண்டும். காட்ட முடியுமா?

மாற்றம் வேண்டாக் கொள்கையினரே கல்வியின் தரம் குறைந்து விட்டதென எங்கும் பெருமுழக்கம் செய்கின்ருர்கள். தமிழில் கற்கப் புகுங்கால் மேலும் தரம் குறையும் என்றும் முன்னறிவிப்பாக எடுத்துரைத்து வருகின்றனர். இந்த இரண்டு கூற்றுக்கும் அடிப்படை என்ன? பொருளை—கல்வியாசிரியர் புகட்டும் பொருளை—மாணவன் அறிந்துகொள்ளவில்லை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். எங்கே, ஏன் இப்படி என்ற கேள்வி எழுகிறது. நம்முடைய மாணவர்களிடையே அறிவுத்திறன் குறைந்துவிட்டதா? இவ்வாறு கூறுவோர் நம் இளைஞரை அறியாதவரே யாவர். இன்று நம் இளைஞர்கள் ஆங்கில நூல்களைப் பெரும்பான்மையும் கற்பதே இல்லை. கீழ்ான அச்சுக் குறிப்புகளையே உருப்போட்டு ஒப்புவிக்கப் பழகி விடுகின்றனர். அதற்கு பணமில்லாமற் போனல் ஆசிரியர் எழுதிக்கொள்ளச் சொல்லும் குறிப்புக்களை ஒப்புவித்து உயரப் பார்க்கிருர்கள். நூலை அறிந்துகொள்ளவே ஆங்கில அறிவு போதாதென்ருல் தாமாக ஆங்கிலத்தில் அவர்கள் எவ்வாறு எழுத முடியும்? எனவே மாணவர்கள் தேர்வு என்கிற சூதாட்டத்தில் எதனையேனும் ஒப்புவித்து ஈடேறவே முயல்கின்றனர். சொல்லாரவாரத்தையன்றிப் பொருளாழத்தை இன்றைய கல்விமுறை வற்புறுத்தவில்லை என்பது தெளிவாகிறது. அப்படியானல் உண்மைக் கல்வியாகிய பொருளாழம் எவ்வாறு வளர முடியும்?

எனவே மாணவன் இவ்வாறு இடர்ப்பட வேண்டாதபடி தாய்மொழியிலே பாடங்களைப் படித்தால் பொருள் நாட்டம் மிக்குவரப் பொருளாழத்தில் குதிப்பானன்ருே? அவனுக்கு அங்கே சொல்லைப்பற்றிய போராட்டமே இல்லை. தமிழிலில்லாத கலைச் சொற்களை

அப்படியே அதே வடிவில் தமிழாக அமைத்து அவன் எழுதிவிடலாம். ஆங்கிலச் சொல்லன்று அவனுக்குத் தொல்லை. ஆங்கிலச் சொற்றொடரமைப்பே அவனுக்கு வரும் பெரும் தலைவலி. அப்படியானால் அந்தந்தப்பாடங் களை ஆங்கிலத்தில் எழுதித் தமிழில் படித்தால், தலை சிறந்த உலக அறிஞரோடும் அவர்கள் நூல்களோடும் நேராக அவர் மொழியில் கற்றுத் தொடர்புகொண்டு இன்புற்று ஓங்கும் பெருவாய்ப்பை இழக்கின்றனல்லவா? எல்லா ஆசிரியர்களோடு இப்படி நேர்முகத் தொடர்பு கொள்ள முடியுமா? அரிஸ்டாடிலைக் கிரீக்கிலும், கதேயை ஜர்மனியிலும், வால்டேரைப் பிரஞ்சிலும், என்று இப்படி உலகமொழிகள் அத்தனையையும் ஒருவன் கற்க முடியுமா? ஏதாவது ஓர் உலகப் பெருமொழியேனும் வேண்டாமா எனக் கேட்கின்றனர். ஆனால் நம் மாணவர் கற்க வில்லையா? இவ்வாறு கேள்வி கேட்போர், ஆங்கிலம் நம் முடைய கல்வித்திட்டத்தில் இன்னமும், இனிமேலும், என்றும் சிறந்த இடம் பெற்றே விளங்கும் என்பதை மறந்து விடுகின்றார்கள்.

தமிழில் கற்பித்தாலும் ஆங்கில நூலும் தேவைப் படுவதால் ஆங்கிலத்திலேயே கற்பித்தாலென்ன என்று கேட்டுப் பயனில்லை. கற்பித்துப் பார்த்ததன் பயனைத் தானே முன் சொன்னோம். பொருளைத் தமிழில் அறிந்த பின் அந்தப் பொருளை விளக்கும் ஆங்கில நூல் ஓதி உணர்வது முன்னிலும் மிக எளிது. இஃது ஒருபுற மிருக்க, இன்றிருக்கிற நிலைமையிலேயே கல்லூரிகளில் ஆங்கிலம் பாடமொழியாக இருப்பது தமிழ் மாணவருக்கு நல்லதா என்றும் ஆராயவேண்டும். நல்லதாக இருக்கக் காணோமென்று எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். ஆங்கிலத்தின் தரத்தினை உயர்த்த வேண்டுமென்றும் எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆங்கிலத்தரம்

உயரும்வரை கல்லூரித் தமிழ் மாணவனின் நிலைதான் என்ன? பொருளொன்றுமறியாத கிளிப்பிள்ளையாகப் பேசி வந்தால் போதுமென்று கூற முடியுமா?

ஆங்கிலத் தரத்தை உயர்த்துவது என்பது சில பல ஆண்டுகளில் முடிவதொன்ரு? ஆங்கிலம் ஒரு பேச்சு மொழி; அதில் பேசப் பழகியவன், தானே முயன்று அம்மொழியில் முட்டற்றுத் தன் கலைக்கேற்ற நூல்களை யேனும் ஓதியுணர்ந்து உயரக்கூடும். அத்தகைய சூழ் நிலையைக் கீழ் வகுப்புகளிலேனும் ஏற்படுத்த நம்மால் முடியுமா? எஸ். எஸ். எல். சி. தேர்வில் நூற்றுக்கு முப்பது ஆங்கிலத்தில் வாங்கிய பெருமக்கள் ஆங்கிலம் கற்பிக்க வந்தால் எந்தக் கடவுட் குஞ்சும் ஆங்கில அறிவு பெறமுடியாது. இவர்கள் கையிற் பழகியோர் எஸ். எஸ். எல். சி. தேர்வில் முப்பது வாங்க வருவார்களாஞலும் அந்த முப்பது உண்மையில் இருபதாகக் கூடத் தேருது. இவ்வாறு இருபது பெற்ற பெரியோர் ஆங்கிலங் கற்பிக்கச் சென்ருல் ஆங்கிலத் தரம் இந்தத் தீவட்டச் சுழலில் குறைந்து குறைந்து வெறும் சுன்னமாக அல் லவோ முடியும். அதுவரையிலும் பொருளைப்பற்றிக் கவலை கொள்ளாமல் ஆங்கிலச் சொற்களை ஆரவாரத்தி லேயே செருக்கிக் களித்துத் திரிவோமா? ஆதலின் இந்த முறையின்படி எண்ணிப் பார்த்தாலும் ஆங்கிலத்தரம் உயரும் வரை நம்முடைய கல்வி பயனற்றதாகும்; நாட் டினைப் படுகுழியில் வீழ்த்துவதாகும்; மாணவருள்ளத் தைப் புண்படுத்துவதாகும்; தன்னம்பிக்கையற்ற முட் டாள்களைப் படைப்பதாகி முடியும்.

எனவே, சொல்லைவிட்டுப் பொருளை நாடவேண்டும்; வற்புறுத்த வேண்டும். அறிவென்ருல் பொருளறிவா? சொல்லறிவா? பொருளறிந்தவர்களே அப்பொருளறிந்து

உலகில் வாழ்ந்து, உலகை வாழ்வித்து, வழி காட்டித் தொண்டு செய்ய முடியும். பெருமக்கள் வாய்பாட்டைத் தமிழில் கற்றுலென்ன ஆங்கிலத்தில் கற்றுலென்ன? ஆங் கிலத்தில்கற்க முடியாத நிலைமை ஏற்பட்ட பொழுதே தமிழில் கற்க வேண்டுமென்று கூறவேண்டுவதாகிறது.

இதனுல் ஆங்கிலத் தரத்தை உயர்த்த முயலக் கூடா தென்பதன்று. நாம் சால முயன்றே தீரவேண்டும். பொருளை அறிந்த பின் மொழிச்சிக்கல் பேரிடர் ஆவ தில்லை. பொருளாழம் தூராதிருக்க வழிசெய்து விட் டால் ஆங்கிலத்தரத்தை அதனேடு முடிபோடாமல் மெல்லப் படிப்படியாக உயர்த்தும் முயற்சி எளிதில் வெற்றி பெறும்.

எனவே, இன்றைய கல்வி முறையில் ஆங்கிலம் பாட மொழியாக இருந்து வெற்றி தருகின்றதென்றுல் அதனை மாற்ற வேண்டுமென்று கேட்பது அறிவுடைமையாகாது; உணர்ச்சியுடைமையாகலாம். ஆனுல் வெற்றி தரவில்லை யென்று எல்லோரும் ஒப்புக்கொள்ளும்போது வெற்றி தருவதற்கு வேறு வழி தேடக்கூடாது என்பது அறி வுடைமையா, உணர்ச்சியுடைமையா என்றுதான் உலகம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

இணைமொழிக் கல்வி

கல்வி என்றால் நீண்டகாலம் வரை தாய்மொழி வழியாக நடைபெறும் கல்வி என்றே பொருள் தந்திருத்தல் வேண்டும். அப்போதெல்லாம் பிறமொழிகளை மக்கள் கற்கவில்லை என்று சொல்வதற்கு இல்லை. ஒரு மொழி பேசுவோர் மற்றொரு மொழி பேசுவாரோடு தொடர்பு கொள்ளும்போது அந்த வேற்றுமொழியையும் பயில்வது இயல்பு. ஆனால் அதனைக் கற்றுத்தான் கல்வி நிரம்பவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

ஒருவனுக்கு ஓர் உடை இருந்தால் போதும்; இரண்டாவது உடையும் இருந்தால் நல்லதுதானே. ஆனால் இரண்டாவது உடை இருப்பதினாலே சிறப்பு என்று சொல்வதற்கு இல்லை. இருமொழி அறிவு இருப்பதினாலே மனிதன் சிறக்கவே செய்கின்றான். ஒருவகையால் நோக்குமிடத்து இருமொழி அறிவு அவனை இருமடங்கு ஆக்குகின்றது. வேறு ஓர் உவமை கூறலாம். தமிழ் நாட்டார் அரிசி உணவே உண்டால் மட்டும் போதும். ஆனால் அவர்கள் கோதுமை உணவோ, பிற தானிய உணவோ அரிசி உணவோடு உட்கொண்டால்அதனினும் சிறந்த பயன் கிடைக்கும் என்கின்றார்கள்; ஒருநிறை உணவு உட்கொண்ட பயன் விளைகிறதாம்; உடல் வளம் சிறக்கின்றதாம். இந்த வகையில் இருவகை உணவு

போல இருவகை மொழிகளையும் ஒன்றுக்கொன்று துணை செய்து நிறைவு ஆக்குவதாகக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு மொழி அறிவே போதும் என்பதும், இரண்டாவது மொழி இன்றியமையாதது வேண்டப் படுவதில்லை என்பதும் நாம் மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய உண்மைகள். நண்பரோடு பழகுவதற்காகவோ, வேற்று நாட்டிலோ, வேற்று அரசிலோ சிறப்பு அடை வதற்காகவோ வேற்றுமொழி பயன்படலாம். ஆனால் கல்வி நிரம்புதற்கு அது இன்றியமையாதது அன்று.

ஆனால் உலகில் இன்று ஒரு புதிய நிலைமை வளர்ந்து உள்ளது. மேனாட்டில் சென்ற மூன்று நூற்றாண்டுகளில் விஞ்ஞானம் வளர்ந்து ஓங்கி முன்னேறி உள்ளது. பீரங்கியும் துப்பாக்கியும் கையில் இருந்ததால் மேனாட்டார் கீழைநாட்டாரைப் பல வகையிலும் அடக்கி ஆண்டு வந்தனர். இந்தக் காலத்தில் கீழை நாடு விஞ்ஞானத்தில் முன்னேறாது பின் தங்கி நின்றது. மேனாட்டினர் தங்களுக்கு வேண்டிய கீழ்நிலை அலுவல் களையும், படைவீரர்களையும் மட்டுமே இந்நாடுகளில் உருவாக்க முயன்றார்கள். சமுதாயத்தில் ஒரு சிலரை அறிவு நிலையில் உயர்த்திவிட்டால் அவர்கள் வழியே அந்த அறிவு படிப்படியாகக் கீழ் நிலைகளில் ஊறி, சமுதாயம் முழுவதிலும் பரவும் என்று அவர்கள் கருதினார்கள். இதனாலே சமுதாயம் முழுவதும் விஞ்ஞானம் முதலான தற்காலக் கல்வியை ஒரு சிறிது பழகவும்கூட முடியாத நிலை ஏற்பட்டது.

உயர்நிலையில் இந்த அறிவைப் பெற்றவர்கள் மேனாட்டுமொழி வழியாகத்தான் பெற்றார்கள். அவர் களில் சிலர் மேனாட்டுக்குச் சென்று மேற்படிப்புப் படித் தார்கள்; அங்கு வழங்கும் மேனாட்டு மொழிகளில்தான்

கற்ருர்கள். எனவே அந்த முற்போக்கான விளைவுகளை யெல்லாம் கீழை நாட்டு மொழிகளில் பேசவோ எழுதவோ வரும் வாய்ப்பே எழவில்லை. இதன் பயனுகக் கீழை நாட்டோர் இக்கருத்துக்களைப்பற்றி எண்ணுவதும் அனுபவிப்பதும் எல்லாம் மேலை நாட்டு மொழிகளின் வழியாகத்தான். அனுபவம் பேச்சு வடிவாக வெளிப் பட்டு நிலைபெறும்.

எனவே இவற்றைப்பற்றி எழும் கீழைநாட்டு அனு பவமும், மேலைநாட்டு மொழிகளின் அமைப்பை ஒட்டியே எழவேண்டியதாயிற்று. இவற்றைத் தத்தம் நாட்டில் உள்ளவர்களுக்கு இவர்களில் சில அறிஞர்கள் கூறத் தொடங்கியபோது தங்கள் தங்கள் தாய்மொழிச் சொற்கள் வழியாக விளக்கினுலும் மேலைநாட்டு மொழி அமைப்பை ஒட்டியே இந்த விளக்கங்கள் உருக் கொண்டன. கலைச்சொற்கள் மேலைநாட்டுச் சொற்க ளாகவே பெரும்பாலும் அமைந்தன. சிலபோது அவை மொழிபெயர்க்கப் பெற்றன. கலைச்சொற்களை மொழி பெயர்ப்பது விஞ்ஞானக் கருத்தை எளிதாக்குவது இல்லை. அந்தக் கருத்தின் அனுபவத்தைச் சோதனை யகத்திலோ பிற இடத்தோ பெற்ருல் அன்றி அது பெரியதொரு விளக்கம் பெறுவது இல்லை. 'ஹைட்ரஜன்' (Hydrogen) என்பதனை 'நீரியம்' என்று அமைத்துக் கொள்வதால் மட்டும் தமிழர் எல்லாம் உணர்ந்த தமிழ்ச் சொல்லாக அது மாறிவிட முடியாது. தமிழ்ச் சொற்ருெடரில் ஹைட்ரஜன் என்பதைவிட நீரியம் என்பது எளிதில் பொருந்தி வரலாம். தமிழ்தானே இக்கருத்து என நம்மை அந்தப் புதிய சொல் ஏமாற்ற லாம். ஆனுல் அதைப்பற்றிய அனுபவம் எழாதபோது அது தமிழன் உணர்ந்த தமிழ்ச் சொல்லாவது இல்லை. அவன் உணர்ந்த அனுபவத்தில் அது இடம் பெறுவது

இல்லை. விஞ்ஞான அறிவும், அனுபவமும் பொதுமக்கள் இடையே பரவினால் அன்றி இவை தமிழாவதற்கு இல்லை. எனவே கலைச்சொற்கள் தமிழ் என்ற வடிவில் வந்தாலும் பயன் இல்லை என்பதாயிற்று.

ஒருசிலர் இடத்தில் மட்டும் விஞ்ஞானம் வளரும் போது அதைப்பற்றிய சொல் விளக்கங்கள் தமிழிலோ, பிற கீழை நாட்டு மொழிகளிலோ எழுந்தாலும் அவை மேலைநாட்டு மொழி அமைப்பை ஒட்டியே உருப்பெறு கின்றன என்பதனை உணர்தல் வேண்டும். இதனால்இன்று வரும் விஞ்ஞான நூல்களின் தமிழ்மொழி பெயர்ப்பு களைக் குறைகூறிப் பயன் இல்லை.

ஆனால் விஞ்ஞானத்தின் ஆழத்தை எல்லாம் ஒவ்வொருவனும் மேலைநாட்டில் அறிகின்றான் என்ப தில்லை. விஞ்ஞான அனுபவம் மேல்வாரியாக எழுந் தாலும் போதும். ஆகாயவிமானம், அணுகுண்டு, மின்சாரம் முதலியவற்றின் இயக்கங்களின் நுட்பத்தை எல்லாம் மேலைநாட்டில்கூட அறிந்தவர்கள் மிகமிகச் சிலரே. ஆனால் இவை மேலைநாட்டிலும், கீழைநாட்டி லும் ஒருவகை அனுபவப் பொருள்களாக விளங்கு கின்றன.

ஹிரோஷிமாவில் அணுக்குண்டு வெடித்தகதை, அணுக்குண்டு சோதனையைப்பற்றி உலகு எங்கும் பேசுகின்ற பேச்சு—இவை எல்லாம் எல்லோருக்கும் தெரியும். இப்படிப் பலமுறையும் கேட்டோ, கண்டோ வந்தால் போதும். சொர்க்கத்தை யார் கண்டார்கள்? இருந்தாலும் அது கேள்விப் பொருளாக எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. மோட்டார்க் காரை எல்லோரும் ஓட்ட முடியுமா? எல்லோரும் புதியதாக அமைக்க முடியுமா? ஆனால் காட்சிப்பொருளாக, பயன்படுத்தும்

பொருளாக எல்லோருக்கும் அவை தெரிந்திருக்கின்றன. அப்படியாவது கேள்விப்பொருளாகவோ, காட்சிப் பொருளாகவோ இன்றைய விஞ்ஞான அனுபவம் பொது மக்களிடையே பரவவேண்டும். அப்படிப் பரவி விட்டால் அது தமிழ்நாட்டில் தமிழுக்குத் தமிழாகி விடும்; எல்லாத் தமிழரின் அனுபவம் ஆகிவிடும். அங்கே சொல் தமிழா, பிறிதா என்ற ஆராய்ச்சி இல்லை. எனவே அத்தகைய அனுபவம் கீழை நாடுகளில் வரும்வரை முற்போக்கான அறிவு நிலை முழுவதும் மேலைநாட்டு மொழிகளின் வழியாகத்தான் கீழை நாடுகளிலும் உருக்கொண்டு திரளும். அவ்வாறு உருக் கொண்டு திரளும்போது கீழைநாட்டு மொழிகளில் எழுத வரலாம். முதலில் அவ்வாறு விளக்கும்போது கீழைநாட்டு மொழிகளும் மேலே கூறியபடி மேலை நாட்டு மொழி அமைப்பைப் பின்பற்றும். இதன் பயனுகப் பல மேலைநாட்டுச் சொற்கள் இம்மொழிகளில் புகும்; மொழி அமைப்புங்கூடப் புகும்.

தமிழ்ப் பத்திரிகை உலகத்தில் செயப்பாட்டு வினை கள் நிறைந்து வருவது ஆங்கில மொழித்தொடர்பால் எழுந்த விளைவு. எனவே இத்தகைய விளைவுகளை வளரும் மொழி தடுப்பதற்கு இல்லை. ஆனுல் ஒரு சிலர் மட்டும் பயன்படுத்துவதாக இல்லாமல் அனைவரும் பயன்படுத்தும் அனுபவ மொழியாக அது மாறவேண்டும். அத்தகைய விஞ்ஞான அனுபவமொழி அமைப்பு பரவும் வரையில் அது கீழை நாட்டு மொழி அமைப்பு என்று கூறப்பெறும் என்று நினைப்பதற்கு இல்லை. ஒரு சிலர் மட்டும் கற்றுவரும் போது அவர்கள் அவற்றை மேலைநாட்டு மொழிகளி லேயே கற்கவேண்டி இருக்கின்றது. அவர்களிடத்தில் கற்க வருகின்றவர்களுக்கும் மேலைநாட்டு மொழிகளின் வழியே அவர்கள் சொல்லிக்கொடுக்க வேண்டியிருக்

கிறது. அப்படிப் பழகுவதன் காரணமாக அவர்கள் அதிலேதான் விளக்குவது எளிது என்கின்ருர்கள்; கீழை நாட்டு மொழிகளில் விளக்குவது அருமை என்றும் கூறுகின்ருர்கள்.

ஆனல் இந்தப் பழக்கத்தை மாற்றிப் பழகுதல் வேண்டும். கற்ருேர் என்று ஒரு சாதி, கல்லாதவர்கள் என்று வேறு ஒரு சாதி இருக்க முடியாது. கற்ருேர் அறிந்ததை எல்லாம் முன்னே கூறியபடி மேல்வாரி அனுபவமாகவாவது எல்லோரும் அறியவேண்டும். அத்தகைய பொது அனுபவம் கீழைநாட்டில் மொழி களில்தான் எழக்கூடும். இந்நாடுகள் முன்னேற வேண்டு மாஞல் இந்த அனுபவங்கள் அந்நாட்டில் உள்ள அனைவரின் அனுபவமும் ஆகவேண்டும். இதஞலேயே இந்நாடுகள் எல்லாம், தம்தம் நாட்டில் உள்ள அனை வருக்கும் கட்டாயமாகவும், இலவசமாகவும், கல்வி கற்பித்து ஆகவேண்டும் என்று முனைந்துள்ளன. இந் நாடுகள் முன்னேற வேறு வழியில்லை.

சிறந்த மொழி, பண்பட்ட மொழி என்று கூறுவது எல்லாம் புராணக் கதை. எந்த மொழியிலும் எல்லாக் கருத்தையும் விளக்கக் கூடும். ஆனல் ஆங்கிலத்தைப் போல விஞ்ஞானத்தைத் தமிழில் விளக்க முடியுமா? என்று கேட்கலாம். இங்குள்ளது மொழியின் குறை அன்று. மொழி பேசுகின்ற பொது மக்களின் அனுபவக் குறைவுதான். அனுபவம் பொதுமக்கள் இடையே பரவிஞல் அதற்கு வேண்டிய சொற்களும், சொல் லமைப்புகளும் தமிழிலும் எழும்; காட்டுமிராண்டிகளின் மொழிகளிலும் எழும். ஆங்கிலத்தின் விஞ்ஞானச் சிறப்பு ஆங்கில மொழியில் இல்லை. ஆங்கிலக் கவிஞர் களில் சேக்ஸ்பியரே தலைசிறந்தவர். ஆனல் சேக்ஸ் பியர், அவர் காலத்தில் வளராத விஞ்ஞானத்தைப் பேசி

இருக்க முடியாது. இன்று ஆங்கிலம் விஞ்ஞானக் கருத்தை விளக்குகிறது என்றால், விஞ்ஞானம் கூறும் அனுபவம் சமுதாயத்தில் பரவலாக இருப்பதே காரணம் ஆம்.

நம்முடைய பள்ளிக்கூடச் சிறுவர்களும் அணு குண்டினைப்பற்றிப் பேசுகின்றார்கள். அவர்கள் கம்பனையோ சங்கப்புலவர்களையோவிடச் சிறந்தவர்கள் அல்லர். அக்கவிஞர்கள் கையாண்ட மொழியில் குறை ஒன்றும் இல்லை. முன் ஏற்படாத அனுபவம் இப்போது மக்கள் இடையே பரவி வந்துள்ளது. எனவே, எந்த மொழியும் கடன் வாங்கியோ, புதியனவாகப் படைத்தோ தன்னிடையே, பரவித் தனக்கு இயல்பாகிப் போன அனுபவத்தை எளிதாக விளக்கக்கூடும். எனவே இங்கு மொழியைப்பற்றிக் குறை கூறிப் பயன் இல்லை. செய்ய வேண்டியது என்ன?

புதிய மேலைநாட்டு அனுபவப் பொருள்களைக் கேள்விப் பொருள்களாகவோ காட்சிப் பொருள்களாகவோ பொதுமக்கள் அனைவரும் அனுபவிக்கும்படி கல்வித்திட்டத்தை உருவாக்குவதே நம் கடமை; அப்படி உருவாக்கி வரும்போது கீழை நாட்டு மொழிகளும் விஞ்ஞான மொழிகளாக உருவாகிவிடும்.

இன்றோ நாளையோ அந்த நிலை ஏற்படும் என்பதற்கு இல்லை. அதுவரையில் கல்வி கற்கும் நம் மாணவர்கள், பொதுமக்கள் அனுபவமாக உருவாகாத விஞ்ஞானக் கொள்கைகளை எல்லாம் கற்காமல் இருக்க முடியாது. அவற்றைக் கற்றுத் தேர்ந்தால்தான் அது பொதுமக்கள் அனுபவமாக ஆகும்; பொதுமக்கள் மொழியும், விஞ் ஞான மொழி ஆகும். அதுவரையில் கற்கின்றவர்கள் மேலைநாட்டு மொழிகளில்தான் கற்கவேண்டும். எனவே

வரலாற்றின் வழியே எழுந்த இந்த நிலையால் கீழைநாடுகளில் கல்வி என்பது தாய்மொழிக் கல்வி என்பதோடு நிற்பதற்கு இல்லை. மேலைநாட்டு மொழிக் கல்வியையும் எதிர்பார்த்து நிற்க வேண்டி இருக்கின்றது. தத்துவம், இலக்கியம், இலக்கணம் முதலிய பழைய அனுபவங்களைத் தாய்மொழியிலேயே வளம்படப் பேசலாம்; எழுதலாம்.

விஞ்ஞானம் முதலிய தற்காலக் கொள்கைகளை அவ்வாறு தாய்மொழியிலே மட்டும் கற்பதற்கு இல்லை. ஆதலால் தாய்மொழி மட்டும் கற்றவன் அரை மனிதன் ஆகின்றான். மேலைநாட்டு மொழியையும் கற்றால்தான் பழைய அனுபவமும், புதிய அனுபவமும் நிறைந்த நிறை மனிதனாக நம்முடைய மாணவன் வளர்ந்து ஓங்கி நாட்டை வாழச்செய்யலாம். இந்த நிறை மனிதர்களின் வழியே உலக அனுபவம் முழுவதும் நாட்டிலே எல்லோருக்கும் பொதுவாகப் பரவும்போது நாட்டு மொழியும் அந்த நிறைவுபெறலாம். அதுவரை, கீழை நாடுகளில் கீழைநாட்டு மொழிக் கல்வியும், மேல்நாட்டு மொழிக் கல்வியும் ஒன்றையொன்று நிறைவு செய்பவைகளாக வேர் ஊன்றி வருதல் வேண்டும்.

மேலை நாட்டு மொழியை மட்டும் கற்று நம்மவர் உயர முடியாது. நம்முடைய குழந்தைகள் தாய் மொழியாக மேலைநாட்டு மொழியைப் பேசுவதில்லை. ஒரு சிலர் பேசினாலும் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது கணக்கில் உள்ள பொதுமக்கள் அதிலே பழகுதல் முடியாது. எனவே நாட்டுமொழிக் கல்வியை விடுவதற்கு இல்லை. மேலைநாட்டு மொழியையும் தன்னுள் அடக்கிக் கொண்டு நாட்டுமொழி ஒருநாள் வளர்தல் வேண்டும்.

இந்த உண்மையை மனத்தில் வைத்துக்கொண்டால் பல வீண் அறிவுக் குழப்பங்கள் நீங்கும். எந்த மேனாட்டு

மொழியை நாம் கற்பது? இதனைப் புதியதாக நாம் ஒன்றும் ஆராயவேண்டுவதில்லை. வரலாற்றின் பயனாக நம் நாடு ஆங்கிலேயரோடு தொடர்பு கொண்டது. ஆங்கில மொழியை இந்நாட்டில் பலர் கற்றுவருகின்றார்கள். எனவே, ஆங்கிலமே நாம் அறிந்த மேலை நாட்டு மொழி. அது ஒரு வகையில் உலகமொழியாகவும் சிறந்து உள்ளது. உலகத்தில் ஏழில் ஒரு பங்கினர் ஆங்கிலம் அறிந்தவர்கள் எனலாம். உலகத்தில் நான்கு கண்டங்களில் அது தாய் மொழியாகப் பேசும் பெருமை பெற்றது. விஞ்ஞானமொழியாகவும் அது தலைசிறந்து உள்ளது. நமக்கும் பழகிய மொழி. எனவே அதுவே இணைமொழியாகவும் இருக்கத் தக்கது. ஏறக்குறைய பர்மாவிலும் இதுதான் நிலைமை. இலங்கையிலும் இதுதான் நிலைமை. மலேயாசியாவிலும் இதுதான் நிலைமை. பிரெஞ்சு சில இடங்களில் இந்த நிலையில் உதவும். பெரும்பாலும் தென்கிழக்கு ஆசியா ஆங்கிலத்தையே இணைமொழியாக நம்பவேண்டி உள்ளது. எனவே இந்தியா மட்டும்தான் இந்த நிலையில் இருக்கின்றது என்று நாம் நினைக்க வேண்டாம்.

விடுதலைக் கல்வி

விடுதலை பெற்ற இந்தியா இன்று தனித்து வாழ முடியாது. உலகத் தொடர்புகொண்டே ஒவ்வொரு நாடும் வாழ வேண்டிய சூழ்நிலை இன்று உருவாகி யுள்ளது. உலகம் அணுவையும் பிளந்து அதிலுள்ள ஆற்றலைப் பயன்படுத்தக் கற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் மனிதனுடைய அறிவு இவ்வாறு மலர்ந்திருந் தாலும் அவனுடைய உள்ளம் அதற்கேற்பப் பங்கு பெற்று வளர்ந்திருப்பதாகக் காணோம். இதனாலேயே மனிதன் இந்த இரண்டாட்டத்திற்கு இடையே சிக்கி வாடுகிறான். தமிழனுடைய நிலையும் இதுதான்.

தமிழன் யார்? பொதுவாக, தமிழ் பேசி வருபவனே தமிழன் எனலாம். பெரும்பாலும் அவன் தமிழிலேயே எண்ணுகிறான். அவன் எண்ணம் உயர வேண்டுமானால் அவனுடைய தமிழும் அதற்கேற்ப உயர்ந்து வளங் கொழிக்க வேண்டும். அணுயுகத்தில் தமிழ் எவ்வாறு வளரவேண்டும் என்பதனைப்பற்றி நாம் எண்ண வேண்டாவா ?

தமிழ் மாணவர்கள் பேசுகின்ற பேச்சு உயிர்த் துடிப்பு உடையதுதான். ஆனால் இன்று அமெரிக்க நாட்டானோ, ருஷ்ய நாட்டானோ எண்ணுகின்ற எண்ணங்களெல்லாம் தமிழ் மாணவன் எண்ணப் பழகுகின்றானா என்பதே

கேள்வி. அவ்வாறு எண்ண நம் மாணவருக்கு நாம் என்ன உதவி செய்கின்றோம்? நம்முடைய கல்வி முறை அதற்கு உதவுகின்றதா? ஒரு சிறிது உதவியும் செய் யாது, ''தரம் குறைகிறது'' என்று கிழவர்கள் ஓலம் இட்டுப் பயன் என்ன? அந்த மாணவர்கள் பேசும், உயிர்த்துடிப்பும் இல்லாத வறட்டுப் பேச்சுப் பேசும் இந்தக் கிழடுகளின் கூக்குரலால் என்ன பயன்?

இன்று உயர்நிலைப் பள்ளியில் படிக்கின்ற மாணவன் அறிந்துள்ள அளவில் கால்பங்குகூட நான் பள்ளியில் கற்றபோது அறிந்ததில்லை. பல நாடுகளின் பெயர்களை நான் உருப்போட்டு இருக்கலாம். ஆனால் இன்றோ மாணவர் உள்ளத்திலே ஒவ்வொரு நாட்டின் பெயரும் ஒவ்வொரு உட்கோளை உணர்த்துவதாக, ஒவ்வொரு பெருமகனை நினைப்பூட்டுவதாக, தாம் அறிந்த செய்தி யோடு ஒன்றிப் பிணைந்த அனுபவமாக விளங்குகின்றது. இவையெல்லாம் ஒன்று திரண்டு •வரும்படியாகச் செய்யும் ஆற்றல் மாணவனை ஆளும் நமக்கில்லை.

இன்று குடியரசில் வாழ்கிறோம். ஆனால் நம்மிடையே என்ன குடியரசு விளங்குகின்றது? மாணவர்களை எண்ணச் செய்கிறோமா? குத்துக்கல்போல் அவர்கள் குந்திக் கிடக்க நாம் ஏதோ சொற்பொழிவு ஆற்று கிறோம். அதனை அப்படியே ஒப்புவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். மாணவன் உருப்போடும் இயந்திரம் ஆகின்றான். ஆராய்ந்து முடிவு காண ஆற்றிவும் படைத்தவன் என்று நாம் அவனைக் கூற முடியுமா?

பகுத்தறிவு என்று பேசுகின்றவர்களும், தங்கள் கொள்கைகளை ஒப்புவிக்க வேண்டும் என்றே எதிர்பார்க் கின்றனர். ஒலித்தட்டே போல, இவர்கள் பேச்சின்

சொற்றொடர்களைக்கூடக் கிளிப் பிள்ளைகள் போலப் பேச வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். அவ்வாறே அந்த கிளிப்பிள்ளைகளும் பேசுகின்றன.

மாணவன் மனத்தில் எப்போதேனும் ஐயம் எழுகின்றதா? ஐயம் உண்டா என்றுதான் கேட்கின்றோமா? ஐயம் கேட்கும் மாணவனை எரிந்து விழுகின்ற ஆசிரியர்கள் எத்தனை பேர், எத்தனை பேர்? தான் காணாத புதுமைகளை, புது வழிகளை, புது முடிவுகளை வியப்புடன் காண்கின்ற வகையில் மாணவனை வளர்க்கின்றோமா? அறிவு வளர்ச்சி ஒரு கூட்டுறவு வளர்ச்சி என்பதனை நம் மாணவர்கள் உணருகின்றார்களா? ஆசிரியர் செங்கோல் செலுத்த, மாணவர்கள் அடிமை வாழ்வின்றி வேறு என்ன வாழ்வு வாழ்கின்றார்கள்? நம்முடைய வகுப்புக்களில் அவர்களைத் தவறு செய்யத்தான் விடுகின்றோமா? தப்பித் தவறி விழாது குழந்தை எவ்வாறு நடை கற்க முடியும்? ஆசிரியர்களைக் கண்டு மாணவர்கள் வாய்பிளக்க வேண்டும் என்று எண்ணுகிறோம். அடக்கம், ஒழுக்கம் என்று பேசுகிறோம். இவை வெளிக் கோலமா? அல்லது உள்ளத்தோடு இயைந்த ஒற்றுமைக் காட்சியா? புறக்கோலத்தையே வற்புறுத்துவதால் புறத்தமைதியே தோன்றலாம். அகத்துஅமைதி பெறாத இந்த மாணவர்கள் உள்ளத்தை அடக்கி அடக்கிப் பார்க்கின்றார்கள். அவர்களாலும் அடக்க முடியாதபோது எரிமலை வெடிக்கிறது. இதனை முன்னரே நாம் அறிந்திருக்க வேண்டாமா?

மாணவர்கள் பழகும் சமுதாயம் என்ன ஒழுங்கு நிலையை அவர்களுக்கு மேல்வரிச்சட்டமாகக் காட்டுகிறது? மாணவன் எதிர்காலச் செல்வம். தான் குடிக்கும் டீ, காபிக்கும் கூடச் சர்க்கரை இல்லை என்று அவன் வாட, அயலிலே கள்ளச் சந்தையில் கொள்ளை

லாபம் அடிக்கின்ற இடத்தே சர்க்கரை மலை மலையாக உருள்கிறது. இதனைக் கண்ட மாணவன் 'ஒழுங்கு' என்று நாம் பேசுவதை எவ்வாறு நம்பக்கூடும்? கொள்ளைக் கூட்டம் ஒழுங்கைக் கண்டு சிரிப்பதைப்போல அவனும் சிரிக்கிறான். ஆனால் இவன் சிரிப்போ பசியின் சிரிப்பு, கடுஞ் சிரிப்பு, பிஞ்சு அவ்வாறு நஞ்சாகிறது. இதை உணருகிறோமா? ஆசிரியர்களேனும் "எல்லோருக்கும் ஒரு நீதி" என்று பேசுவது போல் நடக்கின்றார்களா? எந்தத் தரத்தை அவன் குறிக்கோளாகக் கொள்வது?

பழந்தமிழைப் படிக்கச் சொல்கின்றோம். பலபேர் உருப்போடுவதுதான் உண்மைக் கல்வி என்று கருதுகிறார்கள். "அப்பழம் பாடல்கள் இந்த அணுயுகத்தோடு எவ்வாறு தொடர்புடையன? எவ்வாறு பயனுள்ளன?" என்று அவனுக்கு விளக்குபவர் யார்? தேர்வுக்காக உருப்போட்டால் போதுமா? உள்ளத்தைத் தொட வேண்டாவா? மாணவன் அதை நம்ப வேண்டாமா? அவனுடைய இன்றைய வாழ்வோடு அப்பாடல்கள் பின்னிப் பிணையாவிட்டால் அவனுக்கு அவற்றில் எவ்வாறு அக்கறை எழும்?

பழைய பாடல்களையும் பழைய இலக்கணங்களையும் உருப்போடுவது அவற்றை அறிவதற்கோர் எளிய வழியாம். ஆனால் வழி என்று உணர்ந்தால்தானே மாணவன் அதில் கால் எடுத்து வைப்பான். உருப்போடுவதனைப் பழங்கால மக்களே குருட்டுப்பாடம் என்று இகழ்ந்தார்கள்.

அவன் படிக்கும் பாடங்கள் இந்நாளுக்கு மிக மிக இன்றியமையாதன; அணுயுகத்திற் கேற்ப அவன் உள்ளம் பண்பட வேண்டுமானால் இப்பாடல்கள் அவனுடைய உயிர்நிலையாக அமைதல் வேண்டும். ஆனால்

இந்தச் சிறந்த உண்மையை மாணவன் உளங்கொளச் சொல்பவர் யார்? இவ்வாறு விளக்காது விட்டபின் உருப் போடவில்லை என்று கூறிப் பயன் என்ன? ''தரம் குறைந்து விட்டது'' என்று பேசிப் பயன் என்ன? இவ்வாறு பேசுவோர், தங்கள் தரம் உயர்ந்திருப்பதாகக் கனவு காண்பது ஒரு வியப்பே ஆம். இவ்வாறு பேசுவது கிழடு தட்டியதின் அடையாளம் ஆகும்.

உருப்போடுவதனை நம்புவதால்தான் ஒன்றும் புரியாத ஆங்கிலத்திலும் உருப்போட்டு உயரலாம் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. ஆங்கிலேயனுக்கு ஆங்கிலம் உயிர்ப்புள்ள மொழி. தன் உள்ளத்தைத் தொடாத போது அந்த ஆங்கிலம் தமிழனுக்குச் செத்த மொழியே யாம். உருப்போட்டாலன்றி வெளியிட முடியாத தமிழ் விதிகளும் தமிழன் உள்ளத்தைத் தொட முடியாது. அப்போது அவையும் செத்த மொழியாகவே ஆகிவிடுகின்றன. இத்தகைய பிணக்கோலத்திற்கு அணி செய்து ஊர்வலமாகக்கொண்டு போய், ''இதுதான் நம்முடைய கல்வித்தரம்'' என்று பேசிக் கொள்கிறோம். நம்முடைய மாணவர்களின் முயற்சியை—உயிரைப்—பாழாக்குகின்றோம். இது கிடைத்தற்கரிய பசு நெய்யை சாம்பலில் ஊற்றிய கதையேயாம்.

கல்வி என்பது உள்ளத்தைக் கல்லவேண்டும்; உள்ளம் பண்பட்டு அழகிய வடிவம் கொள்ள வேண்டும்; அந்த அழகில் புத்துணர்ச்சி பொங்கி எழும். அத்தகைய கல்வி வளம் கொழித்தால்தான் அணுயுகத்திற்கு ஈடு கொடுக்கும் மாணவர்கள் நம் தமிழ்நாட்டில் தோன்ற முடியும்.

கல்வியில் தெளிவு

கல்வி என்பது என்ன? கல்லுக்கு அதன் இயல்புக்கு ஏற்ப உருக்கொடுத்துச் செப்பனிட்டு அதனை அழகாக்கிப் பயன்படுத்துகிறோம். அதுபோல மனிதனை அறிவு வடிவாக்கி அவனது அன்புருவை வெளிப்படுத்தி அவனை எங்கும் பொருத்தமுறச் செயற்படும் நிலையில் வாழ வைப்பதே கல்வி எனலாம். நிலத்தைக் கல்லிப் பண்படுத்திப் பயனுடையதாக்குகிறோம்; சூழ்நிலைக்கேற்பத் திருத்துகிறோம். வேண்டுமானால் பயன்படும் வகையில் சூழ்நிலையையே திருத்தி அமைக்கிறோம். நல்ல வயலாக்கி வளம் கொழிக்கச்செய்து உலகினை வளர்விக்கும் முறையில் அவனைப் பண்படுத்தும் கல்வி, அதுபோல மனிதனை உருவாக்கி உலகிற்கு உதவச் செய்ததும் கல்வி எனலாம். மனிதன் நிறை மனிதனாதலே கல்வியின் நோக்கம். சூழ்நிலையோடு முரண்பாடு இன்றியே அவன் நிறை மனிதனாதல் வேண்டும்.

அறிவு வளர்ச்சி மட்டும் கல்வி ஆகாது. உணர்ச்சியும் உணர்வும், போராட்டமின்றி அழகுருவும் அன்பு வடிவமும் கொள்ளுதல் வேண்டும்; அவை எந்நிலையிலும் தயங்காது செயற்படுதலும் வேண்டும். இதற்கு உதவுவதே கல்வி. இப்படி உலகத்தோடொட்ட ஒழுக நிறை

வடைவதைப் புறக்கணிப்பதால் அறிவு குறைபட்டு மயக்கடைந்து மங்கி வழுக்கி விடுகிறது. இந்த நிலையைக் கண்டு அந்த அறிவே அஞ்சி நடுங்குகிறது; உலகினை ஏமாற்றப் பார்க்கிறது; ஏமாற்றிப் பிழைக்கவே செயல் படுகிறது. இதன் பயனாகச் சிறையகம், வெறியர் மருத்துவ நிலையம் முதலியனவே வளர்கின்றன. எதனைக் கற்றவர்கள் இவற்றில் புகுகிறார்கள்? கல்வி என்ற கருத்திலேயே தெளிவில்லாமையால் எழுகின்ற தீராச் செயல்களே இவையெல்லாம் இந்தத் தெளிவில்லாமை யால் மனிதன் உள்ளமே தெளிவின்றிக் குழம்பிக் கிடக்கின்றது.

தெளிவு வந்தபோது குழப்பமில்லை. கலக்கிய நீரில் தான் மண்ணும் நீரும் குழம்பிக் கிடக்கின்றன. நீர் தெளிந்ததும் மண் மறைந்து போகவில்லை; அடியில் தங்கி விடுகின்றது.. நீர் மேலே தெளிந்து நிற்கின்றது. இன்று மனிதனது அறிவும் உணர்ச்சியும் செயற்பாடும் குழம்பிக் கிடக்கின்றன. இவை ஒன்று ஒன்றோடு சிக்கிப் போராடி கிடக்கின்றன. இவை மூன்றும் சம நிலையில் தெளிந்து நிற்கவேண்டும். அப்போது அவற்றில் எதுவும் கெடுவ தில்லை. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோரிடமுண்டு. இந்தச் சமநிலையாம் தெளிவில் அவை போற்றப்பெற்று நிறை மனிதனைத் தந்துதவுகின்றன.

அறிவினை வளர்ப்பதே கல்வி என்பர். ''மெய்ப் பொருள் காண்பது அறிவு'' என்றார் வள்ளுவர். இங்கே உணர்ச்சிக்கு அடிமையாதல் இல்லை. உண்மை அறி வினை உணர அனைத்தையும் துறக்கின்றான் ஞானி. ஆனால், 'அரம் போலும் கூரியரேனும் மரம் போல்வர் மக்கள் பண்பு இல்லாதவர்.' 'பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்.' இதனை அறியாத் கல்வி கல்வி

யன்று. 'உலகத்தோடொட்ட ஒழுகுதல் பல கற்றும் கல்லார் அறிவிலாதார்.'

அணுவை அளக்க அறிவோம்; பிளக்க அறிவோம். உலகத்தோடொட்ட ஒழுகும் ஒப்புரவு அன்புநிலை இல்லாததால் அணுக்குண்டைப் பிறர்மேல் போடப் போய் நம்மேலும் போட்டுக்கொள்ளும் நிலையில் புழுங்குகிறோம். இப்போது உள்ள உலகத்தின் நிலையை அறிந்தவர்போல் அல்லவா பேசுகிறார் வள்ளுவர்! நாம் அறிவு என்று பேசுவது வானத்தைக்கீறி வைகுந்தம் காட்டுவது மட்டும்தான் என நினைப்பதா? அது உணவும் வாழும் உறவும் அற்றதா?

இத்தகைய அறிவு நாம் விளக்கிவரும் கல்வி அறிவே ஆகும். பலகாலமாகவே நம் நாடும் இதனை மறந்துவிட்டது. மரத்தைப் பயனால் அறிக. அறிவை அறிவுடையோன் செயலால் அறிக. நூல்கள் அறிவுச் செல்வங்கள். செயலுக்கு உதவும் அவற்றைநம் உடைமையாக ஆக்கிக்கொள்ளுதல் கல்வியை எளிதில் வளர்ப்பதற்கு ஒரு சிறந்த வழியாகும். ஆனால் அந்த நூல்களை ஒரு முறைக்குப் பல முறை ஓதி உருப்போட்டு ஒப்புவித்தால் மட்டும் அந்த நூல்களை நமதாக்கிக்கொள்ள முடியுமா? ஓலையில் எழுதிய நூல்களை அப்படியே நம் தலைக்குள் புகுத்திக்கொள்வதால் அவை அறிவுச் செல்வங்களாகுமா? எழுத்தெண்ணிப் படித்தால் போதுமா? அந்த நூலை அச்சுக் கோக்கும் ஆளை அறிவன் என்போமா? ஒலிபெருக்கி வழியே நூல் நம் காதில் விழுமானால் அந்த ஒலிபெருக்கியை அறிவின் விளக்கம் என்போமா? வேதத்தையோ, திருமுறைகளையோ பொருளறியாது ஓதுவாரை என்னென்பது? வேதமே இத்தகையவரைத் தவளைகள் என எண்ணி நகையாடுகிறது. பொரு

ளறிந்தால் மட்டும் போதுமா? 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக' என்று கல்வி நம் நடத்தை யாக உருவாகுவதையன்றோ வற்புறுத்துகின்றார் வள்ளுவர் ?

அறிவு என்பது சொல்லையோ பொருளையோ அறிவது அன்று. பொருளிடையோ சொல்லிடையோ உலகத்தோடு அதற்கு உள்ளதொடர்பினை அறியவேண்டும். அப்போதுதான் அவற்றை உலகில் எந்த நிலையிலும் பயன் படுத்தும் செயல் நிலை ஆற்றல் வளரும். பெருக்கல் வாய்பாட்டை உருப்போட்டால் போதுமா? வாய்பாடு தெரிந்தும் நம் குழந்தைகள் பல கணக்கில் அதனைப் பயன்படுத்தாது அலைகின்றன. கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் எல்லாம் தெரிந்தும் பயனில்லை. குறிப்பிட்ட கணக்கில் உலகியல் நிலையில்—இவற்றில் எதனைப் பயன்படுத்துவது என்று அறியவேண்டும். அதுதான் கல்வியின் பயன்.

ஒரு குரங்கு எட்டுமளவில் உள்ள பழத்தை முதலில் பறித்துத் தின்றது. பழத்தை எட்டாத நிலையில் வைத்த போது அதன் கையில் கொடுத்திருந்த கம்புகொண்டு பழத்தை எட்டி உதிர்த்தது. மேலும் உயரமாகப் பழமிருந்தபோது அங்கே அமைத்திருந்த நாற்காலியின் மேலேறிக் கம்பு கொண்டு எட்டி உதிர்த்தது. மேலும் உயர்ந்தது பழம். தந்த இரண்டு கம்புகள் ஒன்றிற்குள் ஒன்று நுழையும் என்பதனை மெல்ல உணர்ந்து அவ்வாறு இணைத்து நீளமாக்கிக் கொண்டு நாற்காலிமேல் ஏறிப் பழத்தை உதிர்த்தது. ஜெர்மனியில் உள்ள பேராசிரியர் செய்து பார்த்த ஆராய்ச்சியில் கண்டது இது. இங்கெல்லாம் குரங்கு தன் அறிவை விளக்கியது எப்படி? புத்தம் புது நிலைகளுக்கு ஏற்ற புத்துணர்வைப் படைத்

துக்கொண்டு செயலாற்றியதேயாம். நாமும் நம் கல்வி யறிவால் இவ்வாறு தெளிவடைகின்ருேமா என்று காணுதல் வேண்டும். உலகம் அறிவின் பொருளை மறந்ததால் இந்தக் குரங்கினை எடுத்துக் காட்டி விளக்க வேண்டியதாயிற்று.

சங்கரரும் இராமானுசரும் பலபல நூல்களை உருப் போட்டு உள்ளார்கள். ஆனால் அவர்கள் தவளைபோல் கதருமல் அந்நூல்களின் கூற்றுக்களிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அண்டத்தில் வைத்துக் கண் டார்கள். அவற்றின் பயனுக இரு வேறு காட்சிகளைப் புத்தம் புதியனவாக உலகிற்கு வகைசெய்து தெளி வாக்கித் தந்தார்கள். இளம்பூரணர், சேனவரையர், நச்சினர்க்கினியர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர் களும் தாம் உருப்போட்ட நூல்களில் மூலை முடுக்குகளில் உள்ள துண்டு துணுக்குகளையெல்லாம் தத்தம் நோக்கத் திற்கேற்ப ஒன்ருகக் கண்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு காட்சியை உலகினுக்குத் தெளிவாகக் காட்டுகிருர்கள். இன்ருே அவர்கள் உரைகளை ஒப்புவிப்பதே அறிவு என்று தேர்வுகள் நடத்துகின்ருேம். இதுவா கல்வி? ஒப்பு விக்கும் ஆற்றலா கல்வி? சொல் ஆரவாரமா கல்வி ?

இந்த நிலை ஆங்கில மொழிவழியே கல்வி கற்பிக்கும் முறையானது நம் நாட்டில் வந்தபோது மேலும் சீர் கெட்டது. நம் நாட்டில் வளர்ந்துவந்த கல்வி நிலையின் முதிர்ச்சி என்றே இதனைக்கூற வேண்டும். அந்தப் பழைய நிலையில் பழகாதிருந்தால் இந்தப் புதிய நிலையில் புகுவது நமக்கு அருமையாக முடிந்திருக்கும். சொல்லை ஒப்பு விப்பதே கல்வி என்றபின் ஆங்கிலச் சொல்லை ஒப்பு விப்பதே கல்வியென்று நம்புவது எளிதாயிற்று. இங்கே பொருளை யறிவதே அருமையானபோது சொல்லையே

மந்திரம்போல ஒப்புவிக்கத் தொடங்கினர்கள். கல்வி நாவைத் தொட்டதேயன்றி உள்ளத்தைத் தொட வில்லை. தேர்வில் ஒப்புவித்தவுடன் அந்த நாவாற்றலும் மறைகிறது. உலகத்தோடு ஒட்ட ஒழுகும் கல்வியாக அது எவ்வாறு மலர முடியும்? பலபல நிலைகளிலும் கல்வி செயல்முறை அறிவாகப் பயன்படும் சூழ்நிலை நம் கல்லூரிகளில் உண்டா? ஆசிரியரும் மாணவரும் உடன் சேர்ந்து ஆராயும் முறையாகக் கல்விமுறை அமைந் துள்ளதா? ஆசிரியர்கள் கொடுங்கோல் மன்னர்கள். அவர்கள் கூறுவதை ஓர் எழுத்தும் மாற்ருமல் ஒப்பு விக்கும் மாணவனே இவர்கள் நடத்தும் தேர்வில் வெற்றிபெற முடியும். நாவில் தெளிவிருக்கலாம். உள் ளத்தில் இல்லை. ஆதலின் இது உள்ளத்தில் ஊறிச் செயலாக மலர்வது எங்கே? உள்ளத்தில் தெளிவு உண் டானல் அன்ருே உரையிலும் தெளிவு உண்டாகும்? இல்லையானல் உள்ளது ஒலிபெருக்கியின் தெளிவே யாகும்.

ஆதலின் உண்மைக் கல்வி—செயற்படும் கல்வி பரவ வேண்டுமானல் சொல்லாரவாரத்தில் ஈடுபடாமல் பொருளாழத்திலும் பொருள்களின் தொடர்பாழத் திலும் ஈடுபட வேண்டும். அப்போது உலகத்தோடு ஒட்ட ஒழுகும் அறிவு வளரும். அதற்கு மாணவன் உள்ளத்தைத் தொடும் மொழியில் அவன் கற்க வேண்டும் அல்லவா? தாய்மொழிக் கல்வியே உள்ளத் தைத் தொடும். அதுவே அவன் சிந்தனைக்கு ஊற்ருகும். தாய்மொழி வழிக் கல்வி வந்தாலன்றிச் சிந்தனைச் சிற்பிகள் வளரமாட்டார்கள். வெறும் சொற் சிற்பி களே வளருவார்கள். உள்ளத்தின் தெளிவு என்பது எது? தாய்மொழி வழியே உலகையும் உலகத் தொடர்பு களையும் கண்டு வளர்ந்து செயற்படும் தெளிவே அது.

அப்போது கல்வி உடலில் ஊறியது போலாகிறது. ஆம்; இந்தத் தெளிவே வள்ளுவர் கூறும் கல்வியின் பயன். இத்தகைய கல்வியானது மொழி எல்லையையும் இன எல்லையையும் தாண்டி உலகை வளர்க்கும். 'யாதானும் நாடாமால் ஊராமால் என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு?' இதனைக் கற்பியாதபோது இனப்பூசலும், பிரிவினைப் பூசலும் எழாதிருக்குமா ?

ஏன்? எது? எப்படி?

செடியைப் பாத்தி கட்டி வளர்க்கின்ருேம். இளமையில் அது தானுகத் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்வதற்கு இல்லை. ஆனுல் வளர்ந்த பின்னர் மரத்திற்குப் பாத்தி கட்டுவார் யார்? அது தானுக உலகச் சூழ்நிலைக்கு ஈடுகொடுக்கும் ஆற்றல் பெற்று விடுகிறது. கல்வி நிலையங்கள் இத்தகைய பாத்தி போன்றன. வாழ்க்கையின் எல்லா நிலையிலும் ஈடு கொடுக்கவேண்டிக் குழந்தைகளின் ஆற்றல் முழுவதும் கேடின்றி விளங்கி ஓங்க அமைக்கும் பாத்திகளே கல்வி நிலையங்கள்.

இன்று உலகம் மிக விரைவில் மாறிக்கொண்டு வருகின்றது. நான் கல்லூரியில் கற்ற கல்வியை எண்ணிப் பார்க்கிறேன். ஆனுல் இன்று இதற்குள் வளர்ந்துள்ள விஞ்ஞானத்தையும், வரலாற்றையும் ஒப்பு நோக்குகின்றேன்; தலை கிறுகிறுத்துப் போகின்றது. இந்த நிலையில் பெட்டியில் பொருள்களை அடைத்தோ அடுக்கியோ வைப்பதுபோலக் குழந்தைகளின் மூளையில் இவற்றைத் துருத்தி வைத்தால் மட்டும் போதுமா? இக்காலத்தில் ஐந்தாண்டுக்குள் கற்றது கைமண்ணளவாகப் போகிறது. அப்படியாஞல் பழைய கல்வி கொண்டு புதிது புதிதாகப் பூத்துவரும் அறிவுலகில்

வாழ்வது எப்படி? இந்தக் கேள்வி, கல்வியின் எல்லாத் துறைகளிலும் எழுகிறது. இந்தக் கேள்விக்கு விடை காண முடியாதபோது பாத்தியே பயிரை மேய்ந்த கதையாக முடிகிறது. படிப்பினுல் என்ன பயன் என்று எல்லோரும் கேட்கின்றனர். வானவெளிப் பயணத்தைப் பற்றி வெளியில் கேட்டுவரும் மாணவனும் நம் பழம் பசலிப் படிப்பைக் கண்டு எள்ளி நகையாடுகின்ருன். முதல் வகுப்பிலிருந்து ஆராய்ச்சி நிலையங்கள்வரை இந்த இகழ்ச்சிக் காட்சியைக் காணலாம்.

விஞ்ஞானம் மாறுகிறது; சமுதாயம் மாறுகிறது; வரலாற்று நோக்கு மாறுகிறது; வாழ்க்கையின் போக்கு மாறுகிறது; பொருளாதார நிலை மாறுகிறது; அரசியல் குறிக்கோள் மாறுகிறது. பழக்கம் மாறுகிறது; வழக்கம் மாறுகிறது; சட்டம் மாறுகிறது. ஆனுல் நம் கல்வி முறை மட்டும் மாருதிருக்கின்றது. இந்தப் பாத்தியில் வளரும் செடி எவ்வாறு பின்னர் விரைந்து வீசி அலைக் கழிக்கும் காற்றிற்கு ஈடுகொடுக்க முடியும்? இந்த நிலைக்கேற்ற கல்விமுறையும் நம் நாட்டில் உருவாதல் வேண்டும். உருப்போட்டு ஒப்புவிக்கும் கல்வி ஓராண்டுக்குள் செல்லாத காசாகிவிடும்.

கற்கவேண்டுவனவோ பலப்பல. அவையோ மேலும் மேலும் ஓங்கி வளர்வன. இந்த உண்மையை உணர வேண்டும். எல்லாவற்றையும் உருப்போட்டுப் பயனில்லை அடிப்படையை ஆழ அகல அறிந்துகொள்ள வழிவகை செய்தல்வேண்டும். அப்போது அங்கெழும் பிற எல்லாம் தானுக விளங்கிவிடும். இலையையும் பூவையும் கொப்பையும் கிளையையும் எண்ணிக்கொண்டிருந்து பயனில்லை. அதன் அடிமரத்தையும், ஆணிவேரையும் அவற்றிலிருந்து தோன்றுகின்ற அடிப்படை உண்மையையும்

ஒருங்குவைத்து உணர்தல் வேண்டும். ஆராய்ச்சியினால், புதுநிறப் பூக்களும், புதுவகை இலைகளும், கிளைகளும் தோன்றும் என்று எதிர்பார்க்கும் மனம் அந்த அடிப் படையில் வளர்ந்து விடுகின்றது.

எனவே, கற்க வேண்டியவற்றின் அடிப்படையை உலகச் சூழ்நிலையோடு ஒட்டி உணர்வதோடுமட்டும் கல்வி அமைதியடையாது. இன்றிருக்கும் நிலையைவிட்டு முழுதும் வேறாக மிக விரைந்து புதிய வளர்ச்சிகள் இந்த அடிப்படையில் தோன்றலாம் என்ற எண்ணம் மாணவர் உள்ளத்திலே நிலைத்துவிடவேண்டும். அத்தகைய மாற்றத்தை எதிர்பார்ப்பதோடு நில்லாமல் உலகிற்கு உதவும் வகையில் மனிதனால் அதனை ஊக்குவிக்க முடியும் என்றும் ஆதலின் தானும் அந்த வகையில் முயலுதல் வேண்டும் என்றும் முந்துகின்ற ஆராய்ச்சி மனப் பான்மை மாணவனுக்குத் தோன்றவேண்டும்.

முன்னர் மாட்டு வண்டி ஓட்டக் கற்றுக்கொண்டால் மட்டும் போதும் என்று நாட்டுப்புறத்தான் நினைத்தானா? குதிரை வண்டி வந்தால் அதனையும் ஓட்டக்கூடும் என்ற மனப்பான்மையோடு அவன் ஓங்கவில்லையா; ஓட்ட வில்லையா? மண்ணெண்ணெய் கொண்டு உந்து வண்டிகளை ஓட்டத் தெரிந்தால் போதுமா? அணுச் சக்தியால் ஓடும் வண்டி வந்துவிடக்கூடும். ஆதலால் அதனையும் ஓட்டுவதோடு அத்தகைய வண்டியைப் புதிதாக அமைக்கவோ திருத்தஞ் செய்யவோ சிறிது முயன்றால் நமக்கும் ஆற்றல் வரும் என்ற உறுதி நம் மக்கள் உள்ளத்தில் வளரவேண்டாமா?

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது, ''என்ன கற்பது?'' என்பதைவிட ''எப்படிக் கற்பிப்பது'' என்று ஆராயும் முறையே சிறந்ததாகத் தோன்றும்.

''கல்வி ஏன்?'' என்ற கேள்வியைச் சிறிது நினைத்துப் பார்த்தால் இந்த உண்மை புலனாகும். அவ்வாறே விஞ்ஞானத்தைவிட விஞ்ஞான மனப்பான்மை, வரலாற்றைவிட வரலாற்று மனப்பான்மை, இலக்கியத்தைவிட இலக்கிய உள்ளம்—இவையே இன்றியமையாதன என்பதும் விளங்கும்.

''இன்று என்ன கற்பிப்பது?'' என்பதையே எண்ணி நம்முடைய பாடத்திட்டங்கள் உருவாகின்றன. ''யார் கற்கின்றார்கள்?'' என்பதையே மறந்துவிடுகிறோம். இந்தப் பாடத்திட்டத்தை இந்த ஆண்டுக்குள் முடிக்க வேண்டும் என்ற நெருக்கடியையே எங்கும் காண்கின்றோம். மாணவன் கற்கின்றானா அல்லது 'வால் மட்டும்தான் நுழைந்தது' என்று கூறுகின்றானா? அவன் பாடத்தில் ஈடுபடுகின்றானா? அதில் ஓர் இன்பம் கொள்கின்றானா? இன்பம் கொண்டாலும் மேலும் அயர்ச்சியின்றி உழைக்க முடியுமா? கற்றதை வாந்தி எடுக்காமல் அவனுடைய அறிவில் ஊறி வளரவிட்டுத் தனதாக்கிக் கொள்கின்றானா? மேலும் மேலும் அதில் எழக்கூடிய வளர்ச்சிகளை எல்லாம் கண்டு திகைத்துவிடாமல் இன்பத்துடன் எதிர்பார்த்து ஈடுபட்டு உணர முந்துகிறானா? அவன் கற்கும்போது பட்டினி கிடக்கின்றானா? நோய் வாய்ப்பட்டு வருந்துகின்றானா? மந்தைபோல் அடைபட்டு மனித நிலைமையை இழந்துவிடுகின்றானா? அவனுடைய மனித உள்ளத்தைத் திறந்து வைத்துத் தூய காற்றும் தூய ஒளியும் அங்கே வீச முயல்கின்றோமா? படிப்பே ஒரு நோயாய் முடியாதபடி காக்கின்றோமா? இத்தகைய பலப்பல கேள்விகள் இப்பாடத்திட்ட அமைப்பால் நம் உள்ளத்தில் எழுவதே காணோம். நாம் என்னதான் கற்பித்தாலும் அதனைக் கற்பவன் வேறே ஒருவன் இருக்கின்றான் என்பதை மறந்து

போகின்றோம். அழுதாலும் பிள்ளை அவள்தானே பெற வேண்டும் என்பதுகூட விளங்கவில்லை. காலையிலிருந்து மாலைவரை ஆசிரியரே பேசிக்கொண்டு போகிறார். ஐந்து நாள் போதாதென்று ஆறுநாளும் பேசுகிறார். கடிகார முள்ளில் மாணவனைக் குத்திவிட்டுக் கடிகார ஓட்டத்தோடு அவனை ஓடவிட்டு வேடிக்கை பார்ப்பது தான் இன்றைய கல்வி.

குழந்தை வளரவேண்டும் என்ற நோக்கத்தால் ஒவ்வொரு இமைப்போதும் குழந்தைக்கு ஓய்வின்றிப் பகலெல்லாம் பாலூட்டிவிடும் தாயைப்பற்றி என்ன எண்ணுவது? அளவின்றி வயிறு கொள்ளுமா? அளவின்றி உள்ளந்தான் கொள்ளுமா? உண்டது உடலில் ஒட்டப் பொழுது வேண்டாமா? கேட்டது உள்ளத்தில் ஒட்டப் பொழுது வேண்டாமா? பசிக்கவில்லை என்று சொன்னால் ஏமாற்றமோ, பொய்யுணர்வோ இல்லாதபோது உணவைத் துருத்துவாரில்லை. வயிற்றுக்கு ஒரு நீதி, மனத்திற்கு ஒரு நீதியா?

அறிவுப்பசி என்பது ஒன்றுண்டு என்பதை அறிய முடியாதபடி செய்துவிடுகின்றோம். அது பெற்றோர் களால் எழும் பெருங்கொடுமை. குழந்தை இந்த அறிவுப் பசியால் ''இது என்ன? அது என்ன?'' என்று தொடர்ந்து கேட்டுவருகிறது. தாய்க்கோ அறிவில்லை; தந்தைக்கோ அமைதியில்லை. அதைப் புறக்கணித்தோ, வெருட்டி உருட்டியோ, வேறு போக்குக் காட்டியோ, பச்சைப் பொய்யை உரைத்தோ, பசியெடுக்கும் வயிற்றில் அறைந்து விடுகின்றார்கள். பின் என்ன நிகழும்? தெனாலிராமன் பூனையின் கதைதான்.

சோறு வழங்கத் தண்ணீர்ப் பந்தல் அமைத்துப் பயனென்ன? பசியெடுக்க வேண்டாமா? பசியெடுக்

கின்றதே என்று சொல்ல உரிமை வேண்டாமா? அந்தப் பசியறிந்து வாய்க்கு உணவாக வயிறு கொள்ளக் கூடியதை அன்றோ தரவேண்டும்?

மாணவன் நிலையிலிருந்து கல்வியைக் காண்பது இந்த இக்கட்டை எல்லாம் தீர்த்துவிடும். இளைஞனே இந்த நாட்டு எதிர்காலச் செல்வம்; எதிர்காலக் குடியரசன் அந்தக் குடியரசு வாழ வழிவகை செய்யும் கடமை நமக்குண்டு. அதை உரிமை என்றும் அழகாகப் பேசலாம். ஆனால் அந்த உரிமை அந்த இளைஞர்களை நோக்காது நம்முடைய பெருமையையே எண்ணுவதாக முடிதல் ஆகாது. அவர்களுக்கென்றே எழுந்த அற நிலையத்தைப் பாதுகாக்கும் அளவே நமக்குக் கடமையும் உரிமையும் உண்டு.

பாடத்திட்டத்தை மறந்து மாணவர் உள்ளத்தின் வளர்ச்சியை மனத்தில் கொண்டால் இச்சிக்கல் எல்லாம் தீரும். கட்டடமும், நாற்காலியும், நூல்களுமே கல்வி என்ற மயக்கம் ஒழியும். நம்முடைய உள்ளத்தோடு மாணவர்களுடைய உள்ளம் அறிவு நிலையில் உறவாடி அங்கே ஒற்றுமைகொண்டு நம்மறிவு அவன் அறிவாக, அந்த அறிவு மேலும் மேலும் வளர்ந்துகொண்டேபோக, அந்த இன்பத்தோடு ஆசிரியனும் மாணவனும் சமுதாயத்தில் ஈடுபட்டு உழைக்கின்ற அன்புக் காட்சியே கல்வியாம். இந்த உறவில்தான் அமைதி உண்டு; ஒழுங்கு உண்டு; இதனைப் புறக்கணிக்கும்போது ஒழுங்கேது? சட்டத் திட்டங்கள் எங்கே? உள்ளே உள்ளம் வெடித்து நின்றாலும் மேலுக்கு அமைதிபோல் காட்டிக்கொண்டு, மனம் எரிந்து, சிலுவையில் அறைபட்டாற்போல அசையாது ஆடாது நாற்காலியால் ஒட்டிக் கிடக்கும் மாணவர்களைக் கண்டு ஒழுங்குமுறை நிலைநாட்டி விட்டோம் என்று நாம் கனவு காணமுடியுமா?

இத்தகைய பொய் உலகில் நாம் விளைவிப்பது சமுதாயக் குழப்பமேயாம். பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் ஆரவாரங்கள் எழுவதெல்லாம் இதன் விளைவு என்று உலகம் உணர்தல் வேண்டும்.

இந்த மனித உறவை மறந்து விடுவதால் கல்வி என்பதே சமுதாய வளர்ச்சி என்பதை மறந்துவிடுகிறோம். ஏட்டுச்சுரைக்காய் என்கிற பழமொழியும் எழுகிறது. உலகத்திற்கு ஈடு கொடுக்க அல்லவா பள்ளிக்கூடம் என்ற பாத்தி அமைகிறது. அதனை மறந்து பாத்தி கட்டி என்ன பயன்? மாறிவரும் சமுதாயத்தில் உண்மை நிலையை அறிந்து தன் அன்பும், அறமும், அறிவும், ஆற்றலும் அந்தச் சமுதாயத்திற்குப் பயன் படும் வகையில் அதனை மேலும் திருத்தி முன்னேறச் செய்து, முடிவிலாத நிறைவான இன்ப உலகைப் படைப் பதற்கன்றோ கல்வி என ஒன்று வேண்டப்படுகின்றது. குடிமைப்பயிற்சி, சமுதாயத்தொண்டு என்று தனித் தனியே பேசினல் மட்டும் போதுமா? மாணவன் கற்பன எல்லாம் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் பூத்துக் காய்த்து இனிப்பதை, கூடிய அளவு அவன் கற்கும் போதே அவன் அறிந்து இன்புற வேண்டாமா?

எனவே, ''கல்வி ஏன்?'' என்ற கேள்வியை நினைத்துப் பார்க்கவேண்டும்; அது வானத்தைக் கீறி வைகுண்டத் தைக் காட்டும் வழி மட்டும் அன்று; கூரை ஏறிக் கோழி பிடிக்கும் வழியும் ஆம்.

தனி ஆளா? சமுதாயமா?

கல்வி இன்றைய உலகில் சிறந்த இடத்தைப்பெறு கிறது. ''ஒரு சிலருக்குத்தான் கல்வி'' என்பது போக, ''எல்லோருக்கும் கல்வி வேண்டும்'' என்கிற எண் ணத்தை உலகம் ஒப்புக்கொண்டு விட்டது. கல்வி என்ற போது இருவகை நோக்கங்கள் நம் நினைவுக்கு வரு கின்றன. ஒன்று சமுதாய நோக்கு; ஒன்று கல்வி கற்போரின் நோக்கு.

கல்வி என்பதன் அடிச்சொல் 'கல்' என்பது ஆம். 'கல்' என்ற பெயர்ச்சொல்லிற்கும் இதற்கும் தொடர்பு உண்டா என்பது விளங்கவில்லை. ஆனால் இப்போது ஒரு தொடர்பு காட்டி விளக்கக் கூடும். கல்லைக் கல்லி எடுத்துச் சிற்பி அதனைச் சிறந்த உயிர்த்துடிப்புள்ள வடிவ மாக மாற்றி அமைப்பதுபோலக் கல்வியும் ஒவ்வொரு மனிதனுக்கும் சிறந்த வடிவம் கொடுத்து உயர்த்தி விடு கிறது எனலாம். ஆனால் உள்ளதுதானே வெளிவரும். கல்லில் நார் உரிக்க முடியாது. எனவே மக்கள் இடத்தி லேயும் இயல்பாக உள்ளடங்கிக் கிடக்கும் ஆற்றலை முழு நிறைவாக வளர்ந்து ஓங்குமாறு வழிவகை செய்வதே கல்வி எனலாம். 'Education' என்ற சொல்லிற்கும் இவ்வாறு பொருள் கூறலாம். ஒவ்வொருவருள்ளேயும் கடவுள் விளங்குவதால் அந்தக் கடவுள் நிலை மனித

னுக்குள் உள்ளடங்கி இருப்பதை வெளியிட்டு ஓங்குமாறு உதவுவதே கல்வி என்று நம்முடைய நாட்டினர் கொண்டனர் என விவேகானந்தர் வற்புறுத்துவர். எனவே, தனி மனிதனுடைய நோக்கத்திலிருந்து அவனுடைய ஆளுமை முழுதும் நிறைவு பெறுவதற்கு ஒரு வழியே கல்வி எனலாம்.

தனிமனிதன் தனித்து வாழ முடியாது. ஆகையால் சமுதாய அறத்திற்கும் கல்வி இன்றியமையாதது ஆம். திருவள்ளுவரும் சமுதாய நெறி கூறும் பொருட்பாலில் கல்வியைப்பற்றிப் பேசுகிருர். எனவே, மனிதன் சமுதாயத்தில் வாழும் உயிர் வகையாதலின் சமுதாயத்திற்கு ஏற்ப அவனுடைய ஆளுமை நிறைவு பெறுதல் வேண்டும். 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்ற தனி மனிதனது அறமும் சமுதாய அறமாக முடிகிறது. முன்னெல்லாம் கல்வி இந்தச் சமுதாய நோக்கத்தையே அடிப்படையாகக் கொண்டு விளங்கியது. சமுதாயத்தின் பழக்க வழக்கங்களை அறிவது, சமுதாயத்தின் கொள்கைகளை அறிவது, பேச்சினை அறிவது, சமுதாயத்தின் உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய நூல்களை அறிவது, சமுதாயத்திற்கு வேண்டிய கடமைகளை அறிவுலகிலும் செயல் உலகிலும் செய்து வருவதற்கு ஏற்ப ஒவ்வொரு மனிதனும் தன்னை திருத்திக் கொள்வது—இவை எல்லாமே கல்வி எனப் பழங்காலத்தில் இருந்த மக்கள் கருதி வந்தார்கள்.

நாடு நகரங்களில் மக்கள் நிலையாக வாழவந்தபோது பொதுவாகப் பழமையிலேயே ஊன்றி நின்ருர்கள். பழமை மறைந்தாலும் புதுமை தோன்றினுலும் அவர்களுக்கு ஒரு நடுக்கம்; ஒரு திடுக்கீடு. அவ்வாறு பழமையையே கண்டு களித்து மாருது வரும் உலக நிலையில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் கல்வித் திட்

டமும் அந்தந்த நாட்டிற்கு ஏற்ப, அந்தந்த நாட்டில் நடைபெறும் அந்தந்தத் தொழிலுக்கு ஏற்ப வளர்ந்து வந்தது. இங்கே புரட்சி என்ற பேச்சிற்கு இடமில்லே.

இந்த நிலே சிறிது சிறிது ஆக மாறியபொழுதும் சமுதாயத்திற்கு ஏற்பவே மனிதனே உருவாக்கிஞர்கள். அவன் இயல்பிற்கு மாருக அவ்வுருவம் இருந்தாலும் சரி, அப்படியே தாம் கருதியபடி உருவாக்கி விட வேண்டும் என்று சமுதாயம் விரும்பியது; இன்றும் விரும்புகிறது. அரசியலே கல்வியை நிலே நாட்ட வேண்டும் என்ற கட்டாயம் ஏற்பட்டுள்ளது. தனி மனிதன் கூடிச் செய்ய முடியாத அளவிற்குக் கல்வியின் பலவகையான நோக்கும் வளர்ந்து உள்ளது. முன் எல்லாம் பிற நாடுகளே அடக்கி ஆண்டவர்கள் தங்கள் துரைத்தனத்திற்கு வேண்டிய ஆட்களே உருவாக்கு வதற்கு என்றே கல்வித்தொண்டில் ஈடுபட்டுள்ளார்கள். இன்றும் பல நாடுகளில் தங்கள் அரசியல் நோக்கிற்கு ஏற்பக் கல்வியினேயும் மாணவர்களேயும் உருவாக்குகின் றனர். எதிர்ப்பு ஒன்றும் எழாதபடி அம்மாணவர்களே எந்திரத்தில் வைத்து ஒரே நிலேயில் அரைப்பதுபோல அரைத்து உருவாக்கி வருகின்ருர்கள். எல்லோரும் அங்கே ஒரேவகைதான்.

சமுதாயத்தை மறக்கக்கூடாதாஞலும் ஆளு மையை அடியோடு சமுதாயத்திற்குப் பலி கொடுக்க முடியாது. ஆளுமை வளராதபோது மக்களே மக்கள் என்று எவ்வாறு கூறுவது? அடிமைக் கூட்டமும், ஆமாம் பூசாரிக் கூட்டமும் உலகை வாழ வைக்க முடி யாது. சமுதாயம் முழுவதிலும் உள்ளவர் எல்லாம் முழுநிலே பெற்றவர்கள் ஆஞல் சமுதாயம் எவ்வளவு சிறக்கும் ? மாறிக்கொண்டே வருகிற இன்றைய முன் னேற்ற உலகில் மக்களே ஒரே நிலேயில் உருவாக்கிப்

பயன் இல்லை. மாறக்கூடிய நிலைக்கு எல்லாம் ஈடு கொடுக்கக்கூடிய நிலையில் மட்டும் வளர்த்தால் போதாது; மக்கள் வாழ்விற்குச் சிறப்பு எனத்தோன்றும் வகையில் எல்லாம் உலகத்தை மாற்றுவதற்கும் ஆற்றல் பெற்றவர்களாக மாணவர்களை வளர்த்துவிடவேண்டும்.

எனினும் சமுதாய நலனை மறக்க முடியாது. பண்பாடு என்பது சமுதாயத்தின் முழுநிறைவான விளக்கம் அல்லவா? மனிதன் என்ற இனம், இயற்கையில் வளர்ந்து உருவாகும்வரை இயற்கை பின்பற்றிய முறைவேறு. அது உயிர் வகைகளின் உடல் உறுப்பு அமைப்பில் மட்டும் முன்னேற்றம் விளைவித்து வந்தது. மனிதனை உருவாக்கியபின் அந்த முறை பயனற்றுப் போய்விட்டது.

மனித சமுதாயம் எத்தனையோ உண்மைகளைக் கண்டு எத்தனையோ வகைகளில் செயல்பட்டு வருகிறது. அந்த முன்னேற்றம் எல்லாம் உடல் உறுப்பு வகையாக மனிதப் பிறப்பில் அமைவது இல்லை. பின் அவற்றை நாம் பெறுவது எப்படி? அந்த முன்னேற்றம் எல்லாம் பண்பாட்டின் வளர்ச்சியாகிச் சமுதாயத்தின் அடிப்படையாக விளங்குகிறது. ஒவ்வொரு குழந்தையும் தான் பிறக்கும் சமுதாயத்தில் வாழ்ந்து வரும்போது எல்லை இல்லாத அந்தப் பண்பாட்டை எல்லாம் தனதாக்கிக் கொண்டு மேலே ஓங்குகிறது. எனவே சமுதாயத்தை விட்டால் மனித வளர்ச்சி என்பதே இல்லாது போய் விடும். நாம் பேசுகின்ற பேச்சும் சமுதாய நிலையம் தானே. அந்தப் பேச்சு வழியாகத்தானே எல்லாவற்றையும் உணர வருகின்றோம். அந்தப் பேச்சுத்தானே நம் உள்ளத்தையெல்லாம் இழுத்துக் கட்டிவைக்கின்றது. எனவே சமுதாயத்தோடு தனி மனிதன் ஒன்றுக வாழ வேண்டும்.

ஆனால் மாறி வருகின்ற உலகத்தில் தேங்கி நிற்க முடியாது. சமுதாயம் முன்னேற வேண்டுமானால் பழைய தீமைகள், முட்டுக்கட்டைகள் முதலியன எல்லாம் ஒழியவேண்டும். மேலும் எந்த வகையில் எல்லாம் உலகம் முன்னேறினால் உலகம் அனைத்திற்கும் நன்மை வரும் எனக் கருதி மாற்றம் கண்டு புதுமைக் காகவும் உழைக்க வேண்டியவர்கள் யார்? அதிலுள்ள ஒவ்வொரு மனிதனுமே ஆம். ஆனால் பழமையை அடியோடு விட்டுவிட முடியாது. பழமை என்ற கடைகாலின் மேல்தான் நாம் நிற்கின்றோம். ஆனால் தலை மேலே விழப்போற்ற நிலையில் உள்ள பழங்கோபுரங்களைத் திருத்த முடியாதபோதும் பழமை கருதி வைத்துக் கொண்டு அதற்குத் தனி மனிதர்களும் சமுதாயமும் பலியாகமுடியாது. அத்தகைய பழமையைத் தகர்த்து எறிய வேண்டும்; புதியன படைத்து மேலே ஏறவேண்டும். புதுமைக்கு என்றே புதுமையை விரும்புவது ஒரு மூளைக் கோளாறு; பழமைக்கு என்று பழமையை விரும்புவதும் மற்றொரு மூளைக்கோளாறு.

பழமை என்றும் புதுமை என்றும் பாராது உலகத்திற்கு நல்லது எது என்றே கருதி அதற்கு உதவும் பழமையையும் புதுமையையும் வரவேற்று முன்னேற வேண்டும். இவ்வாறு சமுதாயத்தையும் தனிமனிதன் ஆளுமையையும் முழு நிறைவாக வளர்ப்பதற்கு வழி கோலுவதே கல்வி எனலாம்.

10918
T
N65

திருவள்ளுவரும் இந்நாளைய கல்விக் கொள்கையும்

குறளின் புதுமை

திருவள்ளுவர் காலத்தைக் கடந்த ஞானி. அவருடைய திருக்குறள் மிகப் பழையது என்றாலும் இன்றைய புது உலகில் புத்தம் புதியதாக எழுதிய ஒன்று போலத் தோன்றுகிறது. இதற்குச் சான்றாகக் கல்வியைப்பற்றி அவர் கூறியிருப்பதை எடுத்துக் கொள்ளலாம்.

விலங்கொடு மக்கள்

கல்வி என்பது பொருட்பாலில் வருகிற இரண்டாம் அதிகாரத்தின் தலைப்பு. பொருட்பால் அரசியலைப் பற்றிக் கூறுகிறது. அதன் முதலதிகாரம் இதனைத் தெளிவாக்குகிறது. அந்த அதிகாரம் இறைமாட்சியைப் பற்றியது. அரசன் அரசியலுக்கேற்ற நூல்களைக் கற்றிருக்கவேண்டும். அத்தகைய நூல்கள் என்ன என்ன? இந்தக் கேள்வியைப் பற்றிப் பிற அரசியல் நூல்கள் நெடுக ஆராய்கின்றன. "நீதி நூல் கற்பதா? அறநூல் கற்பதா? தண்டனையைப்பற்றிக் கற்பதா? பொருள் வருவாயைப் பற்றிக் கற்பதா?" என்று

ஆராய்ந்து ஒவ்வொருவர் ஒவ்வொருவகையாக முடிவு கூறியிருக்கப் பார்க்கிறோம். ஆனால் வள்ளுவர் அப்படிப் பட்ட ஆராய்ச்சியில் நுழையவில்லை. அரசனும் மனிதன். அந்த அடிப்படையில் பிற மனிதர்போல அவனும் கற்க வேண்டும் என முடிவு கட்டுகிறார். கற்றவன்தான் மனிதன்; கல்லாத பிறப்பு விலங்கின் பிறப்பே. இது தான் வள்ளுவரின் முடிவு.

புகையைப் பார்க்கிறோம். அந்த அறிகுறியால் நெருப்பு உண்டென்று அறிகிறோம். சில போது இப் படிப் புகையும் நெருப்பும் போல எப்பொழுதும் தொடர்ந்து நிகழாதவையும் அறிகுறியாகலாம். ஒரு நாயின் முன்னே உணவை வைத்தால் அதன் வாயில் நீர் ஊறும். ஆனால் உணவு வருவதற்கு முன்னே எப் பொழுதும் மணியடிப்பதைக் கேட்டுப்பழகிய அந்த நாய் மணியடித்ததும் நாவில் நீரூறி நிற்கிறது. அஃதாவது மணியடிப்பதை உணவு வருவதன் • அறிகுறியாகக் கொள்கிறது. இந்த அளவுக்கு விலங்குகளுக்கும் அறி வுண்டு. இதனை மனத்திற்கொண்டு அவற்றைப் பழக்க லாம். ஆனால் மனிதனே ஒரு தொடர்பு இல்லாத வற்றையும் அறிகுறிகளாகக் கொள்கிறான். இதனை அடையாளமென ஒரு குறித்த பொருளில் வழங்குவோ மாக. ஒரு யானையின் விலை 'எக்ஸ்' என்று வைத்துக் கொள்வோம் என்று நாம் கணக்குப் போடவில்லையா? எக்ஸுக்கும் யானைக்கும் என்ன தொடர்பு உண்டு? இப்படியே நாம் பயன்படுத்துகிற ஒவ்வொரு சொல்லும் அடையாளங்களே யன்றி அறிகுறிகளல்ல.

ஒரு பொருளைத் தமிழன் 'நீர்' என்கிறான்; ஆங்கி லேயன்'வாட்டர்' என்கிறான்; இந்தி பேசுபவன் 'பானி' என்கிறான்; பிரெஞ்சுக்காரன் 'லோ' என்கிறான். இவை அந்தந்த மொழியில் அவரவர்கள் ஆக்கிக்கொண்ட

அடையாளங்கள். நீரென்ற பொருளுக்கும் அச்சொற் களுக்கும் ஒருவகைத் தொடர்பும் இல்லை. ஆனால் நாளடைவில் அந்தந்தப் பேச்சில் அவையவை அறிகுறிகள் போலமைந்துவிட்டன.

இந்த ஆக்க நிலையை ஊன்றிப் பார்க்க வேண்டும். இங்கே ஒலியே பொருளைக் குறிக்கிறது. இப்படி ஒவ்வொரு பொருளையும் குறிக்க வெவ்வேறு தனித்தனி ஒலிகளை அமைப்பதென்றால் கோடிக் கணக்கான ஒலிகள் வேண்டும். எனவே, இன்னொரு செயற்கைநிலை இங்கே விளைகிறது. ஒரு சில ஒலிகளை வைத்துக்கொண்டு அவற்றைப் பலவகையாகக் கட்டியமைத்துப் பொருள் தரும் பல சொற்களை அமைக்க முடியும்.

ஒரு பொருளுக்கு ஒரு சொல் என்று படைத்து அமைப்பது ஓர் ஆக்கப்பாடு. இதைத்தான் சொல்லதிகாரம் விளக்குகிறது.

தனித் தனியாகப் பொருளில்லாத ஒலிகளில் சிலவற்றை மட்டும் எடுத்து அவற்றைப் பலவகையாகக் கூட்டி மொழியிலுள்ள சொற்களையெல்லாம் அமைப்பது மற்றோர் ஆக்கப்பாடு. இதனை எழுத்ததிகாரம் விளக்குகிறது.

எனவே, நம்முடைய பேச்சில் எழுத்து நிலை, சொல் நிலை என இரண்டுண்டு. இப்படிப்பட்ட அடையாளங்களைப் படைத்துக் கொள்வது விலங்குகளுக்கு முடியாது. ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்த சூழ் நிலையில் வழங்கும் மொழியினைக் கற்றுக் கொள்கிறான். எழுத்தாகவும் சொல்லாகவும் அமைந்த இதனை அறிவதே மனிதன் பெருமை. இல்லையானால் அவன் ஒரு விலங்கே! அரசனும் இப்படித்தானே கற்கவேண்டும்.

ஆனால் கல்வி என்பது நம்மிடையே பேச்சுமொழியோடு நில்லாமல் நூல்களையும் கற்பதாக அமைகிறது. மீனாய், பறவையாய், விலங்காய், மனிதனாய் வந்த பரிணாமம் (Evolution) ஒன்றுண்டு. உடலமைப்பினை ஒட்டிய பரிணாமம் இது. ஆனால் மனிதனுனபின் எந்த வகையில் பரிணாமம் நிகழ்கிறது? மனிதன் கூட்டமாகக் கூடி வாழ்பவன். தலைமுறை தலைமுறையாக மனித சமுதாயம் உலகிடையே வாழ்ந்து வருகிறது; பெரிய பெரிய உண்மைகளைக் கண்டு வருகிறது. அவ்வாறு கண்ட உண்மைகளுக்கு ஏற்பச் செயல்படுகிறது. இவ்வாறு உலகத்தோடு ஒட்ட ஒழுகும் நிலையில் எதிர்ப்பையெல்லாம் கண்டு ஈடுகொடுத்து மாறி வெற்றி பெறுகிறது.

இவ்வாறு ஒரு தலைமுறை கண்ட வெற்றி அடுத்துவரும் தலைமுறையிலும் படிகிறது. பிற விலங்கு, பறவை முதலியவையிடத்திலோ உடல் வகையாகவே இந்த வெற்றியின் போக்குப் படிந்துவிடும். ஆனால் அப்படிப்பட்ட உடல் மாற்றம் மனிதனது நரம்பு அமைப்பிலோ, உறுப்பமைப்பிலோ நிகழக்காணோம். தேனீக்கள் தாம் கண்ட தேன் பல கிலோமீட்டர் தூரத்தில் இருப்பதைத் தெரிந்து வந்ததும் பிற தேனீக்களுக்கு வளைந்தும், கோணியும், கூத்தாடிக் காட்டிவிடுகின்றன. இந்தக் கூத்தை எந்தத் தேனீயும் கற்றுக்கொள்வதில்லை. அஃது இயல்பூக்கம் என அதனுடலில் இயற்கையாக அமைந்துள்ளது. ஆனால் நமக்கோ அப்படியில்லை. நியூட்டன் கண்ட இயக்கச் சட்டத்தையோ, திருக்குறளையோ, சைக்கிள் ஓட்டுவதையோ நம் முன் தலைமுறை அறிந்திருந்தாலும் நாம் அவற்றை இயல்பூக்கமாக நம் உடலில் இயற்கையமைப்பில் பெறுவதில்லை.

இங்கேதான் மற்ருெரு பரிணும வகை எழுகிறது எனலாம். சமுதாயத்தில் வாழும்போது அந்தச் சமுதாயம் அதுவரையில் அறிந்தவற்றை நாமும் அறிகிருேம். மேலும் நாம் புதியனவாகப் பலவற்றை அறிகிருேம். இவ்வாறு எல்லையில்லாத ஒரு வளர்ச்சி மனித சமுதாயத்தில்தான் எழுகிறது. பத்தொன்பதாவது நூற்ருண்டில் வாழ்ந்தவர்கள் பாரதியைப் படித்திருக்க முடியுமா? ஐன்ஸ்டைன் கொள்கையை அறிந்திருக்க முடியுமா? ஆகாய விமானத்தில் பறந்திருக்க முடியுமா? தகப்பஞரின் தோளில் ஏறிய குழந்தை தகப்பஞருடைய கண்ணில் படாதவற்றையெல்லாம் பார்க்க முடிகிறது. இப்படித்தான் ஒவ்வொரு தலைமுறையின் தலையிலும் பின்வரும் தலைமுறை ஏறி நின்று உயர்கிறது.

ஆனுல் எங்கெங்கேயோ வாழ்ந்த சமுதாயம் கண்டவற்றையெல்லாம் நாம் எப்படி அறியக்கூடும். இங்கேதான் மற்ருெரு வளர்ச்சி எழுந்தது. பேச்சு மொழியாக இருந்ததனை எழுத்தாக எழுதி வைக்கும் புதுமை உலகில் ஒருநாள் தோன்றியது. அந்த எழுத்துக்கள் நிலைத்திருக்கின்ற வரையில் அவற்றைக் கற்கின்றவன் அவற்றின் வழியே பழங்கால உண்மைகளையெல்லாம் அறிந்துகொள்கிருன். எண்ணுயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த எகிப்தின் வரலாற்றை அறிகிருேம். இவ்வாறே பிற பழைய வரலாறுகளையும் நூல்களையும் கற்றுக்கொள்கிருேம். மனிதனது அறிவு இவ்வாறு காலத்தையும் கடந்து வருகிற ஆற்றலைப் பெறுகிறது. வாஞெலி பிறப்பதற்கு முன்னரே அமெரிக்காவிலோ பிற நாடுகளிலோ வாழ்கின்றவர்கள் பிறருக்குத் தாம் கண்டதைக் கூறி வந்தார்கள். எப்படி முடிந்தது? கடிதம் எழுதுவதாலேயே முடிந்தது. இங்கே எழுத்து வழியாக அறிவு இடத்தையும் கடந்துவரக் காண்கிருேம். எழுத்து

செய்த புரட்சி இவ்வளவு பெரியது. எனவே எழுத்தைக் கற்ற மனிதனுக்கு ஓர் ஏற்றம் உண்டாகிறது. வரி வடிவாக ஏதோ கீறிவைத்தவற்றிடையே அறிவுண்மையைக் கற்றவர் கண் காண்கிறது. அப்படிக் காணுதபோது அவனை மனிதனுகவே சமுதாயம் கருதுவதில்லை. நீட்டோலை வாசிக்க முடியாமல் நின்றவனை விலங்கென்று கூடச் சொல்லாமல் மரமென்றே நம்முடைய நூல்கள் பழிக்கின்றன. அவன் நடமாடும் பிணம். ஆதலின் பிணம்போலச் சுட்டெரிக்கப்படக் கூடிய ஒரு மரக் கட்டை என்றே அந்த நூல்கள் கருதுகின்றன. கற்றவர்கள்தாம் கண்ணுடையவர்கள்; மற்றவர்கள் கண்ணெல்லாம் நோய் முதலியவற்றினுல் துன்பஞ் செய்யும் புண்களேயாம். 'தேயமிடையிட்டவற்றையும் காலமிடையிட்ட வற்றையும் காணும் ஞானக்கண்ணுடைமையின் கற்ருரைக் கண்ணுடையர் என்பர்' என்று பரிமேலழகர் விளக்குகிருர்.

எண் என்ப

நாம் எழுதும் எழுத்து இரண்டு வகையாக உள்ளது. அ, ஆ என்று எழுதும் எழுத்துக்கள்; 1, 2 என எண்ணுகை எழுதும் எழுத்துக்கள். முன்னதை எழுத்து என்கிருேம்; பின்னதை எண் என்கிருேம். இந்த இரண்டுந்தாம் கண்ணென்கிருர் வள்ளுவர். எண்ணென்பது கணக்கு என்ருர்கள் பழைய உரையாசிரியர்கள். இந்தக் காலத்தில் விஞ்ஞான வளர்ச்சி எல்லாம் அதனைக் கணக்காக எழுதிக் காட்டுவதில் அமைந்துள்ளது. இதனுல் கணக்கென்பதே விஞ்ஞான உலக அரசி என்று கூறி வருகின்ருர்கள். மற்ருெரு வளர்ச்சியும் உண்டு. இன்று தருக்க ஆராய்ச்சியினை யெல்லாம், தத்துவ ஆராய்ச்சியை யெல்லாம் கணக்காகவே எழுதிக் காட்டிவிடலாம்; அப்படி எழுதிக் காட்டினுல்தான் உண்மை விளங்கும் என்று முடிவு கட்டு

கின்றவர்களும் உண்டு. இந்தக் கண்கொண்டு நோக்கும் போது இந்தக் குறளுக்குப் புதிய பொருளொன்று தோன்றுகிறது. இலக்கியம் முதலிய கலைகளை எழுத்தென்றும், விஞ்ஞானம் தருக்க ஆராய்ச்சி முதலியவற்றை எண்ணென்றும் கூறிவிடலாம். இன்று வளர்ந்துள்ளபடி இவ்விரண்டும் மக்களுக்கு இருக்கவேண்டிய இரண்டு கண்கள். ஒன்று தருக்கவகை அல்லது விஞ்ஞான வகை; அது எண்ணத்தின் ஆராய்ச்சி. மற்றொன்று அதே உண்மைகளை எல்லோரும் கண்டு உணரும் வகையில் கற்பனையால் சித்தரித்து எல்லோரும் மனக்கண்ணால் உணர்ச்சியோடு கண்டு மகிழவைக்கும் எழுத்து. எண்ணென்பதற்குக் காளிங்கர் 'இருமையின்பமும் தமது உள்ளத்தால் தெரிந்து பிரித்து எண்ணிக் கொள்வது' என்று பொருள் கொள்கின்றார்; எண்ணென்பது கணிதம் என்பார் பரிமேலழகர்; சோதிடம் என்பார் பரிதியார். எல்லாவற்றையும் ஒன்று திரட்டிப் பார்த்தால் நாம் இங்கே கூறும் பொருள் உருவாகி வரக் காண்போம்.

யாதானும் நாடாமால்

இங்கே வரும் கல்வி எண்ணும் எழுத்துமாக முடிகிறது என்றோம். கணக்கு வாய்பாடு தமிழுக்கு என ஒன்றும் ஆங்கிலத்திற்கு எனவேறும் உண்டா? எண்ணே தனித்தனி மொழியையும் கடந்த நிலை. அறிஞன் மொழியின் உண்மையை ஆராய்ந்தபோது பிறமொழிகளைக் கற்பதும் எளிதாகிறது. அத்தகைய கல்வியாளன் உண்மையொழுக்கம் உடையவனாதலின் வள்ளுவர் கூறியபடி கைம்மாறு வேண்டாக் கடப்பாடுடையவன் ஆகின்றான். 'என் நாடு, உன் நாடு, என் ஊர், உன் ஊர்' என்ற இரண்டாட்டத்தினின்றும் தப்பிப் பிழைக்கின்றான். 'யான், எனது' என்ற செருக்கை அறுக்க

உதவும் அருளறத்தை எட்டிப் பார்க்கிருன். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற உள்ளம் அவனிடத்தே மலர்கிறது. யாதானும் நாடாம்; யாதானும் ஊராம். ஆனல் இந்த நிலை எண்ணும் எழுத்தும் கைவரப் பெற்ற வர்க்கே ஆகும். அப்போதுதான் உலகமே ஒரு குடும்ப மாகும். இந்த வாய்ப்பானது கல்வியால் எழுகிறது. இவ்வாறு சென்ற இடத்தெல்லாம் சிறப்பு நிகழுமானல் ஏனெருவன் கற்கவில்லை என்று மனம் வருந்துகிருர் வள்ளுவர்.

கற்க கசடற

இங்கே மற்ருெரு கருத்து வெளியாகிறது. கல்வி என்பது வெறும் அறிவு மட்டுமன்று; அந்த அறிவிற் கேற்ப ஒழுகுதலே கல்வியாகும். நெருப்புச் சுடுமென்று அறிந்தால் அதில் கையிடுவதில்லை. எனவே வாழ்வுக் காகவே கல்வி என்ற அழகிய கருத்தும் வெளியாகிறது. வாழ்வுக்காகக் கற்கும் இத்தகைய கல்வி ஐயந்திரிபறக் கற்பதாக இருக்கவேண்டும். நெருப்புச் சுடுமா, சுடாதா என்று ஐயப்படுகிற கல்வியும் கல்வியா? நெருப்புச் சுடாது என்று கற்பிக்கிற கல்வியும் கல்வியா? நூற்றுக்கு நாற்பது வாங்கினல் போதுமென்ற கல்வி இங்கே கல்வி யாகாது. எனவே கசடறக் கற்கவேண்டும்.

எவற்றைக் கற்கவேண்டும் என்று பிறர் ஆராய்ந்த தைப் பார்த்தோம். ஆனல் ஒருவன் வாழ்விற்கு எவை யெவை வேண்டுமோ அவற்றையெல்லாம் கற்றுத் தானே தீரவேண்டும். அவை காலத்திற்குக் காலம் மாறும்; இடத்திற்கும் இடம் மாறும். ஆதலினல் அடிப் படையை மட்டும் வற்புறுத்திக் 'கற்பவை கற்க' என் கிருர் வள்ளுவர். இவ்வாறு கற்பது பரீட்சையில் தேறு வதற்காக மட்டும் அன்று; மேடையில் பேசமட்டும்

அன்று; வாழ்வதற்கே என்ற உண்மையை நன்கு விளக்கு கிறுர் வள்ளுவர். 'கற்றபின் நிற்க அதற்குத்தக' என் கிறுர். இங்கே நெருப்பில் கையிடாது உயிர் பிழைத்துப் போனுல் மட்டும் போதாது; தான் கற்ற கல்விக்கு ஏற்ப ஒழுகி வாழ்தல் வேண்டும். இத்தகுதிப்பாட்டை வள்ளுவர் வற்புறுத்துகிறுர். மனிதன் தன் கல்விக்கேற்ப அந்தந்தக் கடமைகளை வெற்றியுடன் செய்து தமிழர் கூறும் வாகையைச் சூடவேண்டும். உலகத்தோடு ஈடு கொடுக்கும்போது கற்ற கல்விக்கேற்ப வெற்றி பெற்று உயர்ந்து வாழ்வது கற்றவன் கடமை. இந்த வாழ்வால் பிறரும் வாழ்கின்றனர். அப்படி வாழ்ந்தவர்களே வள்ளுவரும் கம்பரும், நியூட்டனும் ஐன்ஸ்டைனும், காந்தியும் புத்தரும்.

சாந்துணையும் கற்றல்

மாறிவரும் உலகிற்கேற்ப மாறிநின்று ஈடுகொடுத்து வெற்றிபெறுவதே இத்தகைய கல்வியானுல் இக்கல்வி பள்ளிக்கூடத்தோடு முடியும் என்பதற்கில்லை. சாகும் வரையில் இந்தக் கல்வி தொடர்ந்து நிகழவேண்டும். அணுவைப் பிரிக்க முடியாதென்று இந்த நூற்றுண்டின் முதற்பகுதியில் கற்ருேம். ஆனுல் திடீரென்று ஒருநாள் அதனைப் பிரிக்க முடியுமென்று அறிஞர்கள் கண்டார்கள். அதனுல் எழுந்த புரட்சியும் நாம் அறிவோம். இன்னும் எத்தனையோ மாறுதல்கள் அறிவுலகிலும், செயலுல கிலும், உணர்ச்சியுலகிலும் நிகழ்ந்துகொண்டே வருகின் றன. பள்ளியில் படித்தது போதுமென நின்றுவிட முடியுமா? டிராம் வண்டியில் ஏறிச் செல்லும் பழக்க முடையவன் அந்த வண்டியே சென்னையில் இல்லாத போது வேறு வண்டியில் ஏறமாட்டேன் எனச் சொல்ல முடியுமா? இவையெல்லாம் கல்வியா என ஒரு சிலர்

கேட்கலாம். கல்வியென்பது வாழ அறிந்து வாழ்வதே என்ற பொருளை உணர்ந்தால் சாந்துணையும் கற்றல் வேண்டும் என்று வள்ளுவர் கூறும் உண்மை விளங்கும்.

ஒருமைக் கண்

இந்தக் கல்வியின் உண்மைத்தன்மையை அறிதல் வேண்டும். கல்வி வாழச் செய்கின்றதென்றால் வாழ முடியாத நிலையில் இருந்த நம்மைப் புதிய சூழலில் வெற்றியுடன் வாழவைக்கும் நிலைமைக்கு மாற்றிவிடு கிறது என்பது பொருள். மறதி மறதி என்று தலையி லடித்துக்கொள்கிறோம். கல்வி ஏட்டுச் சுரைக்காயாய் இருக்கும் வரையில்—சோற்றுச் சுரைக்காயாய் இனியாத வரையில் — நமக்கு வெளிப்புறத்திலேயே இருக்கும். நமக்குப் பயன்பட்டு இனியாதவரையில் வெறும் சுமை யாகவே கிடக்கும். இந்த வெறுப்பு நிலையில் அதனை மறப்பதே இன்பமும் இயல்பும் ஆம். நம் வாழ்வோடு ஒன்றுகி இயைந்துபோகும் கல்வியை நாம் மறப்பதில்லை. அது நம்மோடு நாமாக ஆகிவிடுகின்றது; வாழ்வாக மணக்கின்றது; வெற்றியாக இனிக்கின்றது. நம்முடைய மனத்தையே அது மாற்றி அமைக்கின்றது. மனிதனது ஆளுமை அவ்வளவுக்கு அவ்வளவு மாறி நிற்கின்றது. இந்த மாற்றம் பின் மறைவதில்லை. பிறவியை நம்பிய அந்தக் காலத்தவர்க்கு இந்த உண்மையை அழகாக வற்புறுத்துகின்றார் வள்ளுவர். இவ்வாறு நம் மனத்தின் வழியே நம் நுண்உடலையே கல்வி மாற்றுவதால் ஒரு பிறப்பில் கற்ற கல்வி ஏழு பிறப்பிலும் காவலாகியும் இன்பமாகியும் இனிக்கும் என்கிறார் வள்ளுவர்.

தாமின்புறுவது

'யாதானும் நாடாமால் யாதானும் ஊராமால் என்றார் வள்ளுவர். முன்னரே அருளறத்தை நினைப்

பூட்டினோம். கற்றோரது உவகையையும் கண்டோம். இவர்கள் ஏன் கல்வியில் தம்மை மறந்து இன்பமடைகிறார்கள். கல்வி ஒரு கள்ளா? கஞ்சாவா? அப்படியானால் தன்னலமே அங்கு மிஞ்சும். ஆனால் கல்வியால் தாம் அடையும் மகிழ்ச்சியே உலகினர்க்கும் மகிழ்ச்சியாகிறது. உலகமும் மகிழ்ந்து வரவேற்கிறது. உலகத்தின் மகிழ்ச்சியைக் கண்டே பிறர் நலம் வேண்டியே தன்னலம் மறந்த கல்வியாளர்கள் கல்வியில் ஈடுபட்டுக் களிக்கின்றார்கள். தம் நலமே உலக நலமாவது கண்டு வியப்படைந்து மகிழ்கின்றார்கள். விஞ்ஞானி புதிய புதிய உண்மைகளைக்காண்கின்றான். சிற்பி புதிய புதிய அமைப்புக்களைக் கண்டு வெளியிடுகிறான். ஆனால் இவற்றையெல்லாம் பயன் படுத்திக்கொண்டு மகிழ்கிறவர்கள் உலகத்தவர்களே. எடிசன் கண்ட விஞ்ஞானப் பொருள்கள் அவனுக்கு மட்டுமா மகிழ்ச்சியை ஊட்டின? உலகம் முழுதும்—இனி வரும் உலகம் முழுவதும்—இவற்றை அனுபவித்து மகிழ்வெய்தலாம். கம்பன் இராமாயணத்தைப் பாடினான். அஃது அவனுடைய தற்கிழமையாக இருக்கும் வரையில் அஃது அவனுக்கு மட்டுமே இன்பம் அளித்திருக்கும். அது பிறிதின்கிழமையாக வெளிப்பட்டு உலகினரிடையே யெல்லாம் வாழவந்தபோது உலகம் முழுவதும் அதனைக் கேட்டு இன்புற்றது. கம்பனைப் பற்றி ஒரு கதை சொல்வது உண்டு. தன்னுடைய இராமாயணத்தைப் பிறர் பிரசங்கம் செய்யும்போது மக்கள் மகிழ்ச்சியடைவதை மறைந்து நின்று கண்டு இன்பமடைவானாம்.

கேடில் விழுச்செல்வம்

எனவே கல்விதான் 'கேடில் விழுச்செல்வம்' என்கிறார் வள்ளுவர். தனக்கும் பிறர்க்கும் இன்பம் தருவது—வெற்றி தருவது-உலகத்தை ஒரு குடும்பம் ஆக்குவது—

இதுவே கல்வி. இதனுடைய சிறப்பு என்ன? பிற செல்வங்களுக்கு இல்லாத உயர்வு என்ன? அழியாதிருத்தலே என்கிறார் வள்ளுவர். இதனை நம்மிடத்தினின்று பறிப்பாரில்லை. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க இது குறைவதில்லை. ஆதலால் கஞ்சத்தனம் ஏன்? இஃது உயர்ந்தவரிடத்திலன்றிப் பிற செல்வம் போல் தாழ்ந்தவரிடத்தில் இருப்பதில்லை. இதுவே இதனுடைய விழுப்பம் என்கிறார் பரிமேலழகர். எனவே மற்றச் செல்வங்கள் எல்லாம் செல்வம் அல்ல என்று எதிர்மறையாகவும் கூறி வற்புறுத்துகிறார் வள்ளுவர். அவர் எழு பிறப்பும் கல்வி உடன் வரும் என்று கூறினர் அல்லவா! நம்மாட்டு என்றும் இருப்பது கல்வி. அவ்வாறு நம்மாட்டில் இருப்பன அல்ல பிற. மாடு என்பதற்கு இந்தப் பொருளும் தொனிக்கிறது.

தொட்டனைத்தூறும்

இக்கல்வியை எவ்வாறு கற்பது? எவ்வளவு கற்பது? வாழ்வுக்கானது கல்வி என அறியும்போது எல்லாம் தெளிவாகிவிடுகிறது. எவ்வளவு நீராழம் வேண்டுமோ அவ்வளவுக்குக் கிணற்றைத் தோண்டுகிறோம். கல்வி என்பது கல் நிலத்தைத் தோண்டுவது அன்று. நீரூறிக் கிடக்கும் படுகையில் தோண்டியவுடன் நீர் சுரக்கும் நிலை போன்றது. பாலாறு முதலிய இடங்களில் நீர் மணற்குள்ளே ஓடி ஒளிகிறது. தாய் முலையை வருடப் பால் சுரப்பது போலத் தோண்டியதும் நீர் ஊறுகிறது பாலாறு என்கிறார் சேக்கிழார். எவ்வளவு ஆழம் தோண்டுகிறோமோ அவ்வளவு நீரும் கிடைக்கும். இது யாருமறிந்த உண்மை. அது போலத்தான் அறிவும். எவ்வளவுக்கெவ்வளவு கற்கிறானோ அவ்வளவுக் கவ்வளவு அறிவு பெருகுகிறது. காளிங்கர் கிணற்றில் தோண்டுவ

தனைக் கல்லுதல் என்று கூறுகிறார். கல்லுதல் முயற்சிக்கும் கல்வி யென்ற முயற்சிக்கும் ஒற்றுமை காண்கின்றார். 'கல்' என்ற பகுதிக்கு இவ்வாறு இரண்டு பொருள் கண்டு அவற்றினிடையே ஓர் ஒற்றுமையும் கண்டு மகிழ்கின்றார் அவர். இவ்வாறு கல்லும்போதெல்லாம் நீர் தோன்றி வருதலின் அந்த முயற்சி வெற்றி கண்டு மகிழும் முயற்சியாகிறது. அதுபோலக் கற்கும் போது மனப்பூரணமாகப் பிரியத்துடன் கற்க வேண்டுமென்கிறார் பரிதியார். பின்னே அதனை மறவாது அதிகரிக்க என்றும் கூறுகிறார்.

உவப்பத் தலைக்கூடி

'உவப்பத் தலைக்கூடி' என்ற குறளுக்கு மணக்குடவரும் பரிதியாரும் ஒரு பொருள் கூறுகின்றார்கள். பொதுவாக, மக்கள் கூடினால் மகிழ்ச்சி அடைகிறார்கள். பின் பிரிந்தால் 'ஒருவரை யொருவர் என்றும் நினைக்கின்றார்கள். ஆனால் எல்லா மக்களும் இப்படிச் செய்யாததனாலே நல்லோரும் நல்லோரும் கூடிப் பிரியும்போதே இப்படி நடைபெறுகிறது என்கிறார் பரிதியார். இந்த இரண்டு உரை யாசிரியர்களும் இப்படிக் கூடிப் பிரிவதை உவமையாகக்கொள்கிறார்கள். இப்படித்தான் கற்றவர்கள் தொழிலும் இருக்குமென உவமையாகக் கொள்கிறார்கள். இப்படித்தான் கற்றவர்கள் தொழிலும் இருக்குமெனஉவமைக் கேற்பப் பொருளை விளக்குகின்றார்கள். இங்கேயும் ஒருவேற்றுமை உண்டு. தன்னலம் மறவாத நிலையில் பிறர் நலத்தைக் கற்றவர் கருதுவர் என்பது மணக்குடவர் கொள்கை. தமக்கும் பிறர்க்கும் எனத் தெளிவாக்குவார் பரிப்பெருமாள். இன்பம் நுகரினும் வினை செய்யினும் தமக்கும் பிறர்க்கும் இன்பம் பயக்கச் செய்தல் கல்வியானும் என்பர். 'தாமின்புறுவது' என்ற குறளில்

இந்தக் கருத்தே வருகிறது. அதனால்போலும், இவர் களைப் போலவே 'உவப்பத் தலைக்கூடி' என்பதை உம்மை யாகக் கண்ட பரிதியார் அதனைக் கல்வியின் பயனுக்கு உவமை ஆக்காமல் கல்விக்குக் காரணமான முயற்சிக்கு உவமை ஆக்கிக் கூறுகிறார்.

உடையார் முன்

கல்விகற்கும் முறையை வற்புறுத்துவதாக ஒருகுறள் உண்டு. கற்பவனிடம் செருக்கு இருப்பதற்கில்லை. கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு. உலகம் மாறிக்கொண்டே போகும்போது அறிதோறும் அறியாமை காண்கின்றோம். எனவே ஏக்கழுத்தம் அல்லது ஏக்கு என்ற செருக்கு உண்மையாகக் கற்றவனிடம் இருப்பதற்கில்லை. முன்னரே அறிந் திருந்தாலும் அறிதோறும் அறியாமை காணும் நிலையில் ஒன்றும் கல்லாதவன் போலவே மிகத் தாழ்ந்து நின்று பேராசையோடு கற்கவே கற்கின்றவர்கள் முயல்கின் றார்கள். இவ்வாறு கற்றவர்களே உண்மையான கல்வி யுடையோர். அறிதோறும் அறியாமை காணமல் செருக் குடன் கற்றவர்கள் கல்வியை உடைமையாகக் கொள்வ தில்லை. உடைமையாகக் கொண்டாலும் அஃது அவர் கட்கு உதவுவதில்லை. அவர்களைக் கல்வியுடையார் என்று சொல்வதற்கில்லை. இப்படிக் கற்றவர்களே கல்வியுடை மையை இழக்கும்போது கல்லாதவர்களைப் பற்றி என்ன சொல்வது? 'கடையரே கல்லாதவர்' என்கிறார் வள்ளுவர். இவ்வாறு உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கல்லாதவர் என்பதற்குப் பொருள் கூறுவர் காலஞ் சென்ற சோமசுந்தரபாரதியார். ஆனால் பழைய உரை யாசிரியர்களெல்லாம் கல்வி கற்போனுக்குக் கல்வியில் இருக்கும் பேராசையையும் இன்றியமையாத நிலையை

யும், செருக்கற்ற நிலையையும் வற்புறுத்த வேண்டி வேறு வகையாகப் பொருள் கூறுவர். வறியவனொருவன் செல்வ முடையவன் முன்னே தாழ்ந்து ஆசையுடன் பொருளின் இன்றியமையாமையும் அறிந்து தன் குறையை நீக்கிக் கொள்ள முயல்வானும். அதுபோலக் கல்வி கற்பவனும் கற்றவரிடத்தே தாழ்ந்து நின்று கல்வியின் இன்றியமை யாமையை உணர்ந்து அதன் மேலேயே காதல்கொண்டு கற்பான் என்று கூறுகின்றார்கள். 'பிற்றை நிலை முனி யாது கற்றல் நன்று' என்பது சங்கப்பாட்டு.

கற்றார் கடையரென்பதற்குக் கற்றாரிடத்தவர் என்று பொருள் கொள்கின்றார்கள் மணக்குடவரும் பரிப் பெருமாளும். 'கற்றார் கடை' என்பது கடை என்ற ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு கொண்டது என்று பொருள். கல்லாதவரும் கற்கத்தான் முயல்கின்றார்கள்; ஆனால் அந்த முயற்சி தவறான வழியில் செல்வதால் அவர்கள் கற்றவராகாமல் கல்லாதவராகவே இருக்கின் றார்கள். இவர்களும் தாழ்ந்து நிற்கின்றவர்கள் என் கிறார் பரிப்பெருமாள். கல்விதான் வரவில்லை. எனவே, முயற்சியில் மட்டும் பயனில்லை. தக்கதொரு முயற்சி வேண்டும். இத்தகைய முயற்சி இல்லாதபோது கல்லாத வர் கல்லாதவராகவே நிற்பர். இது பரிப்பெருமாள் கருத்து. எனவே, ஒரு சிலரே கற்று உயர முடியுமாதலால் அவர்களே எல்லாரினும் தலையாவர் என்கிறார். மணக் குடவர் இந்தத் தோல்விக்கு ஒரு காரணம் காட்டுகிறார் பொருளுடையார் முன்பு பொருளில்லாதவன் பொருளைக் காதலித்து நிற்கின்றான். ஆனால் கல்லாதவர்களாக ஒழி கின்றவர்கள் கற்க வரும்போது கற்றார் முன் நின்றாலும் கல்வியைக் காதலித்து நிற்பதில்லை. அவர்களுள்ளம் கல்வியில் ஈடுபடவில்லை. இன்றைய கல்வி நிலையில் பல மாணவர்கள் கல்வியில் ஓர் ஈடுபாடும் இன்றிக் கல்லூரி

களில் படிக்க வந்து கல்லாதவர்களாகத் திரும்புவதை நினைப்பூட்டுகின்றது இந்த உரை. அப்படியானால் கல்வியில் ஈடுபாடு வேண்டுமென்பது விளங்குகிறது. ஆனால் பரிப்பெருமாள் உரையிலேயோ கல்வி ஒரு சிலருக்குத் தான் என்பது போலத் தோன்றுகிறது. மக்கட் பிறப்பு என்றாலே கல்விப் பிறப்புத்தான் என்று கூறுகிற வள்ளுவர் இதனை உடன்படமாட்டார். எல்லோருக்கும் கல்வி என்கின்ற இந்நாளைய கொள்கையை உடையவர் அவர். வழி வகை இருந்தும் கல்லாதவர்களையே வள்ளுவர் கடையர் என்று கூறுகின்றார். அதனால் கற்றாரை உயர்ந்தவர் என்கின்றார் பரிமேலழகர். கற்றவர்களை உயர்ந்தவர்கள் என்று கூறாமல் கடையர் என்பதற்கு வேறு பொருள் கூறுகின்றார் காளிங்கர். சாதி அடிப்படையில் பொருள் கூறுவது இந்த நாட்டில் இயல்பாகிவிட்டது. அது காளிங்கர் குற்றமன்று. கடையர் என்பது புலமக்கள் (அவர்கள்) உயர்ந்தோர் முன் ஒன்றினைச் சொல்லக் கூசுமாப் போலக் கல்லாதாராகிய கடுவினையாளரும் கற்றார் முன் தாமே சொல்லக் கூசுவர். எவ்வாறு கொள்ளினும் இக்குறள் இக்காலத்தார் வற்புறுத்தும் ஒரு சிறந்த உண்மையை விளக்குகிறது. அக்கறை, இன்றியமையாமை, ஈடுபாடு என்று இதுவொன்று இல்லாவிடின் கல்வி மலராது. இந்த ஈடுபாட்டை உண்டு பண்ணுவதுதான் ஆசிரியன் கடமை. இந்த ஏக்கரும் நிலையை மாணவனிடத்தில் உண்டு பண்ணினால்தான் கல்வி வளரும்.

இவ்வாறு வள்ளுவர் அரசியலிலும் கல்வியை மக்களுக்கு உரிய பொது நிலையில் உணர்த்துவதால் குடியரசு உலகிற்கும் அஃது ஏற்றதாகிறது. சாகும் வரை கல்வி, உலகம் ஒரு குடும்பமாம் கல்வி, உலகு இன்புறத் தான் இன்புறும் கல்வி, ஏக்கற்றும் கற்கும் கல்வி, தொட்டனைத்

தூறும் கல்வி, என்றும் பிரியாக் கல்வி, எல்லோர்க்கும் கல்வி, வாழ்வதற்கே கல்வி, என்று இருபதாவது நூற்றுண்டு கூறும் கல்வியின் உண்மையினை வற்புறுத்தி அதனை அரசியலோடு விளங்கும் சமுதாயத்தின் உயர் நிலையாக வள்ளுவர் விளக்கியுள்ளார். மக்களுக்கும் கல்விக்கும் உள்ள தொடர்பு, கல்வியின் உண்மை நிலை, கல்வியின் பயன், கல்வி கற்கும் முறை இவை எல்லாவற்றையும் இந்த இருபதாம் நூற்றுண்டினர் கூறுவது போலவே கூறியிருப்பதே இங்குள்ள சிறப்பு.

எதிர்கால ஞானப்பழங்கள்

சமுதாயத்திற்கு ஏற்பக் குழந்தைகளை உருவாக்கி விடுவது கல்வியின் நோக்கம். ஏறக்குறைய மாறுது இருந்த சமுதாயத்தில், முன்னே செய்துவந்ததுபோலச் செய்யத் தெரிந்தால் போதும்; முன்னோர்கள் பேசினது போலப் பேசினால் போதும். எடுத்துக்காட்டாக ஒரு தச்சனுர் முன் எல்லாம் என்ன என்ன செய்வதற்குத் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதை விரல்விட்டே எண்ணிவிடலாம். அதனால் எதை எதைச் செய்து பழக வேண்டும் என்பதையும் முன்கூட்டியே திட்டமிடக் கூடும்.

ஆனால் இன்றோ உலகம் நாளுக்கு நாள் மாறிக் கொண்டே வருகிறது. கல்லூரியில் ஈர்ப்புச் சட்டத்தைப் பற்றி நான் படித்து முடிப்பதற்குள் அது புராணக் கதையாகிவிட்டது. 1918-இல் நிகழ்ந்த சூரிய கிரகண ஆராய்ச்சியால் ஐன்ஸ்டைன் கொள்கை உண்மையா யிற்று. ஈர்ப்புச் சட்டம் என்பதன் பொருளையே மாற்ற வேண்டியதாயிற்று. அன்று நீராவிக்கப்பல், மோட்டார் வண்டி என்பவையே மிக விரைவாகச் செல்வன. அன்று போர் எல்லாம்கூட, நிலப்போரும் கடல்போருமே ஆம். ஆனால் இன்றோ, ஆகாயவிமானம் மேலும் மேலும் விரைந்து காற்றின் வேகத்தையும் எட்டிப் பிடிக்கிறது.

மனிதன் இந்த உலகத்தில்மட்டும் அன்றிப் பிற உலகங்களிலும் போய் வாழலாம் என விஞ்ஞானக் கனவு காண்கின்றான். ஒருசிலரே 'கற்பது என்ற முறை இத்தகைய உலகத்திற்குப் பொருந்தாததால் எல்லோரும் கற்கவேண்டுமென்பது கட்டாயமாகிறது.

இந்த நிலையில் வரப்போகும் உலகம் எப்படி இருக்கும் என்று அறிய முடியுமா? அதனால் அறிந்த சிலவற்றை மட்டும் செய்யவோ பேசவோ எழுதவோ பழகினால் போதுமா? புதிது புதிதாக ஏற்படக்கூடிய புரட்சியில் ஈடுபடக்கூடிய வகையில் குழந்தைகளை உருவாக்கி வருவதே கல்வியின் நோக்கமாகும். இங்கே ''குருட்டுப் பாடம் போற்றி ஜயஜய'' என்ற பல்லவி பாடிப் பயனில்லை. நம்நோக்கம் எதற்கும் ஈடுபடக்கூடிய நிலை என்றபின் செய்ததை மட்டும் செய்து வருவதால் பயன் இல்லை. வரக்கூடிய நிலைமைக்கு ஏற்றவற்றை எல்லாம் செய்யும் ஆற்றலை வளர்த்துவிடவேண்டும். அது எப்படி முடியும்? சில செய்கைகளின் அடிப்படைத் தத்துவத்தை மாணவர்கள் அறிதல்வேண்டும். எது எப்படி எப்படி எல்லாம் மாறலாம் என்பதை ஒரு சிறிது அறியக்கூடும். அதுமட்டுமல்லாமல், எப்படி எப்படி எல்லாம் மாற்றினால் உலகிற்குப் பயன்படும் என்பதையும் உணர்ந்து செய்வதற்கு வழி ஏற்படும். எனவே, மாணவன் அந்த நிலையில் மாறி வருகின்ற உலகத்தை மாற்றி அமைத்து உயர்த்தும் போக்கையும் கைவரப் பெறுகின்றான். இத்தகைய படைப்பாற்றலை விளைவிப்பது தான் இன்றைய கல்வியின் நோக்கம். இவ்வாறு மாணவர்களைச் சிந்தனைச் சிற்பிகளாகவும் வாழ்க்கைச் சிற்பிகளாகவும் செயல்வகைச் சிற்பிகளாகவும் எதிர்காலத்தைப் படைக்கும் பிரம்மாக்களாகவும் ஆக்கிவிடவேண்டும்.

அத்தகைய ஆற்றல் ஒவ்வொரு மனித உள்ளத்திலும் இருப்பதால்தானே இப்படி உலகம் மாறி மாறி உயர்ந்தோங்கி வருகிறது. எனவே, இந்த ஆற்றலைப் புதியதாக நாம் படைக்கவேண்டியதில்லை. எல்லாச் சிறுவர்களிடத்திலும் உள்ளடங்கிக் கிடக்கின்ற இந்த ஆற்றலைத் தடைச்சட்டம் போட்டுத் தடுக்காமல் தன்னுரிமையோடு வளர்தற்குப் பாத்தி கட்டி நீர் பாய்ச்சி களைகட்டி அழகாக உருவாக்கிவிடவேண்டும். எனவே இங்கே நூல்களும் ஆசிரியர்களும் பக்கத்துணைகளேயாம். வளரவேண்டியவை நம் குழந்தையின் பிஞ்சு நெஞ்சங்களேயாம். அங்கே கிளிப்பிள்ளைப் பாடம் பயனில்லை. அன்னம்போல் வேண்டியதைக் கொண்டு வேண்டாததைத் தள்ளிவிடும் மாணவ நிலையை வளர்க்க வேண்டும். எனவே, கல்விநிலை ஆசிரியர் பேச்சும், நூலின் படிப்புமாக மட்டும் அமைந்தால் பயனில்லை. ஆசிரியர் சொன்னதையே மாணவன் நம்பவேண்டும் என்ற கொடுங்கோலாட்சி பள்ளி உலகத்திலே தொடங்கிவிட்டால் மாணவர் அனைவரும் பின்னே உலகத்தில் வாழ வரும்போது அந்தக் கொடுங்கோலாட்சியை அல்லவா செலுத்துவார்கள்?

மனிதன் பேசும் உயிர்வகையைச் சேர்ந்தவன். நினைக்கும் உயிர்வகையைச் சேர்ந்தவன். எனவே, 'சித்திரப்பாவையின் அத்தக அடங்கி' எப்போதும் இருத்தல்வேண்டும் என்று எதிர்பார்ப்பது கல்வியாகாது. சொல்லெனச் சொல்ல வேண்டும் என்று நன்னூல் பாடுகிறது. அதற்குப் பொருள் குருட்டுப் பாடம் ஒப்புவிப்பது என்பதன்று. ஆசிரியர் கருத்தைத் தெரிவித்த உடனேயே, அவரவர் கருத்தைத் தெரிவிக்கும் படியாக ஆசிரியர் மாணவர்களைக் கேட்கவேண்டும் என்பதும் அப்படிக் கேட்கும்போது ஒவ்வொரு மாணவ

னும் ஆராய்ந்து பார்த்துத்தான் தன் கருத்தைத் தெரிவிக்க வேண்டும் என்பதே பொருளாகும்.

அப்படியென்ருல் ஒவ்வொரு வகுப்பும்,ஓர் ஆராய்ச்சி மன்றமாகும். நினைத்துப் பார்க்கும் ஆற்றலும், அதனை வெளியிடும் ஆற்றலும், செய்து பார்த்துத் தெளிவு பெறும் ஆற்றலும், வேறு வகையாகச் செய்து பார்க்கும் ஆற்றலும் வளரக்கூடும். அப்போது அத்தகைய கல்வியில் மாணவனும் பெரும் பங்கு கொள்கிருன். ஒவ்வொரு கருத்தின் வளர்ச்சியிலும் அவன் ஈடுபடுகின்ருன். இவ்வாறு அவனுடைய உரிமை வளர்கிறது. சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாக அவன் வளர்வதில்லை; செய்வதைச் செய்யும் குரங்காகவும் அவன் வளர்வதில்லை.

என்வே, ஆசிரியன் மட்டும் பேசிக்கொண்டோ செய்துகொண்டோ போகும் சொற்பொழிவு நிலையமாக மட்டும் வகுப்பு விளங்காது. அறிவுச் செடிகள் வளர்ந்து, அறிவு மரங்களாய் ஓங்கி, உலக இன்பச்சாறு கொழிக்கும் அறிவுப் பழங்களை எதிர்காலத்தில் கனிய வைப்பதற்காக அமைந்த அழகிய இளமரக் காவாகப் பள்ளிகளும் கல்லூரிகளும் விளங்கும்.

குழந்தைகளே குழந்தைகளுக்கு எழுதவேண்டும்

குழந்தை நூல்கள் எழுதுவதில் பல நாடுகள் ஈடுபட்டு வருகின்றன. தமிழ்நாடும் இந்தத் துறையில் கால் எடுத்து வைத்துள்ளது என்றே சொல்லவேண்டும். ஆனால் இயற்கையின் சூழ்ச்சியால் முதியவர்களுக்கு முதியவர்கள் நூல்களை எழுதுவது போலக் குழந்தைகட்குக் குழந்தைகளே, குழந்தை இலக்கியத்தைப் படைப்பதற்கு இல்லை. எனவே முதியவர்கள்தாம் எழுதுகின்றார்கள். இந்த மீசை முளைத்த குழந்தைகள் குழந்தைபோல வெளிக்கோலம் கொண்டாலும், பச்சிளங் குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சை எவ்வாறு அறிதல்கூடும்? குழந்தையோடு ஒன்றாகவே பழகும் தாயும்கூட அந்தப் பிஞ்சு நெஞ்சம் ஒலிகளை வெளியிடும் போதும் அதன் பொருளை அறியாமல் தடுமாறுகிறாள்.

ஒரு பெரிய புரட்சியை முதியோர்கள் செய்து விடுகிறார்கள். அந்தப் பிஞ்சு நெஞ்சத்தைப் பிஞ்சிலேயே பழுக்கவைத்து விடுகிறார்கள். நம்முடைய தொடக்கப் பள்ளிகளில் போய்ப் பார்க்கவேண்டும். அங்கே மேல் வகுப்பில் இந்தக் குழந்தைகள் 'காலங்கண்ட கிழவர்கள் போலக் கட்டுரை எழுதுகிறார்கள். எல்லாம் கிளிப்பேச்

சுத்தான். பாடப் புத்தகத்தை ஒப்புவிப்பது அல்லது ஆசிரியர் பேச்சைத் திருப்பிப் பேசுவது அல்லது திருப்பி எழுதுவது—இதுதான் நாம் அங்கே காணும் காட்சி. அந்தப் பச்சிளம் மண்ணை இந்தக் கிழங்களுக்காக வேண்டிக் கிழட்டு அச்சில் வைத்து அறுத்து, இந்தக் கிழங்களின் சமாதிக்கு வேண்டிப் பள்ளிக்கூடங்கள் என்ற செங்கற்களவாயிலில் வைத்துச் சுட்டு ஈரமற்ற செங்கல்களாக அமைத்துவிடுகிறோம். இத்தகைய செங்கற்குழவிகள் எல்லாம் ஒன்றுபோல் இருப்பதைப் பார்த்துக் கல்விமுறை வெற்றி கண்டதாக ஆரவாரம் செய்கிறோம். அவர்கள் எழுதும் படங்களைத் தான் பாருங்கள்! அங்கேகூட அவர்கள் மனங்கண்டதை நாம் காண்பதற்கில்லை. நாம் காண்பது போலவே அவர்களையும் எழுதச் செய்துவிடுகிறோம். குழந்தைகள் மனத்தை அறிந்த பியாழே முதலியவர்கள் குழந்தைகள் காணும் காட்சிகளும் படங்களும் எப்படி இருக்கும் என்று விளக்குகிறார்கள். அவற்றிற்கும் நாம் எழுதவைக்கும் படங்களுக்கும் ஒரு தொடர்பும் இல்லை.

ஆனால் குழந்தைகள் குழந்தைகளாகவே இருக்கலாமா? அவர்கள் வாழ்நாள் முழுவதும் வாழவேண்டிய சமுதாயத்தில் ஒன்றாகிவிட வேண்டாமா? சமுதாயம் நடப்பதுபோல நடக்கவேண்டாமா? காண்பதுபோல் காணவேண்டாமா? நினைப்பதுபோல் நினைக்க வேண்டாமா?—இப்படி எல்லாம் என் போன்ற கிழவர்கள் பேசுவது காதில் விழுகிறது. ஆனால் தானே பழுக்காததைத் தடிகொண்டு அடித்துப் பழுக்க வைக்கலாமா? இயற்கையாகப் பழுத்த பழம்போல் ஊதல் போட்டுப் பழுக்கவைத்த பழங்கள் இனிக்குமா? படிப்படியாகப்பழகி வளர்ந்து உயரவேண்டும். சமுதாய வளர்ச்சி இல்லையானால் சமுதாயம் அடிமைகளின் சமுதாயமாகும்.

உலகில் இத்தகைய பள்ளிக்கூட முறைகளால் அடிமைச் சமுதாயத்தையே இன்றுவரை வளர்த்துள்ளோம். அதனுல் உரிமை பெற்றவர்கள் என்று ஒரு சிலரையே கூறமுடியும். நூற்ருண்டுக்கு ஒன்ருகத்தான் அந்த அரும் பொருள் தோன்றும் என்று மனப்பால் குடிக்கின்ருேம். கல்வி உலகில் ஒரு பிளேட்டோ, ஒரு ரூசோ, ஒரு ஃபிரோபல், ஒரு மாந்திசோரி, ஒரு மகாத்மா காந்தி என்று ஒரு கை விரலுக்கு மேல் இரண்டாவது கையின் விரலை நீட்டுவதற்கு இடமில்லாமல் எண்ணிவிடலாம். இப்படியே பிற துறைகளிலும். எல்லோரும் ஓர் நிறை; ''எல்லோரும் ஓர் இனம்'' என்று பாடும்போது எல்லோரும் சிந்தனைச் சிற்பிகளாக வேண்டாமா? பெரும்பாலோராவது ஆகவேண்டாமா? ஏன் ஆகவில்லை? சிந்தனை உரிமையை இயற்கையாக வளரவிடாமல் நம் பள்ளிகளில் கொண்டு முன் சொன்னபடி தடுத்துக் கொண்டே இருப்போமானுல் எவ்வாறு சிந்தனைச் சிற்பிகள் உலகில் வளர முடியும்?

குழந்தைகளே குழந்தைகட்கு நூல் எழுதவேண்டும். முடியுமா? இப்போது குழந்தைகளைக் கட்டாயப் படுத்தாமல் அவர்கள் விரும்பியபடி எல்லாம் படம் எழுதவும் நிறம் தீட்டவும் விடுகிருேம். அவற்றிலிருந்தே அவை படிப்படியாக மாறி விரும்புவனவற்றை வரிசைப்படுத்தி அமைக்கலாம். அவர்கள் மிக மிக விரும்புவனவற்றைப் பொறுக்கி எடுத்துப் பிற குழந்தைகளுக்கும் அவ்வவர்கள் வயதுக்கேற்ற நிலையில் காட்டி வரலாம். இங்கே சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் அவற்றைப் பயன்படுத்தவும் திட்டம் வகுக்கலாம். இவ்வாறு செய்தால் படங்களை மட்டுமல்லாமல் உலகத்தையும் படிப்படியாகச் சமுதாயத்திற்கு ஏற்ற

வகையில் அவர்கள் கண்கொண்டே அவர்கள் காணு மாறும் கற்குமாறும் செய்யலாம்.

இந்த வகையிலேயே எழுத்தும் வளர்தல் வேண்டும். குழந்தைகளை ஆடவிடவேண்டும்; பேசவிடவேண்டும். அவர்களுக்குப் பிடித்தமான துறையிலே ஈடுபட்டிருக்கும் போது அவர்களுக்குத் தெரியாமல் அவர்கள் பேச்சை ஒலிப்பதிவு செய்துகொள்ள வேண்டும்; அவர்கள் இயக்கங்களை நிழற்பதிவு செய்துகொள்ள வேண்டும். இவ்வாறு அமெரிக்கா முதலிய நாடுகளில் ஆராய்ந்து வருகிறார்கள். இப்பதிவுகளைப் பின்னர் ஆராய்வதால் அப்போது அப்போது குழந்தைகள் பேசும் சொற்கள் இவை இவை என்பதும் வயதிற்கு ஏற்ப வளர்ந்து வரும் வாக்கிய அமைப்புகள் இவை இவை என்பதும் எளிதில் விளங்கிவிடும். பிஞ்சு நெஞ்சின் போக்கும் தெளிவாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதும் நூல்களை ஒருவகையில் குழந்தைகளே எழுதும் நூல்கள் என்று கொள்ளலாம். இங்கே அடியோடு சமுதாயத்தையும் மறந்துவிடலாகாது.

இத்தகைய ஆராய்ச்சிகளுக்குப் பணம் செலவாகும் என்பதில் ஐயமில்லை. உலகம் நல்வழியில் மாறவேண்டு மானால் இது பெருஞ்செலவா? போருக்காக உலகம் எவ்வளவு பணத்தை வீணாக்குகிறது? இதில் நூற்றில் ஒரு பங்கை இந்த வகையில் உலகம் முழுவதும் ஒன்று சேர்ந்து செலவு செய்ய முயன்றால் உலகம் விரும்பும் எதிர்காலம் ஒரு தலைமுறையில் உருவாகிவிடும்.

வெள்ளித்திரையில் கற்கப் போ

வெள்ளித்திரையில் எல்லோரும் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றார்கள். அதனைப் பாராதவர்களே, அதனைப் பார்த்தலாகாதெனப் பேசி வருகின்றார்கள். அப் பேச்சினால் என்ன பயன்? குழந்தைகளும் அங்கே குவிகின்றார்கள். அங்கே பாடுகின்ற பாட்டையே தமிழ்ப்பாட்டாகத் தமிழ் மாணவர்கள் பாடிக் களிக்கின்றார்கள். அங்கே பேசுகின்ற பேச்சு நடையையே மேடைப் பேச்சிலெல்லாம் தமிழ்நாட்டில் கேட்கின்றோம். அங்கே காணுகின்ற உடையழகினையும், கூந்தலழகினையும் அடுத்த நாளே மாணவரில்லத்தில் காணும் நிலையே வளர்ந்தோங்கியுள்ளது. கல்லூரியிலும், உயர்நிலைப் பள்ளியிலும், தொடக்கப் பள்ளியிலும் தமிழைக் கற்கின்றவர்களெல்லாம் அறிந்து மகிழ்வது ஒன்று உண்டென்றால் அது வெள்ளித்திரையேயாம். ஒருவரும் அறியாதபடி இந்த வெள்ளித்திரையே ஒப்பில்லாதவொரு கல்வி நிலையமாகச் சிறந்து வருகிறது.

இதனைக் கல்வி கற்பிப்பார் அறிகின்றார்களா? அறியாதிருக்க முடியாது. ஆனால் எல்லாம் அதனாலேயே கெட்டுவிடுகின்றது எனக் கூறித் தாங்கள் தப்பிக் கொள்ளப் பார்க்கின்றார்கள். எங்குமாய் நிறைந்து வரும் இப்புதிய கல்வி நிலையத்தை—நம் மாணவ

ஈடுபடும் கல்வி நிலையத்தைப்—புறக்கணித்துப் பயன் இல்லை. பூனை கண்ணை மூடினால் பூலோகம் இருண்டு விடாது. பழைய கல்வி நிலையங்களைவிட இக் கல்வி நிலையமே வெற்றிபெறும் கல்வி முறையைப் பின்பற்று கிறது. இதனைப் பயன்படுத்தாத கல்வி நிலையங்கள் இனி எவ்வாறு வாழுதல் கூடும்?

வெள்ளித்திரையில் குறையொன்றுமில்லை எனக் கூறுவாரில்லை. வெள்ளித்திரை இவ்வாறு கல்வி நிலைய மாக விளங்குவதனை அவ் வெள்ளித்திரையாரே உணர்ந் தார்கள் எனக் கூறுவதற்கில்லை. அதனால் அந்த வகையில் எழும் குறைகளை நீக்கவும் அவர்கள் முயலவில்லை. ஆனால் இவற்றை எள்ளி நகையாடுவதும், பழி பாடு வதும் பயன்தரப் போவதில்லை. இவற்றையும் ஆசிரியர் கள் தமக்கு உற்ற துணையாகக்கொண்டு அங்கு எழும் குற்றங்களை நீக்கிக் கொள்வதற்குத் தம் மாணவர்களைப் பழக்குதல் வேண்டும். அப்படியானால், ஆசிரியர்களும் அவ்வெள்ளித்திரையின் திட்ப நுட்பங்களையெல்லாம் தெள்ளத்தெளிய உணர்தல் வேண்டும்.

மாணுக்கர்கள் கெடுகின்றார்கள் என்று பேசிப் பய னில்லை. அவர்களோடு அங்குச் சென்று, பின் அதனைப் பற்றி மாணவர் உளங்கொள ஆராய்ந்து பேசப் பழகுதல் வேண்டும். வெள்ளித்திரையும் ஓர் இலயக்கிய வகையே என்பதை மறத்தலாகாது. இலக்கியச் சுவையில் இயல் பாகவே மாணவர்கள் அங்கு ஈடுபடுகின்றார்கள். அவ் வெள்ளித்திரையின் இலக்கிய நயத்தைப்பற்றியெல்லாம் பேசுகின்றார்கள். பாட்டின் நயத்தினை உணர்ந்து தங்களை மறந்து பாடி மகிழ்கின்றார்கள். பேச்சின் குறைவு நிறைவுகளைப்பற்றி வாதாடுகின்றார்கள். நடிப் பின் திறத்தையெல்லாம் அலசிஅலசி ஆராய்கின்றார்கள். கதைக்கோப்பையும் கண்டு தெளிகின்றார்கள்.

இயற்கையாகவே எழும்இந்தஇலக்கியஆராய்ச்சியை ப்பயன்படுத்தவில்லை யென்றால் ஆசிரியன் இருந்தென்ன? ஒருவரும் வாங்காத நூல்களை மாணவன் தலையில் சுமத்தி வற்புறுத்துவதால் என்ன பயன்? இந்த மாணவர்களைப் போலவேனும் இலக்கிய ஆராய்ச்சி செய்ய எத்தனை ஆசிரியர்கட்கு இயலும் என்ற கேள்வி எழுகிறது. முயன்றால் கை வராததில்லை. தாம் இலக்கியத்தின் நுட்பங்களாகக் கண்டனவற்றை வெள்ளித்திரை பற்றிய பேச்சின் வழியே விளக்கலாம். அது மாணவருள்ளத்தைக் கவரும். உண்மை இலக்கியத்திற்கும் போலி இலக்கியத்திற்கும் உள்ள வேற்றுமைகளை நேரே அங்கே காட்டலாம். அங்குள்ள தமிழ் நடையைப்பற்றி மாணவன் புதிய கருத்துக்களை நமக்கும் விளக்கும் வகையில் உரையாடலாம். வெள்ளித்திரையில் உள்ள குறைகளுக்கு நம் மாணவர்கள் பலியாகாமல் தடுக்கலாம்.

இன்று வெள்ளித்திரை வெறும் பொழுது போக்காக உள்ளது. உலகை மறக்க உதவும் கட்குடிபோன்று உள்ளது அது. கண்ணாடி முன் தோன்றும் வடிவினை அக்கண்ணாடி தன் முயற்சி ஒன்றுமின்றிக் காண்பதுபோல வெள்ளித்திரையைப் பலர் கண்டு களிக்கின்றார்கள். உண்மையை அன்றி வெறும் நிழலைக்கண்டு ஆரவாரம் செய்கின்றார்கள். எதிரொலியும் எதிரொளியும் செய்யும் இயந்திரங்களாக அமைகின்றார்கள். ஆறறிவு படைத்த மனிதன் அங்கே இருக்கின்றானா? அங்குப் போகும் மாணவர்களையெல்லாம் உயிரோடு துள்ளிக் குதிக்கும் அறிவின் விளக்கங்களாக எளிதில் மாற்றிவிடலாம். கண்டு களிப்பதை விட்டு உணர்ந்து உணர்ந்து மகிழப் பழக்குதல் வேண்டும். வெள்ளித்திரை அப்போது வெளியே நில்லாது அவனுடைய அறிவாராய்ச்சியோடு ஒன்றாகி அவனை வளர்க்கிறது; அதுவும் வளர்ந்து திருந்துகிறது.

இலக்கியப் படைப்பாற்றல் இலக்கியத்தில் உண்மையை உள்ளவாறு கண்டு சுவைத்து உணரும் சுவையாற்றலாக மாறுகிறது. அங்குள்ள குறைகளையெல்லாம் அப்போது மாணவன் உணர முடிகின்றது. பின், வகுப்பிலே அதனைப்பற்றி ஆராயும்போது வகுப்பே ஒரு சங்கப் பலகையாகிறது. சிலுவையில் அறைந்தாற்போல் வகுப்புப் பலகையின் மேல் ஆணியுமில்லாது தைக்கப் பெற்றுக் கிடக்கும் மாணவர்கள் உயிர்த் துடிப்புடைய நக்கீரர் ஆகின்றார்கள்.

மாணவர்களிடம் படைப்பாற்றல் இயல்பாகவே விளங்குகிறது. தொடக்கப்பள்ளியில் படிக்கும் மாணவர்களும் இசைப்பாட்டை எளிதில் அமைத்து விடுகிறார்கள். இதனை நம் பள்ளிக்குப் பயன்படுத்த வேண்டாவா? இயற்றமிழோடு இசைத்தமிழுமன்றோ வளரும். மாணவர்களை வெள்ளித்திரை நாடகம் போல ஓரிரு காட்சிகள் எழுதவைப்பது எளிது. அவர்களும் அதில் ஈடுபடுவார்கள். அவர்களும் மேடையில் நடிக்க வருவார்கள்; பேச வருவார்கள். வெறும் நிழற் காட்சியாக இருந்தது இவ்வாறு வாழும் சிறப்பாக மாணவரிடையே மலர வழியுண்டு.

மாணவன் அறிந்ததனையெல்லாம் அறியாத ஆசிரியன் என்ன கற்பிக்க முடியும்? அந்தக் கடைகாலை அறியாத கட்டடமே ஆசிரியன் கட்ட முயல்வான். அது அவன் தலைமேலும் மாணவர் தலைமேலும் இடிந்து விழும். மாணவர் அறிந்து கொண்டு அறியாதவற்றைத் தொடர்புபடுத்துவதன்றோ கல்வி. இவ்வாறு முன்னரே முற்றிநின்ற மரத்தின்மேல் புதிய கொடிகளைப் பரவவிட்டு மலரவைப்பதே கல்வியாகும். அவ்வாறானால் மாணவர்கள் இன்று மிகமிக ஈடுபடும் வெள்ளித்திரையாம் கடைகாலை விட்டுவிட்டு வேறெங்கோ

பொதிமண்ணில் கட்டடம் எழுப்பிப் பயனென்ன? தமிழிலக்கணத்தை, தமிழ் மரபினை மாணவரே நம்மை வற்புறுத்திக் கேட்டு அறிந்து பழகுவதற்கு வேறு வழி யுண்டோ?

இன்று உலகில் பெருங்கேடு ஒன்று பரவிவருகிறது. மனிதன் குழந்தை முதல் பிறரைப் போல் சாயல் பிடிப் பதையே இயல்பாகக் கொண்டவன். மாறாத உலகில் எளிதில் வாழக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பாக அது அமைந்தது. மணிக்கு மணி மாறிவரும் இன்றைய உலகில் கிளிப்பிள்ளைகளை வளர்த்துப் பயனில்லை. கண்ணால் கண்டதும் பொய், காதால் கேட்டதும் பொய், தீர ஆராய்ந்தறிவதே மெய் என்ற வகையில் பழகுதல் வேண்டும். இல்லையானால் பொய்யையே மெய்யென நம்பிக் கண்டவற்றையெல்லாம் வாங்கிக் கைப்பணத்தை இழப்போம்; வஞ்சகர் வலையில் சிக்குவோம்; வாயாடி களின் வம்பளப்பில் மயங்குவோம். பின் நாட்டில் செல்வமேது? அரசேது? வாழ்வேது? கலையேது? விஞ் ஞானிகளும் அடிமையாகும் இன்றைய உலகில் விடுதலை யென்பது தான் ஏது? அச்சில் வந்ததெல்லாம் அருமறை, திரையில் வருவதெல்லாம் திருநெறி என்ற நிலைமாற வேண்டுமானால் திரையுலகில்தான் தொடங்க வேண்டும். உள்ளத்தை மயக்கும் வெள்ளித் திரையைக் கண்டு ஆராயத் தொடங்குவானானால், மாணவன் மற்றெங்கும் மயங்க முடியாது. இந்நாளைய குடியரசுக் கல்வி தொடங்க வேண்டிய இடம் இது. இதனைப் புறக்கணித்தால் வேறெங்கே போவது ?

நமக்கா கணக்கு வராது ?

கணக்கென்ருல் மாணவருக்குக் கசக்கும். இதற்குக் காரணம் கணக்கு ஒரு கடுமையான பாடமென்ற எண்ணம் மாணவர்களிடையே பரவியிருப்பதேயாம். இது முற்றிலும் பொய். ஆனல் ஆசிரியர்களும் இந்த மாயப் பேயெண்ணத்தை வளர்த்துவிடுகிருர்கள். ''கணக்கு வருமா ?'' என்றே பலரும் கேட்கிருர்கள். ''யாருக்குத் தான் கணக்கு வராது ?'' என்று எல்லோரும் கேட்கிற காலம் வரவேண்டும். அந்த நம்பிக்கையில் ஒரு பெரிய மாறுதல் உண்டாகும். நம்பிக்கையில்தான் மனிதன் வாழ்கிருன். இன்றைய உலகம் விஞ்ஞான உலகம். எதனையும் அளந்து ஆராய்வதுதான் விஞ்ஞானம். எனவே இடத்தையும் காலத்தையும் அளக்கின்ற கணக்குத்தான் விஞ்ஞானத்திற்கு அடிப்படை. இன்றைய உலகில் இந்த அடிப்படையில்லாமல் எந்த அறிவும் வளர முடியாது. எனவே நம் குழந்தைகள் இதில் வல்லவர்களாக ஓங்கி வளரவேண்டும். மேனுட்டில் உயர்நிலைப் பள்ளியிலேயே நாம் கல்லூரியில் படிக்கும் கணக்குப் படிப்பையெல்லாம் மாணவர்கள் படிக்கின்ருர்களாம் அவர்களுக்கு என்ன கொம்பு முளைத்திருக்கிறதா? இல்லவே இல்லை. நம்பிக்கைதான் வளர்ந்திருக்கிறது. அங்கேயும் முட்டாள்கள் உண்டு. முட்டாள்களும் கணக்கை

நன்முகக் கற்றுக்கொள்கிறார்கள். நம் ஆசிரியர்கள் நம்மை முட்டாள்கள் என்று சொன்னாலும் முட்டாள் களும் கணக்குக் கற்றுக்கொள்ள முடியுமென்று நாம் காட்டவேண்டும். கணிதமேதை இராமானுஜம் சில ஆசிரியர்கள் சொன்னதையும், சில பாடங்களில் தேர்வில் தவறியதையும் கண்டு கணக்கை மறந்திருந்தால் கணித மேதையாக வந்திருக்க முடியுமா? மாணவர்கள் தம்மிடத் தில் நம்பிக்கை கொள்ளவேண்டும்; உழைக்க வேண்டும். மனிதனால் முடியாதது ஒன்றுமில்லை. எல்லோரும் இராமா னுஜமாகக் கல்வி உலகில் வாழ முயல்வதே இராமானுஜத் திற்கு நாம் செய்யும் நன்றி. இந்த நூற்றாண்டு விழா வின்போது நாம் இவ்வாறு நமக்காகவன்றி நாட்டுக் காகவும் உழைத்து முன்னேறக் காப்புக் கட்டிக்கொள்ள வேண்டும்.

இராமானுஜம் பிறந்த நாட்டில் கணக்கு நமக்குக் கடுமையாக இருக்க முடியுமா? சிற்பிகள் எல்லாம் கணக்குப் போட்டுத்தானே கோபுரங்களையும், அணைக் கட்டுகளையும் கட்டினார்கள். தஞ்சாவூர்க் கோபுரம் போன்றவைகளைக் கணக்கே தெரியாதவர்களா கட்டி னார்கள்? ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கோபுரம் இருப் பதைப் பார்த்தால் இந்தக் கணக்குக் கலை ஊரெங்கும் பரவியிருந்தது என்பது தெரியவில்லையா? இரண்டா யிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கரிகாலன் காவிரிக்கு அணை கட்டினானும். இதெல்லாம் கட்டுக்கதையா? புராணக் கதையா? இல்லையே; கண்ணெதிரே இவற்றை இன்றும் காண்கிறோமே.

இந்தியா பத்துப்பத்தாக எண்ணும் முறையைக் கையாண்டதோடு, பத்தாம் இடத்தைக் காட்ட ஒரு சுன்னத்தை இட்டு எழுதும் கணக்கு முறையையும் உல கத்திற்கு அளித்தது. ரோமன் முறையில் X XX XV

என்று எழுதிக் கூட்டல் கணக்குப் போடமுடியுமா என்று பாருங்கள். பூஜ்யம் என்கிறோம். கணக்கிலேயே பெரிய மாறுதலை உண்டாக்கிக் கணக்கை மிக எளிதாக்கிய இந்தப் பூஜ்யம் உண்மையில் பூஜிக்கத் தகுந்ததுதான். ஜியோமிதியிலும் இந்திய நாடு முன்னேறியிருந்தது. + என்றும்—என்றும் நாம் கூறுவதையும் பழந்தமிழர்கள் அறிந்திருந்தார்கள். 'க' முதலிய எழுத்தின் மேல் சுன்னமிட்டால் அதைக் கழித்து விடவேண்டும் அல்லது எடுத்து விடவேண்டும் என்று பொருள். அத்தகைய சுன்னமில்லாதது + எண்ணுகும்; சுன்னமிட்டது— எண்ணுகும்— அல்லது குறைவு என்பதைக் காட்டத்தான் இலக்கணத்திலும் எழுத்தின்மேல் புள்ளி இடுகிறோம். 'க' போல அல்லாது குறைந்து ஒலிப்பது 'க்' இப்படியே குற்றியலுகரத்திற்கும், குற்றியலிகரத்திற்கும் பழங் காலத்தில் புள்ளியிட்டு எழுதினார்கள்.

நம்முடைய பின்னக் கணக்கையும் பார்க்கவேண்டும். பின்னங்கள் முழு எண்கள் போலத் தெளிவாக இருப்பதற்குக் கையாண்ட முறையை நாம் ஆராய வேண்டும். பின்னங்களை இரண்டு இரண்டாகப் பிரித்துப் போனார்கள். ஆனால் வீசத்தை ஐந்தாகப் பிரித்தார்கள். வீசத்தில் ஐந்தில் ஒரு பகுதியை மா (1/80) என்றார்கள். இதில் நாலில் ஒரு பங்கு முந்திரி (1/320) இப்படியே முந்திரியின் கீழும் பின்னக் கணக்குப் போட்டார்கள். கீழரை, கீழ்க்கால் என்று கீழ் முந்திரி வரைக்கும் சென்றார்கள். கீழ் முந்திரி என்பது முந்திரியில் முந்திரி $1/320 \times 1/320 = 1/102400$ மூன்றிலேயும் ஏழாலேயும் வகுக்கும் வகையில் 21/2 என்பதால் கீழ் முந்திரியை வகுத்து அதற்கு இம்மி என்று பெயரிட்டார்கள். இம்மி என்பது 1, 075,200 பாகத்தில் ஒரு பாகமாகும் (0.0000010752). இப்படிக் கணக்குப் போடுவதைக்

கீழ்வாயிலக்கம் என்பார்கள். ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், தாமரை, வெள்ளம், ஆம்பல் என்று பேரெண்களைக் கணக்கிடுவதை மேல்வாயிலக்கம் என்பார்கள்.

இவையெல்லாம் குழந்தைகளும் அறிவதற்காக இட்ட பெயர்கள். ஆனால் பேரறிஞர்கள் எண்களையே தான் எழுதிக்கொண்டு போகமுடியும். இம்மிக் கணக்கையும், பேரிலக்கங்களையும் கடந்துபோகும் அந்தக் கணக்கு. எனவே இந்த இலக்கங்களையும் நம்முடைய மாணவர்கள் அறிந்து மகிழ்வது நன்று. எண்சுவடி, கணக்கதிகாரம் முதலியவை இந்த வகையில் மாணவர்களுக்கு இன்பமாகலாம். வாயாலேயே கணக்குப் போடுகின்ற பழக்கம் கைவரும். கணக்கை மனக் கண்ணாலேயே காண்கின்ற வழக்கமும் படிந்துவிடும். இப்படி விறகு தலையனும் கணக்கறிந்திருந்த நாட்டில் கணக்கு நமக்கு வாராமற் போகுமா? கணக்கு நம் இரத்தத்தில் ஊறியிருக்கிறது அந்தக் கணக்குலகின் ஆட்சியை ஆளப்பிறந்த நாம் கணக்கு வாராது என்கிற மாயப் பொய்யை நம்பி அந்தக் கலையரசை இழக்கவேண்டுமா ?

தமிழ்க் கண்டத்தைக் கண்டு பிடித்தல்

தமிழிலக்கியம் என்றால் தமிழ்ப் பாக்களையே நினைத்துக் கொள்கிறோம். உரைநடை நூல்களையும் இலக்கியம் என்றே கொள்ளவேண்டும். நம்முடைய மனத்தைக் கவர்ந்து சுவையூட்டுவன எல்லாம் இலக்கியமேயாம். எளிதில் உருப்போடுவதற்கும் சுருக்கமாக எழுதுவதற்கும் செய்யுள்கள் உதவுவதால் ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதிய காலத்தில் எல்லா வகையான நூல்களையும் செய்யுளிலேயே எழுதி வந்தார்கள். அதனாலேதான் நூலென்றால் செய்யுள் நடையில் இருக்க வேண்டும் என்றவொரு மயக்கம் உண்டாயிற்று. நூல்களுக்கு விளக்கம் கூறும் வகையில் நச்சினார்க்கினியர் போன்றவர்கள் அன்றுமுதல் இன்றுவரை எழுதி வருகிறார்கள். இவை உரைநடையில்தான் இருக்கின்றன. இதனாலே மற்றொரு மயக்கமும் உண்டாயிற்று. உரையென்றால் ஏதோ ஒரு நூலுக்கு விளக்கம் கூறுவதே என்ற எண்ணம் பரவியது. பாச்செய்யுளுக்கு வேறான சொற்றொடரமைப்பில் அமைவதே உரை என்பதை மறந்துவிடுகிறோம். தொல்காப்பியர் இலக்கிய அமைப்பைச் செய்யுள் என்றும், இந்தச் செய்யுள் பாவாக அமையும் பாச்செய்யுள், உரைநடையில் அமையும்

உரைச் செய்யுள் என்று இரண்டு வகையாகும் என்றும் விளக்குகிறார். பாச்செய்யுளினும் வேறான இந்த அமைப்பை உரையென்று கூறினால் பொருளில் குழப்பமே வரும் என்று எண்ணி உரைநடை என்ற தொடரை இக்காலத்தில் பயன்படுத்துகிறோம்.

இலக்கிய நயமுடைய உரைநடை நூல்கள் பழங் காலத்தில் தமிழில் மிகச் சிலவேயாம். நக்கீரர் முதலானோர் எழுதிய விளக்கங்களிலும் சில நயமுள்ள பகுதிகள் உண்டு. பாட்டின் இடை இடையே 'சிலப்பதிகாரம்', 'பெருந்தேவனார் பாரதம்' முதலிய நூல்களில் உரைநடை அமைப்பும் இருக்கக் காண்கிறோம். ஸ்ரீபுராணம் என்ற சைன நூல் உரைநடை இலக்கியமாகவே விளங்குகிறது. மேனாட்டுத் தொடர்பினாலே அச்சடித்து நூலைப் பரப்புவது எளிதாகியது. இதனைப் பயன்படுத்திக் கிறித்துவப் பாதிரிமார்கள் பல உரைநடை நூல்களை எளிய நடையில் எழுதி வெளியிட்டார்கள். "அவிவேக பூரண குரு கதை" இந்த வகையில் எழுந்த நூல்களில் சிறந்ததாகும்.

ஆகையால் உரைநடை நூல்களையும் இலக்கியமென்றே நாம் கற்க வேண்டும். உரைநடை நூல்களைப் பலர் படியாமலில்லை. ஆனால் அவற்றைப் பொழுது போக்கிற்காகப் படிக்கின்றார்களேயன்றி இலக்கியக்கண் கொண்டு கற்றுக்கொள்கிறார்கள் என்பதில்லை. பழைய தமிழாசிரியர்கள், அந்தாதி முதலியவற்றிற்குக் கொடுக்கின்ற பெருமதிப்பைத் தமிழில் வெளிவரும் சிறந்த சிறுகதைக்கோ, நாவலுக்கோ கொடுப்பார்களா என்று எண்ணிப் பார்க்கவேண்டும். சுவை மிகுந்ததே இலக்கியம் என்பது போகக் கடுமை மிகுந்ததே இலக்கியம் என்ற எண்ணம் எங்கோ நம் மனத்துள் புகுந்துகொண்டு

நம்மை அலைக்கிறது. இந்தப் பேயை ஓட்டிவிட்டால் தான் உண்மை இலக்கியத்தை உணர்ந்து சுவைக்கும் திறமை வளரும்.

இந்தக் கண்கொண்டு பார்ப்போமானால் நம் காலத்தில் எழுகின்ற உரைநடை நூல்களைக் குற்றங்காணும் கண்ணோட்டமில்லாமல் இலக்கியச் சுவையை உணர்ந்து அந்த நூல்களோடே ஒன்றுபட்டுப் படித்து மகிழும் நிலைமை வளரவேண்டும் என்பது விளங்கும். அங்கு ஒரு நூலோடு ஒரு நூலை நம் மனம் ஒத்துப்பார்க்கும்போது குறைகளும் நிறைகளும் வெளியாகும் எதிபதிலே ஐயமில்லை. இப்படிப் படிக்கும் நிலை வளருமானால் கடந்த நூற்றுண்டுகளில் வெளியாகிய உரைநடை நூல்களை இலக்கியங்கள் என்ற கண்ணோட்டத்தில் படிக்க முடியும். பிரதாப முதலியார் சரித்திரம் முதலியவற்றை மட்டும் இங்கு நாம் குறிக்கவில்லை. 'இராமாயணம்' முதலியவற்றை உரைநடையில் எழுதியவற்றிலும் இலக்கிய நயம் உண்டு. இவைபோக பல நாடோடிக் கதைகளையும், புதிய கதைகளையும் எழுதி அச்சிட்டுள்ளார்கள். பன்னிரண்டு மந்திரி கதை, விக்கிரமாதித்தன் கதை, நாலு பக்கிரி கதை என்று எத்தனையோ கதைகள் வெளிவந்துள்ளன. இவற்றின் பலவகையான போக்குகளையும் ஒப்பிட்டுப் பார்த்து மகிழலாம்.

இப்படிப் பழகும்போது பழமைக்கு அடிமையாகி விடக்கூடாது. பழங்காலத்து நூல்கள் பலவற்றைப் படித்துக்கொண்டே வரும்போது அவற்றோடேயே ஒன்றுபட்டுப் போய்க் குறைகளை மறந்து நிற்கும் நிலை உண்டாகும். அங்கேதான் பழமைக்கு அடிமையாகும் நிலை வேரூன்றிப் போகும். இந்த எச்சரிக்கையோடு படித்து வந்தால் ஏட்டுச் சுவடிகளிலே பழைய கதைகள்

இருப்பதைக் காண்போம். அவற்றில் பல சைனக் கதைகள். இலக்கணப் புலவர்கள் இதில் எங்கே பார்த்தாலும் பிழையையே காண்பார்கள். இருந்தாலும் இவையெல்லாம் அந்தக் காலத் தமிழ்ப்பேச்சின் போக்கு என்று எண்ணி அவற்றைப் படிக்கவேண்டும். இவை நம்முடைய காலத்திற்குக் கருத்தாலும் ஒட்டாதவை; பேச்சாலும் ஒட்டாதவை, அப்படி இருந்தாலும், அவற்றைப் படித்துக் குறைவு, நிறைவு காணும் மனந் தான் சுவைஞனது மனம் என்று பெயரெடுக்கும். குப்பையிலும் மாணிக்கம் மறைந்து கிடக்குமல்லவா? இவற்றைச் சுவைப்பதற்குப் பழமொழிகளிலும் விடு கதைகளிலும் நம் மனம் பழகவேண்டும். இவற்றைத தான் தொல்காப்பியர் சிறந்த உரைச்செய்யுள் என்று சொல்லியிருக்கிருர்.

உரைநடை நூல்களை இலக்கியமென்று எண்ணிப் படிப்பதோடு இதுவரையிலும் ஒதுக்கித் தள்ளப்பட்ட பழைய கதைகளையும் அச்சிலும் ஓலையிலும் தேடிப் பிடித்து அந்தந்தக் காலத் தமிழ் மக்களின் பேச்சோடும் எழுத்தோடும் ஒன்ருகி அவர்கள் உள்ளத்தை உணர்ந்து அதனேடு ஒத்துத் துடித்துத் துள்ளும் மனத்தை இன்று நாம் பெற்ருல்தான் தமிழை உள்ளபடியே அறிந்தவர் களாவோம். இதனை விளக்கவே இந்தக் கட்டுரை எழுந்தது. தமிழை அறிவதென்ருல் தமிழ் என்ற மலையின் கொடுமுடிகளை மட்டும் அறிந்தால் போதாது. பிறருக்குக் காட்டுவதற்கு அது உதவலாம். தமிழை உணர்ந்து தமிழனை முழுதும் அறியவேண்டுமென்ருல் தமிழிலக்கியத்தை முழுநோக்காகப் பார்க்கவேண்டும்.

''என்னுடைய மனைவியின் குற்றங்களும் எனக்கு இனிப்பதுபோல இந்து மதத்தின் குறைகளும் எனக்கு இனிக்கின்றன'' என்று காந்தியடிகள் ஒருமுறை

கூறினர். அதுபோலத் தமிழின் பலவகை நிலைகளும் நமக்கு இனிக்கவேண்டுமல்லவா? அப்போதுதான் தமிழ் பட்டபாடு, தமிழ் குற்றுயிரும் குலையுயிருமாக இருந்த நிலை, அந்த நிலையிலும் அது கண்ட கனவுகள், அலறிய அலறல்கள், பேசிய பேச்சுக்கள் முதலிய எல்லாம் விளங்கும்.

ஜவஹர் அவர்கள் இந்தியாவைத் தாம் எப்படிக் கண்டுபிடித்தார் என ஒரு நூல் எழுதியுள்ளார். அது போலத் தமிழன் ஒவ்வொருவனும் நாம் இங்கே விளக்கி வந்த முறையில் தமிழைக் கண்டுபிடிக்கும் ஒரு தீரச் செயலில் இறங்கவேண்டும். பொதுமக்கள் உள்ளத்தை அறிந்து உணர்ந்தாலன்றித் தமிழன்னையின் உள்ளத்தை உணர்ந்து அறியமுடியாது.

தமிழ் மரபுகள்

வரலாற்றில் மதுரை சிறந்த இடம் பெற்றிருக்கின்றது. ''சங்கம் இருந்த மதுரை! தமிழை வளர்த்த மதுரை! சிவபெருமானே தமிழில் ஈடுபட்ட மதுரை! பாண்டியர்கள் தமிழை வளர்ப்பதே சிறப்பெனக் கொண்டு அந்த வகையில் வாழ்ந்த மதுரை!'' என்ற சிறப்பெல்லாம் மதுரை பெற்றுள்ளது. அத்தகைய மதுரை மாவட்டத் தமிழாசிரியர்கள் தமிழ் வளர்க்கும் பொறுப்பினை இன்றும் ஏற்றுள்ளார்கள் என உலகம் நம்புவது தவறன்று.

தமிழைக் காப்பது ஒன்று; தமிழை வளர்ப்பது மற்றொன்று. இருந்தது இருந்தபடி காப்பது ஒன்று. இந்தப் பொருளில் காவல் என்பது உயிரில்லாத பொருள்களைக் காப்பதற்கே மிகப் பொருத்தமாகும். இக்காலத்தில் பலர் தமிழை ஓர் உயிரில்லாப் பொருளாகக் கொள்ளலாம்; கன்னித்தமிழ் என்பதனை உருவகம் என்றே எள்ளி நகையாடலாம்; ஆகவே தமிழ்க் காவலராக அமைவதே தமிழர் கடமை என்று கருதலாம். ஆனால் இத்தகைய எண்ணம் எழுவது தமிழனை விட்டுத் தமிழைப் பிரித்து எடுத்துக் காண்பதாலேயாகும். தமிழனைவிட்டுத் தமிழ் என்பது எங்கே இருக்கிறது? தமிழன் பேசுவது தமிழ். எனவே அது நின்று நிலவுவது தமிழன் நாவிலும், தமிழன் மனத்திலும், தமிழன்

எழுதும் பேணுவின் நடமாட்டத்திலுமேயாம். அவனை விட்டுத் தமிழ் வாழமுடியாது. எனவே, தமிழ் வாழ வேண்டுமானால் தமிழன் வாழவேண்டும். தமிழன் உயிருள்ள பொருளாதலால் அவனுடைய பேச்சாகிய தமிழும் அவனுடைய உயிர் விளக்கமேயாகும். எனவே, அதனைக் காப்பது என்று சொல்வதைவிடப் பிற உயிர்ப் பொருள்களைக் கூறுவதுபோல வளர்ப்பது என்றே கூற வேண்டும். குழந்தையை வளர்க்கின்றோம்; செடி கொடிகளை வளர்க்கின்றோம். அதுபோலத் தமிழையும் வளர்க்கவேண்டும் என்றே முன்னோர்கள் கன்னித்தமிழ், பச்சிளந்தமிழ் என்றெல்லாம் பாடி மகிழ்ந்தார்கள்.

காத்தல் என்பதற்குத் தீங்குவராமல் காப்பாற்றுவது என்ற பொருளும் உண்டு. இருக்கும் நிலையில் கெடாமல் காப்பது என்றபோது பிறராலும் இயற்கைச் சூழ்நிலையாலும் கெடாமல் பார்ப்பது என்ற பொருளும் தோன்றும். இங்கே பிறராலோ பிறிதாலோ வருகிற தீமையையே பலர் கருதுகின்றார்கள். ஆனால் தானேயே ஒருவன் கெடுவதுபோலத் தானேயும் ஒரு மொழி கெடுதல்கூடும். உடல் நலத்தைக் காத்துக்கொள்ளாத ஒருவன் விரைவில் இறந்துவிடுகிறான். இங்கே அவன் உடல் வளர்ச்சியைக் கருதாததே கேடாக முடிகிறது. தமிழ் மொழியும் இவ்வாறு முன்னேறி வரும் தமிழனுக்கு ஏற்ப வளராமையால் கேடுறவும்கூடும். எனவே வளர்ச்சிதான் உடன்பாட்டுநிலை. அதன் எதிர்மறை நிலையைக் கருதியே காத்தல் என்று கூறுகின்றோம். உடன்பாட்டுநிலையை மனத்தில் கொள்ளாமல் எதிர்மறை நிலையை மட்டும் பேசும்போது, வீணான குழப்பங்கள் மனத்தில் எழுகின்றன. இந்த எதிர்மறை நிலையிலேயும் தமிழைக் காப்பது என்பதற்குத் தமிழை வளர்ப்பது என்றே பொருள்கொள்ள வேண்டும்.

முன்னெல்லாம் தமிழைக் காப்பது என்பதற்கும் பொருள் வேறு. பழைய நூல்களை ஐயந்திரிபறப் படிக்க வேண்டும்; அப்படிப் படித்ததைப் பின்வரும் தலை முறைக்கு ஐயந்திரிபற விளக்கவேண்டும்; அவற்றின் விளக்கமே புதுநூல்களாகவும் அமையவேண்டும்; பழைய நூல்கள்போல எழுதவேண்டும்; அங்குள்ள சொற் றொடர்கள், கருத்துக்கள், பாட்டு வகைகள் பின் நூல்களில் இடம்பெறவேண்டும். இது அவர்கள் கண்ட காவல் முறை.

ஆனால் அது மட்டும் இன்று போதுமா? தொல் காப்பியம் கற்றுப் பழைய தமிழின் இயல்பை ஆராய்ந்து வெளியிடலாம்; தமிழின் நரம்பறிய அது உதவலாம். ஆனால் அந்தக் கடைகாலின் மேல் புதிய தமிழ் என் கின்ற குடியரசு மாளிகை அமையவேண்டாமா? எனவே, தொல்காப்பிய அறிவோடு மட்டும் நின்றுவிடமுடியாது.

''இன்றைய தமிழன் என்ன பேசுகிறான்? எப்படிப் பேசுகிறான்? எதை எதைப்பற்றியெல்லாம் பேசுகிறான்?'' என்று அறியவேண்டாமா? அவன் எழுத்து அறியாத வன்; தொல்காப்பியம் படியாதவன்; சங்கநூல் உண ராதவன் என்று அவனை ஒதுக்கித் தள்ளிவிட முடியுமா? கோடிக்கணக்கில் இருக்கின்ற இத்தமிழர்களின் மனத் திலும் நாவிலும் வாழ்கின்ற தமிழை உணராமல் தமிழாசிரியர்கள் தமிழை ஆராய்வது எப்படி? தமிழைத் திருத்துவது எப்படி? தமிழை வாழவைப்பது எப்படி?

தமிழாசிரியர் மட்டும் கூடிப் பேசி எழுதி வருகின்ற தமிழ் மட்டும்தானா தமிழ்? அந்தத் தமிழ் தூய தமிழாக இருக்கலாம். ஆனால் அது கற்றவர்கள் அல்லது தமிழாசிரியர்கள் என்ற ஒரு சிறு சாதியாரின் தமிழாகவே நின்றுவிடும். இந்தச் சாதியைத் தமிழினம்

வளர்த்துவிடக்கூடாது. அவனைப் புறக்கணித்தாலும் அவன் அறிவைத் தமிழிலேயே வளரவிடாததாலும் என்ன நேர்ந்துள்ளது? ஒரு மோட்டார் ஓட்டிய நம் தமிழன் நாள்தோறும் தன்னுடைய மோட்டாரைப் பற்றியும் அதில் உள்ள உறுப்புக்களைப்பற்றியும் பேசினால்தான் அவன் தொழில் செய்து வாழ முடியும். ஆனால் அவனைப்பற்றித் தமிழாசிரியர்கள் எண்ணியதே இல்லை. அவனுக்குச் சோறுபோடும் அப்பொருள்களைப் பழகுதமிழில் அவனோடு சேர்ந்து பழகிப் பேசத் தமிழாசிரியர்கள் விரும்பியதில்லை. அவனோடோ அந்தத் துறையிலோ பேசியவர்கள் பிறமொழியினர். அவர்கள் மொழியில் பழகுசொல்லாக இருப்பவையே இவனுக்கும் பழகு சொல்லாகிவிட்டன. அவை நாளடைவில் அவனுக்கு மிக எளிதில் விளங்கிவிடுகின்றன. இருந்தாலும் அவன் தமிழ் அன்றி வேறு ஒன்றும் அறியான். பிறமொழிச் சொல் பேசுகிறாய் என்று கூறினால் திடுக்கிடுவான். ஆதலின் அவற்றையே பழகு தமிழ்ச் சொல்லாகவே கொண்டு அலுவலகத் தோழரோடு பேசுகிறான். அவன் வாழ்வோடு ஒன்றாகிப்போன இந்தப் பொருள்களும் சொற்களும் அவனது குடும்பச் சொத்தாகிவிடுகின்றன. அவன் மனைவியும் அந்தச் சொற்களையே பேசுகிறாள். அவன் குழந்தைகளும் அந்தச் சொற்களையே பேசுகின்றன. மோட்டார்க்கார் நம்முடைய நாட்டிற்கு வந்து அரை நூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. எனவே இவ்வாறு இரண்டு தலைமுறைகள் பேசி வருகின்றன என்று நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

தமிழர் எல்லாம் தமிழாசிரியராகவே மட்டும் வாழ்ந்துவிட முடியாது. வயிற்றுப் பிழைப்புக்காகப் பல்வேறு வேலைகள் செய்து அவர்கள் உழைத்து உண்டு

மகிழவேண்டும். விஞ்ஞானம் வளர்ந்து வருகிற இந் நாளில் மோட்டார்த் துறைபோல எத்தனையோ நூறு நூறு துறைகளில் தமிழர்கள் உழைத்து வருகிறார்கள். அந்தத் துறைகளில் எல்லாம் எத்தனை ஆயிரம் ஆயிரம் சொற்கள் இவ்வாறு ஏழைத்தமிழனின் குடும்பச் சொத்தாகச் சேர்ந்துள்ளன. இவற்றை எல்லாம் இப்போது குப்பை என வாரி எறிய முடியுமா? அந்தப் பிறமொழிச் சொற்களை அவன் பேசக்கூடாது என்றால் அவன் ஊமையாகித்தானே போகவேண்டும்? அவனுடைய வாழ்விற்கே உலை வைப்பதா தமிழ்ப் பாதுகாவல்? அவனுக்கு அவை பிறமொழிச் சொற்கள் என்று எப்படித் தெரியும்? அல்லாமலும் அவனா இந்த நிலைக்குப் பொறுப்பாளி? புறக்கணித்தோர் அல்லவா பொறுப்பாளிகள்?

போனதைப்பற்றிக் கவலைப்பட்டுப் பயனில்லை. அதை மாற்றிவிடவும் முடியாது. இனிமேலாவது அப்படிப்பட்டவர்களோடு எல்லாம் தமிழாசிரியர்கள் அந்த அந்தத் துறையிலும் நெருங்கிப் பேசிப் பழக வேண்டும். அப்போது அவர்கள் விரும்பும் சொற்கள் எல்லோருக்கும் விளங்குகின்ற நிலையில் வழங்கிவரும் எல்லாக் கலையினையும் விளக்கும் இயற்கையான ஆற்றலைத் தமிழ் பெற்று வளரும். அப்போது குழந்தைகளும்கூட அரிய கருத்துக்களையும் புதிய விஞ்ஞான வளர்ச்சிகளையும் தமிழ் விளையாட்டாக விளையாட முடியும். வகுப்பறையிலும் பாடப் புத்தகங்களிலும் மட்டும் வழங்கும் கலைச்சொற்கள் தமிழொடு தமிழாகிப் பொதுத் தமிழன் வாயில் நுழைவதுமில்லை; இனிப்பதுமில்லை. எல்லாத் துறையிலும் தமிழன் வளரவேண்டுமானால் எல்லாத் துறையிலும் தமிழ் எளிதாகிநெகிழ்ந்து இன்பமாக வளரவேண்டும். எனவே, தமிழ் அறிஞர்கள் பல பகுதியாகப் பிரிந்து, எல்லாத் துறையினையும்

உணர்ந்து, எல்லாத் துறையிலும் எல்லோர்க்கும் விளங்கும் எளிய தமிழ் பேச முற்பட்டு, கற்றவர் மற்றவர் என்ற வேற்றுமையின்றி எல்லோருடனும் அன்போடு பழகி எல்லாத் துறைகளையும் வளர்த்தா லன்றித் தமிழன் முன்னேற முடியாது; தமிழும் முன்னேற முடியாது. இன்று அறிவுத்தொண்டு கல்லூரி வகுப்புத்தொண்டாக மட்டும் இருந்து பயனில்லை. உண்மை அன்புச் சமுதாயத் தொண்டாகத் தமிழ் நாடு முழுவதும் பரவவேண்டும்.

இன்று எல்லாக் குழந்தைகளும் கட்டாயமாகப் பள்ளிக்குக் கற்க வருகின்றன. உயர்நிலைப் பள்ளி முடிய இலவசக் கல்வித்திட்டம் ஏற்பட்டுள்ளதால் எல்லோரும் இனி வருவார்கள். எனவே எதிர்காலத் தமிழை இந்த இளைஞர்கள் வழியாக உருவாக்கும் பொறுப்புத் தமிழா சிரியர்களுடையதேயாம். அதற்காக நாம் மேலே காட்டியபடி எல்லாம் தமிழாசிரியர்கள் தங்களை உரு வாக்கிக் கொள்ளவேண்டும். பழைய சங்க காலத்தில் புலவர்கள் தமிழ் வளர்த்தது இப்படித்தான். அந்தப் புலவர்கள் வரிசையில் எத்தனை இனத்தினர்! எத்தனைத் தொழில் வகையினர்! அந்த நாளைய வாழ்வின் ஒவ் வொரு கூறிலும் அவர்கள் வாழ்ந்து உணர்ந்து அவற் றிற்கு ஏற்றபடி எல்லாம் எதிர்காலத்தையும் எண்ணித் தமிழை வளர்த்தார்கள். இதனை இன்று நாம் நன்றாக மனத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

இந்நாளைய இலக்கியங்களைக் கற்க வேண்டும்

தமிழ் என்றால் பழைய நூல்களே நமக்கு நினைவு வருகின்றன. அதனாலே தமிழ் கற்கும் மாணவர்களுக்குப் பாடங்களை வகுக்கும்போது பழைய தமிழ் நூல்களிலிருந்தே தொகுத்து வருகின்றோம். கீழ் வகுப்பில் படிக்கின்ற மாணவர்கள் மட்டுமே புதிய பாட நூல்களைக் கற்கின்றார்கள். அவர்களுக்கு ஏற்ற பழைய நூல்கள் இல்லாமையே இதற்குக் காரணம். புதிய பாக்களையோ கட்டுரைகளையோ தொகுப்பது என்றாலும், பாரதிபோல மறைந்துவிட்டவர்களுடைய நூல்களையே தொகுக்க முந்துகிறோம். எனவே ஆசிரியர் செத்தால் தான் அவர் நூலை மாணவன் படிக்கிறான். நூலுக்கு உயர்வு ஏற்பட்டபோதும், ஒரு தலைமுறையாவது முந்தியிருக்கின்ற நூலைத்தான் படிக்க வேண்டும் என்று எல்லோரும் எண்ணுவதுபோலத் தோன்றுகிறது.

இதிலே ஓர் உண்மை இல்லாமலும் இல்லை. புது வெள்ளம் வரும்போதே அந்த நீரை அள்ளிக் குடிப்பார் இல்லை. அது எதனை எதனையோ அடித்துக்கொண்டு வரும். பின்னர் அவை எல்லாம் கீழே தங்கிவிட, நீர் தெளிந்து விளங்கும். அதுபோல நூல்களும் பல

வகையில் வெளிவந்தாலும் ஒரு சிலவே நிலைத்து நிற்கும். காலம் என்பது நிலையானவற்றை வடிகட்டி வாழ விட்டு மற்றவற்றைப் புறத்தே தள்ளி மறையவிடுகிறது. எனவே, பழைய நூல்களை ஓதும்போது அவை காலத்தைத் தள்ளி நீந்தி வரும் நிலையான நூல்கள் என்று நாம் எளிதில் அறிந்துகொள்ள முடிகிறது.

ஆனால் காலத்தைத் தள்ளி நீந்திவரும் நூல்களை மட்டுமா பாடமாக வைக்கின்றோம்? பழக்கத்தில் இல்லாத நூல்களும், ஏதோ ஒரு காலத்தில் எழுதப்பட்டு மூலைமுடுக்கில் கரப்பானுக்கும் செல்லுக்கும் தப்பிப் பிழைத்தவையும், படிப்பார் அற்றுக் கிடந்தவையும் பழமை என்ற பேரினாலே ஒரு புதுமை பெறுகின்றமையால் அவற்றையும் பாடமாக வைக்கின்றோம். எத்தனை அந்தாதிகள், எத்தனை கலம்பகங்கள், எத்தனை உலாக்கள், இந்த வகையைச் சேர்ந்தவை! இவற்றைப்பதிப்பிப்பதோ, படிப்பதோகூடாது என்று கூறமுடியாது. நூல்தோன்றிய காலத்தை அறிவதற்கு அவை சிறந்த கருவி ஆகும். ஆனால் வரலாற்று ஆராய்ச்சியில் நோக்கம் இல்லாது சுவையுள்ள இலக்கியங்களையே கற்று மகிழ்ந்து மனம் திருந்த வேண்டும் என்ற நோக்கம் உள்ளவர்களுக்கு இத்தகைய நூல்கள் உதவுமா என்பதையே நாம் கருத வேண்டும். தமிழில், மாணவர்கள், சுவைதான் வேண்டும் என்று விரும்பும்போது இத்தகைய நூல்கள் அவர்களுக்கும் பயன்படுமா என்பதே கேள்வி.

இதனால் வழக்கு ஒழிந்த பாடல்களைச் சுவையுள்ளவையானாலும் கூடப் பாடமாக வைத்தல் ஆகாது என்று கூறமுடியாது. வழக்கு ஒழிந்தன என்று கூறும்போது முழுவதும் வழக்கு ஒழிந்தன என்பது இல்லை. ஒரு சில காலங்களில் அப்போதுக்கப்போது எழும் பலவகைப்

போக்கின் காரணமாகச் சில நூல்களில் ஈடுபாடு குறைய லாம். சங்க நூல்கள் ஒரு காலத்தில் இத்தகைய நிலைக்கு வந்தன. இவற்றில் ஈடுபட்டுக் கற்ற சுவாமிநாத தேசிகரே தொல்காப்பியர், திருவள்ளுவர், கோவை என்ற மூன்று நூல்களைக் குறிப்பிட்டுவிட்டுப் ''பத்துப்பாட்டு முதலியவற்றைப் படிக்கின்றார்களே!'' என்று வருந்துகிறார். பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப் படை என்ற சைவ நூல் ஒன்று இருப்பதையுங்கூட அந்த நிலையில் அவர் மறந்துவிடுகின்றார். அன்றியும் அடி மையும், வறுமையும், பட்டினியும், கொடும் பிணியும் மக்களை வறுத்திய அந்தக் காலத்தில் தமிழ் நூல்களைப் படிப்பதும் அருமையாயிற்று. அப்போது படிப்பதற்கு அருமையான சங்க நூல்களைப் படிப்பவர்களின் எண் ணிக்கை குறைவாகவே இருந்திருத்தல் வேண்டும். அத னோடு பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழ் நூல்களை இந்த நாட்டார் அச்சில் பதிப்பித்தல் ஆகாது என்ற சட்டமும் ஒன்று வந்தது. இந்த நிலையில் சங்க நூல் போன்றவை மறையத் தலைப்படுவதில் வியப்பு ஒன்றும் இல்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற் பகுதியிலும் புராணம் கலம்பகம் முதலியவற்றில்தான் கற்றோரின் மனம் ஈடுபட்டது. மற்றவர்கள் கீர்த்தனை, நாடகம் முதலியவற்றைச் சுவைத்து வந்தார்கள். அத்தகைய நிலையில் சங்கப்பாக்கள் போன்ற சுவை யுள்ள இலங்கியங்களில் மக்கள் மனத்தை ஈடுபடச் செய் வதும் ஒரு சிறந்த தமிழ்த்தொண்டாம். இவ்வாறே சுவையுள்ள பகுதிகளைப் பொதுவாக மக்கள் மறந்த காலத்து அவற்றை மீண்டும் நினைவூட்டுவது மிக மிக வேண்டத்தக்கது ஆகும். எனவே சங்கநூல்களைப் பதிப் பித்தவர்கள் சிறந்த தமிழ்த் தொண்டே செய்தார்கள் என்று கூறவேண்டும்.

ஆனாலும் இங்கே மற்றொன்றையும் காணலாம். எளிமையில் மனம் ஈடுபட்டாலும், வெற்றி காண விரும்பும் மனப்போக்கு அந்த எளிமையைச் சிறப்பாகக் கருதுவது இல்லை. எவ்வளவுக்கு எவ்வளவு அருமை இருக்கின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதனைக் கற்றுத் தேர்வதில் ஓர் ஈடுபாடு எழக் காண்கிறோம். தங்களுடைய அறிவை அந்த அருமையான நூல் அறை கூவி அழைக்கின்றது. சவால் விடுகின்றது—என்று கருதி அவர்கள் அதனோடு எழும் போராட்டத்தில் முனைந்து ஈடுபடுகின்றார்கள். இந்த மனப்பான்மைதான் அந்தாதி முதலிய கற்களையும் மென்று தின்னவும் முயன்றது. சங்க நூல்களிலும் பழைய வழக்கு என்ற அருமைப்பாடு நம் அறிவை அறைகூவிப் போராட்டத்திற்கு அழைக்கின்றது எனலாம். ஆனால் இதில் ஈடுபட்ட பொழுது, எதிர்பாராத வகையில் நமக்கு பலாப்பழமும், வாழைப் பழமும், மாம்பழமும் கிடைத்ததுபோல இந்த அருமைக்குள் மறைந்து நின்ற இன்பச் சுவையும் வெளிப்பட்டு இன்பம் ஊட்டியது.

எனவே, பழமையோ அருமையோ பாராமல் சுவை ஒன்றினையே கருதி இலக்கியத்தில் மக்கள் உள்ளத்தை ஈடுபடுத்தவேண்டும். இலக்கியம் கற்க வரும்போது பிறவற்றைக் கருதிப் பயன் இல்லை. வரலாற்றைப் படிக்கும்போதும், இலக்கிய வளர்ச்சியைக் கற்கும் பொழுதும், இலக்கணத்தை ஆராயும்போதும் பிற பிற நூல்களைக் கற்கவேண்டிய கட்டாயம் எழலாம். இவை எல்லாவற்றிலும் வேறானதே இலக்கியக் கல்வி என்பதை நாம் உணர்தல் வேண்டும். "இலக்கியம் என்றால் என்ன?" என்பதை உணராததாலேயே இலக்கிய வரலாற்றை எழுதும்போதும், நிகண்டு வரலாற்றையும், இலக்கண வரலாற்றையும் சமய வரலாற்றையும், எல்

லாம், இலக்கியம் என்ற கண்கொண்டு காணுது பிற கண்கொண்டு எழுதிப் படித்துத் துன்புறுகின்ரேம். ஒவ்வொன்றனையும் வெவ்வேறு பிரித்து ஒவ்வொன்றன் சிறப்பினையும் கண்டு அறிதல் வேண்டும்.

இவ்வாறு சுவையையே அடிப்படையாகக் கொண்டு இலக்கியத்தைக் கற்கும்போது பழமை என்ரே புதுமை என்ரே, கற்றவர் பாட்டு என்ரே கல்லாதவர் பாட்டு என்ரே, சிறு நூல் என்ரே பெரு நூல் என்ரே பார்க்க வேண்டுவதில்லை. "சுவை உள்ளதா?" என்பதே ஆராய்ச்சி. "அந்தச் சுவையை மாணவன் துய்க்க முடியுமா?" என்பதே கேள்வி. அதனை அனுபவிக்கும் வகையில் அதனை விளக்குவது ஒன்றுதான் அங்கு ஆசிரியர் செய்ய வேண்டிய கடமை. இந்த வகையில் இலக்கியத்தைக் கற்பிக்கின்ரேமா? கற்பிப்பதில் வெற்றி பெறுகின்ரேமா? வெற்றி பெறவில்லை என்ருல் அதன் காரணம் என்ன ? வெற்றி பெறுவதற்கு எனன வழி? இப்படி எல்லாம் நாம் ஆராயவேண்டும். இலக்கியம் என்பது சுவையின் அடிப்படையில் எழுவது என்ருல் மாணவனே தானுக உண்மையில் சுவைத்து அறியக் கூடிய நூல்களை அவன் எதிரில் வைத்தல் வேண்டும். சுவை என்னும்போது, போலிச் சுவை அல்லாமல் உண்மையான சுவையைத்தான் குறிக்கின்ரேம். அந்த உண்மையான சுவையைப் பிரித்து அறிய நம் மாணவனுக்கே தெரிதல் வேண்டும். இங்கேதான் இன்றைய இலக்கியங்கள் பயன் தரும். இன்று எழுகின்ற சிறந்த இலக்கியங்களில் ஈடுபட்டு வரும்போது சிறப்பில்லாத பகுதிகளை மாணவன் தானுகவே உணர்ந்து கொள்கின்ருன். அவன் உணராத போதும் அந்த அந்தப் பகுதிகளை மாணவர்கள் ஒன்று சேர்ந்து ஆராயும்போது அந்தந்தப் பகுதிகளின் உயர்வு தாழ்வு எளிதில் விளங்கி

வருகின்றன. இன்றைய நூல்களை மாணவர்கள், ஆசிரியரது உதவி பெரும்பான்மையும் இன்றியே ஆராயக்கூடும். ஆசிரியர்களைவிட இந்த நூல்களில் மாண வர்களுக்கும் பழக்கம் உண்டு. இந்த நாளில் நூலில் இருப் பதைக் கற்று ஒப்புவித்தால் போதாது. அது முன் காலத்திற்கு ஒத்ததாக இருந்திருக்கலாம். இன்றோ தான் கற்றதனைத் தான் வாழும்உலகிற்கும் தன்னுடைய வாழ் விற்கும் தொடர்பு படுத்தி அதனைத் தன்னுடைய தாகவே ஆக்கிக்கொண்டு மாணவன் வாழவேண்டும். அத்தகைய நிலை நாம் முன் கூறியபடி இலக்கியத்தைச் சுவைப்பதோடு இல்லாமல், சுவையின் அடிப்படையினைப் பிற மாணவர்களோடு கூடி ஆராய்வதாலேயே எழக் கூடும். இந்த நிலை பழைய நூல்களை முதலிலேயே கற்பிப்பதால் எழவே எழாது. முதலில் அந்தப் பழைய நூல்கள் மாணவனுக்குப் பழக்கமான நூல்கள் அல்ல. அவற்றை அறிந்து கொள்வதற்கு ஆசிரியரின் துணை வேண்டும். சொல்லின் பொருளை அறிய ஆசிரியரை நம்புவது போல அதன் சுவை அழகை அறிவதற்கும் அவ ரையே நம்பவேண்டி இருக்கும். ஆனால் மாணவன், தான் அறிந்த இன்றைய இலக்கியங்களில் பழகி ஆராய்ந்தபின், அவனிடம் பழைய நூல்களைத் தந்தால் அவற்றை அவன் அறிந்த முறைப்படி ஆராய்ந்து அவற்றையும் துய்க்கக் கூடும். எனவே, பழைய நூல்களைக் கற்கலாகாது என்பது இல்லை. அவை கற்க வேண்டிய காலத்தைப் பற்றித்தான் இங்கு கருத்து வேற்றுமை உண்டு. இக் கால இலக்கியத்தைக் கற்றுப் பழகிய பின்தான் அவற் றைக் கற்கவேண்டும் என்பதே இங்கு நாம் வற் புறுத்துவது.

மற்றொன்றும் உண்டு. இலக்கியம் நம்மோடு ஒன்றாகி விடுதல் வேண்டும். அத்தகைய நிலைமை இக்

கால இலக்கியத்திற்குத்தான் நூற்றுக்கு நூறு உண்டு. முற்கால இலக்கியங்கள் எவ்வளவு சிறந்தவை யானாலும் அவற்றில் வரும் நடை வேறுபாடு, சொல் வழக்கின் வேறுபாடு, அந்த அந்தக்காலத்தின் எண்ணங்கள் முதலிய வற்றின் வேறுபாடு இல்லாமல் இருப்பதற்கு இல்லை. இவை எல்லாம் உள்ளே ஆழத்தில் பொதிந்து நிற்கும் சுவையை முதலில் மாணவர் காணுதவாறு செய்கின்றன. எனவே, இன்றைய இலக்கியத்தைப்போல அந்த நாளின் இலக்கியத்தை எடுத்த எடுப்பிலேயே மாணவர் சுவைக்க முடியாது.

அவை உயர்ந்த இயற்கை இலக்கியங்கள் ஆனாலும் நம்முடைய இன்றைய மனநிலையையும் மொழி நிலையையும் நோக்க அவை செயற்கை இலக்கியங்கள் ஆகிவிடுகின்றன. எனவே அவற்றைப் படித்த உட னேயே அவற்றின் உயிர்த்துடிப்பை அறிந்துகொண்டு துய்ப்பதற்கு இல்லை. வாழைப்பழமும், பலாப்பழமும், தேங்காயும் போலவே முதலில் தோன்றுகின்றன. அங்கு எழும் தடைகளை நீக்கினால் அவை இனிக்கும் என்பதில் தடை ஒன்றும் இல்லை. ஆனால் அங்கு இருப்பது உள்ளிருக் கும் சுவையா? மேலிருக்கும் தடையா? சுவைக்கத்தான் போகிறோமா? தடையோடு ஈடு கொடுக்கத்தான்போகின் றோமா? நாம் உண்டு சுவைக்கப்போகின்றோமா? பிற ருக்கு விலைக்குத் தரும் ஆரவாரத்திற்காகப் போகின் றோமா? முதலிலேயே அவற்றைப் படிக்க முந்தும்போது இவற்றில் ஒன்றும் விளங்குவதில்லை. இன்றைய இலக்கி யத்தில் இலக்கியச் சுவை இன்னது என்பதைத் தானு கவே மாணவன் சுவைத்து ஆராய்ந்த பின் இவற்றையும் ஆராய்ந்து தெளிவது எளிது.

ஆனால் கல்வி முழுவதும் எளிமையாக முடிய வேண்டும் என்பதில்லை. வாழ்க்கை எளிமையாக விளங்

காது அருமையாகவே விளங்குகிறது. ஆதலின் எளிமை யில் மட்டும் பழகியவன் உலகின் அருமைக்கு ஈடு கொடுக்க முடியாது. ஆதலின் மாணவனை அருமையிலும் ஈடுபடச் செய்ய வேண்டும். என்றாலும் அருமையா, எளிமையா என்பதை நோக்காமல், அவற்றை உலகின் போக்காகக் கொண்டு வெற்றி பெற்று அமைதி அடைவதே வாழ்க்கையாம். அப்படியானால், அந்த வளர்ச்சி யின் அமைதியினை முதலிலிருந்து நாம் அறிவதற்கு வழி காட்டுவது இலக்கியமே ஆம்.

உலகில் எழும் இடர்ப் பாடுகளின் இடையே இயல்பாகப் பொங்கும் மனக் கொந்தளிப்புகளை ஒரு முகப்படுத்தி அவற்றிற்கு எல்லாம் அங்கே ஒரு வழியும் காட்டி ஆழ்ந்த அமைதியினை நம் மனம் பெறுவதனைக் காப்பியம் முதலியவற்றைப் படிக்கும்போது நாம் காண்கிறோம். அவ்வாறு பழகியபின் அந்த மனப் போக்கு உலகின் இடையேயும் எழும் இத் தகைய நிலைகளில் ஈடுபடக்கூடும் என்று கருதுகின்றோம். எனவே இலக்கியம் வெறும் பொழுதுபோக்கு அன்று. வாழ்க்கையை வாழக் கற்பிக்கும் சிறந்ததொரு இன்பப் பள்ளிக்கூடம். இத்தகையதொரு பள்ளிக்கூடமாக அது அமைய வேண்டுமானால் உண்மைச் சுவையை மாணவன் உணர்வதற்கு வழி செய்யவேண்டுமேயன்றி, அருமை பெருமைகளைப் பற்றிப் பேசிப் பயன் இல்லை.

ஆனால் கல்வியில் சிறந்தவர்கள் என்று தம்மைக் கருதுகின்றவர்களில் பலர் அருமையோடு போராடுவதை மட்டுமே சிறப்பாகக் கருதுகின்றார்கள். பிறரும் அவர் களையே பாராட்டுகிறார்கள். இந்த நிலையில் தான் திரிபு, யமகம் முதலியவற்றை அளவு கடந்து பாராட்டுகின்ற நிலை எழுகிறது. உயர்ந்த நடையில் எழுதுவதுதான் உயர்வு என்றும் பலர் கருதிவிடுகின்றார்கள். சுவையை

அடியோடு மறந்து விடுகின்ற நிலை இங்கேதான் எழுகின்றது.

போரைப்பற்றிச் சொல்லின் ஒலியே பொருளை விளக்குவது போன்ற சில இடங்களில் சொல்லணிகளுக்குத் தக்க இடம் இருந்தாலும் அந்தத் தகுதியை மட்டும் கருதாது எல்லா இடங்களிலும் சொல்லணிகளைப் பாராட்டுகின்ற ஒரு நிலை இங்கே எழும்போது இது சுவை ஆராய்ச்சியால் எழுந்தது என்று சொல்வதற்கில்லை. சுவைக்கு ஏற்ற தகுதிப்பாடு ஒன்றும் இன்றி அலங்கார நூல் கற்றதன் பயனாகப் பல அணிகள் வரப் பாடுவதனை நோக்கமாகக் கொண்டு பொருளணியையும் பலர் பாடக் காண்கிறோம். கம்பனும் சிலபோது இதற்கு இரையாகின்றான். காலத்தின் கோலம் யாரை விடுகின்றது. இத்தகைய நிலையில் ஒரு செயற்கை நடையையே இலக்கிய நடை என்று நம்புகின்ற காலக் கோளாறு சில சில போது எழும். அப்போது பேச்சு நடையினும் வேறானது இலக்கிய நடை என்ற எண்ணம் தோன்றுகின்றது. சுவை என்ற உயிர் இருக்கின்றதா, இல்லையா என்ற ஆராய்ச்சியை விட்டுவிட்டு அருமையையே அப்போது நாடிச் செல்கின்றோம்.

இதன் பயனாக இலக்கிய அறிஞர்களும் அப்போது அப்போது அருந்தமிழ் நடையைச் செந்தமிழ் நடை எனக் கருதி மயங்கியது உண்டு. அப்போதுஎல்லாம் பொதுமக்கள் அத்தகைய இலக்கியத்தைச் சுவைக்க முடியாத நிலை ஏற்பட்டது. சங்கத் தமிழ் நடையிலேயே பல்லவர்கள் காலத்தில் எழுதியவர்களும் உண்டு. அதனால் திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார் போன்றவர்கள் பொதுமக்கள் பேசிய தமிழில் சுவை நிரம்ப எழுதி அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தார்கள். உலகு எல்லாம் வாழவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். ஒரு சிலர்தான் உயரக் கூடும்

என்பது உண்மையாகலாம். ஆனால் ஒரு சிலருக்காகத் தான் நாம் உழைக்கவேண்டும் என்பது உண்மையாகாது. இந்த நுட்பத்தை அறிந்தவர்கள். ஆழ்வார்களும், நாயன்மார்களும். இந்த உண்மையை அறிந்தவர்கள் தாம் பிற்காலத்தில் பள்ளு, நொண்டி நாடகம் கீர்த்தனை குறவஞ்சி நாடகம் முதலியன எழுதியவர்களும் இந்த உண்மையை அறிந்ததால்தான் இராமலிங்க சுவாமிகளும் கீர்த்தனைகளும் கும்மிகளும் பாடியுள்ளார். இந்த உண்மையின் நுட்பத்தை நாம் அறிவோமானால் இலக்கியத்தின் உயிர் நாடி சுவையில்தான் இருக்கின்றது என்பதை உணர்வோம்.

இங்கு நாம் கூறிய இலக்கியங்களைப் பெரும் புலவர்களில் சிலர் இலக்கியமாகக் கருதவில்லை. மணிவாசகர் பாடிய சாழல், தெள்ளேணம் முதலியவற்றை இழிமக்கள் பாட்டு என ஒரு சூத்திரம் கூறுகிறது. இது பழங் கதை அன்று. கோபாலகிருஷ்ண பாரதியார் பாடிய நந்தனார் கீர்த்தனையைப் படித்துப் பார்த்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் அதனை ஒரு பொருள் எனக் கருதவில்லை. அதற்குக் காரணம் அது பேச்சு நடையில் இருந்ததேயாம். ஆனால் அதே பாடல்களை அந்தப் பாரதியார் இசையில் பாடிக்கொண்டு இருப்பதைக் கேட்ட பிள்ளை அவர்கள் தம்மை மறந்து வியந்தார்களாம். அதிலுள்ள பக்திச் சுவை அவர் உள்ளத்தை உருக்கியது. அதற்குப் பின்னர் அதற்குச் சாற்றுக்கவி எழுதிக் கொடுத்தார்களாம். எனவே இலக்கியம் என்பது நம் உள்ளத்தை உருக்கும் சுவையில்தான் இருக்கிறதேயன்றிக் கல்வித் திறம் விளக்கும் கடுந்தமிழ் நடையில் இல்லை என்று உணர்தல் வேண்டும்.

பிள்ளை அவர்கள் பாடிய புராணங்களில் பல செய்யுள்கள் தமக்கே விளங்கவில்லை என அவருடைய தலைமாணாக்கரான திராயகராய செட்டியார் அவர்கள் முறையிட்டார்

களாம். நமக்கும் தெரியாமல்பாடுகின்ருர் இந்தப் புலவர் என்பதில் பெருமை உள்ளதா, எதிர்க்கின்ற மனத்தை யும் அவர் வழிப்படுத்தி உருக வைத்துப் பாடுகின்ருர் என்பதில் பெருமை உள்ளதாஎன்பதே கேள்வி? இப்படிக் கேட்கும்போது விடை ஒன்ருகத்தான் இருக்க முடியும்.

எனவே சுவை என்ற கருவியே இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அப்போதும் இன்று நம்மோடு ஒன்ருகி நிற்கும் இன்றைய இலக்கியங்களில் முதலில் பழகி இலக்கியம் என்ன என்பதை உணர்வது எளிமை ஆகும். பின்னர் பழைய இலக்கியங்களில் அருமை என்பது வேண்டாம் என்பதில்லே. மலேமேல் ஏருமல் கீழேயே இருக்க வேண்டும் என்பதில்லே. ஆனுல் ஒரேயடியாக மலேயின் கொடுமுடிக்கு மனிதன் பறந்து போக முடியாது. படிப்படியாகத்தான் ஏறிப்போக வேண்டும். அதனுல்தான் எளிமையிலிருந்து படிப்படி யாக அருமையில் ஈடுபடுதல் வேண்டும். இங்கும் அருமை என்பது கற்பதற்கு அருமை மட்டுமன்று. சுவை ஆழம் நிறைந்ததே உண்மையான அருமைப்பாடு என்பதனே நாம் மறத்தல் ஆகாது. இத்தகைய இலக்கியக் கல்வியில் காப்பியமும், சங்கப் பாக்களும் போன்றவற்றிற்குப் போல நாடோடிப்பாடல்கள், கீர்த்தனேகள், நாடகங்கள், பாடுதுறைப் பாடல்கள், சித்தர் பாடல்கள் முதலிய வற்றிற்கும் இடம் உண்டு. இவற்றிற்கே முதலில் இடம் உண்டு என்று கூறுவதே இந்தக்கட்டுரையின் நோக்கம். இதனேத்தான் பன்னிரு திருமுறைகளும், நாலாயிரத் திவ்ய பிரபந்தமும், இராமலிங்கசுவாமிகள் பாடல்களும், பாரதியார் பாடல்களும் நமக்கு விளக்குகின்றன. எனவே இந்த வழியில் பாடல்களேத் தொகுப்போமே யானுல் மாணவர்கள் இலக்கியத்தில் சிறப்பதோடு உலகத் திலும் முன்னேறி நிற்பார்கள் என்பதில் ஐயம் இல்லே.

இலக்கணம் ஏன் கற்கவேண்டும்?

இலக்கணம் என்ற சொல் படாதபாடு படுகிறது; படாதபாடு படுத்துகிறது. இலக்கணம் என்றால் தொல்காப்பியமும் நன்னூலும் அதன் உரைகளுமே ஒரு சிலருக்கு நினைவு வருகின்றன. இவற்றை அறியாமல் போனால் தமிழ் இயல்பினை எவ்வாறு அறிய முடியும் என்று பலர் எண்ணுகின்றார்கள். அவற்றைக் கற்கின்ற மாணவர்களோ இவற்றைப் படிக்கின்ற பெருந் தொல்லை ஏனோ என்று திகைக்கின்றார்கள். 'கு' என்பது தன்மை ஒருமை விகுதி என்றும், 'கும்' என்பது தன்மைப் பன்மை விகுதி என்றும் அறிந்துகொள்வதால் இன்றைய தமிழின் இயல்பு விளங்குமா என்று அவர்கள் ஐயப்படுகின்றார்கள். இன்றைய தமிழைக் கற்பது வேறு; பழந்தமிழைக் கற்பது வேறு. இந்த உண்மையை நாம் மறந்துவிடுகிறோம். கன்னித்தமிழ், மாறாததமிழ் என்றெல்லாம் பேசி, ''பழந்தமிழ்தான் இன்றைய தமிழ் ஆகவும் வழங்குகிறது'' என்று பலரும் மனப்பால் குடிக்கின்றார்கள்.

அப்படிப் பழந்தமிழை அறிவதற்குத் தொல்காப்பியமும், நன்னூலும் உதவுவதாய் இருந்தாலும், பல உரைகளைப் படித்து மனத்தைக் குழப்பிக்கொள்வானேன்? இந்தக் கேள்விக்கும் தக்க விடை மாணவர்களுக்குத் தோன்றுவதில்லை. ஒரு மொழியில் உள்ள பல

வேறு அமைப்புகளை ஓர் ஒழுங்குமுறையாகச் சீர்படுத்தி விளக்க முயல்கின்றோம். இந்த விளக்கம் நாளடைவில் சிறந்து வரலாம். தமிழ் வழக்கில் ஒருவர் காணாததை மற்றொருவர் கண்டு நிறைவு செய்யலாம். அதுவுமன்றி அவர் அவர்கள் எழுதிவந்த காலத்திற்கு ஏற்ப எழுந்த மாறுதல்களையும், அவர் அவர்களின் உரைகளின் வழியே நாம் அறியலாம். ஆனால் இந்த இரண்டு போக்கிலும் நாம் அறிவது என்ன? ஒன்று, இலக்கணக் கொள்கையின் வரலாறு அல்லது இலக்கணக் கொள்கையின் திருத்தப்பாடு. மற்றொன்று, மொழி வளர்ந்த வரலாறு.

ஆனால் இவற்றிற்காகவே தொல்காப்பியத்தையும், உரைகளையும் கற்பிக்கின்றோம் என்று மாணவர்களுக்கு நாம் கூறுவதில்லை. அதனாலே இவற்றை எல்லாம் ஏன் படிக்கிறோம் என்பதே மாணவர்களுக்கு விளங்கவில்லை. எனவே, பழந்தமிழை அறியவேண்டியதற்காக இலக்கணம் கற்கும் முறைவேறு; இன்றைய தமிழை அறிவதற்காக இலக்கணம் கற்கும் முறை வேறு. இலக்கணக் கொள்கையின் வரலாற்றை அறிய இலக்கணம் கற்பது வேறு; ஒரு மொழியின் வரலாற்றால் அம்மொழியில் ஏற்படும் மாறுதல்களை வரலாற்று முறையே உணர்ந்து வகைப்படுத்துவதற்கு வேண்டி இலக்கண நூல்களைக் கற்பது வேறு. எனவே, "எதற்காக இலக்கணம் கற்கிறோம்? அதற்காக இலக்கணத்தை எப்படிக் கற்பது?" என்று ஆராய்ந்து முடிவுசெய்தல் வேண்டும். எந்த எந்த மாணவர்க்கு எது எது வேண்டுமோ அது அதனை அதுஅதற்குரிய வகையில் கற்பித்தல் வேண்டும். எல்லாவற்றையும் ஒன்றாக்கிக் குழப்புதல் கூடாது.

தமிழ் அமைப்பை அறியவே, தமிழ் இலக்கணம் கற்கும்பொழுதும் குழப்பங்கள் உண்டு. பலரோடு

பேசவும், எழுதவும் கற்றுக்கொடுப்பது இலக்கணம் என்கிறார்கள். தமிழ்க் குழந்தை இலக்கணம் கற்றுக் கொள்ளும்போது அதற்குத் தமிழ் நன்றாகப் பேச வரும்; பிறமொழியைக் கற்கும்போதோ, அதற்குப் பேசத் தெரியாது.

இங்கே நம்முடைய நோக்கம் தங்கு தடையின்றிப் பேசப் பழகுதலேயாம். பழக்கமே இங்கு வேண்டுவது. நீந்தக் கற்றுக்கொள்வதற்கு வேண்டிய பழக்கம்போல இங்கும் பேசுவதற்கான பழக்கமே எழ வேண்டும். நீந்தியே பழகுதல்போல இங்கும் பேசியே பழகுதல் வேண்டும்.

இங்கே இலக்கணம் எவ்வாறு உதவும்? நீந்தத் தெரிந்தவர் நீந்தத் தெரியாதவர்க்கு நீந்துவதன் நெளிவு சுளிவுகளைக் கற்பிப்பதுபோல, பேச அறிந்த ஒருவர் பேச அறியாதவர்க்கும் ஒலி முறைகள், சொல்லமைப்பு முறைகள், வாக்கிய அமைப்பு முறைகள் என்ற இவை எல்லாம் நன்றாகப் பழக்கத்தில் பதிந்துவிடுவதற்காக அவ்வவற்றிற்கு ஏற்ற பயிற்சி முறைகளைக் கற்பித்தல் வேண்டும். இந்தப் பயிற்சி முறைகளை ஒழுங்கு செய்யும்போது அவருக்கு மொழியின் அமைப்பு—அதன் இலக்கணம்—தெளிவாக விளங்கி இருத்தல்வேண்டும். அந்த அமைப்புமுறை பயிற்சியின் வழியே பழக்கமாகிவிடும்போது கற்கின்ற மாணவர்களுக்கும் அந்த அமைப்புமுறை விளங்கிவிடுதல் வேண்டும்.

மாணவர்கள் ஆறு அறிவு உடைய மனிதர்கள். நாய் நீந்தக் கற்றுக்கொள்வதுபோல் அன்று மனிதன் நீந்தக் கற்றுக்கொள்வது. மனிதன் பழகும் போது சொற்கள் வழியே விளக்கம் பெறுகிறான். அடிப்

படை அமைப்பு விளக்கிஞல் அறிவு விளக்கம் பெருவது எளிது ஆகிறது. இந்த அமைப்பு முறையின் விளக்கம் தான் இலக்கணம். இது, பேச்சு என்ற செயல்முறையாக விளங்குவதற்குத் தக்க முறையில் அமையவேண்டும். பயிற்சிகளின் வழியே இது விளங்கிவருதல் வேண்டும். இலக்கணத்தை எவ்வாறு கற்பிப்பது என்பது இதஞல் நன்கு விளங்கும். இங்கு அமைப்பை மட்டும் சொற்களால் விளக்கிஞல் போதாது. அந்த அமைப்பே பேச்சாகக் கைவரவேண்டும்.

மொழியியல் மாணவர்கள் பல மொழிகளின் அமைப்புகளே ஒப்பிட்டு ஆராய்கின்ருர்கள். அதஞல் அவர்கள் அந்த மொழிகளே எல்லாம் பேசிப் பழக வேண்டும் என்பது இல்லே. ஆகவே அப்படிப்பட்டவர்கள் பயிற்சிகள் ஒன்றும் இன்றி அந்த அந்த மொழி அமைப்பின் விளக்கங்களேச் சொல்வடிவாக அறியலாம். எனவே, இந்த மொழியியல் அறிஞர்களே, ஒரு மொழியைப் பிறர் அறிவதற்காக அமைக்கும் பயிற்சிகளே உருவாக்குவதற்கு அந்த மொழியின் அமைப்பினேச் சொல்வடிவாகச் சுருக்கி விளக்கலாம்.

ஒரு மொழியைக் கற்றுத்தேர்ந்த அறிஞனும், அந்த மொழியின் அமைப்பினே இவ்வாறு சுருக்கி விளக்கலாம். இங்கே கூறிய மூன்று வேறு நிலேகளில் இலக்கணம் கூறுவது ஒன்று; மொழியைப் பேசப் பழகுகின்றபோது கற்கின்ற, கற்பிக்கின்ற இலக்கணம் வேறு. முன்னேய மூன்று நிலேகளில் அறிவு முறை இலக்கணமே போதும்; கடைசி நிலேயில் செயல்முறை இலக்கணமே வேண்டும். ''இலக்கணம் கற்பிக்க வேண்டுமோ?'' என்று கேட்கும் போது இந்த வெவ்வேறு நிலேகளே மனத்தில் வைத்துக் கொண்டால் கேள்வியிலும் குழப்பம் இராது; விடை

யிலும் குழப்பம் இராது. நேர்முகமாக இலக்கணம் கற்பிப்பதா, மறைமுகமாக இலக்கண்ம் கற்பிப்பதா என்ற போராட்டம் எழவேண்டுவதில்லே. இரண்டுக்கும் மேலே காட்டியபடி அங்கங்கே இடம் உண்டு.

இலக்கண அமைப்பை விளக்கும்போது இலக்கண விதிகள் சட்டங்களேபோலும் எனப் பலர் கூறி வருகின்றனர். இலக்கண விதிகள் என்று பேசுகின்ருர் கள். ''இந்த விதிகளைத் தொல்காப்பியரும், நன்னூலாரும் ஏற்படுத்திவிட்டுப் போனுர்கள்; அதனுல் அவற்றை மீறுதல் ஆகாது'' என்பதுபோலப் பேசுகிருர்கள். இலக்கண விதியை மீறுவது சட்ட விதியை மீறுவதுபோலப் பெருங்குற்றம் என்றும், பெரும் பாவம் என்றும்கூடச் சிலர் விளக்குகிருர்கள். இங்கே இரண்டு வேறு எண்ணங்களைக் காணலாம். ஒன்று, மொழி மாருது என்றும், ஒரே தன்மையாக விளங்குவது என்றும், எண்ணுவது என்றும் உளதென்தமிழ், கன்னித் தமிழ், தெய்வத்தமிழ் என்று தமிழினை வாழ்த்தி அதன் சீர் இளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்து கிருேம். மற்ருென்று, இந்த மொழியின் அமைப்பினை—இலக்கணத்தை—ஆண்டவனே அகத்தியரோ வகுத் தருளித் தந்துவிட்டதால் அந்தத் தெய்வீக அமைப்பினை மாருது காத்துவருதல் வேண்டும் என்பது. எனவே, மாருத அந்தத் தெய்வீக அமைப்பின்படி பேசுவதோ, எழுதுவதோ பிழைபடா நிலே ஆம். அதற்கு மாருகப் பேசுவதோ, எழுதுவதோ பிழை ஆம். பிழையற்ற நிலேயை அறிய இலக்கண விதிகளை அறிதல் வேண்டு மாம். இது ஒரு கொள்கை.

ஆனுல் தமிழோ அப்படி எங்கும் என்றும் ஒரே நிலேயில் விளங்கவில்லே. நாட்டிற்கு நாடு தமிழ் வழக்கு மாறிவருகிறது; சாதிக்குச் சாதி மாறி வருகிறது;

காலத்திற்குக் காலம் மாறிவருகிறது. எனவே, மாருத நியதி என்பது இல்லே. 'கடிசொல் இல்லேக் காலத்துப் படினே' என்று தொல்காப்பியரே பாடுகிருர்.

செந்தமிழ்ச் சொல்லேயன்றி திசைச் சொற்களேயும், வட சொற்களேயும் செய்யுள் ஈட்டச்சொல் என அவர் பாடுகின்ருர். நன்னூலாரும், "பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவில கால வகையினுனே" என்று கூறித் தன்னுடைய நூலே முடிக்கிருர். இதனுலேயே தொல்காப்பியர் கூறும் பல விதிகளே நன்னூலார் கூற வில்லே. ஆனுல் இந்த மாற்றம் இயல்பாக எழுகின்றது என்று கொள்ளாமல், ஏதோ ஒருவர் தம்முடைய தெய்வத் தன்மையாலோ, அறிவின் ஆழத்தாலோ மாற்றி அமைத்து விடுகின்ருர் என்று எண்ணுதல் கூடாது. அவ்வப்போது அங்கங்கே வழங்கும் மொழியின் அமைப்பினே உணர்ந்து இலக்கணப் புலவர்கள் விளக்க வருகிருர்களேயன்றி அவர்கள் ஒன்றும் புதிய சட்டங்கள் இயற்றுவதில்லே. உண்மையில் புதிய சட்டம் இயற்று கின்றவர்களும் காலம் மாறியதற்கும், மக்கள் எண்ணம் மாறியதற்கும் ஒத்துவரும் நிலேயில், பெரும்பான்மை யும் எல்லோரும் ஒத்துக்கொள்ளும் வகையில்தான் சட்டம் இயற்றுகின்ருர்கள். பழக்க வழக்கங்களின் கருத்து மாற்றமே சட்டமாற்றத்திற்குக் காரணம் ஆம். எனவே, வழக்கு மாற்றமே இலக்கண மாற்றத்திற்கும் காரணம் ஆகும்.

ஆதலின் நன்னூல் வகுத்த விதி, தொல் காப்பியம் வகுத்த விதி என்று பேசுவதற்கு இடம் இல்லே. அவ்வப்போது பேச்சிலும் எழுத்திலும் கண்ட இலக்கியத்திற்கு ஏற்ப அவர்கள் இலக்கணம் காண்கிருர்கள். இதனே நன்னூலாரே விளக்கமாகக் கூறுகிருர். ஆனுல் இவ்வாறு கொள்ளாது இலக்கணப்

புலவர்கள் பழையவற்றைக் கழித்துவிடுகிருர்கள் என்றும் புதியனவற்றைப் புகுத்திவிடுகிருர்கள் என்றும் விதிமுறை இலக்கணத்தை நம்பிய இலக்கண விளக்கம் பாடுகிறது. பழையன தாமே கழிகின்றன; அவற்றைக் கழித்துத் தள்ளுவாரில்லே. புதியன தாமே புகுகின்றன; அவற்றைப் புகுத்துவார் இல்லே. அவர் வழக்குகளில் காண்பனவற்றை விளக்குகிருர்களே அன்றித் தாமே விதி ஒன்றும் செய்வது இல்லே. எனவே, விதிமுறை இலக்கணம், விளக்கமுறை இலக்கணம் என்ற இரண்டு வேறு கருத்துக்களில் விளக்கமுறை இலக்கணமே இன்று பொருள் உடையது ஆகிறது.

இலக்கண விதி என்ருல் யாரோ இடும் கட்டளே இது என்று எண்ணவேண்டுவது இல்லே. ஒரு மொழியில் பொதுவாக வருகின்ற நியதியையே அது குறிக்கும். பலரும் பேசி வருகின்ற அமைப்பு முறையினேயே அது விளக்கும்.

தமிழ் மொழியில் பயனிலே வாக்கியத்தின் கடைசியில் வருகிறது. இது கடவுள் படைத்த விதி அன்று. ஆங்கிலத்தில் அப்படி வருவது இல்லே. தமிழ் வழக்கினே அறிந்து, பயனிலேயானது சொற்ருெடரின் முடிவில் வருகிறது என்று தமிழ் இலக்கணம் கூறும். இது உள்ளத்தைக் கூறுவது அன்றித் தகுதியைக் கூறுவது அன்று. ஒரு வழக்கினிடையே தோன்றும் இத்தகைய ஒருமைப்பாட்டை அல்லது நியதியையே மரபு அல்லது இலக்கணம் என்று அறிஞர்கள் கூறுகின்ருர்கள்.

பேச்சு, தனி மனிதனுடைய போக்கு அன்று; கூட்டுறவு வாழ்க்கையின் போக்கு ஆகும். எனவே, மொழி என்பது சமுதாய நிலேயம் ஆகும். ஒருவர்

பேசும்போது மற்ருெருவர்க்கு அப்பேச்சு விளங்க வேண்டும். ஒருவர் கண்ட பொருளிலேயே மற்ருெருவரும் ஒரு சொல்லைப் பயன்படுத்திப் பேசவேண்டும். அந்தக் கூட்டத்தில் ஒருவர் பேசுகின்ற சொற்றொடரின் போக்கினை மற்றவர்களும் அறிய வேண்டுமானுல் இத்தகைய மரபு நிலை விளங்கவேண்டும் அல்லவா?

நாம் பேசக் கற்றுக்கொள்ளத் தொடங்கும்போது இருந்த நம்முடைய மொழியின் மரபு நிலையை நம்மையும் அறியாமல் உணர்ந்து கொள்கிருேம். நம்மையும் அறியாது கற்றுக்கொண்ட மரபுநிலையை நாம் அறியும் வண்ணம் விளக்குவதே இலக்கணம். இந்த மரபுநிலை தெரியாது பேசினுல், நாம் பேசுவது பிறருக்குவிளங்காது அல்லது நாம் பேசுவது கண்டு பிறர் எள்ளிநகையாடுவார்கள். எனவே, இங்கே இந்த இருவேறு தண்டனைகள் உண்டு. இப்படி எழும் கட்டாயத்தின் காரணமாகவே நம்முடைய பேச்சு நம் உள்ளத்திலிருந்து நமக்கே உரிய தற்கிழமைபோல் எழுந்தாலும், சமுதாயப்பேச்சு வடிவமாகவே அமைந்து சமுதாயத்தில் பிறருக்கே உரிய பிறிதின்கிழமையாகவும் விளங்குகிறது.

மொழி என்பது சமுதாய நிலையம் என்ருேம். அதனுலேயே தனிப்போக்கிற்கு இடம் இன்றி இலக்கணப் போக்கிற்கு இடம் ஏற்படுகிறது. ஒரு சமுதாயத்தில் உண்ணும் முறையும், உடுக்கும் முறையும் சமுதாயத்திற்கு ஏற்ப தனிமகன் போக்காக அமைவதுபோல மொழியும் சமுதாயப் போக்கிற்கு ஏற்பத் தனிமகன் பேச்சாக அமைகிறது.

பஞ்சாயத்தும் பல்கலைக் கழகமும்

ஊராட்சி, பழைய காலத்திலிருந்து தமிழ் நாட்டில் நிலைபெற்று வந்துள்ளது. அரசர்கள் மாறலாம்; புரட்சிகள் பொங்கலாம்; ஆனால் ஊராட்சி தொடர்ந்து நிலைபெற்று வந்ததால் இவை எல்லாம் வெறும் மேலாரவாரமாகவே ஒழிந்தன. மக்கள் வாழ்வு பழமைபோல ஒரு படித்தாகவே சிறந்துவந்தது. ஊரில் உள்ள ஆளுங் கணத்தார் ஊர்ச்சபையாக ஒன்றுகூடி இயங்குவதோடு நில்லாமல் பலபல சிறு குழுக்களாக 'வாரியங்கள்' என்ற பெயரில் தனித்தனி பிரிந்து ஊராட்சியின் துறைகள் ஒவ்வொன்றைக் கண்காணித்து வந்தனர். பெரும்பாலும் ஒவ்வொரு வாரியமும் ஐந்துஐந்து பேர்களைக் கொண்டு விளங்கியது. அதனால் பஞ்சாயத்து என்ற பெயர் பழக்கத்தில் வந்தது. பஞ்சாயத்து என்ற சொல் ஒரு அழகிய கருத்தை நமக்கு நினைப்பூட்டுகிறது. கட்சிப் பூசல் இன்றி நடுநிலையாக நிற்பதே பஞ்சாயத்து என்ற எண்ணம் நிலைத்துவிட்டது. இந்தக் காலங் கண்ட பயிரை இன்று தோன்றி உள்ள பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து ஒன்றிப்புகளும் அந்தப் பழைய பெயருடனேயே மேல் ஓங்கச் செய்யும் என்பதில் ஐயம் ஒன்றும் இல்லை.

இருபதாவது நூற்றுண்டு, அறிவுலகில் எத்தனையோ துறைகளில் முன்னேறி விளங்குகிறது. ஆனால் நம்

முடைய நாட்டு மக்களோ இந்த அறிவோட்டப் பந்தயத்தில் மிகப் பின்தங்கிவிட்டார்கள். இப்பொழுது கூட மிகச் சிலரே பல்கலைக் கழகங்களில் கற்று வருகின்றார்கள். அவர்களிலும் சிலரே ஆராய்ச்சி உலகில் சென்று உலவுகின்றவர்கள். இந்த நிலையில் நம்முடைய பஞ்சாயத்து அரசு அறிவுலகில் பயன் எல்லாம் பெறுவது எப்படி? இந்தக் கேள்வியே இப்பொழுது எழுகிறது.

மக்கள் விழித்துக் கொண்டார்கள்; பள்ளிக் கூடங்கள் பெருகுகின்றன. சில இடங்களில் எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்குப் போகின்றன. அவர்கள் எல்லோரும் நாளடைவில் உயர்ந்து கல்வி கற்று உலகிற்கு வழிகாட்டிகளாக வரலாம். ஆனால் அதுவரையிலும் பிற பஞ்சாயத்து மக்கள் இருள் உலகிலா வாழவேண்டும்? இன்று அறிவுதான் பேராற்றல்; அறிவுதான் மேலேற்றத்திற்குச் சிறந்தவழி; அப்படியானால் அந்த அறிவு வெள்ளம் பஞ்சாயத்து மக்களிடையே பரவாமலே போக வேண்டுமா?

இப்படி எண்ணிப் பார்க்கும்பொழுது ஒரு கருத்துத் தோன்றுகிறது. இன்று கற்றவர்கள் ஒரு சாதியாகவும், கல்லாதவர்கள் ஒரு சாதியாகவும் அவர்களையும் அறியாமலே புழங்கி வரக் காண்கிறோம். அறிவு இவ்வாறு வருந்தத் தக்க வகையில் நம்மைப் பிரிக்கும் ஒரு பெரிய இரும்புச் சுவர் ஆகிறது. கற்றவர்கள் மற்றவர்களோடு கூடிக்குலாவி அறிவு உலகில் இன்புறுவதற்கும் வழி ஏற்படுவதில்லை. சமுதாயப் பிளவுகளே பல்கிப் பெருகுகின்றன. எனவே, அறிவு உலகில் புகாத பஞ்சாயத்து மக்களே அன்றிப் புகுந்த மக்களும் இவ்வாறு வருந்தவே செய்கின்றார்கள். இந்த வருத்தம் தீரவேண்டுமானால் கற்றவர்கள் தம்முடைய நன்மைக்காகவே கல்லாதவர்களின் இருளைப் போக்கி அறிவு ஒளி

கொண்டுவந்து, மற்றவர்களோடு கூடிக் குலாவ வேண்டும். எனவே, இது கற்றவர்கள் மற்றவர்களுக்குச் செய்கிற தொண்டு என்று மட்டும் கருதுதல் ஆகாது. தம்மைத் தாமே வாழவைத்துக் கொள்ளுதற்குச் சிறந்த வழி என்று இதனை எண்ண வேண்டும். அவ்வாறே மற்றவர்களும் கற்றவர்களிடத்திலிருந்து தாம் மட்டும் நன்மை பெறுவதாகக் கருதாமல் கற்றவர்க்கும் இந்த வகையில் தாமும் நன்மை செய்வதாகக் கருதுதல் வேண்டும். அப்போது இரு திறப்பட்டாரும் ஒன்று கூடி அறிவு பெற்று ஒருவரை ஒருவர் வாழ்வித்துக் கூட்டுறவு உலகை வளர்க்கின்ற உண்மை தோன்றும். மேல் என்றும் கீழ் என்றும் பேச அப்போது இடம் இருக்காது.

கற்றவர்கள் கற்றது வெறும் படிப்பளவில் இருந்தால் பயன் இல்லை. இன்று படிப்பது எல்லாம் உருப் போடுவதாக முடிகிறது. படிப்பதை ஆராயவோ, பிறரோடு கலந்து பேசவோ இடம் இல்லாமல் போய் விடுகிறது. படிப்பதைப் பிறருக்கு எடுத்து விளக்கும்போதுதான் நம்முடைய அறிவு விளக்கம் பெறுகிறது. எனவே கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கற்கின்றவர்கள் தாம் கற்றவற்றை அண்டை அயலில் உள்ள ஊரில் வாழும் மக்களோடு கலந்து பேசும்போது உண்மையில் அவர்களுடைய கல்வி வேர் ஊன்றி நிலை பெறுவதோடு வீட்டுக்கல்வியாகவும், நாட்டுக் கல்வியாகவும் வளர்ந்து அவர்களுக்கே உரிய உடைமையாகவும் நிலைபெற்று விடுகிறது. ஊர் மக்கள் கல்லாதவர்களாக இருக்கலாம். ஆனல் அவர்கள் வாழ்வின் நுட்பங்களை அறிந்தவர்கள். அவர்கள் கற்றவர்கள் கொண்டுவரும் ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவுமா என்று ஆராய்ந்து பார்த்துக் கற்றவர்களுக்கே வாழ்க்கையின் நுட்பத்தைக்

கற்றுத் தந்துவிடுவார்கள். இந்த வகையில் இரண்டு திறத்தாருக்கும் நன்மையே விளையும்.

அறிவு உலகிலேயே கற்றவர்களோடு மட்டும் கற்றோர் புழங்கிவரும்போது தாங்கள் கற்ற சொற்றொடர்களையே பயன்படுத்திப் பேசுவது வழக்கம். அப்படிக் கல்லாதவர்களோடு பேச முடியாது. அப்போது சொல்லில் மட்டும் ஈடுபட்டுப் பயன் இல்லை. அந்தச் சொல்லின் முழுப் பொருளையும் நாம் உணர்ந்து நம்முடையதாக்கிக் கொள்ள வேண்டும். பின்னர் அதனைக் கல்லாதவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் விளக்க வேண்டும். அப்போது நம்முடைய கல்வி சிலர் பழிப்பதுபோல வெறுஞ் சொற் கோவையாக நின்று விடாமல் பொருள் ஆழம் உடையதாகும்; நம்முடைய சுற்றுப் புறச் சூழலோடு பொருந்தி வளர்ந்து நமக்கும் பிறருக்கும் இனிக்கும். எனவே, கல்லூரியில் கற்போருக்கு இவ்வாறு தம்முடைய கல்வியை வளர்த்துக் கொள்வதற்கு பெரியதொரு வாய்ப்பு உண்டு.

பல கல்லூரிகள் நம்முடைய நாட்டிலே இப்போது தோன்றி வருகின்றன. கல்லூரி மாணவர்கள் சமுதாயத் தொண்டினைத் தம்முடைய கல்வியின் ஒரு பகுதியாகக் கொண்டு நிறைவேற்றி வருகின்றார்கள். அண்டை அயலில் உள்ள ஊருக்குச் சென்று சமுதாய ஆராய்ச்சி, பொருளாதார ஆராய்ச்சி, பேச்சு மொழி ஆராய்ச்சி முதலியவற்றையும் செய்து வருகின்றார்கள் ஆனால் இங்கு எல்லாம் அவர்களுக்கு முழு ஒத்துழைப்பும் கிடைக்கின்றது என்பதற்கு இல்லை. ஏதோ இரண்டொரு நாள் வந்து போகும் விளையாட்டாகவே பொதுமக்கள் இதனைக் கருதுகின்றார்கள். அவ்வாறு இல்லாமல் எந்நாளும் நிலைத்து நிற்கும் தொடர்பாக

இது மாறுதல்வேண்டும். அப்போதுதான் சமுதாயத் தொண்டும் சிறக்கும்; ஆராய்ச்சியும் ஆழம்பெறும்; நாம் முன் விளக்கிய கூட்டுறவு அறிவுலகமும் தோன்றும்.

இங்கே பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து ஒன்றிப்பு களும் துணைசெய்யலாம். பஞ்சாயத்துத் தலைவர்கள் கல்லூரி மாணவர்களோடும், ஆசிரியர்களோடும் உறவு கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒரு சில பஞ்சாயத்துக்கள் என்று எற்பாடு செய்துகொண் டால் நலம் ஆகும். அப்போது ஆசிரியர்களும் மாண வர்களும் அந்தப் பஞ்சாயத்துக்களில் வந்து தாங்கள் கற்றதனை ஊர் மக்களோடு கலந்து எண்ணி விளக்கிப் பரிமாறி மகிழலாம்.

கல்லூரிகளும் இதனை வரவேற்கலாம். அப்போது கல்லூரி தனித்து நில்லாது பஞ்சாயத்து வாழ்வோடு ஒன்றுகிச் செயற்படும். பஞ்சாயத்து இளைஞர்களும் குழந்தைகளும் கல்லூரி வாழ்வு வாழவேண்டும் என்று பிறந்ததிலிருந்தே எண்ணுவதற்கு ஒரு வழி ஏற்படும். பிறநாடுகளில் உள்ள ஊர்களும் சிற்றூர்களும் எவ்வாறு முன்னேறி வருகின்றன என்பதை அறிந்து நம்முடைய ஊர்களும் சிற்றூர்களும் அந்த வகையில் முன்னேற ஊக்கம் பெறலாம். கல்லூரியில் பெறும் சிறந்த அறிவு விளக்கம் இப்படி ஒவ்வொரு ஊரிலும் ஊர் விளக்க மாகப் பரவுவதற்கு வழி உண்டாகவேண்டும்.

முன்னெல்லாம் 'கோயில் இல்லாத ஊரில் குடி இருக்கவேண்டாம்' என்று பாடினர்கள். அதற்குக் காரணம் கோயில்கள் அந்த நாளில் சமயம், அரசியல், ஊராட்சி, கலை, கல்வி, மருத்துவம், ஏழ்மை நீக்கம் முதலிய வாழ்வின் துறைகள் பலவற்றிற்கும் நடு நாயக மாகிய பொது நிலையமாக விளங்கியதே ஆம். எனவே

இன்று கல்லூரியைக் கோயில் ஆக்கப் பஞ்சாயத்துக்கள் ஈடுபடவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கோ, பஞ்சாயத்து ஒன்றிப்புக்கோ ஒரு கல்லூரி என்ற முறை பரவவேண்டும். அவர்களே ஒரு கல்லூரியை நிலை நாட்டும் காலம் பின் வரலாம். ஆனால் இன்று அண்டை அயலில் உள்ள கல்லூரிகளை இந்தத் தொண்டிற்கு வரைந்து கொள்வது நல்லது ஆகும். அது கல்லூரிக்கும் நல்லது ஆகும்.

இதனைக் கல்வி உலகம் அறிந்து உள்ளது. பல்கலைக் கழகங்களைச் சிறப்புடன் நடத்துவதற்கு நடுவிந்திய துரைத்தனம் விரும்புகிறது. அதற்கு எனப் பணத்தைச் செலவிடுகிறது. இதனைச் சிறந்த முறையில் செலவிடு வதற்காகப் பல்கலைக்கழகங்களை நடத்தும் செயல் முறையில் சிறந்தவர்களை ஒரு குழுவாக அமைத்து அத னிடம் பணத்தை ஒப்படைத்துள்ளது. பல்கலைக்கழக மானியக் குழு என்பது இதன் பெயர். இந்தக் குழு இப்போது கொண்டு வரும் திட்டத்தில் ‘சமுதாய விரிவுப்பணி’ என்பது ஒன்று. இதன்படி பல்கலைக் கழக ஆசிரியர்கள் அண்டை அயல் ஊர்களில் போய்ச் சொற் பொழிவு ஆற்றி வருதல் வேண்டும். எனவே இங்கு நாம் கூறி வந்த தொண்டு பல்கலைக்கழக வாழ்விற்கு இன்றியமையாதது என்பதை மேல் இடத்தாரும் நம்பு கிறார்கள் என்பது விளங்குகிறது. எனவே, இதனை ஏதோ ஆண்டிற்கு ஒருமுறை நடைபெறும் சடங்காக விட்டுவிடாமல் பஞ்சாயத்து ஒன்றிப்புகள் அக்கறை காட்டி அன்றாட நடைமுறையாகக் கொண்டு வர வேண்டும்.

பரங்கிப்பேட்டைக்கு நல்ல வாய்ப்பு உண்டு. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலை அரசரின் நல்லெண்ணத்தின் விளைவாகப் பரங்கிப்பேட்டையின்

அருகே கலைக்கோயிலாக வளர்ந்துள்ளது. பரங்கிப் பேட்டைக்குப் பழஞ் சிறப்பு உண்டு. மகமது பந்தர் என்ற பெயரில் பழங்காலத்தில் சிறந்த துறைமுகமாக விளங்கிய பெருமை உண்டு. மிகச் சிறந்த போர் வாள்களைச் சிறந்த எஃகில் உலகிற்குச் செய்து தந்த பெருமையும் இதற்கு உண்டு. இதனாலேயே பின் வந்த போர்த்துகீசியர்கள் இதனைப் பிடித்துக்கொள்ளப் பரங்கிப் பேட்டை என்ற பெயர் வந்தது. இங்கு வாழ்பவர்கள் கடலோடி வாணிகம் செய்பவர்கள். மரக்காயர்கள் பலர் இங்கு உள்ளனர். 'மரக்கலராயர்' என்பதே மரக்காயர் என்று திரிந்தது என இவர்களில் சில பெரியோர்கள் சொல்ல நான் கேட்டதுண்டு. எனவே பரங்கிப் பேட்டை மக்கள் உலகு அறிந்த மக்கள்.

இங்கு வெள்ளாறு பாய்கிறது. வெள்ளாறு கடலோடு கலக்கும் இடத்தே பல வகை மீன்களும் பல உயிர்ப்பொருள்களும் மிகப் பழங்காலத்தை நினைவூட்டிக் கொண்டு இன்றும் இருக்கின்றன. எனவே, இவ்விடம் கடல்வாழ் உயிர்களை ஆராய்வதற்கு ஏற்றது என்பதனை அண்ணாமலைப்பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. சேஷையா அவர்கள் உணர்ந்தார்கள். கீழ் நாட்டிலேயே சிறந்த கடல்சார் உயிரியல் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முன் நாம் கூறிய பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவி கொண்டு வளர்த்து வருகின்றது.

எனவே, பரங்கிப் பேட்டைப் பஞ்சாயத்து ஒன்றிப்பு இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். பிற பஞ்சாயத்து ஒன்றிப்புக்களுக்கு ஏதோ ஒரு கல்லூரி கிடைக்கலாம். அதனால் பரங்கிப் பேட்டைக்கோ ஒரு பல்கலைக் கழகம் கிடைத்துள்ளது. இத

ஞே நெருங்கிய தொடர்பு கொண்டால் இரு திறத்தா ருக்கும் நன்மை உண்டு. நல்ல காலமாக உலகம் சுற்றி, உலகம் போற்ற, உலகினை அறிந்த பேரறிஞர், பெருங் கலைஞர், பெரிய அரசியல்வாதி இந்த அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இன்று வீற்றிருக் கின்ருர். அறிஞர் சி. பி. இராமசாமி ஐயரின் தலைமை யில் இத்தகைய தொண்டு சிறந்து மலர இடம் உண்டு. இந்தப் பெரிய வாய்ப்பினைப் பரங்கிப்பேட்டைப் பஞ்சாயத்து ஒன்றிப்புத் தலைவர்கள் பயன்படுத்தி உலகிற்கு வழிகாட்டுவார்களாக.

பிரெஞ்சு இந்திய நிலையம்

இந்தியாவில் தமிழ்நாடு பெரும்பான்மையும் ஆங்கிலேயர் ஆட்சியிலும் சிறுபான்மை—அதாவது புதுச்சேரியிலும், காரைக்காலிலும் பிரெஞ்சு ஆட்சியிலும் இருந்து வந்தது. இப்போது இந்தியா உரிமை பெற்று விளங்குகிறது. இருந்தாலும் வரலாற்றின் பயனாக எழுந்து வளர்ந்த மேனாட்டுத் தொடர்பை நாம் மறந்து விடுதல் ஆகாது. உரிமைக்கு நேரிடக்கூடிய பகைமையை என்றும் விழிப்பாக இருந்து களைந்து எறிதல் வேண்டும். ஆனால் மேனாட்டுத் தொடர்பே உரிமை எண்ணத்தை நம்மிடத்தில் வளர்த்தது என்பதை மறத்தல் ஆகாது. உரிமையை இழந்ததால் அன்றோ உரிமைக்குப் போராடினோம். மற்றும் ஒன்று உண்டு. ஆங்கில நாட்டுப் பாராளுமன்றமும், சட்டத்தின் ஆட்சி முறையும் ஜனநாயகம் என்கின்ற மக்களாட்சி முறையும் இன்றும் நமக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளன. சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்ற மந்திரங்களை உலகெல்லாம் பரப்பியதோடு இந்தியர் உள்ளத்திலும் அவற்றை நிலைநாட்டி அவற்றிற்காக உலகத்தில் எங்கும் போராடும் ஊக்கத்தையும் பிரெஞ்சுப் புரட்சி விளைவித்துள்ளது. பாரதியார் இந்த மந்திரத்தின் உள் ஆழத்தை நன்கு அறிந்து பாடியவர். பாரதியார் பல நாட்கள் வாழ்ந்த புதுச்சேரி அந்த வகையில் புதிய உரிமைத்

தமிழ் அன்னையின் கோயில் எனலாம். பிரெஞ்சு மொழியும் ஒரு சிறந்த மொழி. அதன் அமைப்பு ஒருவகையில் நாம் அறிந்து உணர்ந்து மகிழத்தக்கது. எனவே பண்பாட்டு உலகிலும், கலை உலகிலும், அறிவு உலகிலும் தமிழ்நாடு பிரெஞ்சு அறிஞர்களோடு தொடர்பு கொண்டு வாழ்தல் இன்றியமையாததாகும்.

பிரெஞ்சு ஆட்சியை எதிர்த்த மனப்பான்மைக்கு இனிஇடம் இல்லை. அந்த ஆட்சி இன்று ஒழிந்துவிட்டது. பிரெஞ்சு மக்களிடத்தில் வேறு வகையில் நமக்குப் பகைமை இல்லை. காமஸ், ரொமைன் ரோலண்டு போன்றார் எழுதிய எழுத்துக்கள், கியூரி அம்மையார் போன்றாரது விஞ்ஞான ஆராய்ச்சி முதலியன எல்லாம் நாம் விரும்பி வரவேற்று அவற்றின் வழி நடந்து மேலும் மேலும் உயர்வதற்கு அவர்களுடைய மொழி வழி காட்டுகிறது.

இந்த வகையில் நம் நாடு பிரெஞ்சு அறிவுலகத்தோடு தொடர்புகொண்டு வாழவேண்டும் என்பதை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முன்னரே அறிந்துள்ளது. பிரெஞ்சுத் துரைத்தனத்துத் தொடர்பு கொண்டு புதுச்சேரியில் விளங்கும் இந்திய நிலையம் இந்த வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தோடு ஒத்துழைக்கின்றது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து அறிஞர்கள் தமிழ் கற்பிக்க அந்த இந்திய நிலையத்திற்கு செல்வதற்கு ஏற்பாடு இருந்தாலும் இப்போது அதற்குத் தேவை இல்லை. அங்கேயே தாகூர் கல்லூரி எழுந்து ஓங்கி வளர்ந்து வருகிறது. ஆனால் இந்திய நிலையத்தார் பிரெஞ்சு மொழியினை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கற்பிக்க உதவும் தொண்டிற்கு இன்றும் என்றும் இடம் உண்டு. அதனை அவர்கள் செய்து வருகிறார்கள்; வருவார்கள்.

புதுச்சேரி மக்கள் முன்பு எல்லாம் பாரிசுப் பல்கலைக் கழகத்தோடு தொடர்புகொள்ளப் பக்கோலோரியா (பி. ஏ) என்ற தேர்வு எழுதிப் பட்டம் பெற்றுவந்தனர். ஆனால் அந்தப் பட்டத்தைச் சென்னை போன்ற பல்கலைக் கழகங்கள் பி. ஏ. வோடு ஒத்தது என முன்னே ஒப்புக் கொள்ளவில்லை. இதனால் புதுச்சேரி மக்கள் மனம் வருந்த இடம் உண்டாயிற்று. அவர்களில் பலர் பூனா முதலிய இடங்களில் சென்று படித்தார்கள். சிலர் பிரெஞ்சு நாட்டிற்கே சென்று கற்கத் தொடங்கினார்கள்.

இந்த மனவருத்தம் நாட்டிற்கு உகந்தது இல்லை என்பதனை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் திரு. தி. மு. நாராயணசாமிப் பிள்ளை உணர்ந்தார். அவர் நினைத்த சில திட்டங்கள் நிறை வேறுமலே இருந்தன. ஆனால் இன்றைய துணைவேந்தர் அறிஞர் சி. பி. இராமசுவாமி அய்யர் இந்தத் திட்டம் தேசீய ஒருமைப்பாட்டிற்கு இன்றியமையாதது எனக் கண்டார். ''பக்கலோரிய'' என்ற பட்டம் பெற்றவர்கள் பிரெஞ்சு எம்.ஏ. படிக்க உரிமைஉண்டு என்று கண்டார். பிரெஞ்சு எம்.ஏ.வுக்காக மாணவர்கள் படிப்பதற்கு 1963ஆம் ஆண்டிலிருந்து வழிவகை செய்தார். தென்னிந்தியாவில் முதல் முதல் இவ்வாறு ஏற்பாடு செய்த பல்கலைக்கழகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகமேயாம். புதுச்சேரி மாணவர்கள் இப்போது இங்கே பிரெஞ்சு மொழியில் எம். ஏ. தேர்வுக்காகக் கற்று வருகின்றார்கள்.

இந்தத் திட்டத்திற்கு உதவியாக இருப்பது பிரெஞ்சு துரைத்தனத்தின் தூது நிலையமாம். அவர்கள் பேராசிரியர் சரவணம் அவர்களை இப்பகுதிக்குப் பேரா சிரியராக தங்கள் செலவில் அனுப்பிவைத்து உதவு கின்றார்கள். மேலும் சில ஆசிரியர்களை வரவழைத்து

உதவுவதற்கு அவர்கள் முயன்று வருகின்றார்கள். பல பிரெஞ்சு நூல்களைப் பிரெஞ்சுத் துறைக்கும், மொழியியல் துறைக்கும் அவர்கள் உதவி உள்ளார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறை ஒன்று வளர்ந்து வருகிறது. அனைத்திந்திய உயர்நிலை ஆராய்ச்சி நிலையங்களில் இதனையும் ஒன்றாக இந்தியப் பல்கலைக்கழக மானியக்குழு உயர்த்திவைத்து உதவியுள்ளது. மொழியியல் துறை இப்போது அமெரிக்காவில் மிக முன்னேறி உள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இந்தத் துறையில் உள்ள சிலர் அமெரிக்காவில் சென்று பயிற்சி பெற்றவர்கள். இருந்தாலும் இந்தத் துறை பிரெஞ்சு நாடு உட்படப் பல நாட்டு மொழியியல் துறை வளர்ச்சியையும் இந்திய பழம்பெரும் வளர்ச்சியோடு ஒன்றாக இணைத்து ஆராய முற்பட்டுள்ளது. இதற்கும் புதுச்சேரி இந்திய நிலையத்தாரின் துணை உண்டு. பஸான்சாங் போன்ற பிரஞ்சுப் பல்கலைக்கழகங்களில் போல அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் பிரஞ்சு மொழியில் சில மாதங்களில் பேசக் கற்றுக்கொடுக்கும் திட்டம் ஒன்றும் உருவாகி வருகிறது. பிரஞ்சு மொழியியற் பேராசிரியர்களின் தொடர்பினை ஒரு சில காலமேனும் பெறவேண்டும் என்ற பேரவாவும் இப் பல்கலைக்கழகத்திற்கு உண்டு. இவற்றை எல்லாம் புதுச்சேரி மக்களும், புதுச்சேரிப் புதிய துரைத்தனமும் அறிந்து ஆவனசெய்தல் வேண்டும்.

புதுச்சேரியில் உள்ள இந்திய நிலையம் இந்திய நாட்டு மரம்கொடிகளை எல்லாம் கணக்கு எடுத்து அவை இருக்கும் இடத்தை இந்தியப்படத்தில் காட்டி ஆராய்ந்துள்ளது. இந்த ஆராய்ச்சியில் நம்முடைய பல்கலைக் கழகங்களும் ஒத்துழைக்கலாம். இந்தியாவில்

உள்ள சிற்பங்கள், விக்கிரகங்கள் முதலியவற்றைப் புகைப்படம் பிடித்துத் திரட்டிவரும் தொண்டும் அங்கே நிகழ்கிறது. நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட புகைப் படங்கள் அங்கே திரட்டப்பட்டுள்ளன. இவற்றையும் நம்மவர்கள் பயன்படுத்தி அந்நிலையத்தோடு ஆராய்ச்சியில் ஒத்துழைக்கலாம். இந்நிலையம் சைவசித்தாந்த ரௌரவ ஆகமத்தை வெளியிட்டுள்ளது. ஆகமங்களையும் தலபுராணங்களையும் ஆராய்ந்து வருகிறது.

அந்த நிலையம் சங்க நூல்களில் வரும் சொற்களுக்கு ஓர் அகராதி தொகுத்து வருகிறது. 3,00,000 சீட்டுக்கள் இதுவரை திரட்டப்பெற்றுள்ளன. சொல், சொல்வரும் இடத்திற்கு மேற்கோள், அப்பகுதி வரும் இடம், சொல்லிற்கு ஆங்கிலத்திலும், பிரெஞ்சிலும் மொழி பெயர்ப்பு, தமிழில் பொருள்—இவ்வளவும் தோன்ற இந்த அகராதி அமையும் என அறிகிறோம். இதுவும் ஒரு சிறந்த முயற்சி. தமிழ் நாட்டில் பல இடங்களில் சொற் களஞ்சியங்கள் திரட்டப்படுகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், சென்னையில் சாந்தி சாதனமும், கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையும் இத்தகைய தொண்டில் ஈடுபட்டுள்ளன. தமிழ் மொழிக்கு வரலாற்றுக் கொள்கையின்படி அகராதி ஒன்று தொகுக்கவேண்டும் என்ற முடிவை சென்னைத் துரைத்தனம் ஒப்புக்கொண்டுள்ளது. சீன நெருக்கடியின் காரணமாக இந்தத் தொண்டு இன்னும் தொடங்கவில்லை. இருந்தாலும் மலையாளத்திற்கு என ஒரு பேரகராதி, கன்னடத்திற்கு என ஒரு பேரகராதி, தெலுங்கிற்கு என ஒரு பேரகராதி—இவற்றைத் திரட்டி வருகின்ற முயற்சி அங்கங்குள்ள நாட்டுத் துரைத்தனங் களின் உதவியைக் கொண்டும், நடுவிடத் துரைத்தனத் தின் உதவிகொண்டும், இந்தியப் பல்கலைக்கழக மானியக்

குழுவின் உதவிகொண்டும் மும்முரமாக நடைபெற்று வருகிறது. ஆதலால் இந்தத் தொண்டில் புதுச்சேரி நிலையத்தோடு அண்ணுமலைப் பல்கலைக்கழகம் ஒத்துழைத்துப் பிற நிலையங்களின் உதவியையும் கொண்டு சென்னைத் துரைத்தனத்தின் ஆதரவில் இதனைத் தொடங்கி வெற்றியுடன் நடத்தல் வேண்டும்.

ஆராய்ச்சி உலகில் இதுவரை என்ன நிகழ்ந்துள்ளது என்பதை அறிதல் வேண்டும். இல்லையாஞல் முன்னிகழ்ந்ததையே மீண்டும் செய்து காலம் வீணுகும். எனவே, ஆராய்ச்சியாளர்க்கு முன்னரே வெளியான நூல்களின் பட்டியலும், ஒவ்வொரு பொருளைப் பற்றியும் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகளின் பட்டியலும் இன்றியமையாது வேண்டும். நம்முடைய சென்னைத் துரைத்தனம் இத்தகைய பட்டியல்களை வெளியிடுவதில் முனைந்துள்ளது. 1910 வரை வெளியான நூல்களின் பட்டியல் விரைவில் எல்லோருக்கும் கிடைக்கும். 1957 ஆம் ஆண்டிலிருந்து வெளியிடும் நூல்களின் பட்டியலை அந்தந்த ஆண்டிலேயே இந்தியத் தேசீய நூல் நிலையம் வெளியிட்டு வருகிறது. 1910 இலிருந்து 1957 வரை வெளியான நூல்களின் பட்டியலையும் சென்னைத் துரைத்தனம் வெளியிடத் திட்டமிட்டுள்ளது. பிரான்சு, இலங்கை, மலேயா முதலிய இடங்களில் வெளியிட்ட நூல்களின் பட்டியலும் வேண்டும். தமிழ் நூல்கள் மட்டும் அன்றித் தமிழ் மொழி, இலக்கியம், வரலாறு, பிறகலைகள் முதலியன வற்றைப்பற்றிப் பிரஞ்சு முதலிய மொழிகளில் உள்ள நூல்கள், பத்திரிகைகள் என்பவற்றின் பட்டியல்களும் வேண்டும். இவற்றைத் திரட்டுவதில் மலேயாப் பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது. பிரஞ்சு மொழி, ஜெர்மன் மொழிகளைப் பொறுத்தவரையில் இத்தகையப்

பட்டியல்களைத் திரட்டித்தரபுதுச்சேரியில் உள்ள இந்திய நிலையத்தைச் சார்ந்த அறிஞர் பிலியோசா பொறுப்பு ஏற்றுக்கொண்டுள்ளார். எனவே, இந்த வகையிலும் இந்த இந்திய நிலையத்தாரோடு நம்முடைய பல்கலைக் கழகங்களும் ஒத்துழைக்க இடம் உண்டு. அண்மையில் அனைத்து உலகத் தமிழ் ஆராய்ச்சிக்கழகம் ஒன்று, அனைத்து உலகக் கீழ்க்கலை மாநாடு தில்லியில் நடந்த போது நிறுவப்பெற்றது. பல நிலையங்களும் பலவேறு இடங்களில் பலவேறு வகையில் ஒன்றற்கு ஒன்று தொடர்பு இன்றி, ஒன்று என்ன செய்கின்றது என்பதை ஒன்று அறியாமல், தமிழ் ஆராய்ச்சி நடத்தி வருவது கண்டு அந்தக் குறையைத் தீர்க்கவே இந்தக் கழகம் தோன்றி உள்ளது. இதற்கு இப்போது தலைவராக அறிஞர் பிலியோசாவே பொறுப்பேற்றுள்ளார். எனவே இந்த வகையாலும் பிரெஞ்சு அறிஞர்களோடு தமிழ்நாடு ஒத்துழைக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு, கீழைக்கடல் நாடுகளோடு பழங்காலம் தொட்டுத் தொடர்பு கொண்டுள்ளது. ஆனால் தமிழ் நாடு இன்று இந்த வரலாற்றாராய்ச்சியில் பெரிதும் ஈடு பட்டுள்ளது என்று சொல்வதற்கு இல்லை. அறிஞர் பிலியோசா கம்போடியாவில் பழைய வரலாற்றுப் புதைபொருள்களை அகழ்ந்தெடுத்துஆராயும் திட்டத்தை நடத்தி வருகின்றார். நம்முடைய மாணவர்கள் இவர் ஆதரவில் நேர்முகமாக இதில் பயிற்சி பெற இடமுண்டு. தமிழ்ப் பண்பாடு கடல் கடந்த பரந்த வரலாற்றை ஆராய்ந்து விளக்கி நம்மவர்க்குப் புதிய ஊக்கம் தரவும் அவர்களுக்கு வாய்ப்புண்டு. இந்த வகையிலும் நம்மு டைய பல்கலைக்கழகங்கள் பிரெஞ்சு அறிஞர்களோடு ஒத்துழைக்கும் பேறு பெறலாம்.

புதுச்சேரி நிலையத்தோடு மட்டும் அன்றி நம்மவர்கள் பிரெஞ்சு மொழியை அறிவதால் பிரெஞ்சு நாட்டிற்குச் சென்று உயர்நிலை ஆராய்ச்சிகள் செய்வதற்கும் வாய்ப்பு உண்டு. கல்வியின் உயர் நிலைத் துறைகளில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் பிரான்சும் ஒன்று. ஏறக்குறைய நூறு இந்திய மாணவர்களுக்கு இந்த வகையில் பிரான்சு உதவி வருகிறது என்று பொதுவாகக் கூறலாம். இந்த வாய்ப்பினை நம்மவர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு பலவகையிலும் பிரெஞ்சுக் கலையின் தொடர்பு நமக்கு இன்றியமையாது வேண்டும். புதுச்சேரி நம்முடைய பிரதமர் நேரு கூறுவது போலப் பிரெஞ்சுக்கலையின் இந்திய உயர்நாடியாக விளங்குதல் வேண்டும். அங்கு அதற்கு என ஒரு பல்கலைக்கழகம் தோன்றுதல் வேண்டும்; அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகமே அந்தத் தொண்டினை நிறைவேற்றலாம். இதற்குக் குருகுலம் போன்று அமைந்த பல்கலைக் கழகம் உதவுமேயன்றி வெறும் தேர்வுகளை மட்டும் நடத்தி வரும் பல்கலைக் கழக அமைப்பு உதவாது. புதுச்சேரி தென்னார்க்காடு பகுதியைச் சேர்ந்தது. கிடங்கில் என்பது திண்டிவனத்தின் முன்னாளைய பெயர். அங்கே இத்தகைய குருகுலப் பல்கலைக்கழகம் அமைத்து ஒரு சங்கப் புலவர் நடத்திவந்தார் என அறிகிறோம். 'கிடங்கில் குலபதி கண்ணனார்' என்று அப்புலவரின் பெயரைச் சங்கநூல்களில் காண்கிறோம். எனவே அத்தகைய பழைய மரபை ஒட்டிய நிலையமே இன்று வேண்டுவது.

எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ்க்குழந்தைக்குத் தமிழ் பேசத் தெரியும்; ஆனல் எழுதத்தான் தெரியாது. எனவே எழுதக் கற்றுக் கொள்வது ஒரு பெரிய தொல்லை.

ஏன்? எழுத வேண்டிய முறை, ஓர் ஒழுங்குமுறையைப்பின்பற்ருததுதான். தமிழிலே மெய் ஒலிகள் என்றும், உயிர் ஒலிகள் என்றும் உள்ளன. அ, ஆ முதலியன உயிர்எழுத்துக்கள்; க், ங் முதலியனமெய்எழுத்துக்களாம். மொழிக்கு முதலில் உயிர் எழுத்துவரும்போது அந்த உயிர்க்கு எனத் தனிவடிவம் உண்டு. மெய் எழுத்துக்களோடு தொடர்ந்து பின்னல் வரும்போது அந்த உயிர் எழுத்துக்களுக்கு வேறு வடிவம் உண்டு. இந்த வடிவத்தைப் பெரும்பான்மையும் மெய்எழுத்தில் வடிவத்தோடு சேர்ந்தே தமிழில் எழுதி வருகின்ருேம்.

இவ்வாறுசேர்த்து எழுதும் எழுத்தே க, கா முதலான உயிர்மெய்எழுத்து ஆகும். 'ஆல்' என்கிறபோது 'ஆ' என்பதற்குத் தனிவடிவம் உண்டு. க் + ஆ + ல் என்பதைக் கால் எனஎழுதும்போது, ஆகாரத்தை 'க்' என்பதோடு சேர்த்து 'கா' என எழுதுகிருேம். இங்கே காலாக வாங்குவது தான் 'ஆ' என்பதன் வடிவம். இதைக் 'கா' என உயிர் மெய் எழுத்தாகக்கொண்டு ஒன்றெனக் கருதி எழுதி வருகிருேம்.

இவ்வாறே 'இ' என்பதற்கும் தனிவடிவம் உண்டு; 'கி,' 'தி' என மெய் எழுத்தின் பின்னால் வரும்போது வேறு வடிவம் உண்டு. மெய் எழுத்தின் தலையில் ஒட்டிக்கொண்டு, சுழித்த மேல் விலங்காக அந்த வடிவம் அமைகிறது. இவ்வாறு ஒவ்வோர் உயிர் ஒலிக்கும் இரண்டு வேறு நிலைகள் இருத்தல் வேண்டுமா என்பதே கேள்வி? ''ஒவ்வோர் உயிருக்கும் ஒவ்வொரு வடிவம் மட்டும் இருந்தால் போதாதா?'' என்பது ஒரு சிலர் கேட்கும் கேள்வி.

உயிர்மெய் எழுத்தில் மெய்தான் முதலில் ஒலிக்கின்றது. பின்னர்த்தான் உயிர் ஒலிக்கின்றது. 'கா', 'தா' முதலிய எழுத்து வடிவங்கள் இதனை விளக்குகின்றன. 'கா' என்பதில் 'க' என்பது முதலிலும் 'ஆ' என்பதைக் குறிக்கும் கால் பின்னேயும் எழுதப்படுகின்றன. ஆனால் 'கெ' முதலியவற்றை எழுதும்போது இந்த ஒழுங்கு முறையைக் காணோம். 'க' என்பதை எழுதிப் பிறகு பின் வரும் 'எ' என்பதைப் பின்னே எழுதுவதற்குப் பதிலாக அதைக் குறிக்கும் கொம்பை முன்னே எழுதி விடுகிறோம். 'கே' முதலியனவும் இவ்வாறே ஆம். ஐகாரத்தை மெய்யின்பின் ஒலிக்கும்போது—உயிர்மெய்யாக எழுதும்போது—'கை' முதலியனவற்றில்போல 'ஐ' என்பதனைக் குறிக்கும் 'ை' என்ற இரட்டைக் கொம்பை மெய்யெழுத்தின் முன்னாகவே எழுதுகிறோம். முன்பின்குழப்பமே அன்றி மேல் கீழ் குழப்பமும் உண்டு.

இகரம், ஈகாரம், உகரம், ஊகாரம், முதலியவற்றை எழுதும்போதும் அவற்றைக் குறிக்கும் கீழ் விலங்கையும், மேல் விலங்கையும் மெய் எழுத்திற்குப் பின்னால் எழுதாமல் மேலும் கீழும் எழுதிவருகின்றோம். இவற்றை

மெய்யெழுத்திற்கு அடுத்துப் பின்னுல் வருவதாக அமைத்துக் காட்டலாம். 'கொ' முதலியவற்றை அவ் வாறு அமைத்துக் காட்ட முடியாது. மெய் எழுத்தோடு ஒகரம் வரும்போது மேலும் குழப்பம் மிகுதியாகிறது. 'ஒ' என்பதற்குத் தனி எழுத்து வடிவமும் உண்டு. 'கொ' முதலியவை வரும்போது கொம்பும், காலும் ஆகிய மற்றொரு வடிவமும் உண்டு. மாடு முன்னே கொம்பால் முட்டி, பின்னுல் காலால் உதைப்பது போலக் 'கொ' முதலிய எழுத்துக்களில் முன்னும் பின்னும் கொம்பும் காலும் அமைகின்றன. 'ஒ' என்பதின் வேற்று வடிவம், 'கா' என்பதில் ஆகாரத்தின் மாற்றுவடிவம் போலப் பின்னர் மட்டும் வரவில்லை; 'கெ' என்பதில் எகாரத்தின் மாற்றுவடிவம்போல் முன்னுல் மட்டும் வர வில்லை. ஒரு பகுதியான கொம்பு முன்னும் மற்றொரு பகுதியான கால் பின்னுமாக வந்து எழுதக் கற்றுக்கொள் வோர் மனத்தைக் குழப்புகின்றன.

இவ்வாறு கூறுவது வெறும் பேச்சன்று. நம்முடைய மாணவர்கள் எழுதக் கற்றுக்கொள்ளும்போது படுகிற பாட்டை அவர்கள் எழுதுகிற எழுத்துத் தடுமாற் றத்தின் நின்றும் பிழையில் நின்றும் நாம் அறிந்து கொள்ளலாம். 'தேர்' என்பதனை 'தரே்' என்றும் மாண வன் எழுதுகிருன். பிழை என்று சீறி விழுகிருேம். ஆனுல் அந்தப் பிழை அவனுடையதா? அல்லது நெடுங் கணக்கை நாம் எழுதும் முறையில் உள்ளதா? இதனை நாம் எண்ணிப் பார்த்தல்வேண்டும். 'போர்' என்று எழுதவரும்போது உண்மையில் போராட்டமே அவன் உள்ளத்தில் எழுகிறது. இவற்றையெல்லாம் முன்னே போலப் பலமுறை எழுதிப் பழகும் பழக்கத்திற்குப் புதிய பிள்ளைகளுக்குப் போதிய பொழுது இல்லாததால், கல்லூரிக்கு வந்தபோதும் இந்த எழுத்துக்களை மாண

வர்கள் நம் கருத்துப்படி தவருக எழுதுகின்றனர். 'கௌ' முதலியனவும் முன்னே கொம்பும் பின்னே 'ள' என்பதும் வர எழுதவேண்டுவதால் குழப்பத்தையே விளைவிக்கின்றன.

இன்றைய எழுத்துமுறையில் வேண்டாத மற்ருெரு வேறு பாட்டையும் புகுத்தி உள்ளோம். 'ன, ண, ற' என்பவற்ருேடு ஆகாரம் சேர்ந்து வரும்போது ஆகாரத்தைக் காலாகக் குறிக்காமல் அதனைக் கீழ் விலங்காக அமைத்துவிடுகிருேம். 'ஞ, ணு, ரு' என்று இவ்வாறு எழுதுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. சங்கிலி எழுத்தாக எழுதும்போது நேர்க் கோடுகளையும், குறுக்குக் கோடுகளையும் வளைவாக எழுதுவதும் உண்டு. அப்போது சங்கிலி எழுத்தில் இரண்டு சுழி 'ன' கரத்தின் பின்வரும் கால் மூன்றுசுழி ண கரம்போல் தோன்றலாம். சுழிகளையும் கோடாக எழுதும் சங்கிலி எழுத்தில் 'ரு' என்பதையும் 'றா' என்று எழுதினுல் மூன்றுசுழி 'ண' போல் தோன்றலாம். இதற்காகவே இந்த எழுத்துக்களின்பின் காலை எழுதாது கீழே சுழித்து விலங்காக எழுதுகிருேம். ஆனுல் இந்தக் கீழ் விலங்கு எங்கும் ஆகாரத்தைக் குறிப்பதில்லை. 'கு' என்ற எழுத்தில் ஆகாரத்தைக் குறிக்காது உகரத்தைக் குறிக்கிறது. அவ்வாறே 'சு, பு, லு' 'மு, று' என்பனவற்றிலும் கீழ் விலங்கு 'உ' என்பதைக் குறிக்கிறது. 'ஊ' என்பதையும் கீழ்விலங்கே குறிக்கப் பார்க்கிருேம்; சுழித்து எழுதிக் காட்டுகிருேம். எனவே, நம்முடைய எழுத்துமுறையில் ஒரு சீரான ஒழுங்குமுறை இல்லாததால் எழுதக் கற்றுக் கொள்வோர்க்கு முதலில் குழப்பமே விளைகிறது.

இவ்வாறே இரட்டைக் கொம்பான ('ை') ஐகாரக் குறியையும் பொதுவாக மெய்யெழுத்தின் முன்னே தனியே எழுதினுலும் 'ன, ண, ல, ள' என்பவற்றின்

முன்னே எழுத்திற்கு மேலிருந்து வருகிற சுழித்த கொம்பாகஇணைத்து 'னை, ணை, லை, ளை' என்று எழுதுகிறோம். இதற்கும் கூடக் காரணம் இல்லாமல் இல்லை. சங்கிலி எழுத்தில் 'ை ன' என்பது 'ன ன' என்பதாக மயக்கத்தை விளைவிக்கலாம். இவ்வாறே இரட்டைக் கொம்பு பிற இடங்களிலும் னகரம்போல் அல்லது ளகரம் போல் தோன்றலாம். இந்தக் காரணம் இருந்தாலும், இப்போது அச்செழுத்துக்களைப் போலவே தனித்தனியாக எழுத்துக்களை எழுதிவரப் பழகிவருகிற இன்றைய உலகில் இப்படி முறைமாற்றி எழுதவேண்டுமா என்ற கேள்வி எழுவது இயல்பு. எழுதக் கற்றுக் கொள்வோர்க்கு உயிர் மெய் எழுத்தை 'ஐ' வர எழுதும் போது இரண்டு வேறு முறைகள் வருவதால் முதலில் குழப்பமே மிகுகின்றது.

ஒரு சீரான ஒழுங்குமுறை உயிர்மெய் எழுத்தில் உகர ஊகாரங்களை எழுதும்போது இல்லை. 'க, ட, ர, ம, ழ, ள' என்பவற்றோடு உகரம் வரும்போது அந்த எழுத்துக்களை எழுதி முடிக்கும் இடத்திலிருந்து கீழ் விலங்காகச் சுழித்து உகரத்தை குறிக்கிறோம்; கு, டு, மு, ரு, ழு, ளு என எழுதுகிறோம். 'ச' என்பதையும் 'த' என்பதையும் இவ்வாறு கிழித்தால் 'கு' என்பதே வரும்; 'ன, ண, ற' என்பவற்றை இப்படிக் கீழ் விலங்கு தந்து எழுதினல் 'னு, ணு, று' என்ற வடிவங்கள் வரும். ஆனல் இவை ஆகாரத்தோடு வரும் வடிவங்களாக அமைந்து விட்டன என்று கண்டோம். 'ல' என்பதனைக் கீழ்விலங்கு கொடுத்து எழுதினல் 'னு' என்பது போலச் சங்கிலி எழுத்தில் தோன்றும். 'ஞ' என்பதோ முன்னரே தன் வடிவில் கீழ் விலங்கு பெற்று விளங்குகிறது. எனவே, இவற்றில் உகரத்தைக் காட்ட வேறொரு வழி செய்தார்கள். கீழ்க்கோட்டின் கீழ்விலங்கெழுதிக் காட்டினர்.

ஆனல் அது வெறுஞ் சுழியாகவும் தோன்றும். ஆதலால் அதனை வலப்புறத்தே நீட்டி மேனோக்கியும் சுழித்தார்கள்; கல்லில் வெட்டும்போது அது வலப்புறத்தே போகிற குறுக்குக் கோடும் அது முடியும்போது மேனோக்கிப் போகின்ற நெடுக்குக் கோடுமாக அமைந்தது. இதனல் (ற) று, (ஞ) ஞு, (த) து, (ந) நு, (ல) லு, (ண) ணு, (ன) னு என்று எழுதுகிறோம்.

'ச' என்பதற்கு கீழ் விலங்கு தந்தால் 'கு' ஆகும் எனக் கண்டோம். 'ங, ப, ய, வ' என்பவற்றினை எழுதி முடிக்குமிடம் மேனோக்கியே இருக்கும். அங்கிருந்து சுழித்து விலங்கினை எழுதுவோமாஞல் மேல் விலங்காகும். மேல் விலங்கோ இகரத்தைக் குறிக்கும். 'பி' முதலியன காண்க. ஆதலால் வேறொரு முறையைப் பின்பற்ற வேண்டுவதாயிற்று. கீழ்நோக்கிய கோடொன்றினை எழுதி உகரத்தைக் காட்டினர். 'ஙு, சு, பு, யு, வு' எனக் காண்க. உகரத்தின் நெடிலை, அதாவது 'ஊ' என்பதைக் குறிக்க 'உ' என்பதைக் குறிக்க எழுதும் எழுத்தினை முடிவில் சுழித்து எழுதிக் காட்டினர்கள். 'நூ, சூ, டூ, பூ, மூ, யூ, ரூ, லூ, ழூ' எனக் காண்க. ஆனல் இங்கேயும் ஒரு சீரான முறையில்லை. 'கு' என்பதனை முடிவில் சுழிக்காமல் 'கூ' என்று எழுதினர். எனவே 'க' என்பதற்கு ஒரு முறை; 'ஞ' முதலியவற்றிற்கு வேறுமுறை; 'ச' முதலியவற்றிற்கு மூன்றும் முறை என அமையக் காண்கிறோம்.

மற்றொரு குழப்பமும் உண்டு. 'ள' என்பது தனியே 'ள' என்ற இடை எழுத்தைக் குறிக்கும். ஆனல் ஔ என்ற உயிர் எழுத்தைக் குறிக்கும் போதும் 'ள' என்பது அதற்கு அறிகுறியாக வருகிறது. பேச்சு மொழியில் உகரம் ஒகரமாக மாறுவது உண்டு. உளவு என்பது

'ஔவு' என வரும். 'உளவை அறிந்தாள்' என்பது 'ஔ—ள—வை அறிந்தாள்' என்று ஆகும். அதனை எப்படி எழுதிக்காட்டுவது, 'ஔ—ள—வை' என்பதனை மாணவன் 'ஔவை' (அவ்வை) என்றல்லவோ படிப்பான். பேச்சு மொழியில் வரும் இலக்கணப் பிழைகளை எழுதிக் காட்டுவது ஏன் என்று கேட்கலாம். இலக்கியத்திலும் இலக்கணப்படி சில எழுத்துக்கள் குறைந்து வரலாம். 'செய்யும்' என்பது 'செயும்' என்று வருகிறது. 'வள்ளல்' என்பது 'வளல்' என வரலாம். 'வெள்ளம்' என்பது வெ—ள—ம் என வரலாம். இதனை 'வவும்' என்று மாணவன் படிப்பான். இது நாம் செய்யும் கற்பனை என்று நினைக்கலாம். அருணகிரி நாதர் 'வெள்ளரிக்காய்' என்பதனை இவ்வாறு குறைத்து வெ—ள—ரிக்காய் என்று பாடுகிறார். அதனை மாணவர் 'வவுரிக்காய்' என்று படிக்கக் கேட்டுள்ளேன். ஆதலின் இங்கேயும் குழப்பமே எழுகிறது.

உயிர் எழுத்தில் குறிலும் நெடிலும் ஒத்த வடிவமே பெற்று வருகின்றன. 'அஆ, உஊ, எஏ, ஒஓ' என்று காண்க. ஆனால் இகரத்திற்கு வரும்போது இரண்டாம் அடியிலேயே அடி சறுக்குகிறது. 'இஈ' என்று எழுதுகிறோம்; 'இஇ' என்று எழுதும் முறை இருந்தாலும் அது பெரும்பாலும் மறைந்து போய்விட்டது. எனவே, இங்கும் எழுத்தினைக் கற்றுக் கொள்ளும் குழந்தைக்கு ஏமாற்றமே உண்டு.

அச்சடிக்கும் தொல்லை

தமிழில் உள்ள எழுத்துக்கள் குழந்தைகளுக்கு மட்டும் பெருஞ் சிக்கலாக இருக்கின்றன என்று கருதி விடல் ஆகாது. இன்றைய தமிழ் உலகம் கல்வியில் முன்னேற வேண்டும் என்றால் நூல்கள் வளரவேண்டும். பத்திரிகை உலகம் மிக விரைவில் செய்திகளையும், புதிய புதிய கருத்துக்களையும் உடனுக்குடன் அச்சிட்டு வெற்றி பெறவேண்டும். சில நிமிட நேரங்களில் அச்சிட்டு வெளியிடும் நெருக்கடியும் அங்கே எழுகிறது. எனவே அச்சுக் கோப்பதிலோ அச்சடிப்பதிலோ வீண் காலத்தைப் போக்க முடியாது. இங்கே தட்டச்சுப்பொறி என்ற டைப் ரைட்டரையும் நாம் மனத்தில் கொள்ள வேண்டும். எழுத்துக்கள் எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக இருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு தட்டச்சுப் பொறியின் அமைப்பு எளிதில் அமையும். இங்கே இரண்டு வகையான குறைகளைத் தமிழில் காணலாம். ஒன்று, பக்கத்தில் பக்கத்தில் எழுத்துக் குறிகள் வராமல் எழுத்தின் மேலும் கீழும் வருதல் மெய் எழுத்தின் மேல்புள்ளி இடுகிறோம். 'இ, ஈ, உ, ஊ' முதலியவற்றைக் குறிக்க விலங்குகளைக் கீழும் மேலும் இடுகிறோம். தட்டச்சுப்பொறி தட்டத்தட்ட நகர்ந்து கொண்டே இருக்கும். ஆனால் இத்தகைய எழுத்துக்களை அடிக்கும்பொழுது மெய் எழுத்தை அடித்தவுடன்

அதனை நகராது நிறுத்தி வைத்துக்கொண்டு மேலும் கீழும் வருகின்ற குறிகளை அடிக்க வேண்டும்.

இது ஒரு சிக்கல். பல எழுத்துக்களில் எழுத்தின் குறிகள் அமையும் முறை இரண்டாவது சிக்கல். 'கா, தா' என்ற நெட்டெழுத்துக்களை எழுதும்போது, 'க' முதலிய பதினெட்டு மெய் எழுத்துக்கும் 'ா' என்ற காலும் ஆகப் பத்தொன்பது இருந்தால் போதும். இவற்றைக்கொண்டு மெய் எழுத்துக்கள் அகரத்தோடு வருவதையும், ஆகாரத்தோடு வருவதையும் அச்சடித்துக் காட்டிவிடலாம். 36 எழுத்துக்களையும் அச்சடிக்க 19 அச்சுக்களே வேண்டி இருக்கின்றன. கொம்பு ஒன்று இருந்தால் எகரத்தோடு வரும் மெய் எழுத்துக்களை எல்லாம் அச்சடித்துவிடலாம். இவ்வாறே மேற்சுழித்த கொம்பு ஒன்றும், இரட்டைக் கொம்பு ஒன்றும் இருந்தால் எகர ஏகார ஐகாரத்தோடு வரும் மெய் எழுத்துக்களை எல்லாம் அச்சடித்துவிடலாம். இவற்றோடு காலும் முன்னரே இருப்பதால் ஒகர ஓகாரங்களோடு அமையும். மெய் எழுத்துக்களை அச்சடிப்பதற்கு எனத் தனி அறிகுறிகள் ஒன்றும் தேவை இல்லை. ஆனால் இத்தகைய எளிமை இ, ஈ, உ, ஊ என்பவற்றோடு வரும் உயிர் மெய் எழுத்துக்களை அமைக்கும்போது கிடைப்பதில்லை. 72 (4 × 18) எழுத்தச்சுக்கள் வேண்டியிருக்கின்றன.

மெய் எழுத்துக்களில் எல்லாம் ஆகாரத்தைக் குறிக்க கால் (ா) என்ற ஒரு குறி இருந்தால் போதும் என்றோம். ஆனால் அது முற்றும் உண்மை அன்று. 'ன, ண, ற' என்ற இவற்றோடு ஆகாரம் சேர்ந்து வருவதைக் குறிக்க மூன்று வேறு எழுத்துக்கள் வேண்டும். அவ்வாறே இரட்டைக் கொம்பை ஐகாரத்தின் குறியாக உயிர்மெய் எழுத்தில் அமைக்கும்போது அதனைப் பொது விதியாகத் தமிழில் நாம் கொள்ளவில்லை. 'ன, ண, ல, ள' என்ற எழுத்துக்

களில் வேறு முறையைக் கையாளுகிறோம். அதனால் நான்கு வேறு எழுத்துக்கள் மேலும் மிகுதியாக வேண்டியிருக்கின்றன. தட்டச்சில் இவற்றை அமைக்கும்போது 'ணே' முதலியன நன்றாகப் பொருந்துவது இல்லை. 'ஞ' முதலியனவும் நன்றாகப் பொருந்துவது இல்லை. 'ணே, ஞ' முதலியவற்றை அடிக்கும்போது எழுத்தை அசையாது நிறுத்தி வைத்து அடிக்க வேண்டும். 'ன, ண, ற' என்பவற்றில் நெடிலையும் கால் இட்டு எழுதுவதாகவே கொண்டால் மூன்று எழுத்துக்கள் குறையும் ஐகாரத்தினைக் குறித்த 'ன, ண, ல, ள' என்பவற்றோடும் இரட்டைக் கொம்பை அமைத்தால் நான்கு எழுத்துக்கள் குறையும். குழந்தைகளின் குழப்பமும் அந்த அளவுக்கு நீங்கும். தட்டுப் பொறியும் நன்கு எளிதில் தொண்டாற்றும். இந்தச் சிறுமாற்றம் எவ்வளவோ எளிது. இதனைப் பழைய எழுத்துக்களிலும் சில இப்போது காண்கிறோம். இப்போது அச்சு எழுத்துப் போல எழுதவே நம் மாணவர்கள் கற்றுக் கொள்கிறார்கள், சங்கிலி எழுத்து எழுதக் கற்றுக்கொள்வதில்லை. ஆகையால் பழங் காலக் குழப்பம் இப்போது எழுவதற்கு இல்லை. பழமை ஒன்றையே கருதி இச்சிறுமாற்றத்தை எதிர்ப்பது அழகும் அன்று; அறிவும் அன்று.

சென்னை அரசாங்கம் எழுத்துச் சீர்திருத்தத்தை ஆராயும்படி ஒரு குழுவினை அமைத்தது. இந்த மாறுதலை அக்குழு வற்புறுத்தியது. ஆனால் திரு. இராசகோபாலாச்சாரியார் முதல் அமைச்சராக இரண்டாம் முறை வந்தபோது இதனை ஒத்துக்கொள்ளவில்லை. இந்த மாற்றத்தை திரு. இராமசாமிநாய்க்கர் அவர்கள் தம் நூல்களிலும், பத்திரிகைகளிலும் முன்னரே பின்பற்றி வந்துள்ளார். எனவே இந்த மாற்றத்தை ஒப்புக்கொள்வது இராமசாமிப் பெரியார் கொள்கைகளை

ஒப்புக்கொள்வது போலப் பொதுமக்களுக்குத் தோன்றும் என அஞ்சினர் போலும். ஆனல் அத்தகைய அச்சத்திற்கு இடம் இல்லை என்பதை உணர்ந்ததால் காலஞ்சென்ற திரு. சீனிவாசன் இந்த முறையைச் சுதேசமித்திரனில் ஓரளவு பின்பற்றி வந்தார். இதனை அனைவரும் பின்பற்றுவது பலவகையாலும் நல்லது எனலாம்.

இப்படியே மேற்படிக் குழு வேறு சில சிறு மாற்றங்களையும் வற்புறுத்தியது. இகர ஈகாரத்தின் குறிகளை மெய் எழுத்துக்கு நேர் மேல் எழுதுவதற்குப் பதிலாகப் பக்கத்தில் வலமாகத் தனியே எழுத வேண்டும் என்பது ஒன்று. இதனல் *36* (*18*'கி' முதலியன + *18*'கீ' முதலியன) தனி எழுத்துக்கள் வேண்டியிருப்பது நீங்கும்.

ஆனல் உகர ஊகாரங்களில் இவ்வாறு தனிக்குறி அமைப்பதை அக்குழு வற்புறுத்தவில்லை. எப்பொழுதும், மாறுதல் என்றால் பழமையில் பழகியவர்களுக்குப் பிடிக்காது. பழமையை அடியோடு புறக்கணிக்கவும் முடியாது. எழுத்து மாற்றங்கள் பெரிதாக நிலைபெற்றுவிட்டால் இது வரையில் அச்சடித்த நூல்களைப் புதிய வரியில் கற்றவர்கள் படிக்க முடியாது போய்விடும். இதனுலேயே மாற்றங்கள் சிறிது சிறிதாக வரவேண்டும் என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

ஆனலும் உகர ஊகாரங்களைப் பொறுத்த வரையிலும் ஒரு மாற்றம் செய்திருக்கலாம். உகர ஊகாரங்களை மெய்யெழுத்தோடு சேர்த்து வழங்கும் முறை ஒன்றினை நம் மாணவர்கள் அறிவார்கள். தமிழிலேயே சில கிரந்த எழுத்துக்கள், 'ஜ, ஸ, ஷ, ஹ, க்ஷ' என்று வழங்குகின்றன. இவற்றை நம் மாணவர்கள் கற்கின்றார்கள். 'ஜு, ஸூ' முதலியவற்றை எழுதும்போது உகர ஊகாரங்களுக்கு ஏற்ற குறிகளை மெய் எழுத்திற்கு வலப்பக்கத்தில் மேற்கண்ட கிரந்த எழுத்துக்களைப்

பொறுத்தமட்டில் ஒரே முறையில் எழுதி வருகின்றோம். அதற்கு வேண்டிய குறிகள் அச்சிலும் உண்டு; புதிய தாகப் படைக்க வேண்டுவதில்லை. எனவே, அந்த முறை யினை எல்லா மெய்யெழுத்துக்களின் பின்னாலேயும் அமைத்து விடுவது எளிது. உகரத்தோடு சேர்ந்த மெய் யெழுத்துக்கள் பதினெட்டும் ஊகாரத்தோடு சேர்ந்த மெய் எழுத்துக்கள் பதினெட்டும் ஆக முப்பத்தாறு எழுத்துக்கள் இப்போது இருப்பதற்குப் பதிலாக அந்த இரண்டு குறிகள் அமைந்தால் போதும். இந்தக் குறிகளை வடமொழிக்குறிகள் என்று பலர் எதிர்க்கின்றனர். இத் தகைய அச்சம் உண்மையில் ஒரு கோழைத்தனமாம். வடமொழி என்றாலேயே ஓர் எதிர்ப்பு எழுகின்றது. இது ஒரு மாயப் பேயாட்டம். உண்மையில் வடமொழி எழுத்தாகிய தேவநாகரி எழுத்திற்கு எதிராகத் தமிழ் நாட்டில் தமிழ் அறிஞர்கள் வடமொழியைத் தங்கள் எழுத்திலே எழுத அமைத்துக்கொண்ட ஓர் தமிழ் மரபில் வந்த எழுத்துக்களே கிரந்த எழுத்துக்கள் ஆகும். இந் தக் கிரந்த எழுத்துக்கள் மலையாள எழுத்துக்களோடும் ஒத்துப் போவதைப் பார்க்கலாம். மலையாள எழுத்துக் களும் தமிழ் எழுத்துக்களோடு பெரிதும் தொடர்பு உடையன. அதுவேயுமன்றி உகரத்தைக் குறிக்கும் குறியைப் பார்த்தால் உண்மையில் நம்முடைய தமிழ் உகரத்தைத் தலை கீழாக உருட்டி அதனைக் கண்ணாடியில் காண்பது போல இடம் வலமாகத் திருப்பிவைத்தால் தோன்றும் வடிவமே அது ஆம். எனவே, அது ஒரு தமிழ்க்குறியே ஆம். நெடிலைக் குறிப்பதற்குச் சுழிப்பது போல அதனை மேலும் சுழித்ததே ஊகாரத்தின் குறி யாம்.

இல்லையானால், மேல் விலங்கைத் தனியே மெய் யெழுத்துக்குப் பக்கத்தே எழுதிஇகரத்தின் குறி என்றும், அந்த மேல் விலங்கை வலப்பக்கமாக மேலும் சுழித்து

அதை ஈகாரத்தின் குறியாகவும் கொள்வது போல், கீழ் விலங்கை மெய்யெழுத்தின் வலத்தே தனியே எழுதி உகரத்தின் குறியாகவும், அந்த மேல் விலங்கை இடப்பக்கமாகச் சுழித்து அதை ஊகாரம் ஆகவும் கொள்ளலாம்.

எழுத்துக்களைக் குறைப்பதனைப் பற்றிய சில முடிவுகளைக் கண்டோம். 'ஔவை' என்பதை 'ஒ—ள—வை' எனப் படிக்கின்ற தடுமாற்றத்தைக் கண்டோம். இந்தத் தடுமாற்றத்தை நீக்கித் தீரவேண்டும். எனவே, அதற்குப் பதிலாக 'ள' என்ற மெய் எழுத்தைக் குறிக்க 'ள' என்பதை வைத்துக் கொள்ளலாம். 'ஔ' காரத்தைக் காட்டும் குறியாக வரும் 'ள' என்பதில் அதன் முடிவில் வரும் கோட்டின் காலிலிருந்து இடப்பக்கமாக ஒரு சிறிய குறுக்குக்கோட்டை அமைத்தல் வேண்டும். காலுக்கும், ரகரத்திற்கும் இருக்கின்ற வேற்றுமை போன்றது இது (ா, ர). இந்த மாற்றத்தையும் முன்னே நாம் குறிப்பிட்ட குழு வற்புறுத்தியது.

இத்தகைய மாற்றங்கள் எழுந்தபின் வேறு சில மாற்றங்களை ஆராயலாம். எகர, ஒகர, ஐகாரக் குறிகளை எழுதும்போது அவற்றை மெய் எழுத்திற்கு முன் எழுதாமல் பின் எழுதுவது ஒரு சீர்திருத்தம் ஆம். 'ஒ' என்பதனை எழுதும்போது கொம்பு என்றும் கால் என்றும் இரண்டு குறித்தல் வேண்டும். அதனால் இந்த இடங்களில் எகர, ஒகரங்களையே பின் எழுதினால் பொருத்தமாகாதா என்று சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். உண்மையில் கொம்பாக நாம் இன்று எழுதுவது 'எ' என்பதின் வடிவமே ஆம். அவ்வாறாகில் அகரத்தையும் தனியே குறிக்க ஒரு வடிவம் வேண்டாமா என்றும் தோன்றும். மெய் எழுத்தின்மேல் புள்ளி இட்டு எழுதும் போதும் தட்டுப் பொறியில் மெய்யெழுத்தை அசையா

எழுத்தாக்கி நகராது செய்தே அடிக்கவேண்டி உள்ளது. இப்பொழுதிருக்கின்ற 'க' முதலியவற்றையே மெய் எழுத்தாகக்கொண்டு அதன் வலப்பக்கத்தே அகரத்தின் அறிகுறியாக ஒன்றை அமைக்கலாம்; அல்லது 'க' முதலியவற்றை முதலாவதாகவே வைத்துக் கொண்டு அவற்றை மெய் எழுத்து ஆக்குவதற்கு இவற்றின் வலத்தே ஓர் அறிகுறி அமைக்கலாம். புள்ளியை வலப் பக்கம் தள்ளினுல் அது டிகிரி என்ற அளவைக் காட்டுவதாக இன்றைய உலகில் அமைந்துள்ளது. அதனை ஒரு வட்டமாக அமைப்போமானுல் பூஜ்யம் என்பதைக் காட்டுவதோடு மாறுபடும். ஒரு சிறு வட்டத்தைப் புள்ளி போலவும் அல்லாமல், பூஜ்யம் போலவும் அல்லாமல் 'க' என்பதற்கு வலப்பக்கத்தில் நடுவில் சிறிய அளவில் எழுதி அமைக்கலாம். இத்தகைய மாற்றங்கள் எழுமானுல், தனியாக உயிர் எழுத்துக்கள் வரும்போதும், அகரம் நீங்கிய மற்ற உயிர் எழுத்துக்களைக் குறிக்க மெய் எழுத்துக்களின் பின்னுல் உயிர்க்குறிகளையே எழுதிவரும் போதும், உயிர் எழுத்துக்களின் அறிகுறியாக எழுதி வரும் ஒரு புதிய நிலையினையும் ஆராயலாம். அப்போது 'க' முதலிய பதினெட்டு எழுத்துக்கள், உயிரைக் குறிக்கின்ற பதினொரு குறிகள், மெய்யைக் குறிக்க வரும் சுன்ன அகரத்தின் பழைய வடிவம் ஆய்தம்—ஆக முப்பத்திரண்டு எழுத்துக்கள் போதும். நம் எழுத்து முறை ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு தனி எழுத்துக் குறிப்பு அமைந்த முறையாகும். இப்போது இருப்பதைப் போல் உயிர்மெய் எழுத்துக்களைப் பொருத்த வரையில் அசைமுறையாகவும் (Syllabic System) தனி உயிர், தனி மெய்யெழுத்துக்களைப் பொருத்த வரை தனி ஒலிமுறையாகவும் (Alphabetic System) இருக்கின்ற முறை மாறி அப்போது முழுதும் தனி ஒலி முறை ஆகும்.

தொல்லை என்று முணு முணுப்பான் ஏன்?

இங்கே இந்நாளைய நிலைமையை மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். அணுவாராய்ச்சி மிகு விரைவில் வளர்ந்து வருகின்ற நிலையில், மின்னியலைப் (Electronics) பயன்படுத்தி முன் செய்ய முடியாதவற்றை எல்லாம் விஞ்ஞானிகளும், மின்னியற்கலைஞரும் செய்து வருகின்றனர். எனவே, அச்செழுத்துக்களில் மாற்றம் இல்லாமலே அண்மையில் மின்னியியல் அச்சுப் பொறியும், மின்னியியல் தட்டுப்பொறியும் எளிதில் விரைவில் அச்சடிக்கும் வகை கண்டு பிடிக்கப்படலாம். ஆங்கில மொழியைப் படிக்கும்போது எழுதப்படுகின்ற எழுத்துக்களை நம்பி சொல்லின் உச்சரிப்பை நிச்சயிப்பது என்பது அருமையிலும் அருமையே ஆம். fish என்பதில் ஒரு ஒலியை f என்று எழுதுவர்; rough என்பதில் அதே ஒலியைக் குறிக்க gh என்ற எழுத்துக்கள் வருகின்றன; Philosophy என்பதில் ph என்ற இரண்டெழுத்துக்கள் அந்த ஒலியைக் காட்ட வருகின்றன. இப்படிப் பல காட்டலாம். இந்தத் தொல்லையை நீக்கவே எழுத்துக் கூட்டி எழுதும் முறையை மாற்றுதற்கே பர்னாட்ஷா தம் செல்வத்தினை வைத்துப்போய் உள்ளார். ஆனால் தட்டுப் பொறி முதலியன வந்தவுடன் இத்தகைய அருமைப்

பாடு நம்மிடையே மனத்தில் தோன்றுவதில்லை. எழுத்து என்பது ஓர் ஒலியின் அறிகுறி. அப்படியே எழுத்துக்களாகிய சொல்லும் ஓர் அறிகுறி. எனவே, எழுத்தையோ சொல்லையோ வரிவடிவில் அறிகுறியாகக் கொள்ளும் பொழுது, அதிலுள்ள உறுப்புக்களைத் தனித்தனியே பிரித்து அறிந்து எண்ணுவதோ படிப்பதோ இல்லை. பழக்கத்தில் வந்து விடுமானால் இந்த அமைப்பைப்பற்றி எண்ணுவதற்கே இடம் இராது. அதனாலேயே ஆங்கிலத்தின் குறை தெரியவில்லை. இப்படியேதான் தமிழிலும் 'கோ' என்பதன் முன்னும் பின்னும் உயிர் எழுத்தின் குறி அமைக்கின்றோம் என்ற எண்ணமே பலருக்கு வருவதில்லை. செயற்கையாகப் பிரித்துக் காட்டினால் தான் இது தோன்றும். எழுதப் பழகும்போதும் இப்படிப் பிரித்துக் காட்டாது குழந்தைப்போல், எழுத்தின் ஒருமை உணர்ச்சியை வளர்க்கவேண்டும். எனவே 'கொ' என்பதனை முன் பின் என்று பகுத்துக் காட்டாமல் அதனை ஓர் எழுத்தாகவே கொள்ளும்படி பழக்கி விட்டால் இந்த முரண்பாடு தோன்றாது.

உலகம் முழுவதும் ஒரே முறையில் இயங்குவது இல்லை; சில புறனடைகள் இருந்தே தீரும். குழந்தைப் பருவத்திலேயே விதியும் புறனடையுமாக உலகம் அமைவதனைக் குழந்தை புரிந்துகொள்வது நல்லது. எனவே, வீணாக அளவு கடந்து அருமைப்பாடுகளை வற்புறுத்துவது அழகன்று.

ஆனால் இதனால் நாம் பழமையைப் பிடித்துக் கொண்டு அழவேண்டும் என்பதில்லை. நம்முடைய எழுத்து முறை 'சிவபெருமான் அகத்தியருக்குத் தமிழ் அறிவுறுத்தியதிலிருந்து' இப்பொழுது இருப்பதுபோலவே இருந்தது என்பதற்கு இல்லை. இன்று தமிழ் எழுத்தில் எழுதிய கல்வெட்டுக்களில் மிகப் பழமையானவை கி. மு.

மூன்றும் நூற்றுண்டைச் சேர்ந்தவை. தென்னுட்டுக் குகைகளில் இரண்டொரு வரிகளாக இவை அமைந்துள்ளன. இவை அசோகன் எழுத்து என்று வழங்கும் எழுத்து முறைக்கு ஒத்தவையாகும். ஆனல் தமிழ் நாட்டிற்கு ஏற்ற மாற்றங்களோடு இவை விளங்குகின்றன. அரிக்காமேட்டில் அகழ்ந்து எடுத்தபோது அங்கே விளங்கிய யவனச்சேரியின் அறிகுறியாக இன்று கிடைக்கும் சில பானே ஓடுகளிலும் இந்த வகையான எழுத்தே உண்டு. இவற்றை அசோகன் எழுத்தென்று கூறினுலும் மொகஞ்சதாரோ எழுத்து முறையின் வளர்ச்சியே என்று பலர் கருதுகின்றனர். இங்குள்ள எழுத்துக்கும், இன்று நாம் எழுதுகின்ற எழுத்துக்கும் எத்தனையோ வேற்றுமை. கூட்டல் குறி என்று நாம் இன்று கூறக் கூடிய வகையில் 'க' என்ற எழுத்து அன்று அமைந்திருந்தது. கூட்டல் குறியின் தலையிலிருந்து வலப்பக்கமாக நீண்ட கோடு ஒன்று இழுத்தால் 'கா' என்று ஆகும்; இடப்பக்கம் இழுத்தால் 'கெ' என்று ஆகும்; இடப்பக்கமும் வலப்பக்கமும் ஒருங்கே இழுத்தால் 'கொ' என்று ஆகும். எனவே, இங்குக் 'கொ' என்பது ஓர் எழுத்தாகவே தோன்றியது. இடப்பக்கக் கோட்டைப் பின்னர்க் கொம்பாகச் சுழித்து எழுதத் தொடங்கினுர்கள்; வலப்பக்கக் கோட்டைக் காலாக எழுதினுர்கள். பல்லவர்கள் காலத்திலிருந்து—பெரும்பாலும் ஏழாம் நூற்றுண்டிலிருந்து கல்வெட்டுக்கள் தொடர்ந்து கிடைக்கின்றன. எனவே, நம்முடைய எழுத்துக்கள் நூற்றுண்டுக்கு நூற்றுண்டு மாறிவருவதை நாம் பார்க்கலாம். தமிழ்க் கலைக்களஞ்சியம் ஒவ்வொரு எழுத்தின் கீழும் இந்த எழுத்து வளர்ச்சியைக் காட்டியுள்ளது. எழுதும் முறையில் சிறிய மாறுதல்கள் எப்பொழுதும் எழுந்தே வந்துள்ளன. 'கே'

என்பதைக்குறிக்க 'கெ' என்றும், 'கெ' என்பதைக்குறிக்கக் 'கெ' என்று எழுதி அந்தக் கொம்பின்மேல் புள்ளிவைத்து எழுதி வந்த காலம் உண்டு. புள்ளி வைப்பதனை அடியோடு விட்டு எழுதிய ஓலைச் சுவடிகளே பல. இங்குக் 'கெ' என்பதற்கும் 'கே' என்பதற்கும், 'கொ' என்பதற்கும் 'கோ' என்பதற்கும், இப்படியே பிற மெய் வரிசைகளிலும் வேற்றுமை காணமுடியாது. பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த பெஸ்கி அடிகள் இதனை மாற்றிக் 'கெ, கே' என்று இன்று நாம் எழுதுவது போல எழுதிக் காட்டும் முறையை முதன் முதல் வழக்கில் கொண்டு வந்தார். எனவே, எழுதும் முறைக்கு ஒரு தெய்வீகத்தைப் படைத்துவிடாமல் புதிய மாற்றங்களுக்கு இடம் கொடுத்துச் செல்லுதல் வேண்டும்.

எழுத்து முறையை அடியோடு மாற்றுவது என்று வரும்போதுதான் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். இவ்வாறு எண்ணிப் பார்ப்பது பழமைக்கு அடிமையாய் அன்று. புதுமையின் வளர்ச்சி முன்னே நாம் காட்டியது போல, பெரிய இடர்ப்பாடுகளை எல்லாம் மிக எளிதில் தாண்டுவதற்கு வழிவகை செய்கிறது. பெரிய மாற்றங்களை எழுத்து முறையில் செய்துவிட்டால் இன்று அச்சில் உள்ள நூல்கள் எல்லாம் என்ன ஆகும்? சங்க நூல் போன்ற சில அரிய நூல்கள் அடிக்கடி அச்சுக்கு வர முடியாது. ஆகையால் பழைய பிரதிகளையே நம்பி வாழ வேண்டும். அப்போது அதனைப் புதுவகையில் எழுத்துக்களைக் கற்றோர் எப்படிப் படிப்பது? அன்றியும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை நம் நாட்டில் குறைவாகவே உள்ளது. அவர்கள் எழுதிப் படித்துவரும் முறைக்கும் மாறாக, முற்றிலும் புதிய முறை ஒன்று கொண்டு வருவோமானால் இவர்கள் அத்தனை பேரும் எழுதப் படிக்கத் தெரியாத கூட்டத்தில் அல்லவா

சேர்ந்துவிடுவார்கள்! அன்றியும், நம்முடைய மாணவர்கள் ஆங்கில எழுத்துக்களைக் கற்றுவருவதால் அதனையே சிறு மாற்றத்தோடு அமைத்துள்ள அனைத்து உலக ஒலியியல் கழக எழுத்து முறையை ஒட்டி உலகத்தில் மக்கள் ஒலிக்கின்ற எழுத்தை எல்லாம் கற்றுக்கொடுத்து விடலாம்; அத்தகைய கருவி ஒன்று இருப்பதனை நாம் மறத்தல் ஆகாது; அதனைப் பயன்படுத்தாது இருத்தலும் ஆகாது. தேசியம், பழைமை என்று எண்ணுங்கால் கையில் உள்ள பொற்காசுகளை வீசி எறிதல் ஆகாது. எனவே, பழமை, பெரும் புரட்சிப் புதுமை என்று எல்லாம் கருதாது எது எது வேண்டுமோ அது அதனை அந்த அந்தக் காலத்திற்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்வதுதான் அழகு ஆகும்.

T
N65
TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 109181
MADRAS

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
14	22	இந்நாளேயக்	இந்நாளேய
15	9	இந்நாளேயப்	இந்நாளேய
19	10	புழுப்போல்	புழுவால்
28	24	சோகரதர்	சோக்ரதர்
29	22	டுயிலுத்துவி	டுயி
32	7	போற்றும்புலமை	போனுலும் ஒலியை
	16	பொதுவாக	போது எழும் அதன் சமுதாய உணர்வுபோன்ற
35	13	ஆங்கிலேய	ஆங்கிலேயர்
36	3	விட்டு	விட்டுத்
38	25-27	(முதன்...கல்வியாக)	முதன்... கல்வியாக
39	20	கோவை	கோவைக்
47	27	Thorght	Thought
50	1	உலம்க	?உலகம்
52	9	உள்ளூறப்	உள்ளூரப்
	29	பத்துக்	புதுக்
54	12	வாழும்வரைத்	வாழும்வரை
56	22	பயஞகை	பயஞகப்
57	12	Fuolution	Evolution
59	13	மனிதவிடத்தன்றி	மனிதரிடத் தன்றி
62	3	பிறமொழிகளை	பிறமொழி களைக்
	21	சமுதாயத்திற்கு	சமுதாயத் திற்குப்
65	8	இப்படி	, எப்படி
	14	அதற்கு	அதற்குப்
66	5	எழுதித்	எழுதியதைத்
67	20	சொற்களை	சொற்களின்

82	20	நெய்யை	நெய்யைச்
83	11	பண்படுத்தும்	பண்படுத்து வதும்
	12	செய்ததும்	செய்வதும்
98	22	தன்னை	தன்னைத்
101	12	விழப்போற்ற	விழப் போகிற
104	16	ஒளிகளில்	ஒலிகளில்
113	8	மற்றச்	மற்ற
127	21	மாணவ	மாணவர்
138	10	எதிபதிலே	என்பதிலே
143	1	என்பதற்கும்	என்பதற்குப்
144	3	ஒட்டிய நம்	ஒட்டியாம்
	10	அவனோடோ	அவனோடு
152	25	இங்கு	இங்குக்
161	1	விளக்கினால் பெருவது	விளங்கினால் பெறுவது
163	4	சொல்லேயன்றி	சொல்லே யன்றித்
164	22	உள்ளத்தைக்	உள்ளதைக்
176	28	பேராசிரியராக	பேராசிரிய ராகத்
178	22	முடிவை	முடிவைச்
179	30	இத்தகையப்	இத்தகைய
182	12	மெய்எழுத்தில்	மெய் எழுத்தின்
	17	சேர்த்து	சேர்த்துக்
186	21	கிழித்தால்	சுழித்தால்
187	8	என்பதற்கு	என்பதற்குக்
191	15	சில இப்போது	சிலபோது
	27	மாற்றத்தை	மாற்றத் தைத்
192	19	வரியில்	வகையில்த
195	27, 28	பொருத்த	பொறுத்
197	14	குழந்தைப்	குழந்தை யைப்